பிப்ரவரி 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

# நடப்பு நிகழ்வுகள்











**1.** **ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி என்பாருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) டென்னிஸ்

**ஆ) கால்பந்து ☑**

இ) ஹாக்கி

ஈ) மட்டைப்பந்து



✓ போலந்து கால்பந்தாட்ட வீரர் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி 2021ஆம் ஆண்டிற்கான 'FIFA சிறந்த வீரர்' விருதை வென்றார். தற்போது, அவர் பேயர்ன் முனிச் அணிக்காக விளையாடி, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த விருதை வெல்கிறார்.

✓ பார்சிலோனாவின் ஸ்பானிய நடுகள வீராங்கனையான அலெக்ஸியா புட்டெல்லாஸ் 'FIFA சிறந்த வீராங்கனை' விருதை வென்றார். இந்த ஆண்டின் சிறந்த கோலுக்கான புஸ்காஸ் விருதை அர்ஜென்டினா வீரர் எரிக் லமேலா வென்றுள்ளார்.

---

**2.** **'நுசந்தரா' என்பது எந்நாட்டின் புதிய தலைநகரமாகும்?**

அ) கஜகஸ்தான்

ஆ) ஆப்கானிஸ்தான்

**இ) இந்தோனேசியா ☑**

ஈ) இலங்கை



✓ இந்தோனேஷியா தனது தலைநகரமான ஜகார்த்தாவை போர்னியோ தீவின் கிழக்கே அமைந்துள்ள கிழக்கு கலிமந்தனுக்கு மாற்றும் மசோதாவை நிறைவேற்றியது. இந்தோனேஷியாவின் புதிய தலைநகர் நுசந்தரா என்று அழைக்கப்படும். 'நுசந்தரா' என்றால் ஜாவனிய மொழியில் 'தீவுகளின் கூட்டம்' எனப்பொருள்.

✓ ஜகார்த்தா ஏற்கனவே மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழியும் காரணத்தால், இந்தப் புதிய நகரத்தில் ஒரு சீர்மிகு நகரக் கட்டமைப்பை உருவாக்க இந்தோனேஷிய அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளது. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தோனேசியா நான்காவது மிகப்பெரிய மக்கள்தொகை கொண்ட நாடாக உள்ளது.

---

**3.** **'குளோபல் சைபர் செக்யூரிட்டி அவுட்லுக் – 2022' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) உலக வங்கி

**ஆ) உலக பொருளாதார மன்றம் ☑**

இ) உலக வர்த்தக அமைப்பு

ஈ) சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம்

WORLD ECONOMIC FORUM

✓ உலக பொருளாதார மன்றம் 'குளோபல் சைபர்செக்யூரிட்டி அவுட்லுக் – 2022' என்றவோரறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, COVID-19 தொற்று வணிகத்திலும் வீட்டிலும் டிஜிட்டல் கருவிகளின் பயன்பாட்டை அதிக்கப்ப-டுத்தியுள்ளது. இந்த அதீத உயர்வு பல்வேறு இணைய நிகழ்வுகளுக்கு வழிவகுத்தன.

---

**4.** **'ஆபரேஷன் சர்த் ஹவா'வை மேற்கொள்கிற இந்திய ஆயுதப்படை எது?**

அ) இந்தோ-திபெத்திய எல்லைக்காவல்படை

**ஆ) எல்லைப் பாதுகாப்புப் படை ☑**

இ) மத்திய சேமக்காவல்படை

ஈ) மத்திய தொழிற்துறை பாதுகாப்புப் படை

✓ எல்லைப் பாதுகாப்புப் படையானது ஜன.23-28 வரை நடைபெறவுள்ள அதன் "ஆபரேஷன் சர்த் ஹவா" கீழ் ராஜஸ்தான் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் கண்காணிப்பை அதிகரிக்கும். எல்லைப் பாதுகாப்புப்படை கோடையில் "கரம் ஹவா" மற்றும் குளிர்காலத்தில் "சர்த் ஹவா" ஆகியவற்றை நடத்துகிறது.

---

**5.** **'சாதி' என்ற திறன்பேசிச் செயலியை அறிமுகப்படுத்திய நிதி நிறுவனம் எது?**

அ) இந்திய ரிசர்வ் வங்கி

ஆ) நபார்டு

**இ) SEBI ☑**

ஈ) SIDBI

✓ பங்குச்சந்தையின் அடிப்படைக்கருத்துகள் குறித்து முதலீ-ட்டாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக, மூலதனச் சந்தை ஒழுங்காற்றுநரான SEBI தனது திறன் பேசிச்செயலியை 'சாதி' என்ற பெயரில் வெளியிட்டது.

✓ பங்குச்சந்தையில் நுழையும் தனிநபர் முதலீட்டாளர்களின் அதிகரிப்பு காரணத்தாலும் திறன்பேசி அடிப்படையிலான வணிகநடவடிக்கைகளாலும் இச்செயலி வெளியிடப்பட்டு உள்ளது. KYC செயல்முறை, வர்த்தகம் மற்றும் தீர்வு, பரஸ்பர நிதிகள், சந்தை மேம்பாடுகள், முதலீட்டாளர் குறைகளை நிவர்த்தி செய்யும் பொறிமுறை போன்ற அடிப்படைக் கருத்துகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6.** **'AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022' போட்டியை நடத்துகிற நாடு எது?**

அ) ஜப்பான்

ஆ) ஆஸ்திரேலியா

இ) சீனா

**ஈ) இந்தியா ☑**

AFC WOMEN'S ASIAN CUP

✓ 'AFC மகளிர் ஆசிய கோப்பை – 2022' போட்டியை இந்தியா நடத்துகிறது. இந்தியா காலிறுதிக்கு தகுதிபெற்று 2023 ஃபிஃபா மகளிர் உலகக் கோப்பையை எட்டுவதன் மூலம் சரித்திரம் படைக்கும் நோக்கில் உள்ளது. ஃபிஃபா மகளிர் உலகக் கோப்பை அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

✓ இந்திய சீனியர் கால்பந்து அணி இதுவரை எந்த உலகக் கோப்பைப் போட்டியிலும் விளையாடியதில்லை. ஆஸ்திரேலியாவும் சீனாவும் மிகப்பெரிய சவாலாக உள்ள நிலையில், தொடர்ந்து 3ஆவது முறையாக தனது முதலிட-த்தை உறுதிப்படுத்திக்கொள்ள ஜப்பான் விழைகிறது.

---

**7.** 'முடிவிலி பாலம்' என்பது எந்த நாட்டில் அமைந்துள்ள ஒரு சிறப்புவாய்ந்த கட்டடக்கலை அமைப்பு ஆகும்?

அ) ரஷ்யா



**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) இந்தியா

ஈ) அமெரிக்கா

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் உள்ள 'இன்ஃபினிட்டி பிரிட்ஜ்' முதன்முறையாக சமீபத்தில் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது. துபாய் சிறுகுடாமீது கட்டப்பட்டுள்ள இப்புதிய பாலம், அல் ஷிந்தகா சுரங்கப்பாதைக்கு அருகில், வாகனங்கள் நீருக்கடியில் அந்தச் சிறுகுடாவை கடக்க உதவுகிறது. 2018'இல் முதன்முதலில் முன்மொழியப்பட்ட அல் ஷிந்தகா வழித்தட திட்டத்தின் ஒருபகுதியாக இந்த 'முடிவிலி பாலம்' அமைந்துள்ளது.

---

**8.** குடியரசுத்தலைவர் சார்பாக 'இந்தியாவின் எதிர்பாராச் செலவுக்கான நிதியத்தை' நிர்வகிக்கிற துறை எது?

**அ) பொருளாதார விவகாரங்கள் துறை ☑**

ஆ) செலவினத்துறை

இ) நிதியியல் சேவைகள் துறை

ஈ) வருவாய்த்துறை

✓ 'இந்தியாவின் எதிர்பாராச் செலவுக்கான நிதியம்' என்பது இந்தியக்குடியரசுத்தலைவரின் சார்பாக நிதியமைச்சகத்–தின் பொருளாதார விவகாரங்கள் துறையால் நிர்வாகம் செய்யப்படுகிறது. இது நிர்வாக செயல்முறை நடவடிக்கை மூலம் இயக்கப்படலாம். பேரிடர்கள் மற்றும் தொடர்புடைய எதிர்பாராத செலவுகளின் போது பயன்படுத்தப்படலாம்.

✓ சமீபத்தில், இந்த நிதிக்கான செலவின விதிமுறைகளை அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது. மொத்த நிதி மதிப்பில் 40 சதவீதத்தை செலவினச் செயலாளரின் வசம் வைக்க இது வழிகோலுகிறது.

---

**9.** அஸ்ஸாமின் உயரிய குடிமக்கள் விருதான 'அஸ்ஸாம் வைபவ்'க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

**அ) ரத்தன் டாடா ☑**



ஆ) கௌதம் அதானி

இ) முகேஷ் அம்பானி

ஈ) அஸிம் பிரேம்ஜி

✓ தொழிலதிபரும், கொடையாளியுமான ரத்தன் டாடாவுக்கு மாநிலத்தின் மிகவுயரிய விருதான 'அஸ்ஸாம் பைபவ்' விருதை அஸ்ஸாம் அரசு வழங்கவுள்ளது.

✓ அஸ்ஸாம் மாநிலம் 'அஸ்ஸாம் பைபவ்', 'அஸ்ஸாம் சௌரவ்' & அஸ்ஸாம் கௌரவ் ஆகிய விருதுகளையும் வழங்கும். 'அஸ்ஸாம் சௌரவ்' விருது ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற லவ்லினா போர்கோஹைன் உட்பட ஐந்து நபர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

---

**10.** '*Halodule uninervis*' என்ற கடற்புல் வகையானது, கீழ்காணும் எந்த நோய்க்கு எதிராக வலுவான செயல்பாட்–டைக் கொண்டுள்ளது?

**அ) புற்றுநோய் ☑**



ஆ) உயர் இரத்தவழுத்தம்

இ) நீரிழிவு நோய்

ஈ) COVID–19

✓ '*Halodule uninervis*'இன் எத்தில் அசிடேட் கூறினிலுள்ள வலுவான புற்றுநோய் எதிர்ப்பு செயல்பாட்டின் அறிவியல் ஆதாரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது தென் தமிழ்நாட்டின் ராமேஸ்வரம் அருகே கடலோரப் பகுதியில் காணப்படும் ஒரு கடற்புல் வகையாகும்.

✓ வீரியம்மிக்க கருங்கட்டி, நுரையீரல், கருப்பைவாய்ப்புற்று நோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய்கள் உள்ளிட்ட மனிதரில் ஏற்படும் பல்வேறு புற்றுநோய் செல்களுக்கு எதிரான இது செயல்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. பருவநிலை மாற்றத்தில் இந்தியாவின் பொறுப்புணர்வு: குடியரசுத்தலைவர் பெருமிதம்

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியது. இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத்தலைவர் ஆற்றிய உரை:

உலகம் தற்போது பருவநிலை மாற்றத்தின் சவால்களைச் சந்தித்து வருகிறது. இந்த விவகாரத்தில் பொறுப்புணர்வுடன் சர்வதேச அளவில் இந்தியா குரல் கொடுத்துவருகிறது. 2070ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ய கரியமில வாயு உமிழ்வு நிலை உள்ளிட்ட பல்வேறு இலக்குகளை கிளாஸ்கோ பருவநிலை மாநாட்டில் இந்தியா நிர்ணயித்தது.

'ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின் விநியோக அமைப்பு' திட்டத்தையும் இந்தியா முன்னெடுத்தது.

கரோனா தொற்று பரவல் காலத்திலும், கடந்த 2020–21 நிதியாண்டில் நாட்டின் விவசாயிகள் 30 கோடி டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்தனர். 433 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்தது. அதன்மூலமாக 50 லட்சம் விவசாயிகள் பலனடைந்தனர். நாட்டின் வேளாண் ஏற்றுமதி ₹3 லட்சம் கோடியைக் கடந்துள்ளது.

விவசாயிகள் நிதியுதவித் திட்டம் வாயிலாக 11 கோடி விவசாயிகள் பலனைடந்துள்ளனர்.

**ரயில்வே துறையில் சாதனை:** உழவர்களுக்கான ரயில் (கிசான் ரயில்) சேவை, ரயில்பாதைகள் மின்மயமாக்கம், நவீனமயம், வடகிழக்கு மாநிலங்களுக்கான ரயில் சேவை உள்ளிட்டவை ரயில்வே துறையில் அரசு நிகழ்த்திய முக்கிய சாதனைகள். வந்தே பாரத் ரயில்,

'விஸ்டாடோம்' பெட்டிகள் உள்ளிட்டவை நவீனத்தை வெளிப்படுத்துகின்றன.

கடந்த 7 ஆண்டுகளில் 24,000 கிமீ தொலைவுக்கு ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. காஷ்மீரில் செனாப் நதிக்கு மேலே கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பாலம் நவீனத்தின் மையமாகத் திகழ்கிறது.

**வடகிழக்கின் வளர்ச்சி:** வடகிழக்கு மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த அரசு உறுதிகொண்டுள்ளது. அந்த மாநிலங்களின் தலைநகரங்கள் அனைத்தும் ரயில் சேவைகளால் இணைக்கப்பட்டுள்ளன. விமானப் போக்குவரத்தும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வடகிழக்கின் வளர்ச்சி, நாட்டின் வளர்ச்சிக்கான வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும் நிலை உருவாகும்.

**வலுவான நிலையில் இந்தியா:** தொடர்ந்து மாறிவரும் சர்வதேச சூழலில் தூதரகத்தொடர்புகள்மூலமாக இந்தியா தனது நிலையை வலுப்படுத்திக்கொண்டுவருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்டில் ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை ஏற்று பல்வேறு முக்கிய முடிவுகளை இந்தியா எடுத்தது; கடல்சார் பாதுகாப்பு குறித்து முதல்முறையாக விவாதம் நடத்தப்பட்டது.

அண்டைநாடான ஆப்கானிஸ்தானில் நிலையில்லாத் தன்மை ஏற்பட்டவுடன், அந்நாட்டில் சிக்கிக்கொண்டவர்கள் 'ஆபரேஷன் தேவி சக்தி'மூலமாக மீட்கப்பட்டனர். ஆப்கனுக்கு மனிதாபிமான அடிப்படையில் மருந்துகள், உணவுப்பொருள்களை இந்தியா அனுப்பி வருகிறது.

**'ஒரே இந்தியா, சிறந்த இந்தியா':** பல ஆண்டுகளாகப் புறக்–கணிக்கப்பட்டு வந்த ஜம்மு–காஷ்மீர், லடாக் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கை–ளை அரசு மேற்கொண்டு வருகிறது. 'ஒரே இந்தியா, சிறந்த இந்தியா' என்ற கொள்கையின் அடிப்படையில் ஜனநாயக கொள்கைகளைக்கடைபிடித்து வளர்ச்சிக்கான புதிய அத்தியாயம் எழுதப்பட்டு வருகிறது என்றார் இந்தியக் குடியரசுத் தலைவர்.

---

**2. பொருளாதார வளர்ச்சி 8 – 8.5% ஆக இருக்கும்: பொருளாதார ஆய்வறிக்கை**

2022–23ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 முதல் 8.5% ஆக இருக்கும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

2021–22ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று தாக்கல் செய்தார்.

பொருளாதார ஆய்வறிக்கையின்படி, எதிர்வரும் 2022–23ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8–8.5 சதவிகிதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நிதியாண்டில் வரக்கூடிய சவால்களை சந்திக்–கக்கூடிய வகையில் பொருளாதாரம் நல்ல நிலையில் இருப்பதாகவும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், நாட்டின் மெய்யான பொருளாதார வளர்ச்சி 9 புள்ளி 2 சதவிகிதமாக ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில், வேளாண் துறை 3.9 சதவிகிதமாக வளரும் எனக் கணிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது. இதேபோல், தொழில்துறை 11.8 சதவிகிதமாக வளர்ச்சி அடையும் எனக் கருதப்படுவதாகவும், சேவைத் துறை 8.2 சதவிகிதமாக உயரும் என கணிக்கப்படுவதாக –வும் அதில் கூறப்பட்டுள்ளது.

---

**3. 2020–21 பொருளாதார வளர்ச்சியில் 6.6% பின்னடைவு**

கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 6.6 சதவீதம் சரிவைக் கண்டதாக தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்க–ப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கரோனா பேரிடரின் தாக்கம் இந்தியப்பொருளாதாரத்தில் முன்பு கணிக்கப்பட்டதைவிட குறைவாகவே இருந்தது. அதனை எடுத்துக்காட்டும் வகையில், 2021 மே மாதத்தில் வெளியிடப்பட்ட மதிப்பீட்டில் இந்தியப்பொருளாதாரம் 2020–21ஆம் நிதியாண்டில் 7.3 சதவீத சரிவை சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பாதிப்பின் தாக்கம் எதிர்பார்த்ததைவிட குறைவாக இருந்ததன் பலனாக இந்தச் சரிவு 6.6 சதவீதம் அளவுக்கே ஏற்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான (2011–12) விலை அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019–20ஆம் நிதியாண்டில் ₹145.16 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2020–21இல் ₹135.58 லட்சம் கோடியாக குறைந்துள்ளது என NSO தெரிவித்துள்ளது.

---

**1.** **2022'இன்படி, இந்தியாவின் வடகோடியில் அமைந்து உள்ள மாநிலம் எது?**

அ) ஜம்மு மற்றும் காஷ்மீர்

ஆ) பஞ்சாப்

**இ) ஹிமாச்சல பிரதேசம் ☑**

ஈ) ஹரியானா



✓ ஹிமாச்சல பிரதேச மாநிலம் இந்தியாவின் வடகோடியில் உள்ள மாநிலமாகும். அது வடக்கே ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுடன் தனது எல்லைகளைப் பகிர்ந்துகொள்கிறது. 1971ஆம் ஆண்டு இதேநாளில் 18ஆவது இந்திய மாநிலமாக அது உருவாக்கப்பட்டது.

✓ டாக்டர் யஷ்வந்த் சிங் பர்மர் அதன் முதல் முதலமைச்சராக இருந்தார். இம்மாநிலம் அதன் 52ஆவது மாநில தினத்தை ஜன.25 அன்று கொண்டாடியது.

---

**2.** **'INS குக்ரி நினைவகம்' அமைந்துள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?**

அ) பஞ்சாப்

**ஆ) டையூ ☑**

இ) புதுச்சேரி

ஈ) கோவா



✓ 'INS குக்ரி நினைவகம்' என்பது கடந்த 1976ஆம் ஆண்டு பாகிஸ்தான் நீர்மூழ்கிக்கப்பலால் தாக்கப்பட்ட ஒரு போர்க் கப்பலை நினைவுகூரும் ஓர் இந்திய-பாகிஸ்தான் போர் நினைவிடமாகும். உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியக்கடற்படையின் முதல் ஏவுகணை ஏந்திய போர்க் கப்பலான INS குக்ரி டையூ நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

✓ மசகான் கப்பல்கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்ட இந்தக் கப்பல், கடந்த 1989ஆம் ஆண்டு மும்பையிலிருந்து பணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டது. 2021 டிசம்பரில் பணிநீக்கம் செய்யப்பட்ட இக்கப்பல், பொதுமக்களின் பார்வைக்காக டையூவுக்கு அனுப்பப்பட்டது.

---

**3.** **512 கிமீட்டர் நீள எல்லையைப் பகிர்ந்துகொண்டு, எந்த மாநிலத்திலிருந்து நாகாலாந்து பிரிக்கப்பட்டது?**

**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) சிக்கிம்

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) மேற்கு வங்கம்



✓ நாகாலாந்து மாநிலமானது கடந்த 1963ஆம் ஆண்டில் அஸ்ஸாமிலிருந்து பிரிக்கப்பட்டது. இருமாநிலங்களும் 512.1 கிமீ நீள எல்லையைப் பகிர்ந்துகொள்கின்றன.

✓ அஸ்ஸாமின் அப்போதைய வட கச்சார் மற்றும் நாகோன் மாவட்டங்களில் உள்ள நாகா மலைகள் மற்றும் நாகா ஆதிக்கம் செலுத்தும் அனைத்து பகுதிகளையும் நாகாலாந்து மாநிலத்தின் ஒருபகுதியாக வேண்டும் என நாகாலாந்து கோரி வருகிறது. நாகாலாந்து மற்றும் அஸ்ஸாம் மாநில அரசுகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மாநிலங்களுக்கு இடையேயான எல்லைப் பிரச்சனைக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வு காண தயாராக இருப்பதாக அறிவித்தன.

---

**4.** **எந்த நிறுவனத்தின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில், இந்தியா, $29.9 மில்லியனைச் செலுத்தியுள்ளது?**

அ) உலக வங்கி

**ஆ) ஐக்கிய நாடுகள் ☑**

இ) ADB

ஈ) BRICS வங்கி

United Nations

✓ 2022ஆம் ஆண்டிற்கான ஐநா'இன் வழமையான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இந்தியா $29.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை செலுத்தியுள்ளது. 15 நாடுகளைக் கொண்ட பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தரமற்ற உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் ஈராண்டு பதவிக் காலம் 2022 டிசம்பர்.31 அன்று முடிவடைகிறது.

✓ 2022 ஜன.21 நிலவரப்படி, 24 உறுப்புநாடுகள் தங்கள் வழமையான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை முழுமை –யாகச் செலுத்தியுள்ளன. ஈரான், கினியா & வனுவாட்டு ஆகிய நாடுகள் தங்களின் வாக்களிக்கும் உரிமையை மீண்டும் பெறுவதற்காக ஐநா'இன் வழமையான வரவு செலவுத்திட்டத்திற்கு போதுமான தொகையைச்செலுத்தின. 193 உறுப்பினர்களைக்கொண்ட அமைப்பில் வெனிசுலா மற்றும் பப்புவா நியூ கினியாவுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை இதுவரை இல்லை.

---

**5.** **IMF உலகப்பொருளாதாரக்கண்ணோட்டத்தின் ஜனவரி மதிப்பீட்டின்படி, 2021–22இல் இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி என்ன?**

அ) 8.5%

**ஆ) 9% ☑**

இ) 9.5%

ஈ) 10%




✓ பன்னாட்டுச் செலவாணி நிதியம் (IMF) தனது உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் 2022 ஜனவரி மாத மதிப்பீட்டை வெளியிட்டது. இவ்வெளியீட்டின்படி, இந்தியா 2021–2022இல் 9% வளர்ச்சியடையும். 2021 அக்டோபர் மாதத்தில் இந்தக் கணிப்பு சதவீதம் 9.5ஆக இருந்தது.

✓ இது 2022–23ஆம் ஆண்டில் இந்தியப்பொருளாதாரத்தின் வளர்ச்சி 9%ஆக இருக்கும் எனக்கணித்துள்ளது. உலகப் பொருளாதார வளர்ச்சியானது 2021இல் 5.9%ஆக இருந்து 2022இல் 4.4%ஆகக் குறையும்.

---

**6.** **எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ், தூய்மைப் பணியாள –ர்களுக்கான தேசிய ஆணையம் இயங்குகிறது?**

அ) சட்டம் & நீதி அமைச்சகம்

**ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

MINISTRY OF SOCIAL JUSTICE AND EMPOWERMENT

✓ தூய்மைப்பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் பதவிக்காலத்தை 2022 மார்ச்.31ஆம் தேதிக்குப் பிறகு 3

ஆண்டுகளுக்கு நீடிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த ஆணையமானது 1994'இல் தூய்மைப் பணியாளர்களுக்கான தேசிய ஆணையச்சட்டம், 1993ன் மூலம் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது.

- ✓ இது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2021 டிசம்பர்.31, நிலவரப்படி நாட்டில் 58,098 தூய்மைப் பணியாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

---

**7.** **லாகோவா & புராச்சபோரி வனவுயிரி சரணாலயங்கள் அமைந்துள்ள மாநிலம் எது?**



**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) மத்திய பிரதேசம்

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

- ✓ அஸ்ஸாமின் கசிரங்கா தேசியப்பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், அந்தத் தேசியப்பூங்காவில் குறைந்தது 868 சதுப்புநில மான்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த 2018இல் 907ஆக இருந்தது.
- ✓ ஈரநிலப்பறவைகள் கணக்கெடுப்பில், மொத்தம் 66,776 எண்ணிக்கையிலான 126 வகையான பறவைகள் கண–க்கிடப்பட்டன. அவற்றில் 42,205 பறவைகள் கசிரங்கா தேசியப்பூங்கா பகுதியிலும் 24,571 பறவைகள் அசாமின் லாகோவா & புரசாபோரி வனவுயிரி சரணாலயங்களிலும் கணக்கிடப்பட்டன.

---

**8.** **'டிஜிட்டல் கொடுப்பனவுக் குறியீட்டை' வெளியிடுகிற நிறுவனம் எது?**



அ) NITI ஆயோக்

**ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகம்

- ✓ இந்திய ரிசர்வ் வங்கியானது 'டிஜிட்டல் கொடுப்பனவுக் குறியீட்டை' வெளியிடுகிறது. இது இந்தியாவில் டிஜிட்டல் முறைகள்மூலம் பணஞ்செலுத்தும் வளர்ச்சியைக்காட்டுகி–றது. 2021 செப்டம்பரில் இக்குறியீடு 39.64% உயர்ந்து 304.06ஆக இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டில் இதே மாதத்தில் அது 217.74ஆக இருந்தது.

---

**9.** **இந்தியாவானது எந்த நாட்டுடன் இணைந்து 'பசுமை உத்திசார் கூட்டணி – செயல் திட்டம் 2020-2025'இல் கையெழுத்திட்டது?**



அ) பிரான்ஸ்

**ஆ) டென்மார்க் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஐக்கிய இராச்சியம்

- ✓ பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பசுமை எரிபொருட்களுக்–கான ஆராய்ச்சி & உற்பத்தியில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதென, இந்தியா – டென்மார்க் நாடுகளின் அறிவியல் & தொழில்நுட்ப கூட்டுக்குழுவின் கூட்டத்தில் இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.
- ✓ இருநாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பசுமை செயல்திட்ட ஒத்துழைப்புக்கான, 2020-25 செயல்திட்டத்தில் ஒப்புக் கொண்டபடி, பருவநிலை மாற்றம், பசுமைத்திட்டங்களுக்–கு மாற்றம், எரிசக்தி, தண்ணீர், கழிவு, உணவுபோன்ற துறைகளில் கூட்டாக செயல்பட வலியுறுத்தப்பட்டது.

---

**10.** **'பத்ம விபூஷண்' விருது பெற்ற பிரபா ஆத்ரேவுடன் தொடர்புடைய துறை எது?**



அ) இலக்கியம்

**ஆ) இசை ☑**

இ) விளையாட்டு

ஈ) குடிமைச்சேவை

- ✓ **73ஆவது குடியரசு நாளை முன்னிட்டு, இந்த ஆண்டு 128 பேருக்கு 'பத்ம' விருதுகள் வழங்க குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். 89 வயதான 'கிரானா கரானா' பாடகர் பிரபா ஆத்ரே 'பத்ம விபூஷண்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரே மேடையில் இருந்து ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் பதினோரு இசை நூல்களை வெளியிட்டு உலக சாதனை படைத்துள்ளார். அவர் 'ஸ்வர்மயீ குருகுலத்தின்' நிறுவனராவார்.**
- ✓ **ராதேஷ்யாம் கெம்கா (மரணத்திற்குப்பின்; இலக்கியம், உபி), ஜெனரல் பிபின் ராவத் (குடிமைப்பணி) மற்றும் கல்யாண் சிங் (மரணத்திற்குப் பின்; பொது விவகாரங்கள், உபி) ஆகியோரும் 'பத்ம விபூஷண்' விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கிரிப்டோகரன்சிக்கு 30% வரி; எண்ம செலாவணி அறிமுகம்**

இந்திய ரிசர்வ் வங்கி சார்பில் 2022-23ஆம் நிதி ஆண்டில் எண்ம செலாவணி (டிஜிட்டல் கரன்சி) அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவித்த நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், கிரிப்டோகரன்சி உள்ளிட்ட மெய்நிகர் சொத்துகள் மீது 30 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றார்.

இதுதொடர்பாக பட்ஜெட் உரையின்போது அவர் கூறுகை–யில், "எண்ம செலாவணியானது, திறன்மிக்க மலிவான செலாவணி மேலாண்மை அமைப்பை உருவாக்கும். அதைக் கருத்தில்கொண்டு 'பிளாக்செயின்' உள்ளிட்ட தொழில்நுட்பங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட எண்ம செலாவணியை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தவுள்ளது. எண்ம செலாவணியானது எண்மப் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும்.

கிரிப்டோகரன்சி உள்ளிட்ட மெய்நிகர் சொத்துகளின் பரிவர்த்தனைமூலமாக கிடைக்கும் வருமானத்துக்கு 30 சதவீதம் வரி விதிக்கப்படும். குறிப்பிட்ட மதிப்புக்குமேல் பரிவர்த்தனை செய்யப்படும் மெய்நிகர் சொத்துகளுக்கு டிடிஎஸ் (மூலவரிக்கழிப்பு) பிடித்தம் செய்யப்படும். புதிய நடைமுறைகள் ஏப்ரல்.1ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வரவுள்ளன" என்றார்.

லாட்டரி, விளையாட்டு நிகழ்வுகள், புதிர் விளையாட்டுகள் உள்ளிட்டவற்றின்மூலமாக ஈட்டப்படும் வருவாய்க்கு ஏற்கெனவே 30% வரி விதிக்கப்பட்டு வருகிறது. அதற்கு நிகராக கிரிப்டோகரன்சி பரிவர்த்தனைக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

பிட்காயின் உள்ளிட்ட கிரிப்டோகரன்சிகளின் பயன்பாடு இதுவரை முறைப்படுத்தப்படாமல் இருந்த நிலையில், பல்வேறு தரப்பினரது கோரிக்கையை ஏற்று அவற்றின் பரிவர்த்தனைக்கு மத்திய அரசு தற்போது வரி விதித்து உள்ளது.

---

**2. மாநிலங்களுக்கு ₹1 லட்சம் கோடி வட்டியில்லா கடன்**

மூலதன முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்கில் மாநிலங்களுக்கு 2022–23ஆம் நிதியாண்டில் ₹1,00,000 கோடி வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்துள்ளது.

அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் 50 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் 2022–23ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார். தொடர்ந்து 2ஆவது ஆண்டாக காகிதமில்லா நிதிநிலை அறிக்கையை அவர் தாக்கல்செய்தார். அப்போது பல்வேறு முக்கிய அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

கரோனா பரவல் காரணமாக கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் 6.6% வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதா–ரம், படிப்படியாக மீண்டு வருகிறது. பொருளாதாரத்தை மீட்கும் வகையிலான பல்வேறு திட்டங்களும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டன. கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில் மூலதன செலவினம் ₹7.5 லட்சம் கோடியாக அதிகரிக்கப்படவுள்ளதாக அமைச்சர் அறிவித்தார்.

கட்டமைப்புத் திட்டங்களில் அரசின் செலவினம் அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப தனியார் முதலீடும் அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர், அதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். அரசு–தனியார் ஒத்துழைப்புடன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**50 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடன்:** மாநிலங்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையிலான திட்டத்தை மத்திய அரசு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்திட்டத்தின் கீழ் நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ₹15,000 கோடி கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியைப் பயன்படுத்தி நீண்டகாலத்துக்கான கட்டமைப்பு–த் திட்டங்களில் மாநிலங்கள் முதலீடு செய்ய முடியும்.

அத்திட்டத்தின் கீழ் அடுத்த நிதியாண்டில் ₹1,00,000 கோடி கடன் மாநிலங்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அக்கடனை ஐம்பது ஆண்டுகளில் மாநிலங்களில் திருப்பிச்செலுத்த வேண்டும் என்றும், அத்தொகைக்கு வட்டி வசூலிக்கப்படா–து என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகள் கடன் பெறுவதற்கான உச்சவரம்புக்கு கூடுதலாக இந்தக் கடன் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்களின் சுமையை அதிகரிக்கவில்லை:** தனிநபர்கள் வருமானவரி செலுத்துவதற்கான உச்சவரம்பு உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது தொடர்பான எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன், "கடந்த ஆண்டிலும் நடப்பாண்டிலும் தனிநபருக்கான வருமான வரி உயர்த்தப்படவில்லை. கரோனா தொற்று பரவல் காலத்தில் வரியை உயர்த்துவதன்மூலமாக மக்களின் சுமையை அதிகரித்து வருவாயைப் பெருக்க மத்திய அரசு முயற்சிக்கவில்லை" என்றார்.

**இலக்கு குறைப்பு:** பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலமாக ₹1.75 லட்சம் கோடியைத் திரட்ட கடந்த நிதிநிலை அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், ₹12,030 கோடியை மட்டுமே மத்திய அரசால் திரட்ட முடிந்தது. ஏர் இந்தியாவை விற்றதன்மூலமாக ₹2,700 கோடியும், மற்ற பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்ன் மூலமாக ₹9,330 கோடியும் மத்திய அரசுக்குக் கிடைத்தது.

இந்நிலையில், அடுத்த நிதியாண்டுக்கான இலக்கு ₹65,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தை (LIC) பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கான பணிகள் தொடா்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்–டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன், அத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் தற்போதைய நிதிநிலை அறிக்கையில் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறினார்.

**மானியம் குறைப்பு:** உணவுப் பொருள்கள், உரங்களுக்கு மத்திய அரசு அதிக அளவில் மானியங்களை வழங்கி வருவதாகவும் அதைக் குறைக்க வேண்டுமெனவும் பொருளாதார ஆய்வறிக்கைகளில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. அக்கோரிக்கையை மத்திய அரசு தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. உணவுக்கான மானியம் ₹2,42,836 கோடியில் இருந்து ₹2,06,831 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மானியம் 39 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

**பசுமைப் பத்திரங்கள்:** நாட்டில் முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் விநியோகம் சார்ந்த விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதன் காரணமாகவே பெரிய அளவிலான சலுகைகள் அறிவிக்கப்படவில்லை என அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் பசுமைசார் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களுக்காக 'பசுமைப் பத்திரங்கள்' வெளியிடப்பட்டு நிதி திரட்டப்படும் என நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மீண்டு வருவதாகத் தெரிவித்த அமைச்சர், கடந்த ஜனவரியில் சரக்கு–சேவை வரி (GST) வருவாய் வரலாறு காணாத வகையில் ₹1,40,986 கோடியாக அதிகரித்தது எனவும் கூறினார்.

**நிதிப்பற்றாக்குறை:** கரோனா பரவலால் நாட்டின் வருவாய் பெருமளவில் குறைந்ததன் காரணமாக கடன் வாங்கி திட்டங்களைச் செயல்படுத்தும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. அதன் விளைவாக அரசின் நிதிப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அடுத்த நிதியாண்டுக்கான நிதிப்பற்றாக்குறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில் 6.4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை 2025–26ஆம் நிதியாண்டில் 4.5 சதவீதமாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

**சலுகைகள் இல்லை:** உத்தர பிரதேசம் உள்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதாயம் பெறும் நோக்கில் அந்த மாநிலங்களுக்கு சாதகமான அறிவிப்புகள் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அத்தகைய அறிவிப்புகள் எதையும் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படவில்லை.

நிதிநிலை அறிக்கையை அமைச்சர் நிர்மலா சீதாராமன் 1 ½ மணி நேரம் வாசித்தார். அவர் அறிக்கையை வாசித்துக் கொண்டிருக்கும்போதே, அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் அவ்வப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குரலெழுப்பினர். முக்கியமாக, ஏலம் மூலமாக 5ஜி அலைக் கற்றை தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தபோது, 'BSNL நிறுவனம் என்னானது?' என சிலர் கேள்வி எழுப்பினர்.

**தேசிய ஓய்வூதியத் திட்டம்: மாநில அரசு ஊழியர்களுக்கும் வரி விலக்கு வரம்பு அதிகரிப்பு**

தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் (NPS) மாநில அரசு ஊழியர்களுக்கு நிர்வாக பங்களிப்புத்தொகைக்கான வரி விலக்கு வரம்பு 10–இலிருந்து 14 சதவீதமாக நிதிநிலை அறிக்கையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

NPS'இல் மத்திய அரசு ஊழியர்களுக்கு தற்போதுள்ள நிர்வாக பங்களிப்பு 14 சதவீத தொகை வரிவிலக்கைப் போன்று, மாநில அரசு ஊழியர்களுக்கும் வரி விலக்கு வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**புதிய அறிவிப்புகள்**

* எண்ம செலாவணி அறிமுகம்.

* 'சிப்' பொருத்தப்பட்ட இ–பாஸ் போர்ட் அறிமுகம்.

* மெய்நிகர் சொத்துகளின் பரிவர்த்தனைக்கு 30 சதவீதம் வரி.

* விவசாயத்திலும் நில அளவையிலும் ட்ரோன் பயன்பாடு.

* 3 ஆண்டுகளில் 400 "வந்தே பாரத்' ரயில்கள்.

* சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம் மறுசீரமைப்பு

* ஒவ்வொரு வகுப்புக்கும் பிராந்திய மொழியில் தனித்தனி தொலைக்காட்சி சேனல்கள்.

* 5ஜி அலைக்கற்றை ஏலம்

**ஒதுக்கீடுகள்**

* பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு ₹44,720 கோடி கூடுதல் மூலதனம்.

* இரயில்வேக்கு ₹1.40 லட்சம் கோடி.

* கோதுமை, நெல் கொள்முதலுக்கு ₹2.37 லட்சம் கோடி.

* வீடுதோறும் குடிநீர்க் குழாய் திட்டத்துக்கு ₹60,000 கோடி.

* பிரதமரின் வீட்டு வசதி திட்டத்துக்கு ₹48,000 கோடி.

* சூரிய மின்கலன்கள் தயாரிப்புக்கு கூடுதலாக ₹19,500 கோடி.

* வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு ₹1,500 கோடி.

* MSME துறைக்கு ₹2 லட்சம் கோடி கூடுதல் கடன்.

* உள்நாட்டு பாதுகாப்புக்கு ₹1.85 லட்சம் கோடி.

**வரிச் சலுகை/ வரி அறிவிப்பு**

* தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் ₹50,000 கூடுதல் வரிவிலக்கு தொடரும்.

* கூட்டுறவு நிறுவனங்களுக்கான குறைந்தபட்ச மாற்று வரி (ஏஎம்டி) 15 சதவீதமாகக் குறைப்பு.

* வெளிநாட்டு குடைகளுக்கு 20 சதவீத வரி.

* சில மின்னணு உபகரணங்கள் மீதான இறக்குமதி வரி அதிகரிப்பு.

* பொலிவூட்டப்பட்ட வைரம் மீதான இறக்குமதி வரி 5%ஆக குறைப்பு.

**விலை அதிகரிக்கும் பொருள்கள்**

இறக்குமதி செய்யப்படும் ஹெட்போன்கள், இயர்போன், குடைகள், சூரிய மின்கலன், சூரிய மின் தகடுகள், ஒலிபெருக்கிகள், ஸ்மார்ட் மீட்டர், கவரிங் நகைகள், எக்ஸ்ரே இயந்திரம், பேட்டரியில் இயங்கும் சிறார் விளையாட்டுப் பொருள்களுக்கான உதிரிபாகங்கள்.

இறக்குமதி வரி அல்லது இவற்றின் உதிரி பாகங்களுக்கான இறக்குமதி வரி அதிகரிப்பால் மேற்கண்ட பொருள்களின் விலை உயருகிறது.

உள்நாட்டில் சிறு தொழில் புரிவோருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வெளிநாட்டு குடைகள், அதற்கான உதிரிபாகங்கள் மீதான இறக்குமதி வரி 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**விலை குறையும் பொருள்கள்**

இறக்குமதி செய்யப்படும் பொலிவூட்டப்பட்ட மற்றும் அறுத்து வடிவமைக்கப்பட்ட வைரங்கள், உணவாகப் பயன்படுத்தப்படும் பதப்படுத்தப்பட்ட சிப்பிகள், பதப்படுத்தப்பட்ட கணவாய் மீன்கள், பெருங்காயம், கோகோ பீன்ஸ், மெத்தனால், அசிட்டிக் அமிலம், செல்லிடப்பேசி கேமராக்களுக்கான லென்ஸ் ஆகியவற்றின் விலை குறையும்.

மேற்கண்ட பொருள்களின் இறக்குமதி வரியை மத்திய அரசு குறைத்துள்ளதால் அவற்றின் விலை குறைய இருக்கிறது. இதில் செல்லிடப்பேசி கேமரா லென்ஸ் மீதான வரி 15 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

**3. வேளாண் துறைக்கு ₹1,32,513 கோடி ஒதுக்கீடு கடந்த ஆண்டை விட 4.5 சதவீதம் அதிகம்**

வேளாண் அமைச்சகத்துக்கு நடப்பு பட்ஜெட்டில் ₹1,32,513 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகம்.

மீன், பால், கால்நடை அமைச்சகத்துக்கு ₹6,407.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட 44% அதிகம். இதுகுறித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் கூறுகையில், 'உள்நாட்டில் எண்ணெய் வித்து பயிர் விதைகள் உற்பத்தியை அதிகரிக்கவும், வெளிநாட்டிலிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும் மத்திய அரசு ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

2023ஆம் ஆண்டு சிறுதானியங்களின் சர்வதேச ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், உள்நாட்டு சிறுதானிய உற்பத்தியை அதிகரித்து சர்வதேச அளவில் கொண்டு செல்ல மத்திய அரசு ஆதரவளிக்கும்.

வேளாண் பொருள்களை குறைந்தபட்ச ஆதரவு விலையின்மூலம் 2021–22ஆம் பருவ ஆண்டில் 163 லட்சம் விவசாயிகளிடம் இருந்து 1,208 லட்சம் டன்னுக்கும் அதிகமாக நெல், கோதுமை கொள்முதல் நடைபெறும். இதற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் ₹2.37 லட்சம் கோடி நேரடியாக செலுத்தப்படும்.

பிரதமரின் கிஸான் திட்டத்துக்கு அடுத்த ஆண்டு ₹6,57,000 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதேபோல், பயிர் காப்பீட்டு திட்டத்துக்கு ₹15,500 கோடியும், கிருஷ்னாட்டி திட்டத்துக்–கு ₹7,183 கோடியும், ராஷ்ட்ரீய கிருஷ் திட்டத்துக்கு ₹10,433 கோடியும், சந்தை விலை ஆதரவு திட்டத்துக்கு ₹1,500 கோடியும் மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

---

**4. 2022–23ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்**

2022–23 நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை மத்திய நிதி மற்றும் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

**நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:**

**பகுதி–அ**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதம் என்ற அளவில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 14 துறைகளில் 60 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

உற்பத்தியுடன் இணைந்த முதலீட்டுத் திட்டத்தின்மூலம் கூடுதலாக 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி நடைபெறும்

நாடு அடுத்த 25 ஆண்டுகளில் 100வது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில் நீண்டகால திட்டங்களுக்காக நான்கு முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

**பிரதமர் கதிசக்தி**

**அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி**

உற்பத்தி மேம்பாடு மற்றும் முதலீடு, புதிய வாய்ப்புகள், எரிசக்தி மாற்றம் மற்றும் பருவநிலை திட்டம்

**முதலீட்டிற்கான நிதி**

**பிஎம் கதிசக்தி**

சாலைகள், ரயில்வே, விமான நிலையங்கள், துறைமுகங்கள், விரைவுப் போக்குவரத்து, நீர்வழிகள், போக்குவரத்து உள்கட்டமைப்பு ஆகியவை பிஎம் கதிசக்தியை இயக்கும் 7 என்ஜின்கள் ஆகும்.

**பிஎம் கதிசக்தி தேசிய பெருந்திட்டம்**

பிஎம் கதிசக்தி தேசிய பெருந்திட்டத்திற்கான வாய்ப்பு பொருளாதார மாற்றம், வலுவான பன்மாதிரி இணைப்பு மற்றும் போக்குவரத்துத் திறனுக்கான 7 என்ஜின்களை உள்ளடக்கியதாகும்.

தேசிய உள்கட்டமைப்பு திட்டத்தில், இந்த 7 என்ஜின்களை உள்ளிடக்கிய திட்டங்கள் பிஎம் கதிசக்தி வரையறைக்குள் கொண்டு வரப்படும்.

**சாலைப் போக்குவரத்து**

2022–23இல் தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு 25,000 கிலோ மீட்டர் தொலைவுக்கு விரிவாக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு விரிவாக்கத்திற்கான ₹20,000 கோடி திரட்டப்படும்

**பன்மாதிரி போக்குவரத்து பூங்காக்கள்**

2022–23இல் பன்மாதிரி போக்குவரத்து பூங்காக்களை 4 இடங்களில் செயல்படுத்துவதற்கு தனியார் பொதுத்துறை கூட்டு முயற்சி மூலம் ஒப்பந்தங்கள் வழங்கப்படும்

**ரயில்வே**

உள்ளூர் வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலிக்கு உதவும் வகையில், ஒரு நிலையம் ஒரு பொருள் என்ற கருத்தியல் நடைமுறைப்படுத்தப்படும்.

2022–23 உலகத் தரம் வாய்ந்த உள்நாட்டு தொழில்நுட்பம் மற்றும் திறன் அதிகரித்தலுக்கு கவாஜ் திட்டத்தின் கீழ் 2000 கிலோ மீட்டர் ரயில்வே கட்டமைப்பு கொண்டு வரப்படும்.

அடுத்த 3 ஆண்டுகளில் 400 புதிய தலைமுறை வந்தே பாரதம் ரயில்கள் தயாரிக்கப்படும்.

அடுத்த 3 ஆண்டுகளில் பன்மாதிரி சரக்குப் போக்குவரத்துக்கான 100 பிஎம் கதிசக்தி சரக்கு முனையங்கள் உருவாக்கப்படும்.

**பர்வதமாலா**

தேசிய ரோப்வே வளர்ச்சித் திட்டம் பர்வதமாலா பொதுத்துறை, தனியார் கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்படும்.

2022–23இல் 60 கிலோ மீட்டர் தூரத்துக்கு 8 ரோப்வே திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்.

**உள்ளடக்கிய வளர்ச்சி**

**வேளாண்மை**

கோதுமை மற்றும் நெல் கொள்முதலுக்காக 1.63 கோடி விவசாயிகளுக்கு ₹2.37 லட்சம் கோடி நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் ரசாயன கலப்பற்ற இயற்கை வேளாண்மை மேம்படுத்தப்படும். கங்கை நதியின் குறுக்கே 5 கிலோ மீட்டர் அகல வழித்தடத்தின் விவசாய நிலங்கள் மீது ஆரம்பக்கட்ட கவனம் செலுத்தப்படும்.

வேளாண்மை மற்றும் கிராமப்புற தொழில் தொடங்குவோருக்கு நிதி அளிக்க மூலதனத்துடன் கூடிய நிதியை நபார்டு வழங்கும்.

பயிர் மதிப்பீடு, நில ஆவணங்கள் டிஜிட்டல்மயமாக்கம், பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஊட்டச்சத்து தெளித்தலுக்கு கிசான் ட்ரோன்கள் பயன்படுத்தப்படும்.

**கென்– பெட்வா திட்டம்**

கென் – பெட்வா இணைப்புத் திட்ட அமலாக்கத்துக்கு ₹1400 கோடி ஒதுக்கீடு

கென் – பெட்வா இணைப்புத் திட்டத்தால் 9.08 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

**குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் (எம்எஸ்எம்இ)**

உதயம், இ–ஷ்ரம், என்சிஎஸ் மற்றும் அசீம் (ASEEM) இணையதளங்கள் ஒன்றாக இணைக்கப்டும்.

130 லட்சம் எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கு அவசரகால கடன் உத்தரவாத திட்டத்தின் (ECLGS)

கீழ் கூடுதல் கடன் வழங்கப்பட்டது.

இசிஎல்ஜிஎஸ் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்படவுள்ளது.

இசிஎல்ஜிஎஸ் திட்டத்தின் கீழான உத்திரவாதம் விரிவுபடுத்தப்படவுள்ளது. ₹50,000 கோடி அதிகரிக்கப்பட்–டு மொத்தம் ₹5 லட்சம் கோடியாக விரிவுபடுத்தப்படும்.

குறு மற்றும் சிறு நிறுவனங்ளுக்கான கடன் உத்திரவாத அறக்கட்டளையின் (CGTMSE) கீழ், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு ₹2 லட்சம் கோடி கூடுதல் கடன் வழங்கப்படும்.

₹6,000 கோடி மதிப்பில் எம்எஸ்எம்இ–க்களின் செயல்பாட்டை மேம்படுத்தும் திட்டம்(RAMP) அறிமுகம் செய்யப்படும்.

**திறன் மேம்பாடு**

ஆன்லைன் பயிற்சி மூலம் மக்களின் திறனை மேம்படுத்த திறன் மற்றும் வாழ்வாதாரத்துக்கான டிஜிட்டல் அமைப்பு (DESH–Stack இ–இணையதளம்) தொடங்கப்படும்.

* டிரோன் சேவைகளுக்கு, 'டிரோன் சக்திக்கு' உதவ தொடக்கநிலை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

**கல்வி**

பிரதமரின் இ–வித்யா திட்டத்தின் 'ஒரு வகுப்பு– ஒரு TV சேனல்' 200 TV சேனல்களாக விரிவுபடுத்தப்படும்.

* விவேகமான சிந்திக்கும் திறன்களை ஊக்குவிக்க மெய்நிகர் ஆய்வு கூடங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மின்னணு–ஆய்வு கூடங்கள் மற்றும் கற்றல் சூழல் ஏற்படுத்தப்படும்.

* டிஜிட்டல் ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பிக்க உயர்தர மின்னணு–பாடத்திட்டம் உருவாக்கப்படும்.

* உலகத்தரத்திலான கல்விக்கு டிஜிட்டல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்படும்.

**சுகாதாரம்**

தேசிய டிஜிட்டல் சுகாதார அமைப்புக்கு திறந்தவெளி தளம் அறிமுகப்படுத்தப்படும்.

* தரமான மனநல ஆரோக்கிய கலந்தாய்வுக்கு 'தேசிய தொலைதூர மன நல திட்டம் மற்றும் சேவைகள் தொடங்கப்படும்.

நிமான்ஸ்– ஐ சிறப்பு மையமாக கொண்டு 23 தொலை தூர மன நல சிறப்பு மையங்களின் நெட்வொர்க் ஏற்படுத்தப்படும். இதற்கான தொழில்நுட்ப உதவிகளை பெங்களூரில் உள்ள சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையம் (IIITB) வழங்கும்.

**ஷக்ஷம் அங்கன்வாடி**

மிஷன் சக்தி, மிஷன் வத்சல்யா, ஷக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷான் 2.0 திட்டம் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பயன்கள்

2 லட்சம் அங்கன்வாடிக்கள் ஷக்ஷம் அங்கன்வாடிகளாக மேம்படுத்தப்படும்.

**ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு**

வீட்டுக்கு வீடு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 2022–23ம் ஆண்டில் 3.8 கோடி வீடுகளுக்கு ₹60,000 கோடி ஒதுக்கப்பட்டது.

**அனைவருக்கும் வீடு**

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 2022–23ம் ஆண்டில் 80 லட்சம் வீடுகள் கட்டி முடிக்க ₹48,000 கோடி ஒதுக்கப்பட்டது.

வடகிழக்கு பகுதிக்கான பிரதமரின் மேம்பாட்டு நடவடிக்கை (PM–DevINE)

வடகிழக்கு மாநிலங்களில் சமூக வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமரின்–DevINE என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள் மற்றும் பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்ப கட்டமாக ₹1,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**துடிப்பான கிராமங்கள் திட்டம்**

வடக்கு எல்லையில் குறைவான மக்கள், இணைப்பு வசதி மற்றும் கட்டமைப்புகள் உள்ள எல்லை கிராமங்களின் மேம்பாட்டுக்கு துடிப்பான கிராமங்கள் திட்டம் தொடங்கப்பட்டது.

**வங்கி வசதிகள்**

1.5 லட்சம் தபால் அலுவலகங்களில் 100 சதவீதம் வங்கி அமைப்புக்குள் வரவுள்ளன.

வணிக வங்கிகள், 75 மாவட்டங்களில், 75 டிஜிட்டல் வங்கி யூனிட்டுகளை தொடங்கவுள்ளன.

**இ–பாஸ்போர்ட்**

மின்னணு சிப்கள் பொருத்தப்பட்ட இ–பாஸ்போர்ட்டுகள் மற்றும் எதிர்கால தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.

**நகர்ப்புற திட்டம்**

கட்டிட விதிகளின் நவீனமயமாக்கல், நகர திட்டமிடல் திட்டங்கள் மற்றும் போக்குவரத்து சார்ந்த வளர்ச்சி ஆகியவை அமல்படுத்தப்படும்.

நகர பகுதிகளில் சார்ஜிங் நிலையங்கள் அமைக்க பேட்டரி மாற்று கொள்கை கொண்டு வரப்படும்.

**நில ஆவணங்கள் மேலாண்மை**

தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் நில ஆவணங்கள் மேலாண்மைக்கு தனித்துவமான நில அடையாள எண்.

**துரிதமான பெருநிறுவனம் வெளியேற்றம்**

நிறுவனங்கள் விரைவாக வெளியேறுவதற்கு, துரிதமான பெருநிறுவன வெளியேற்ற மையம் (C–PACE) அமைக்கப்படும்.

**ஏவிஜிசி ஊக்குவிப்பு குழு**

அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், விளையாட்டு மற்றும் காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றின் ஊக்குவிப்புக்கு இத்துறையில் தனி குழு உருவாக்கப்படும்.

**தொலை தொடர்பு துறை**

உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக 5ஜி தொழில்நுட்பத்துக்கு வலுவான சூழலை உருவாக்க வடிவமைப்பு சார்ந்த உற்பத்தி திட்டம் தொடங்கப்படும்.

**ஏற்றுமதி வளர்ச்சி**

நிறுவனம் மற்றும் சேவை மையங்கள் மேம்பாட்டில் மாநிலங்களையும் பங்குதாரர்களாக்க சிறப்பு பொருளாதார மண்டலங்கள் சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும்.

**பாதுகாப்புத்துறையில் இந்தியா தற்சார்பு அடைதல்:**

2022–23இல் மூலதன கொள்முதலில் 68% உள்நாட்டு தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய பட்ஜெட்டில் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2021–22இல் 58% ஆக இருந்தது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பெருந்தொழில்துறையினர், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவதுடன் இந்நிறுவனத்தின் பட்ஜெட்டில் 25% இதற்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

பரிசோதனை மற்றும் சான்றிதழ் பெறுவதற்கு, சுதந்திரமான அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

**புதிய வகைப் பொருட்கள், சேவை வாய்ப்புகள்**

செயற்கை நுண்ணறிவு, புவி வானியல் சாதனங்கள், மற்றும் ட்ரோன்கள் செமி கண்டக்டர் மற்றும் அதன் சூழல் அமைப்பு, விண்வெளி பொருளாதாரம், மரபியல் பொருளாதாரம் மற்றும் மருந்து பொருட்கள், பசுமை எரிசக்தி மற்றும் தூய்மையான போக்குவரத்து சாதனங்கள் போன்ற புதிய வகைப் பொருட்கள், சேவை வாய்ப்புகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கு அரசு பங்களிப்பு வழங்கப்படும்.

**எரிசக்தி மாற்றம் மற்றும் பருவநிலை செயல்திட்டம்:**

2030'க்குள் 280 GW சூரியசக்தி உற்பத்தி இலக்கை அடைய, உயர்திறன் கொண்ட சூரியசக்தி சாதனங்களை உற்பத்தி செய்ய, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ₹19,500 கோடி கூடுதலாக ஒதுக்கப்படும்.

அனல்மின் நிலையங்களில் உயிரி கழிவு வில்லைகள், 5 முதல் 7% அளவுக்கு இணை எரிபொருளாக பயன்படுத்தப்படும்.

ஆண்டுக்கு 38 மில்லியன் மெட்ரிக் டன் கரியமில வாயு ($CO_2$) வெளியேற்றம் தவிர்ப்பு.

விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் மற்றும் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு

விளை நிலங்களில் பயிர்க்கழிவுகள் எரிப்பதை தவிர்க்க உதவி

தொழிற்சாலைகளுக்காக நிலக்கரியை ரசாயனப் பொருட்களாக மாற்றுதல் மற்றும் நிலக்கரி எரிவாயு நிலையங்களை அமைக்க நான்கு முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்படும்

வேளாண் காடுகளை வளர்க்க விரும்பும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியின விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

**அரசு மூலதன முதலீடு**

2022–23இல் முக்கிய தனியார் முதலீடு மற்றும் தேவைகளை ஊக்குவிப்பதில் அரசு முதலீடு தொடரும்.

நடப்பாண்டில் ₹5.54 லட்சம் கோடியாக உள்ள மூலதன செலவு ஒதுக்கீடு 2022–23இல் 35.4% அதிகரிக்கப்பட்டு ₹7.50 லட்சம் கோடி ஒதுக்கீடு

2022–23இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 2.9% ஒதுக்கீடு

மத்திய அரசின் 'வலுவான மூலதன செலவு' 2022–23இல் ₹ 10.68 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 4.1% ஆகும்.

குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரம் – சர்வதேச நிதிச்சேவைகள் மையம்.

குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரத்தில், உலகத்தரம் வாய்ந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் தொடங்க அனுமதிக்கப்படும்.

சர்வதேச நீதித்துறை விவேகத் திட்டத்தின்கீழ், சச்சரவுகளுக்கு குறித்த காலத்திற்குள் தீர்வு காண ஏதுவாக சர்வதேச சமரசத் தீர்வு மையம் அமைக்கப்படும்.

**வளங்களைத் திரட்டுதல்**

தரவு மையங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கு கட்டமைப்பு அந்தஸ்து வழங்கப்படும்

கடந்த ஆண்டில் ₹5.5 லட்சம் கோடிக்கும் அதிகமான மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு மூலதனம் மற்றும் தனியார் பங்கு முதலீடு, பெரிய அளவிலான ஸ்டார்ட் அப் மற்றும் வளர்ச்சி சூழலுக்கு வகை செய்துள்ளது.

புதிய வகை பொருட்கள், சேவை வாய்ப்புகள் துறைகளுக்கு கலப்பு நிதியம் ஊக்குவிக்கப்படும்.

பசுமை கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி திரட்ட பசுமைத் தங்கப்பத்திரங்கள் வெளியிடப்படும்.

**டிஜிட்டல் பணம்**

2022–23–லிருந்து இந்திய ரிசர்வ் வங்கி டிஜிட்டல் ரூபாயை அறிமுகப்படுத்தும்.

**மாநிலங்களுக்கு அதிக நிதி வாய்ப்புகளை வழங்குதல்**

'மாநிலங்களின் மூலதன முதலீட்டுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்கு' ஒதுக்கீடு அதிகரிப்பு:

₹10,000 கோடி பட்ஜெட் மதிப்பீடு நடப்பாண்டின் திருத்திய மதிப்பீட்டில் ₹15,000 கோடி

பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த முதலீடுகளை ஊக்குவிப்பதில் மாநிலங்களுக்கு உதவ 2022–23இல் ₹1 லட்சம் கோடி ஒதுக்கீடு: 50 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடன்கள், வழக்கமான மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் வாங்க அனுமதி

**நிதி மேலாண்மை**

பட்ஜெட் மதிப்பீடுகள் 2021–22: ₹34.83 லட்சம் கோடி

திருத்திய மதிப்பீடுகள் 2021–22: ₹37.70 லட்சம் கோடி

2022–23இல் மொத்த செலவினம் ₹39.45 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது

2022–23இல் கடன் தவிர்த்த மொத்த வரவுகள் ₹22.84 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது

**நடப்பாண்டில் நிதிப்பற்றாக்குறை:** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.9% (பட்ஜெட் மதிப்பீடுகள் 6.8%)

2022–23இல் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 6.4% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது

**நேர்முக வரிகள்**

நிலையான மற்றும் ஊகிக்கும் வரிமுறையின் கொள்கையை முன்னெடுத்து செல்வதற்கு

நம்பிக்கைதரும் வரி முறையை நிறுவுவதற்கான தொலைநோக்குப் பார்வை

வரி முறையை மேலும் எளிமைப்படுத்தவும், வழக்குகளைக் குறைக்கவும்

'புதிய வடிவிலான கணக்கு தாக்கல்' அறிமுகம்

கூடுதல் வரி செலுத்துவதற்கு புதிய வடிவிலான கணக்கு தாக்கலுக்கு வாய்ப்பு

ஏற்கனவே தவறவிட்ட வருவாயை அறிவிப்பதற்கு மதிப்பீட்டாளரால் இயலும்

உரிய மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் இருந்து 2 ஆண்டுகளுக்குள் கணக்கு தாக்கல் செய்ய முடியும்

**கூட்டுறவு சங்கங்கள்**

கூட்டுறவுகளால் செலுத்தப்பட்ட குறைந்தபட்ச மாற்றுவரி விகிதம் 18.5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே சமச்சீரான வாய்ப்பை வழங்குதல்

₹1 கோடிக்கும் அதிகமாகவும், ₹10 கோடி வரையிலும் மொத்த வருமானம் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கான கூடுதல் வரி 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகளுக்கு வரி நிவாரணம்**

பெற்றோர்கள் / காப்பாளர்களின் வாழ்க்கை காலத்தில் அதாவது பெற்றோர்கள் / காப்பாளர்கள் 60 வயதை எட்டிய போது, மாற்றுத்திறனாளிகளை சார்ந்திருப்போருக்கு காப்பீட்டு திட்டத்தில் இருந்து கிடைக்கும் வருடாந்திர தொகை அல்லது மொத்த தொகை அனுமதிக்கப்படும்.

**தேசிய ஓய்வூதிய திட்டப் பங்களிப்பில் சமநிலை**

மாநில அரசு ஊழியர்களின் தேசிய ஓய்வூதிய திட்ட கணக்கிற்குப் பங்களிப்பு செய்யும் உரிமையாளர்களுக்கான வரிப்பிடித்த வரம்பு 10 சதவீதத்தில் இருந்து 14 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக இவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இது சமூகப் பாதுகாப்புப் பலன்களை விரிவாக்க உதவும்.

**புதிய தொழில்களுக்கு ஊக்குவிப்பு**

தகுதிவாய்ந்த புதிய தொழில்களுக்கு வரிப் பயன் கிடைப்பதற்கான இணைப்புக்காலம் ஓராண்டிற்கு, 31.03.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இணைப்புக்கான கால வரம்பு ஏற்கனவே 31.03.2022 ஆக இருந்தது.

**சலுகை வரி முறையின் கீழ் ஊக்குவிப்பு திட்டங்கள்**

பிஐபி பிரிவு 115இன் கீழ் தயாரிப்பு அல்லது உற்பத்தி தொடக்கத்திற்கான கடைசி தேதி ஓராண்டுக்கு அதாவது 31 மார்ச் 2023இல் இருந்து 31 மார்ச் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் வரி விதிப்புக்கான திட்டம்

மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களுக்கான குறிப்பிட்ட வரிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிமாற்றத்திலிருந்து கிடைக்கும் வருவாய்க்கு 30 சதவீத விகிதத்தில் வரி விதிக்கப்படும்.

ஆர்ஜித செலவு தவிர மற்ற வருவாயை கணக்கிடும் போது செலவு அல்லது ஊதியம் வரிக்குறைப்புக்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களின் பரிமாற்றத்தில் ஏற்படும் இழப்பு இதர வருவாய்க்கு மாற்றாக எடுத்துக் கொள்ள இயலாது

பரிமாற்ற விவரங்களை பெறுவதற்கு மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிமாற்றம் தொடர்பாக வழங்கப்பட்ட தொகைக்கு ஒரு சதவீத அளவிற்கு டிடிஎஸ் (வருவாயிலிருந்து வரிப்பிடித்தம்) பிடித்தம் செய்யப்படும்.

மெய்நிகர் டிஜிட்டல் சொத்து பரிசளிக்கப்படும் போது அதனை பெறுபவருக்கு வரி விதிக்கப்படும்.

**வழக்கு நிர்வாகம்**

உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தால்

சட்டம் பற்றிய கேள்வி முடிவு செய்யப்படும் வரை மேல்முறையீடு தாக்கல் செய்வது ஒத்திவைக்கப்படும்.

துறைக்கும், வரி செலுத்துவோருக்குமிடையே அடுத்தடுத்து வழக்கு தொடரப்படுவதை இது பெருமளவு குறைக்க உதவும்.

**ஐஎஃப்எஸ்சி–க்கு வரி ஊக்குவிப்புகள்**

குறிப்பிட்ட நிலைமைகளுக்கு உட்பட்டு கீழ் வருபவற்றுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கடலுக்கு அப்பால் உருவாக்கப்பட்ட பொருட்களிலிருந்து வெளிநாடு வாழ் இந்தியரின் வருவாய்

கடலுக்கு அப்பால் உள்ள வங்கிப் பிரிவால் வழங்கப்பட்ட மாற்றுக் கணக்குகளிலிருந்து பெறப்படும் வருவாய்

கப்பல் குத்தகையின் கணக்கில் பெறப்படும் உரிமத் தொகை மற்றும் வட்டி வருவாய்

ஐஎஃப்எஸ்சியில் பங்கு நிர்வாக சேவைகளிலிருந்து பெறப்படும் வருவாய்

**கூடுதல் வரியில் சீர்திருத்தம்**

ஏஓபி–க்கள் (ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு அமைக்கப்படும் கூட்டமைப்பு) மீதான கூடுதல் வரி உச்சவரம்பு 15 சதவீதமாக இருக்கும்.

தனிநபர் நிறுவனங்களுக்கும், கூட்டு நிறுவனங்களுக்கும் இடையேயான துணை வரியில் பாகுபாடு குறைக்கப்படும்

எந்தவகையான சொத்துக்கள் பரிமாற்றத்திலிருந்தும் கிடைக்கின்ற நீண்டகால மூலதன லாபங்கள் மீதான துணை வரி 15 சதவீதமாக இருக்கும்

புதிய தொழில் தொடங்கும் சமூகத்தினருக்கு ஊக்கம் அளிப்பதற்காக

வருவாய் மற்றும் லாபங்கள் மீதான துணை வரி அல்லது செஸ் வரி வர்த்தக செலவாக அனுமதிக்கப்பட மாட்டாது

**வரி ஏய்ப்புக்கு எதிரான தடுப்பு நடவடிக்கை**

தேடுதல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளின் போது கண்டறியப்பட்ட வெளிப்படுத்தப்படாத வருவாய்க்கு மாறான எந்த இழப்பையும் வெளிப்படுத்த அனுமதிக்கப்படாது.

**டிடிஎஸ் அம்சங்களில் சீர்திருத்தங்கள்**

• வணிக மேம்பாட்டு உத்தியாக முகவர்களின் கைகளில் இருக்கும் வரி விதிப்பின் பயன்கள் முகவர்களுக்கு வழங்கப்படும்.

• நிதியாண்டின் போது ஒரு நபருக்கு வழங்கப்படும் பணப்பயன்களின் மொத்த மதிப்பு ₹20,000–ஐ கடக்கும் போது வரிப்பிடித்தம் செய்யப்படும்.

**மறைமுக வரிகள்**

**ஜிஎஸ்டியில் மகத்தான வளர்ச்சி**

பெருந்தொற்றுக்கு இடையிலும் ஜிஎஸ்டி வருவாய் அதிகரிப்பு – இந்த வளர்ச்சிக்கு வரிசெலுத்துவோர் பாராட்டுக்குரியவர்கள்

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்**

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் சுங்க நிர்வாகம் முற்றிலும் தொழில்நுட்பமயமாக்கம். 2022 செப்டம்பர் 30–ந் தேதி வாக்கில் சுங்க தேசிய வலைத்தளத்தின் செயல்பாடு நடைமுறைக்கு வரும்.

**சுங்க சீர்திருத்தங்கள் மற்றும் தீர்வை விகித மாற்றங்கள்**

முகமற்ற சுங்க நடைமுறை முற்றிலும் உருவாக்கப்பட்டுள்ளது. கொவிட்–19 பெருந்தொற்று காலத்தில், அனைத்து விதமான சிரமங்களுக்கு இடையே சுங்க அமைப்புகள் சிறப்பான முன்களப் பணியில் ஈடுபட்டன.

**திட்ட இறக்குமதிகள் மற்றும் மூலதனப் பொருட்கள்**

மூலதனப் பொருட்கள் மற்றும் திட்ட இறக்குமதிகளில் சலுகை விகிதங்கள் படிப்படியாக அகற்றப்படும். இந்தியாவில் தயாரிப்போம் மற்றும் உள்நாட்டுத் துறை வளர்ச்சிக்கு உதவும் வகையில் 7.5 சதவீதம் என்ற மிதமான கட்டணம் வசூலிக்கப்படும்.

உள்நாட்டில் தயாரிக்கப்படாத நவீன இயந்திரங்களுக்கான சில சலுகைகள் தொடரும்.

மூலதனப் பொருட்களில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க, சிறப்பு வார்ப்புகள், திருகாணி உருண்டைகள், நேரியல் இயக்கம் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு சில சலுகைகள் அறிமுகம்.

**சுங்க சலுகைகள் மறு ஆய்வு மற்றும் கட்டண எளிதாக்கம்**

சில வகையான வேளாண் உற்பத்திப் பொருட்கள், ரசாயனங்கள், துணிகள், மருத்துவ உபகரணங்கள் மீதான சலுகை போன்ற 350–க்கும் மேற்பட்ட சலுகைகளை படிப்படியாக அகற்ற உத்தேசம். போதுமான உள்ளூர் திறன் கொண்ட மருந்துகளுக்கு இச்சலுகைகள் நீடிக்கும்.

ரசாயனங்கள், ஜவுளி, உலோகங்கள் போன்ற பிரிவுகளுக்கான கட்டண விகிதம் மற்றும் சுங்க விகிதம் எளிதாக்கப்படுகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அல்லது தயாரிக்கப்படக் கூடிய பொருட்களுக்கு சலுகை ரத்து செய்யப்பட்டு, இந்தியாவில் தயாரிப்போம், தற்சார்பு இந்தியா ஆகியவற்றின் நோக்கங்களுடன் தயாரிக்கப்படும் பொருட்களுக்குப் பயன்படும் கச்சா பொருட்களுக்கு சலுகை அடிப்படையிலான தீர்வைகள் வழங்கப்படும்.

**குறிப்பிட்ட துறை முன்மொழிவுகள்**

**மின்னணு**

அணியக்கூடிய உபகரணங்கள், கேட்கும் உபகரணங்கள், மின்னணு ஸ்மார்ட் மீட்டர்கள், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க படிப்படியான விகித அமைப்பை உருவாக்க சுங்கத் தீர்வை விகிதங்கள் திருத்தியமைக்கப்படும்.

மொபைல் ஃபோன் மின்னூக்கிகள் மின்மாற்றி, மொபைல் கேமராவுக்கான கேமரா லென்ஸ் ஆகியவற்றின் பாகங்கள் மற்றும் சில பொருட்களுக்கு, உயர் வளர்ச்சி மின்னணு பொருட்கள் உற்பத்தியை உள்நாட்டில் ஊக்குவிக்கும் தீர்வை சலுகைகள்.

**வைரங்கள் மற்றும் ஆபரணங்கள்**

பட்டைத் தீட்டப்பட்ட வைரங்கள் மற்றும் வைரக்கற்கள் மீதான சுங்கத் தீர்வை 5 சதவீதமாக குறைக்கப்படுகிறது. வைரங்கள் மற்றும் நகைப்பிரிவை ஊக்குவிக்கும் வகையில் அறுக்கப்பட்ட வைரங்களுக்கு சுங்கத் தீர்வை இல்லை.

மின் வணிகம் மூலம் நகை ஏற்றுமதியை ஊக்கவிக்க இந்த ஆண்டு ஜூன் மாதம் எளிதாக்கப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பு அமல்படுத்தப்படும்.

கவரிங் நகை இறக்குமதிக்கு ஊக்கத் தடை விதிக்கும் வகையில், கவரிங் நகை இறக்குமதி மீது குறைந்தபட்சம் கிலோவுக்கு ₹400 வீதம் சுங்கத் தீர்வை செலுத்த வேண்டும்.

**ரசாயனங்கள்**

மெத்தனால், அசிடிக் ஆசிட் போன்ற சில முக்கிய ரசாயனங்கள், பெட்ரோலிய சுத்திகரிப்புக்கான கனரக இருப்பு மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்படுகிறது; உள்நாட்டு உற்பத்தித் திறன் உள்ள சோடியம் சயனைடு மீதான தீர்வை அதிகரிக்கப்படுகிறது. இது உள்நாட்டு மதிப்புக் கூடுதலை அதிகரிக்க உதவும்.

**எம்எஸ்எம்இ**

குடைகள் மீதான சுங்கத் தீர்வை 20 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. குடைகளுக்கான பாகங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை திரும்பப் பெறப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் துறைக்கான உபகரணங்கள் மீதான சலுகை மாற்றியமைக்கப்படுகிறது.

சிறு, குறு, நடுத்தர தொழிலின் இரண்டாம் கட்ட உருக்கு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் வகையில் இரும்புக் கழிவுகளுக்கு சுங்கத் தீர்வை விலக்களிக்கப்படுகிறது.

பொது நலன் கருதி உலோகங்களுக்கு அதிக விலை அளிக்கும் வகையில், துருப்பிடிக்காத ஸ்டீல், இரும்புக் கம்பிகள், அல்லாய் ஸ்டீல் மீதான சிவிடி தீர்வை ரத்து செய்யப்படுகிறது.

**ஏற்றுமதிகள்**

ஏற்றுமதியை ஊக்குவிக்க அலங்காரம், டிரிம்மிங், பாஸ்ட்னர்கள், பொத்தான்கள், ரிவிட், லைனிங் மெட்டீரியல், குறிப்பிட்ட தோல், மரச்சாமான்கள் பொருத்துதல்கள் மற்றும் பேக்கேஜிங் பெட்டிகள் போன்ற பொருட்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இறால் ஏற்றுமதியை ஊக்குவிக்க, இறால் வளர்ப்புக்குத் தேவையான சில பொருட்கள் மீதான தீர்வை குறைக்கப்படுகிறது.

**எரிபொருள் கலப்பை ஊக்குவிக்க கட்டண அளவீடு**

எரிபொருள் கலப்பை ஊக்குவிக்க, கலக்காத எரிபொருளுக்கு 2022 அக்டோபர் 1 முதல் லிட்டருக்கு ₹2 வீதம் கூடுதல் வித்தியாச கலால் வரி விதிக்கப்படும்.

---

**5. 2025-26-ஆம் நிதியாண்டில் இந்திய பொருளாதார மதிப்பு 5 டிரில்லியன் டாலராக உயரும்: தலைமை பொருளாதார ஆலோசகர்**

இந்தியாவின் பொருளாதார மதிப்பு 2025-26ஆம் நிதியாண்டில் 5 டிரில்லியன் டாலரை (சுமார் ₹370 லட்சம் கோடி) எட்டும் என்று மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் வி அனந்த நாகேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை கூறுகையில், "மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு ஏற்கெனவே 3 டிரில்லியன் டாலரை (சுமார் ₹225 லட்சம் கோடி) கடந்துள்ளது. செலாவணி மதிப்பு விகிதத்தின் போக்கு, வளர்ந்த நாடுகளில் உள்ள நிலவரம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் இந்திய ரூபாயின் மதிப்பு ஸ்திரமாகவும் வலுவாகவும் இருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 8-9 சதவீதமாக தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டால், அது டாலர் மதிப்பில் 8 சதவீத வளர்ச்சியாக இருக்கும். இந்தப் போக்கு தொடர்ந்து சாத்தியமானால் 2025-26 அல்லது 2026-27ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதார மதிப்பு 5 டிரில்லியன் டாலரை எட்டும்" எனத் தெரிவித்தார்.

இந்திய பொருளாதார மதிப்பை 5 டிரில்லியன் டாலராக அதிகரித்து, 2024-25ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய பொருளாதார சக்தியாக இந்தியாவை உயர்த்தும் தனது கனவை கடந்த 2019ஆம் ஆண்டு பிரதமர் மோடி வெளிப்படுத்தினார். இதன்மூலம் உலகில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்.

நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 9.2 சதவீதம் வளர்ச்சியடையும் எனவும், அடுத்த நிதியாண்டில் 8-8.5 சதவீதம் வளர்ச்சியடையும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**6. சேதி தெரியுமா?**

**ஜன.22:** த.செ. ஞானவேல் இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்த 'ஜெய் பீம்' திரைப்படம் ஆஸ்கர் விருதுக்கான தகுதிப் பட்டியலில் இடம்பெற்றது.

**ஜன.23:** தமிழக அரசின் தொல்லியல் துறையின் முதல் இயக்குநராகப் பணி யாற்றியவரும் முதுபெரும் தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆய்வாளருமான நாகசாமி (92) காலமானார்.

**ஜன.23:** லக்னோவில் நடைபெற்ற சையது மோடி சர்வதேச பாட்மிண்டன் தொடரின் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் பி.வி. சிந்து வென்றார்.

**ஜன.24:** 1945இல் இரண்டாம் உலகப் போரின்போது மாயமான அமெரிக்க விமானம் இமயமலைப் பகுதியில் அமெரிக்க மலையேற்ற சாகச வீரர் கிளேட்டன் குக்லெஸ் தலைமையில் கண்டறியப்பட்டது.

**ஜன.25:** தமிழகத்தைச் சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம் (இலக்கியம், கல்வி); எஸ் தாமோதரன் (சமூக சேவை); வீ. சேஷையா (மருத்துவம்), AKC நடராஜன், முத்துக்கண்ண

–ம்மாள், சௌகார் ஜானகி, எச் பல்லேஷ் பஜந்திரி (கலை) ஆகியோர் 2022–ம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

**ஜன.26:** தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் பிப்ரவரி 19 அன்று நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

**ஜன.27:** டாடா குழுமத்திடம் ஏர் இந்தியா நிறுவனத்தை மத்திய அரசு அதிகாரபூர்வமாக ஒப்படைத்தது. முன்னதாக ₹18 ஆயிரம் கோடிக்கு ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா நிறுவனம் வாங்கியது.

**ஜன.27:** 1964ஆம் ஆண்டில் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய ஹாக்கி அணிக்கு கேப்டனாக இருந்து தங்கப் பதக்கம் வென்ற சரண்ஜித் சிங் (90) காலமானார்.

**ஜன.28:** மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக ஆனந்த் நாகேஸ்வரனை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டது.

**ஜன.29:** இந்தியாவிடமிருந்து முதன்முறையாக பிரமோஸ் ஏவுகணையை 375 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் பிலிப்பைன்ஸ் வாங்க ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

---


**1.** **ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி சுற்றிவரும் விண்வெளிப்பரப்பின் பெயர் என்ன?**

**அ) லாக்ரேஞ்ச் புள்ளி L2 ☑**

ஆ) கியூரி புள்ளி

இ) நியூட்டன் புள்ளி

ஈ) CV இராமன் புள்ளி



- ✓ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிமீ தொலைவில் அதன் இறுதி இலக்கை அடைந்தது. அது 'லாக்ரேஞ்ச் புள்ளி' எனப்படும் விண்வெளிப் பகுதியில் சுற்றும், அங்கு சூரியன் மற்றும் பூமியின் ஈர்ப்பு விசை சுழலும் அமைப்பின் மையவிலக்கு விசையால் சமநிலைப்படுத்தப்பட்டிருக்கும்.
- ✓ இப்புள்ளிகள் முதலில் இத்தாலிய பிரெஞ்சு கணிதவியலா–ளர் ஜோசப்–லூயிஸ் லாக்ரேஞ்ச் என்பவரால் கோட்பாடு செய்யப்பட்டது.

---

**2.** **IIT கரக்பூரின் அறிவியலாளர்கள், கீழ்காணும் எந்த நோயைக் கண்டறிவதற்கான ஒரு சிறிய சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?**

**அ) வாய்ப்புற்றுநோய் ☑**

ஆ) மார்பகப்புற்றுநோய்

இ) ஆண்மைச்சுரப்பிப் புற்றுநோய்

ஈ) நுரையீரல் புற்றுநோய்

- ✓ IIT கரக்பூரின் விஞ்ஞானிகள், வாய்வழி புற்றுநோயைக் கண்டறிவதற்கான ஒரு சிறிய, மலிவான சாதனத்தை உருவாக்கியுள்ளனர். ஒரு சாதனத்திற்கான மதிப்பிடப்பட்–ட விலை $500 அமெரிக்க டாலருக்குள் இருக்கும்.
- ✓ இந்தப் புதிய தொழில்நுட்பம், சுகாதார மையத்தில் உள்ள மருத்துவரால், முதல் பரிசோதனையின்போதே பாதிப்புக–ளைக் கண்டறிய உதவுகிறது.

---

**3.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'MY2022' செயலியுடன் தொடர்புடைய நாடு எது?**

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா

**இ) சீனா ☑**

ஈ) இஸ்ரேல்




- ✓ 'MY2022' என்பது பெய்ஜிங்கில் நடக்கவுள்ள குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பிறரால் பயன்படுத்தப்படும் செயலியின் பெயராகும். 'சிட்டிசன் லேப்' என்ற இணைய கண்காணிப்புக் குழுவின் சமீபத்திய அறிக்கையின்படி, செயலியில் உள்ள குறியாக்கத்தில் குறைபாடு உள்ளது. அதன்மூலம் முக்கியமான தரவு மற்றும் பிற தரவுகள் ஹேக் செய்யப்பட வாய்ப்புண்டு.

---

**4.** **முதலாவது UNDP இந்திய இளையோர் காலநிலை சாம்பியனாக அறிவிக்கப்பட்டவர் யார்?**

**அ) பிரஜக்தா கோலி ☑**

ஆ) லிசிப்ரியா கங்குஜம்

இ) தியா மிர்சா

ஈ) A திஷா ரவி



- ✓ ஐநா வளர்ச்சித் திட்டம்–இந்தியா, உள்ளடக்க உருவாக்கு–நரும் நடிகருமான பிரஜக்தா கோலியை அவற்றின் முதல் UNDP இந்திய இளையோர் காலநிலை சாம்பியனாக அறிவித்தது. பல்வேறு உலகளாவிய சமூக பிரச்சாரங்கள் மூலம் மனநலம், பெண்கள் உரிமைகள் மற்றும் பெண் குழந்தை கல்வி ஆகியவற்றிற்கான அவரது பங்களிப்பை UNDP அங்கீகரித்துள்ளது.

---

**5.** **ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரஸ்ஸின் அண்மைய ஆய்வின்படி, 2021ஆம் ஆண்டிற்கான சிறார்களுக்கான சொல்லாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சொல் எது?**

அ) Depression (மனச்சோர்வு)

ஆ) Virus (தீநுண்மம்)

**இ) Anxiety (கவலை) ☑**

ஈ) Teacher (ஆசிரியர்)




- ✓ ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரஸ்ஸின் ஒரு புதிய ஆராய்ச்சியின்படி, குழந்தைகளால் 'Anxiety' என்ற சொல் 2021ஆம் ஆண்டிற்கான சொல்லாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது. ஆசிரியர்கள் "Resilience" என்ற சொல்லை தங்களின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- ✓ ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பிரஸ் ஆனது குழந்தைகள் மொழியின் பரிணாம வளர்ச்சியையும், அவர்களின் உண–ர்வுகளையும் அனுபவங்களையும் பிரதிபலிக்க அவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதையும் ஆய்வுசெய்தது.

---


**6.** **ஒற்றையர் (அ) இரட்டையர் பிரிவில் முதலிடத்திற்கு உயர்ந்த முதல் இந்திய டென்னிஸ் வீராங்கனை யார்?**

அ) அங்கிதா ரெய்னா

**ஆ) சானியா மிர்சா ☑**

இ) கர்மன் தண்டி

ஈ) ரியா பாட்டியா



- ✓ சானியா மிர்சா 2015'இல் இரட்டையர் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்தபோது, ஒற்றையர் அல்லது இரட்டையர் பிரிவில் முதலிடத்திற்கு முன்னேறிய இந்திய டென்னிஸ் வீராங்கனை ஆனார்.
- ✓ விம்பிள்டனில் வென்றபோது கிராண்ட்ஸ்லாம் இரட்டைய–ர் பட்டத்தை வென்ற முதல் இந்தியப்பெண்மணி என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார். ஒரு இடைவெளி–க்குப் பிறகு, ஃபெட் கோப்பை இதய விருதை வென்று சாதனை படைத்தார். சமீபத்தில் அவர் 2022 சீசனுக்குப் பிறகு ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

---

**7.** **2022 ஜனவரி மாதத்தில், எந்த நாட்டின் தலைவர் உலகளாவிய ரேட்டிங் சர்வேயில் மிகவும் பிரபலமான தலைவராக முதலிடம் பிடித்தார்?**



அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) ரஷ்யா

ஈ) அமெரிக்கா

- ✓ இந்தியப்பிரதமர் மோடி 71 சதவீத ஒப்பளிப்பு மதிப்பீட்டுடன் உலகத்தலைவர்களிடையே மிகவும் பிரபலமான தலைவராக உலகளாவிய ரேட்டிங் சர்வேயில் முதலிடம் பிடித்தார். இந்தக் கருத்துக்கணிப்பு மார்னிங் கன்சல்ட் அரசியல் நுண்ணறிவு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. 2022 ஜனவரி 13–19 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.
- ✓ மெக்ஸிக்கோ அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோ 66% மதிப்பீட்டுடன் இரண்டாவது இடத்தையும், இத்தாலிய பிரதமர் மரியோ ட்ராகி 60% மதிப்பீட்டுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

---

**8.** **'ஸ்வச்சதா ஸ்டார்ட்–அப் சவாலை' அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?**

**அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**




ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) விவசாய அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

- ✓ வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது தூய்மை மற்றும் கழிவு மேலாண்மை துறையை மாற்றி அமைக்க புதுமையான ஸ்டார்ட்–அப்களை ஊக்குவிக்க 'ஸ்வச்சதா ஸ்டார்ட்–அப் சவாலை' தொடங்கியது. தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) மற்றும் Agence Française de Developpement (AFD) ஆகியவற்றுடன் இணைந்து இது தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ இது தூய்மை இந்தியா இயக்கம்–நகர்ப்புறம் 2.0'இன்கீழ், நிறுவன வளர்ச்சியை ஊக்குவிக்க முயல்கிறது.

---

**9.** **2022 ஜனவரி மாத நிலவரப்படி, கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசிகளுக்கு எவ்வகையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது?**




அ) அவசரகால பயன்பாட்டுக்கான அங்கீகாரம்

**ஆ) நிபந்தனையுடனான சந்தை அங்கீகாரம் ☑**

இ) அத்தியாவசிய சந்தை அங்கீகாரம்

ஈ) முழுமையான சந்தை அங்கீகாரம்

- ✓ சீரம் இந்தியா நிறுவனத்தின் 'கோவிஷீல்டு' மற்றும் பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவாக்ஸின்' COVID–19 தடுப்பூசிகளுக்கு மருந்து ஒழுங்காற்றுநர் "நிபந்தனையுட–ன் கூடிய சந்தை அங்கீகாரத்தை" வழங்கியுள்ளது.
- ✓ கடந்தாண்டு ஜனவரி முதல், இவ்விரண்டு தடுப்பூசிகளும் "அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்தின்கீழ் கிடைத்து வருகின்றன. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் தரவை அந்நிறுவனங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இது முன்னர் 15 நாட்களுக்கு ஒருமுறையாக இருந்தது. இது முழுமையான சந்தை (Full Market) அங்கீகாரத்திலிருந்து வேறுபட்டது.

---

**10.** **கோடைகால முகாமுக்கு விவசாயம் குறித்த தேசிய கருத்தரங்கின் மற்றொரு பெயர் என்ன?**



அ) ரபி மாநாடு

**ஆ) சயத் மாநாடு ☑**

இ) கரீப் மாநாடு

ஈ) பணப்பயிர் மாநாடு

- ✓ 2021–22 கோடைகால முகாமுக்கு வேளாண்மைகுறித்த 4ஆவது தேசிய கருத்தரங்கு காணொலி காட்சிமூலம் தொடங்கியது. இது 'சயத் மாநாடு' என்றும் அழைக்கப்படு–கிறது. கரீப் மற்றும் ராபி பருவங்களுக்கு இடையே 'சயத் பயிர்கள்' பயிரிடப்படுகின்றன.
- ✓ இந்த மாநாட்டில் மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர குமார் தோமர் கலந்துகொண்டார். முந்தைய பயிர் பருவங்களில் பயிரின் செயல்திறனை மறுபரிசீலனை செய்வதும், மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து அடுத்த கோடை பருவத்திற்கான பயிர்வாரியான இலக்குகளை நிர்ணயிப்பதும் இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 'பத்ம' விருதுகளால் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள்**

*** சதிராட்டத்தில் சாதனை படைத்த முத்து கண்ணம்மாள்**
***தூய்மையே வெல்லும் என உழைக்கும் தாமோதரன்**

தங்களது துறைகளில் அரிய சாதனைகளை செய்திருந்தாலும் அதிகம் அறியப்படாத இருதமிழர்களை 'பத்மஸ்ரீ' விருதுக்கு நடுவணரசு தேர்ந்தெடுத்துள்ளது.

பரதநாட்டியத்தின் முன்னோடியான சதிராட்டம் என்னும் நடனத்தில் கைதேர்ந்த விராலிமலையைச் சேர்ந்த முத்து கண்ணம்மாளுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக 1,000'க்கும் மேற்பட்ட நடனம் மற்றும் இசைநிகழ்ச்சிகளில் பங்கேற்று உள்ளார். 84 வயதான இவர், இளங்கலைஞர்களுக்கு இன்னமும் பயிற்சியளிக்கிறார்.

உயிரோடிருக்கும் ஒரே மற்றும் கடைசி தேவதாசியான முத்துக்கண்ணாம்மாள், $7_{ஆம்}$ தலைமுறை சதிர் கலைஞர் ஆவார். இந்தக் கலையைக்காக்க பல்வேறு முயற்சிகளை அவர் எடுத்துவருகிறார். அவரது சேவையை பாராட்டும் விதமாக கலைப்பள்ளியில் அவரது சிலை ஒன்றை மூத்த சிற்பி ஜி சந்திரசேகரன் நிறுவியுள்ளார்.

தூய்மைப்பணிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள 57 வயதான எஸ் தாமோதரன், நான்கு மாநிலங்களில் ஆறு இலட்சம் குறைந்த விலையிலான குட்டைக்கழிவறை அமைப்புகளைக் கட்டமைத்துள்ளார்.

இந்தியாவின் தெற்குப்பகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் குடிசைப்பகுதிகளில் தண்ணீர், கழிவுநீர்மேலாண்மை

மற்றும் சுகாதாரத்திற்கான அணுகலுக்கு அவரது முயற்சிகள் வழிவகுத்தன.

இந்தியாவிலேயே முதல்முறையாக, வசதிகளற்ற மக்களுக்காக சமூக மேலாண்மை முறையில் நடத்தப்படு –ம் கட்டணக் கழிவறை அமைப்புகளை 'கிராமாலயா' என்னும் தனது முன்முயற்சி மூலம் அறிமுகப்படுத்தினார்.

மகளிர் சுய உதவிக்குழுக்களை நிறுவி கழிவறைகள் தூய்மையாக பேணப்படுவதை உறுதி செய்தார்.

---

**2. இலங்கைக்கு இந்தியா ₹3,737 கோடி கடன் வழங்க ஒப்பந்தம் கையெழுத்து**

இலங்கைக்கு அவசரகால உதவியாக ₹3,737 கோடி கடன்வழங்க முன்வருவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் G L பீரிசுக்கு மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் கடந்த மாதம் எழுதிய கடிதத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில் அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம், எந்த ஒரு இந்திய வினியோகஸ்தர்மூலமும் எரிபொருளை இலங்கை இறக்குமதி செய்ய முடியும் என அந்நாட்டு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியா தற்போது வழங்கும் கடன், அந்நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடியை ஓரளவு தணிக்கும் என்று கருதப்படுகிறது. இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பை மேம்படுத்தும் விதமாக, பணப்பரிமாற்ற திட்டத்தில் ₹2,990 கோடி வழங்கவும் இந்தியா கடந்த வாரம் ஒப்புதல் தெரிவித்தது.

இந்தியன் ஆயில் நிறுவனத்திடம் இருந்து தலா 40 ஆயிரம் டன் பெட்ரோல், டீசலை வாங்க இலங்கை நேற்று முன்தினம் முடிவெடுத்தது குறிப்பிடத்தக்கது.

---

**3. தெற்கு ரயில்வேவின் 10 புதிய பாதை திட்டங்கள்: தலா ₹1,000 மட்டுமே ஒதுக்கீடு**

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2022–23ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் தெற்கு ரயில்வேயில் பல்வேறு பணிகளுக்கு ₹7,114 கோடியே 45 லட்சத்து 69 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் புதிய பாதை திட்டங்களுக்கு ₹59 கோடியே 10 ஆயிரம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், தமிழகத்தில் 8 திட்டங்கள் உள்பட 10 புதிய பாதை திட்டங்களுக்கு தலா ₹1,000 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகலப்பாதை திட்டப்பணிகளுக்கு ₹346 கோடியே 80 லட்சத்து ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரட்டை பாதை திட்டங்களுக்கு ₹381 கோடியே 51 லட்சத்து ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இந்த திட்டங்களுக்காக, ₹1,064 கோடியே 34 லட்சம் 58 ஆயிரம் வெளிமூலதனம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய பாதை திட்டம்:** தெற்கு ரயில்வே பகுதிக்குட்பட்ட 11 புதிய திட்டங்களில் 2 திட்டங்கள் கேரளப் பகுதியில் திருநின்னவாயா–குருவாயூர் (35 கிமீ), அங்கமாலி–சபரிமலா (116 கிமீ) ஆகிய திட்டங்கள் வருகின்றன. மீதம் 9 திட்டங்கள் தமிழக பகுதிகளில் வருகின்றன.

இதில் திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை திட்டம் (70 கிமீ), திண்டிவனம்–நகரி (179.2 கிமீ), அத்திப்பட்டு–புத்தூர் (88.30 கிமீ), ஈரோடு–பழனி (91.05 கிமீ), சென்னையில் இருந்து மாமல்லபுரம் வழியாக கடலூர் (179.28 கிமீ), மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி (143.5 கிமீ), ஸ்ரீபெரும்புதூர்–கூடுவாஞ்சேரி (60 கிமீ), மொரப்பூர்–தருமபுரி (36 கிமீ) ஆகிய 8 திட்டங்களுக்கு தலா ₹1,000 மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோல, கேரளத்தில் இரண்டு புதிய பாதை திட்டங்களுக்கும் தலா ₹1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ராமேசுவரம்–தனுஷ்கோடி (17.2 கிமீ) புதிய பாதை திட்டத்துக்கு ₹59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அகலப்பாதை திட்டம்:** திருச்சிராப்பள்ளி–காரைக்கால் திட்டத்தில், நாகப்பட்டினம்– வேளாங்கண்ணி–திருத்துறைப்பூண்டி (வழி: திருக்குவளை) புதிய பாதை திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ₹121.80 கோடி ஆகும். இந்தத் திட்டத்தில் திருச்சிராப்பள்ளி–காரைக்கால் அகலப் பாதை பணிகள் முடிந்து ரயில்கள் இயக்கப்படுவதால், இந் நிதி நாகைப்பட்டினம்–திருத்துறைப்பூண்டி புதிய பாதை திட்டத்துக்கு கிடைக்கும். மேலும், இத்திட்டம் வேகமடையும்.

மன்னார்குடி–பட்டுக்கோட்டை, பட்டுக்கோட்டை–தஞ்சை ஆகிய புதிய பாதை திட்டங்களும், திருத்துறைப்பூண்டி–அகஸ்தியம்பள்ளி அகலப்பாதை திட்டமும் உள்ளடக்கிய மயிலாடுதுறை–திருவாரூர்–காரைக்குடி அகலப்பாதை திட்டத்துக்கு ₹75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில், மயிலாடுதுறை–காரைக்குடி அகலப்பாதை திட்டப்பணிகள் முடிந்து ரயில்கள் இயக்கப்படுகின்றன. திருத்துறைப்பூண்டி–அகஸ்தியம்பள்ளி திட்டப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைய உள்ளது. இதற்கு இந்நிதி பயன்படுத்தப்படும். அகலப்பாதை திட்டப்பணிகளு –க்கு மொத்தம் ₹346 கோடியே 80 லட்சத்து ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இரட்டைபாதை திட்டம்:** சென்னை கடற்கரை–கொருக்குப் பேட்டை இடையே 3ஆவது பாதை திட்டத்துக்கு ₹10 கோடியும், சென்னை கடற்கரை–அத்திப்பட்டு இடையே 4ஆவது பாதை (22 கிமீ) ₹25 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு–விழுப்புரம் (103 கிமீ) பாதையுடன் தாம்பரம்–செங்கல்பட்டு 3ஆவது பாதையில் மின்மயமாக்குதல் திட்டத்துக்கு ₹25 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. ஓமலூர்–மேட்டூர் அணை (29.03) இரட்டை பாதை மற்றும் மின்மயமாக்கும் திட்டப்பணிக்கு ₹11 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பராமரிப்பு பணிகள்:** பழைய தண்டவாளங்களை புதுப்பித்தல் பணிக்கு ₹1,470 கோடியும், பாலப் பணிகளுக்கு ₹105 கோடியே 91 லட்சத்து 22 ஆயிரமும், சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு பணிக்கு ₹189 கோடியே 76 லட்சத்து 98 ஆயிரமும், பயணிகள் வசதிக்காக ₹327 கோடியே 77 லட்சத்து 95 ஆயிரமும், இதர மின்னணு பணிகளுக்கு ₹30 கோடியே 8 லட்சத்து 78 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

### 4. தமிழகத்தில் 50,296 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தமிழகத்தில் மின்சார வாகனங்களின் விற்பனை நிலவரம் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதில், "சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து வழி முறைகளை மேம்படுத்துவதற்கும், போக்குவரத்துத் துறையின் கரியமில வாயு மையத்தை போக்குவதற்கும், மாற்று எரிபொருட்களை அறிமுகப்படுத்துவதற்காக வெகுஜன உமிழ்வு தரநிலைகளைச் சாலை போக்குவரத்–து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் அறிவித்துள்ளது.

எத்தனால் கலந்த பெட்ரோல் (இ–10, இ–12, இ–15, இ–20), நெகிழ்வு எரிபொருள் (இ 85 அல்லது இ 100) மற்றும் டீசல் வாகனங்களுக்கான எத்தனால் கலவை (இடி 95), பயோடீசல், உயிரி எரிவாயு, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு, மெத்தனால் (எம் 15 அல்லது எம் 100) இரட்டை எரிபொருள், ஹைட்ரஜன் எரிபொருள் உள்ளிட்டவை இதில் அடங்கும். மேலும், மின்சாரப் போக்குவரத்தை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் எடுத்து வருகிறது.

நாட்டில் 9,66,363 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இரு சக்கர வாகனங்கள் 2,82,542, மூன்று சக்கர வாகனங்கள் 6,47,186, நான்கு சக்கர வாகனங்கள் 26,335, சரக்கு வாகனங்கள் 3,036, பொதுச் சேவை வாகனங்கள் 2,039, சிறப்புப் பிரிவு வாகனங்கள் 410, அவசரகால ஊர்திகள் அல்லது அமரர் ஊர்திகள் 6, கட்டுமான உபகரண வாகனங்கள் 397, இதர வாகனங்கள் 4412 ஆகும்.

தமிழ்நாட்டில் 50,296 மின்சார வாகனங்கள் இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இரு சக்கர வாகனங்கள் 44,302, மூன்று சக்கர வாகனங்கள் 4,470, நான்கு சக்கர வாகனங்கள் 13, சரக்கு வாகனங்கள் 1,281, பொது சேவை வாகனங்கள் 37, இதர வாகனங்கள் 193 ஆகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 5. சாம்பல் நீர் எனப்படும் கழிவு நீர் மேலாண்மையில் வழி காட்டும் தமிழ்நாட்டின் பாப்பாங்குழி கிராமம்

சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தும் வகையில் வீடுகளின் சமையலறைகள் மற்றும் குளியல் பகுதிகளில் இருந்து நிரம்பி வழியும் அல்லது தேங்கி நிற்கும் சாம்பல் நீர் பிரச்சினையைத் தீர்க்க, தனி நபர் மற்றும் சமூக கழிவு நீர் ஊறவைக்கும் குழிகளை தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்து அமைத்துள்ளது.

இரண்டு குடியிருப்பு பகுதிகளைக் கொண்ட பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்தில் 254 குடும்பங்களில் 1016 பேர் வசிக்கின்றனர். தலா 900 மீட்டர் நீளமுள்ள 13 தெருக்களும், ஒவ்வொன்றிலும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலைத் தொட்டிகளும் இருந்தன.

கடந்த காலத்தில், முறையான சுத்திகரிப்பு செயல்முறை இல்லாத நிலையில், கிராமப்புற வீடுகளில் இருந்து தெருக்கள், காலி நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் கழிவு நீர் வெளியேற்றப்பட்டதன் விளைவாக நீர் மாசுபடுதல், நிலம் மாசுபடுதல் மற்றும் நீரால் பரவும் நோய்கள் ஏற்பட்டன.

இதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவுடன் 93 வீடுகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவு நீர் ஊறவைக்கும் குழிகள் உருவாக்கப்பட்டன மற்றும் 161 குடும்பங்கள் கழிவுநீர் கால்வாயுடன் இணைக்கப்பட்டன.

மேலும், அப்புறப்படுத்தும் இடத்தில் இரண்டு கிடைமட்ட கழிவு நீர் ஊறவைக்கும் குழிகள் அமைக்கப்பட்டு, வடிகட்டிய நீர் பெரிய ஏரி மற்றும் ராஜந்தாங்கல் ஏரியின் நீர்நிலைகளில் விடப்பட்டது.

இந்த முன்முயற்சிகள் பஞ்சாயத்தின் தூய்மை நடவடிக்கைகளுக்குப் பெரும் பங்களிப்பை அளித்து, திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமமாகவும் பாப்பாங்குழியை ஆக்கியுள்ளன.

---

### 6. பாரத் மாலா திட்டத்தின் கீழ் பொருளாதார பெருவழித்தடங்கள்: மாநிலங்களவையில் கட்கரி தகவல்

நெடுஞ்சாலைகள் மற்றும் பலவகை சரக்குப் போக்கு வரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான பாரத் மாலா திட்டத்தின் முதல்கட்டத்தில், 9,000 கி.மீ. தொலைவுக்கு பொருளாதார பெருவழித்தடங்களை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு, எழுத்து மூலம் அளித்த பதிலில் இத்தகவலைத் தெரிவித்துள்ளாா்.

இதில், 6,087 கிமீ தொலைவு திட்டங்களுக்கு ஒப்புதல், ஒப்பந்தப்பணி வழங்கப்பட்டிருப்பதுடன், எஞ்சிய தொலை–வுள்ள சாலைகளுக்கு அடுத்த இரு நிதியாண்டுகளில் அனுமதியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுவரை, 1,613 கிமீ பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய தொலைவுக்கா–ன பணிகளை 2026–27ஆம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் தனது பதிலில் கட்கரி தெரிவித்துள்ளார்.

---

### 7. அமெரிக்கா: உலகின் மிக நீண்ட மின்னல்

அமெரிக்காவில் கடந்த 2020ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட மின்னல், உலகின் மிகநீண்ட மின்னலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஜெனீவாவில் இயங்கி வரும் உலக வானியல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்காவின் மிஸிஸிபி, லூசியானா, டெக்ஸாஸ் மாகாணங்களிடையே மிகநீளமான மின்னல் கடந்த 2020 ஏப்.29ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது.

768.8 கிமீ நீளத்துக்கு ஏற்பட்ட இந்த மின்னல் உலகில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மின்னல்களிலேயே அதிக நீளமாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**8. அயல்நாடு–வெளிமாநிலத்தவர் தமிழ்மொழி கற்க தனி பரப்புரைக் கழகம்**

அயல்நாடுகள், வெளிமாநிலங்களில் வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் பரப்புரைக் கழகம் உருவாக்கப்பட உள்ளது. இதற்கான நிதிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து, மாநில அரசு வெளியிட்ட உத்தரவு:

வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் வசிக்கும் தமிழர்கள், தமிழ்மொழியை கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்துதரப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் தமிழ் மொழியை கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கவும், ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டு இருந்தது. இதற்கென தமிழ் இணையக்கல்விக்கழகத்தில் இருந்து தமிழ்ப்பரப்புரை கழகம் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கழகத்தின் மூலமாக, தமிழ் மொழியின் பண்பாடு, கலாசாரப் பரப்புரை, ஒலி–ஒளி உச்சரிப்புடன் பாடப் புத்தகம் வடிவமைப்பு, தமிழ் கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல், இணையதளத்தில் தமிழ் ஆசிரியா்கள் மூலம் கற்றுத் தருதல், தமிழ் கற்பிக்கும் அமைப்புகளுக்கு நிதியுதவி அளித்தல், தமிழாசிரியருக்கான பயிற்சிகள் அளித்தல், பயிற்சிபெற்ற ஆசிரியர்களை அனுப்பி வைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்கா –க ₹1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1.** சர்வதேச சுங்க நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஜனவரி 25

**ஆ) ஜனவரி 26 ☑**

இ) ஜனவரி 27

ஈ) ஜனவரி 28

✓ 'சர்வதேச சுங்க நாள்' ஒவ்வோராண்டும் ஜன.26 அன்று உலகம் முழுவதும் ஐநா அவையால் அனுசரிக்கப்படுகிறது. சுங்க அதிகாரிகள் மற்றும் முகமைகளின் பங்கை இது அங்கீகரிக்கிறது. சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் 1953'இல் இந்த நாள் கடைப்பிடிக்கப்படும் என அறிவித்தது.

✓ 1994'இல் இந்தக் கவுன்சிலுக்கு உலக சுங்க அமைப்பு என மறுபெயரிடப்பட்டது. "Scaling up Customs Digital Transformation by Embracing a Data Culture and Building a Data Ecosystem" என்பது நடப்பு 2022இல் வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்

---

**2.** 2022 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடு எது?

அ) ஜப்பான்

**ஆ) சீனா ☑**

இ) இரஷ்யா

ஈ) அமெரிக்கா

✓ 2022ஆம் ஆண்டின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அதிகாரப்பூர்வமாக 2022 பிப்.4 முதல் 20 வரை சீனாவில் உள்ள பெய்ஜிங் மற்றும் அதன் அண்டை நகரங்களில் நடைபெறவுள்ளது. ஸ்போர்ட் எக்காலஜி குழுமம் மற்றும் சேவ் எவர் வின்டர்ஸ் ஆகிய அமைப்புகளால் வெளியிடப்ப –ட்ட ஓர் அறிக்கையில், ஒலிம்பிக்கில் தடகள வீரர்களின் உடலில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை பனியின் இடர்கள்குறித்து கூறப்பட்டுள்ளது. இவ்விளையாட்டுகளில் செயற்கை பனிப்பொழிவுக்காக ஏற்படும் தண்ணீர்விரயம் குறித்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

**3.** எந்த உலக அமைப்பு 2022ஆம் ஆண்டிற்கான 'Five–alarm global fire' என முன்னுரிமைகளை வழங்கியது?

அ) உலக வங்கி

ஆ) உலக பொருளாதார மன்றம்

**இ) ஐக்கிய நாடுகள் ☑**

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் பொதுச் சபையில் உரையாற்றி, நடப்பு 2022ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகளை வகுத்தார். இதை 'ஐந்து எச்சரிக்கை உலகளாவிய தீ' என்று குறிப்பிட்ட அவர், தார்மீக ரீதியாக COVID–19 தொற்றுநோயால் நொடிந்துபோன உலக நிதி அமைப்பு, காலநிலை நெருக்கடி, இணையவெளியில் சட்டமின்மை மற்றும் குறைந்து வரும் அமைதி மற்றும் பாதுகாப்பு என ஐந்து முன்னுரிமைகளை பட்டியலிட்டார்.

---

**4.** எந்த நகரத்தில் நெகிழிப்பூங்கா அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?



அ) சென்னை

**ஆ) மங்களூரு ☑**

இ) பெங்களூரு

ஈ) திருநெல்வேலி

✓ கர்நாடக மாநிலம் மங்களூருவில் உள்ள கஞ்சிமட்டில் 'நெகிழிப்பூங்கா' அமைப்பதற்கு மத்திய அரசு தனது இறுதி ஒப்புதலை வழங்கியுள்ளது. ₹62.77 கோடி மதிப்பீட்டில் 104 ஏக்கரில் அமைக்கப்படும் இப்பூங்காவின் 50% திட்ட மதிப்பீட்டை நடுவணரசும், மீதியை கர்நாடக தொழிற் துறை பகுதி மேம்பாட்டு வாரியமும் (KIADB) ஏற்கும்.

---

**5.** 'வாழும் வேர்ப்பாலங்கள்' என்பது எந்த மாநிலத்தில் காணப்படும் ஒரு தனித்துவமிக்க கட்டமைப்பாகும்?



அ) மேற்கு வங்காளம்

**ஆ) மேகாலயா ☑**

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) மத்திய பிரதேசம்

✓ 'வாழும் வேர்ப்பாலங்கள்' மேகாலயா மாநிலத்தில் காணப்படுகின்றன. அவை 'பிகஸ் எலாஸ்டிகா' மரம் என அழைக்கப்படும் இரப்பர் மரத்தின் வேர்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும் அவற்றின் பின்னலான வேர்கள் மரப்பாலங்களுக்கு நிலையான மாற்றாக அமைகின்றன.

✓ சமீபத்தில், இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனம் ஆனது UNESCO உலக பாரம்பரிய தள குறிச்சொல்லைப் பெறுவதற்கு 'வாழும் வேர்ப்பாலங்களுக்கான' சில விதி முறைகளை அடிக்கோடிட்டுக்காட்டியது. மேகாலய மாநில முதல்வர் கான்ராட் K சங்மா 50ஆவது மாநில நாளான ஜன.21 அன்று UNESCOஇன் அங்கீகாரத்தைக்கோரினார்.

---

**6.** சமீப செய்திகளில் இடம்பெற்ற கிரிபட்டி அமைந்துள்ள கண்டம் எது?



அ) ஆசியா

**ஆ) ஓசியானியா ☑**

இ) ஐரோப்பா

ஈ) ஆப்பிரிக்கா

✓ கிரிபட்டி உலகின் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளுள் ஒன்றாகும். ஓசியானியாவில் அமைந்துள்ள இது ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார் 4,800 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கடந்தவாரம் வரை, கிரிபட்டி இரு COVID பாதிப்புகளை மட்டுமே கண்டுள்ளது. முதல் சர்வதேச விமானத்தில் பயணம் செய்த பயணிகளுக்கு COVID தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அந்நாடு தனது முதல் பொது முடக்கத்தை அறிவித்துள்ளது.

---

**7.** இந்தியாவில் 'அமர் ஜவான் ஜோதி' கட்டப்பட்ட ஆண்டு எது?



அ) 1947

ஆ) 1950

**இ) 1972 ☑**

ஈ) 1958

✓ 'அமர் ஜவான் ஜோதி' நினைவகம் 1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1971 போரில் பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் வெற்றியைக் குறிக்கும் வகையில் இது உள்ளது. இந்தப் போரின் வெற்றியை அடுத்து வங்கதேசம் உருவானது. இந்திய அரசாங்கம் இந்தியாவின் நுழைவு வாயிலின் அடியில் உள்ள 'அமர் ஜவான் ஜோதி'யுடைய அழியாச்சுடரை அணைத்து, கடந்த 2019இல் தேசிய போர் நினைவகத்தில் நிறுவப்பட்ட சுடருடன் இணைத்தது.

✓ 1972ஆம் ஆண்டு குடியரசு நாளில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அதைத் திறந்து வைத்தார்.

---

**8.** ஆதி பத்ரா அணையைக் கட்டுவதன்மூலம் சரஸ்வதி ஆற்றை புதுப்பிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரு மாநில அரசுகள் எவை?



**அ) ஹரியானா–ஹிமாச்சல பிரதேசம் ☑**

ஆ) குஜராத்–ராஜஸ்தான்

இ) ஹரியானா–பஞ்சாப்

ஈ) ஹிமாச்சல பிரதேசம்–தில்லி

✓ யமுனாநகர் மாவட்டத்தில் உள்ள ஆதி பத்ரியில் அணை கட்டுவதற்கு ஹரியானா மற்றும் இமாச்சல பிரதேச மாநில அரசுகள் ஒப்பந்தம் செய்துகொண்டன. இத்துடன், இப்பகுதி புனித யாத்திரை தலமாகவும் உருவாகும்.

✓ சரஸ்வதி ஆற்றுக்கு புத்துயிரளிப்பதுடன் நிலத்தடி நீர்மட்ட–த்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இமாச்சல பிரதேசத்தில் 31.66 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஆதி பத்ரி அணை கட்டப்படும். இதற்காக ₹215.33 கோடி செலவிடப்படும்.

---

**9.** தேலிநீலாபுரம் பறவைகள் புகலிடம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

✓ தேலிநீலாபுரம் சர்வதேச பறவைகள் சரணாலயம் ஆந்திர பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. சமீபத்தில், இப்பறவைகள் சரணாலயத்தில் புலம்பெயர்ந்த கூழைக்கடாக்கள் பெருமளவில் இறந்துகிடந்தன.

✓ அரசாங்க தரவுகளின்படி, சைபீரியா, ரஷ்யா, மலேசியா, ஹங்கேரி, சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 113 வகையான அயல் நாட்டுப்பறவைகள் இப்பகுதிகளுக்கு இனப்பெருக்கத்திற்–காக வருகின்றன.

---

**10.** சமீப செய்திகளில் இடம்பெற்ற 'நியோகோவ்', முதலில் எந்த உயிரினத்தில் கண்டறியப்பட்டது?



அ) குரங்கு

**ஆ) வௌவால் ☑**

இ) ஆந்தை

ஈ) கொறித்துண்ணி

✓ 'நியோகோவ்' என்பது வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள நியோரோமிசியா வௌவால் இனத்தைக் குறிக்கிறது.

✓ இப்புதிய வைரஸ் MERS கொரோனா தீநுண்மத்துடன் (SARs–CoV–2 அன்று) தொடர்புடையது. தென்னாப்பிரிக்–காவில் வௌவால்களில் கண்டறியப்பட்ட இவ்வைரஸ் குறித்த செய்திகள் சமீபத்தில் தீயாகப்பரவின. இருப்பினும், 'நியோகோவ்' கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதா? என்பது குறித்த கூடுதல் ஆய்வு தேவை என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிப்ரவரி 4 – உலக புற்றுநோய் நாள்**

**கருப்பொருள்:** "Close the Care Gap".

---

**2. இன்று தொடங்குகிறது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்**

24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் சீனாவின் பெய்ஜிங் நகரில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

பெய்ஜிங்கில் உள்ள தேசிய மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் அதிபர் ஷி ஜின்பிங் பங்கேற்று போட்டிகளை தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருசில விளையாட்டுகளின் முதல்கட்ட சுற்றுகள் கடந்த 2ஆம் தேதியே தொடங்கிவிட்டாலும், ஒலிம்பிக் தீபமேற்றிய பிறகே, ஒலிம்பிக்ஸ் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு அக்.18 அன்று, ஒலிம்பிக்ஸின் பிறப்பிடமான கிரீஸில் தொடங்கிய ஒலிம்பிக் ஜோதி ஓட்டம், வெள்ளிக்கிழமை போட்டியின் தொடக்க நிகழ்ச்சி நடக்கும் மைதானத்தில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதுடன் நிறைவடைகிறது. கரோனா தொற்று அச்சம் காரணமாக பெய்ஜிங் நகரில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தின் கால அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கரோனா தொற்று பாதிப்பு சூழலில் டோக்கியோ ஒலிம்பிக் கடந்த ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அதேபோல் நடத்தி முடிக்கப்படும் நோக்குடன் தொடங்குகிறது இந்த குளிர்கால ஒலிம்பிக். உலகெங்கும் கரோனா பாதிப்பு மீண்டும் தீவிரமாகியிருக்கும் நிலையில் இந்தப் போட்டியை ஒத்திவைப்பதற்கு கோரிக்கைகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

அவற்றைக் கடந்த வகையில் உரிய பாதுகாப்பு முன்னெச்–சரிக்கை நடவடிக்கைகளுடன் போட்டியை நடத்துவதற்–கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய 'பயோ பபுள்' பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், போட்டியா

–ளர்கள் உள்பட ஒலிம்பிக்குடன் தொடர்புடைய அனைவ –ருக்கும் அவ்வப்போது கரோனா பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், போட்டியில் பங்கேற்க வந்துள்ள வீரர், வீராங்க –னைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் கரோனா பாதிப்பு ஏற்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையில் இருக்கின்றனர்.

இதனிடையே, மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் ராஜ்ஜீய ரீதியிலாக இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதை தவிர்த்துள்ளன. எனினும், அந்த நாடுகளின் சார்பில் போட்டியாளர்கள் களம் காண்கின்றனர்.

**இந்தியாவின் பங்கேற்பு:**

இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் ஒரேயொரு வீரர் மட்டும் பங்கேற்கிறார். பனிச் சறுக்கு வீரரான ஆரிப்கான், 'ஸ்லாலம்', 'ஜயன்ட் ஸ்லாலம்' ஆகிய இரு பிரிவுகளில் களம் காண்கிறார். அவரோடு 6 பேர்கொண்ட இந்திய குழு பெய்ஜிங் சென்றுள்ளது.

தொடக்கம் – பிப்ரவரி 4

நிறைவு – பிப்ரவரி 20

விளையாட்டுகள் – 15 விளையாட்டுகள்/109 போட்டிகள்

பங்கேற்பு – 91 நாடுகள்

போட்டியாளர்கள் (சுமார்) – 2,871

ஆடவர் – 1,581

மகளிர் – 1,290

---

### 3. கடலூர் மாவட்டம் வடலூரில் தோட்டக்கலை பூங்கா அமைக்க ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு

கடலூர் மாவட்டம் வடலூரில் தோட்டக்கலை பூங்கா அமைக்க ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. 3.20 ஏக்கரில் அமைக்கப்ப –டும் இப்பூங்காவில் நடைபாதைகள், மூலிகைச் செடிகள், குளம், பார்வையாளர் இருக்கை வசதி, சிறுவர் பூங்கா ஆகியவை இடம்பெறவுள்ளன.

---

**1.** மிகப்பெரிய கச்சா எண்ணெய் கசிவுக்குப் பிறகு, எந்த நாடு, 90 நாள் "சுற்றுச்சூழல் அவசரநிலை" அறிவித்தது?



அ) அர்ஜென்டினா

**ஆ) பெரு ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) கனடா

✓ 6,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெய் கடலில் கசிந்ததை அடுத்து, சேதமடைந்த கடலோரப் பகுதிகளில் 90 நாள் "சுற்றுச்சூழல் அவசரநிலையை" பெருவிய அரசாங்கம் அறிவித்தது. ஸ்பானிய எரிசக்தி நிறுவனமான ரெப்சோலு –க்குச் சொந்தமான "மேர் டோரிகம்" டேங்கர் 9,65,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெயைக் கொண்டு சென்ற லா பாம்பிலா சுத்திகரிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நிகழ்ந்து உள்ளது. இக்கசிவு கடல்வாழ உயிரிகளின் இறப்பிற்கு காரணமாக அமைந்தது.

---

**2.** "தேசிய பெண் குழந்தைகள் நாள்" கொண்டாடப்படுகிற தேதி எது?



**அ) ஜனவரி 24 ☑**

ஆ) ஜனவரி 25

இ) ஜனவரி 26

ஈ) ஜனவரி 27

✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஜன.24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும். இது இந்தியப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகளை வழங்குவதற்குமாக கொண்டாடப்படுகிறது.

---

**3.** சையத் மோடி சர்வதேச போட்டியில் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்ற இந்திய பேட்மிண்டன் வீராங்கனை யார்?



**அ) பி வி சிந்து ☑**

ஆ) சாய்னா நேவால்

இ) அஷ்மிதா சாலிஹா

ஈ) மாளவிகா பன்சோட்

✓ சையத் மோடி சர்வதேச போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பேட்மிண்டன் வீராங்கனை பிவி சிந்து சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப்போட்டியில் முதல் நிலை வீராங்கனையான சிந்து 21–13, 21–16 என்ற செட் கணக்கில் மாளவிகா பன்சோட்டை தோற்கடித்தார்.

✓ சையத் மோடி சர்வதேச போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியானது, இறுதிப்போட்டியாளர்களில் ஒருவருக்கு COVID பாசிட்டிவ் என அறிவிக்கப்பட்டதால், 'போட்டி இல்லை' என அறிவிக்கப்பட்டது.

---

**4.** சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளை 'தேஷ் நாயக் திவாஸ்' எனக் கொண்டாடுகிற மாநிலம் எது?



**அ) மேற்கு வங்காளம் ☑**

ஆ) பஞ்சாப்

இ) மகாராஷ்டிரா

ஈ) நாகாலாந்து

✓ கடந்தஆண்டு, S C போஸின் பிறந்தநாளை 'பராக்கிரம திவாஸ்' (வீரத்தின் நாள்) எனக் கொண்டாட மத்திய அரசு முடிவு செய்தது. மேற்கு வங்காளத்தில் அந்த நாள் 'தேஷ் நாயக் திவாஸ்' (தேச நாயகனின் நாள்) என்று அனுசரிக்கப்படும் என்று அம்மாநிலம் அறிவித்தது.

✓ 'நேதாஜி' SC போசின் ஹாலோகிராம் சிலையை இந்தியா கேட்டில் பிரதமர் திறந்து வைத்தார். இந்த ஆண்டு (2022) நேதாஜியின் 125ஆவது பிறந்தநாளாகும்.

---

**5.** 'G20 மக்கள் காலநிலை வாக்கு–2021 அறிக்கையை' வெளியிட்ட நிறுவனம் எது?

அ) UNFCCC

**ஆ) UNDP ☑**

இ) UNEP

ஈ) WEF

✓ அண்மையில் ஐநா வளர்ச்சித்திட்டத்தால் (UNDP) வெளியிடப்பட்ட "G20 People's Climate Vote – 2021" என்ற அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள 67 சதவீத இளைஞர்கள் காலநிலை நெருக்கடியை 'உலகளாவிய அவசரநிலை' என்று கருதுகின்றனர்.

✓ அவசரக்கொள்கை உருவாக்கம் மற்றும் மாற்றத்தின் அவசியம் குறித்தும் இளைஞர்கள் குரல் கொடுக்கின்றனர். அதேசமயம், பருவநிலை மாற்றத்தை உலகளாவிய அவசரநிலையாகக்கருதும் வயதுவந்தோருள் இந்தியாவி –ல் 58 சதவீதம் பேர் மட்டுமே உள்ளனர்.

---

**6.** நேதாஜி ஆராய்ச்சி பணியகத்தால் 2022ஆம் ஆண்டுக் –கான 'நேதாஜி விருது', கீழ்காணும் எந்த முன்னாள் பிரதமருக்கு வழங்கப்பட்டது?



அ) டொனால்டு டிரம்ப்

ஆ) மன்மோகன் சிங்

**இ) ஷின்சோ அபே ☑**

ஈ) தெரசா மே

✓ சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு நேதாஜி ஆராய்ச்சி பணியகத்தால் 2022 – நேதாஜி விருது வழங்கப்பட்டது. முன்னாள் பிரதமர் சின்சோ அபே சார்பில் கொல்கத்தாவில் உள்ள ஜப்பான் தூதரக அதிகாரி நகாமுரா யுடகா இந்த விருதினைப் பெற்றுக்கொண்டார்.

**7.** பண்டிட் ஜஸ்ராஜுடன் தொடர்புடைய துறை எது?



அ) இலக்கியம்

**ஆ) சாஸ்திரிய சங்கீதம் ☑**

இ) கதக்

ஈ) ஓவியம்

✓ மேவதி கரானாவைச் சேர்ந்த பண்டிட் ஜஸ்ராஜ் (1930–2020) ஓர் இந்திய பாரம்பரிய பாடகர் ஆவார். சமீபத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பண்டிட் ஜஸ்ராஜ் கலாச்சார அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இது தேசிய பாரம்பரியம், கலை மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

---

**8.** உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பான 'பெருந்தடுப்புப்பவளப்பாறை' அமைந்துள்ள நாடு எது?



**அ) ஆஸ்திரேலியா ☑**

ஆ) ரஷ்யா

இ) ஜப்பான்

ஈ) அமெரிக்கா

✓ 'பெருந்தடுப்புப்பவளப்பாறை' என்பது ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய பவளப்பாறை அமைப்பபாகும். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், 'பெருந்தடுப்புப்பவளப்பாறையைப்' பாதுகாக்க மேலும் ஒரு பில்லியன் ஆஸ்திரேலிய டாலர் நிதியை ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்.

✓ புவிவெப்பமடைதலால் இந்தப் பாறைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக ஆஸி. அரசாங்கம் தெரிவித்துள்ளது.

---

**9.** எரிசக்தி பாதுகாப்பு குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்ட நாடு எது?



**அ) அமெரிக்கா ☑**

ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா

ஈ) ஜப்பான்

✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் ஐரோப்பாவின் எரிசக்தி பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க ஒத்துழைக்க உறுதியளித்தனர்.

✓ உக்ரைனின் எல்லையில் துருப்புக்களை இரஷ்யா பலப்ப–டுத்தியதால் ஏற்பட்ட மோதலுக்கு மத்தியில் அவர்கள் ஒரு கூட்டு ஒத்துழைப்பு அறிக்கையை வெளியிட்டனர். ஐரோப்பிய ஒன்றியம் அதன் எரிவாயு விநியோகத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு ரஷ்யாவைச் சார்ந்துள்ளது.

---

**10.** நடப்பு 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, உலக எஃகு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?



அ) இந்தியா **ஆ) சீனா ☑**

இ) அமெரிக்கா ஈ) ஆஸ்திரேலியா

✓ உலக எஃகு சங்கத்தின் கூற்றுப்படி, 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எஃகு உற்பத்தி 18% அதிகரித்து 118 மில்லியன் டன்னாக (MT) உள்ளது. இந்தியா 2020'இல் 100.3 MT எஃகு உற்பத்தி செய்து உலகின் இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. சீனா 1064.7 MT எஃகு உற்பத்தி செய்து உலகின் மிகப்பெரிய எஃகு உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. சீனா, 2021இல் 1032.8 MTஆக 3 சதவீதம் சரிவைப் பதிவுசெய்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொழில்–வணிக பயன்பாட்டுக்கு நிலங்கள்: இணையத்தில் விண்ணப்பிக்கலாம்**

தொழில் மற்றும் வணிகப் பயன்பாட்டுக்கு நிலங்களை உபயோகிக்க இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

முன்னதாக, காகிதங்களின் வழியே விண்ணப்பிக்கும் முறை அமலில் இருந்தது. இப்போது இணையதளத்தின் வழி (https://edistricts.tn.gov.in/) விண்ணப்பங்களை பதிவு செய்யலாம். இதற்கென தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

---

**2. 1000–ஆவது ஒன் டே ஆட்டத்தில் இந்தியா: மைல் கல்லை எட்டும் முதல் அணி**

கிரிக்கெட் விளையாட்டில் ஒன் டே பார்மட்டில் 1000ஆவது ஆட்டத்தில் களம் காணும் சாதனையை படைக்கிறது இந்திய அணி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒன் டே தொடரின் முதல் ஆட்டத்தில் வரும் 6ஆம் தேதி விளையாடுவதன் மூலம் இந்திய அணி இந்த மைல் கல்லை மகுடமாக தரித்துக்கொள்ள இருக்கிறது.

கடந்த 1974 முதல் ஒன் டே ஆட்டங்களில் பங்கேற்று வரும் இந்திய அணி தொடக்க காலத்தில் தடுமாறினாலும் பிறகு காலப்போக்கில் அந்த பார்மட்டிலும் சிறந்த அணியாக தன்னை உருமாற்றிக் கொண்டது இந்தியா.

ICC ஒன்டே தரவரிசையில் முதலிடம் பிடித்தது, இருமுறை உலகக்கோப்பையை வென்றது என தனது பெருமையை பறைசாற்றிக் கொண்டது. தற்போது 1000ஆவது ஒன் டே ஆட்டத்தில் களம் காணும் முதல் அணி என்ற தனிச் சிறப்பையும் பெறுகிறது.

அந்த ஆட்டத்தில் இந்திய அணியை வழி நடத்தும் கேப்டனாக இருக்கும் பெருமையை ரோகித் சர்மா பெற்றி–ருக்கிறார். ஒன் டே பார்மட் கேப்டனாக அறிவிக்கப்பட்ட பிறகு இந்திய அணியை அவர் வழிநடத்த இருக்கும் முதல் ஆட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டம், உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமா–ன, குஜராத் மாநிலம் அகமதாபாதில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவிருப்பது கூடுதல் சிறப்பு ஆகும். எனினும், கரோனா சூழல் கட்டுப்பாடு காரணமாக இந்த ஆட்டத்தை காண மைதானத்தில் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

முதல் ஆட்டம்

கடந்த 1974ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் தேதி இங்கிலாந்துக்கு எதிராக தனது முதல் ஒன் டே ஆட்டத்தை விளையாடிய இந்தியா, அதில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. 2 ஆட்டங்கள் கொண்ட அந்த முதல் தொடரையும் முழுமையாக இழந்தது.

1971

கிரிக்கெட் உலகின் முதல் ஒன் டே ஆட்டம் நடைபெற்றது, 1971ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி. இங்கிலாந்து – ஆஸ்திரேலியா அணிகள் மெல்போர்ன் நகரில் மோதிய இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

4000...

ஒன் டே பார்மட் அறிமுகம் செய்யப்பட்டது முதல் இதுவரை, உலக அளவில் 28 அணிகளால் 4000க்கும் அதிகமான ஒன் டே ஆட்டங்கள் விளையாடப்பட்டுள்ளன.

12 அணிகள்...

ICC தரவுப்படி, டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் 12 அணிகளுக்கு தான் 'நிரந்தர ஒன் டே அணி' என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய அணிகளுக்கு தற்காலிக அடிப்படையில் அந்த அந்தஸ்து அளிக்கப்படுகிறது.

---

**3. இராமானுஜர் சிலையை திறந்து வைத்தார் பிரதமர் மோடி**

ஐதராபாத் முச்சிந்தலாவில் 216 அடி உயர இராமானுஜர் சிலையை பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்.

தெலங்கானா மாநிலம் ஐதராபாதின் புறநகர் பகுதியான ஷம்ஷாபாதில் ₹1,000 கோடி செலவில் மிகப் பிரமாண்டமாய் இராமானுஜருக்கு சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இச்சிலை தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை மற்றும் துத்தநாகம் என ஐந்து விதமான உலோகங்களின் கலவையான "பஞ்சலோக" சிலையாக நிறுவப்பட்டுள்ளது.

இராமானுஜர் சிற்பம் மேல் கோட்டை மற்றும் ஸ்ரீரங்கம் கோயில்களில் உள்ள இராமாநுஜரின் செதுக்கப்பட்ட கல் உருவங்களை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்–பட்டுள்ளது. இராமாநுஜர் இந்தப் பூமியில் 120 வருடங்கள் வாழ்ந்ததை நினைவுகூரும் வகையில் 120 கிலோ தங்கத்தைக்கொண்டு சிலையின் கருவறை அமைக்கப்ப–ட்டுள்ளது. கருவறை தங்கத்தால் செய்யப்பட்டுள்ள அதே நேரத்தில் 216 அடி கொண்ட வெளிப்புறச்சிலை, உட்கார்ந்த நிலையில் உள்ள உயரமான சிலைகளில் ஒன்றாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'சமத்துவத்துக்கான சிலை' என வர்ணிக்கப்படும் இந்தச் சிலையை பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார்.

உட்கார்ந்த நிலையில் தாய்லாந்தில் அமைந்துள்ள 302 அடி உயரம்கொண்ட புத்தர் சிலையே உலகின் மிகப் பெரிய சிலையாக இருந்து வருகிறது. இதற்கடுத்ததாக, உலகின் இரண்டாவது பெரிய சிலை என்ற பெருமையை இராமாநுஜரின் 216 அடி உயர சிலை பெறவுள்ளது.

இராமாநுஜரின் 1000ஆவது பிறந்தநாளைக்கொண்டாடும் வகையில் இந்தச் சிலை அமைக்கும் பணி கடந்த 2014 ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**4. ஜூனியர் உலகக்கோப்பை: 5ஆவது முறையாக இந்தியா சாம்பியன்**

14ஆவது ஜூனியர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி (19 வயதுக்கு உட்பட்டோர்) வெஸ்ட் இண்டீசில் நடந்து வருகிறது. இதில் ஆன்டிகுவாவில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா–இங்கிலாந்து அணிகள் விளையாடின.

இந்திய அணி 47.4 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ரன்களை சேர்த்து வெற்றி பெற்று கோப்பையை தட்டிச்சென்றுள்ளது. நான்கு முறை கோப்பையை வென்றுள்ள நிலையில், இந்த வெற்றியால் 5ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று இந்தியா சாதனை படைத்துள்ளது.

---

**5. பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்: முதல் தங்கம் வென்றார் தெரஸே ஜோஹாக்**

பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார் நார்வே வீராங்கனை தெரஸே ஜோஹாக்.

சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நார்வே கிராஸ் கண்ட்ரி ஸ்கையர் தெரஸே ஜோஹாக் 15 கிமீ ஸ்கையத்லானில் இப்போட்டியின் முதல் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். கடும் காற்று மற்றும் குளிரையும் பொருள்படுத்தாமல் ஜோஹாக் சிறப்பாக செயல்பட்டு முதல் தங்கத்தை வென்றார்.

பிரான்ஸின் போ குயின்டின், ரஷியாவின் லேட்டிபோவ் முறை வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

மகளிர் ஸ்பீட்ஸ்கேட்டிங் 3000 மீ பிரிவில் டச்சு வீராங்கனை ஐரீன் சௌடென் தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். இதன்மூலம் ஜெர்மன் வீராங்கனையின் கிளாடியா பெச்ஸ்டென் 20 ஆண்டுகால சாதனையையும் முறியடித்தார்.

---

**6. லதா மங்கேஷ்கர் காலமானார்**

பழம்பெரும் திரைப்படப் பாடகி லதா மங்கேஷ்கர் இன்று (06-02-2022) காலமானார்.

லதா மங்கேஷ்கர் தனது 13ஆம் வயதில் பாடல்கள் பாடத் தொடங்கினார். 1942இல் முதல் பாடலைப் பதிவுசெய்தார். பல்வேறு மொழிகளில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார். தமிழில் வளையோசை உள்ளிட்ட நிறைய பாடல்களைப் பாடியுள்ளார்.

இவர் 1969இல் பத்ம பூஷண், 1999இல் பத்ம விபூஷண், 2001இல் 'பாரத் ரத்னா' விருதுகளைப் பெற்றுள்ளார். திரைத்துறையின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே விருதையும்' இவர் பெற்றுள்ளார்.

---

**1.** **2022 ஆசிய கோப்பையில் இந்திய பெண்கள் ஹாக்கி அணி பிடித்த இடம் எது?**

அ) முதலாவது



ஆ) இரண்டாவது

**இ) மூன்றாவது ☑**

ஈ) நான்காவது

✓ இந்திய மகளிர் ஹாக்கி அணி, முன்னாள் சாம்பியனான சீனாவை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது. சவிதா புனியா தலைமையிலான அணி ஆசிய கோப்பையை தக்கவைக்க தவறினாலும், வெண்கலப் பதக்கத்துடன் திரும்பியது. மலேசியாவை 9–0 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்திய இந்திய மகளிர் அணி, ஆசிய விளையாட்டு சாம்பியனான ஜப்பானுக்கு எதிராக 0–2 என்ற புள்ளிக் கணக்கில் தோல்வியைத் தழுவியது.

✓ சிங்கப்பூர் அணியை 9–1 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. அரையிறுதிப்போட்டியில் கொரியாவிடம் தோல்வியடைந்தது. தென்கொரியாவை வீழ்த்தி ஜப்பான் ஆசிய கோப்பையை வென்றது.

---

**2.** **Hwasong–12 என்ற நடுத்தரமான எறிகணையை ஏவிய நாடு எது?**

அ) சீனா



ஆ) ஜப்பான்

**இ) வட கொரியா ☑**

ஈ) தென் கொரியா

✓ 'Hwasong–12' என்ற நடுத்தரமான எறிகணையை தாம் ஏவியதை வடகொரியா உறுதிப்படுத்தியுள்ளது. 2017ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த அளவிலான ஆயுதத்தை வட கொரியா சோதனை செய்வது இதுவே முதல்முறை.

✓ ஜப்பானும் தென்கொரியாவும் இந்த நடுத்தர தொலைவு பாயக்கூடிய எறிகணை ஏவப்பட்டதைக் கண்டறிந்துள்ளன. இது வடகொரியாவால் இம்மாதம் மேற்கொள்ளப்பட்ட ஏழாவது ஆயுதப்பரிசோதனையாகும்.

---

**3.** **எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் புவி பூங்காவை அமைப்பதற்கு இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) மகாராஷ்டிரா



ஆ) கோவா

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) தெலுங்கானா

✓ இந்தியாவின் முதல் புவிசார் பூங்காவை மத்திய பிரதேச மாநிலத்தில் நர்மதா நதிக்கரையில் உள்ள லாம்ஹெட்டா கிராமத்தில் அமைக்க இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது. புவிசார் பூங்கா என்பது ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும்; இது, புவியியல் பாரம்பரியத்தை நிலையான வழியில் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தத் தளம் ஏற்கனவே யுனெஸ்கோ புவி பாரம்பரிய தளங்களுக்கான தற்காலிக பட்டியலில் இடம்பெற்றுள்ளது. ஜபல்பூரின் பெடகாட்–லமேட்டா காட் பகுதியில் உள்ள நர்மதா பள்ளத்தாக்கில் பல தொன்மாக்களின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

**4.** **'இந்தியாவில் மரணதண்டனை' குறித்த அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) தேசிய குற்ற ஆவணக்காப்பகம்

**ஆ) தேசிய சட்டப் பல்கலைக்கழகம் ☑**

இ) NITI ஆயோக்

ஈ) உச்சநீதிமன்றம்

✓ தில்லியில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் உள்ள குற்றவியல் சட்டச் சீர்திருத்தங்களுக்கான வழக்கறிஞர் குழுவால் (திட்டம் 39A) "இந்தியாவில் மரணதண்டனை" குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது.

✓ இவ்வறிக்கையின்படி, 2021ஆம் ஆண்டின் இறுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்–கை 488 ஆக இருந்தது. இது 17 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. இது கடந்த 2020'இலிருந்து ஏறக்குறைய 21% அதிகரிப்பு ஆகும்.

---

**5.** **இந்திய ரிசர்வ் வங்கியால் நடத்தப்படும் 'VRR ஏலத்தில்' VRR என்பதன் விரிவாக்கம் என்ன?**

**அ) Variable Rate Repo ஏலம் ☑**



ஆ) Virtual Reality Repo ஏலம்

இ) Viable Rate Repo ஏலம்

ஈ) Vernacular Region Repo ஏலம்

✓ 'VRR ஏலம்' என்பது "Variable Rate Repo" ஏலத்தைக் குறிக்கிறது. ரெப்போ என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களின் விகிதமாகும். அதன் ஒருபகுதி நிலையான விகிதத்திலும் சிலபகுதிகள் மாறி விகிதத்திலும் உள்ளன.

✓ இந்திய ரிசர்வ் வங்கி ₹75,000 கோடிக்கு பணப்புழக்கம் சரிசெய்தல் வசதியின்கீழ் ஒரே இரவில் மாறி விகித ரெப்போ ஏலத்தை நடத்துவதாகக் கூறியது. ஜன.20ஆம் தேதி, RBI ₹50,000 கோடிக்கு ஒரே இரவில் மாறி விகித ரெப்போ (VRR) ஏலத்தை நடத்தியது.

---

**6.** **'நஜாப்கர் ஜீல்' என்பது எந்த இருமாநிலங்களுக்கு இடையே உள்ள எல்லைதாண்டிய ஈரநிலமாகும்?**

அ) தில்லி–உத்தரபிரதேசம்



**ஆ) தில்லி–ஹரியானா ☑**

இ) உத்தரபிரதேசம்–உத்தரகாண்ட்

ஈ) உத்தரபிரதேசம்–பீகார்

✓ 'நஜாப்கர் ஜீல்' என்பது தில்லிக்கும் ஹரியானாவுக்கும் இடையே உள்ள ஓர் எல்லைதாண்டிய ஈரநிலம் ஆகும்.

✓ தேசிய பசுமை தீர்ப்பாயம் முன்னதாக ஹரியானா மற்றும் தில்லிக்கு சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை தயாரிக்க உத்தரவிட்டிருந்தது. நஜாப்கர் ஜீலின் புத்துயிர் மற்றும் பாதுகாப்பிற்காக இரு அரசாங்கங்களும் தயாரித்து உள்ள சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்களை

அமல்படுத்துமாறு தில்லி மற்றும் ஹரியானாவுக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

---

**7. "டேவிட் நட்சத்திரம் & அசோக சக்கரம்" ஆகியவை கீழ்காணும் எவ்விரு நாடுகளின் நினைவுச்சின்னத்தில் காணப்படுகின்றன?**

அ) இந்தியா–அமெரிக்கா

ஆ) இந்தியா–UK

**இ) இந்தியா–இஸ்ரேல் ☑**

ஈ) இந்தியா–ஆஸ்திரேலியா

- ✓ இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய இருநாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகளை ஏற்படுத்தி 30 ஆண்டுகள் நிறைவைதைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவுச் சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நினைவுச் சின்ன–த்தில் 'டேவிட் நட்சத்திரமும் அசோக சக்கரமும்' உள்ளன. இவை இருநாடுகளின் தேசியக்கொடிகளில் இடம்பெறும் இரண்டு சின்னங்களாகும்.
- ✓ இருதரப்பு உறவுகளின் 30ஆவது ஆண்டு நிறைவைச் சித்தரிக்கும் எண் 30'ஐ உருவாக்கும் வகையில் இது உள்ளது. 1992ஆம் ஆண்டு ஜன.29 அன்று இஸ்ரேலும் இந்தியாவும் தூதரக உறவுகளை ஏற்படுத்திக்கொண்டன.

---

**8.** **2022 – தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**



அ) Sustainable Tourism

**ஆ) Rural & Community Centric Tourism ☑**

இ) Gender – Neutral Tourism

ஈ) Child Friendly Tourism

- ✓ சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதாரத்தில் அதன் தாக்கம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.25 அன்று நாடு முழுவதும் 'தேசிய சுற்றுலா நாள்' கொண்டாடப்படுகிறது.
- ✓ இந்த ஆண்டு, சுற்றுலா அமைச்சகம் 'அமுதப் பெருவிழா' என்ற பெயரில் தேசிய சுற்றுலா நாளை அனுசரிக்கிறது. "Rural and Community Centric Tourism" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் தேசிய சுற்றுலா நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**9. 'CHIRU–2Q22' என்பது கீழ்காணும் எந்தெந்த நாடுகள் மேற்கொள்ளும் கூட்டுக்கடற்படைப்பயிற்சியாகும்?**



அ) சீனா–ரஷ்யா

**ஆ) சீனா–ரஷ்யா–ஈரான் ☑**

இ) சீனா–ரஷ்யா–இஸ்ரேல்

ஈ) சீனா–ரஷ்யா–இந்தியா

- ✓ 'CHIRU–2Q22' என்ற கூட்டுப் பயிற்சியில் சீனா–ரஷ்யா–ஈரான் நாட்டுக் கடற்படைகள் பங்கேற்கின்றன. இந்த ஒத்திகையில் பங்கேற்பதற்காக ஓமன் வளைகுடாவுக்கு தனது 'உரும்கி' என்ற கடற்படை ஏவுகணை அழிக்கும் கப்பலை அனுப்பியுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.
- ✓ சீன அரசு உலங்கூர்திகளையும் கடற்படை வீரர்களையும் பயிற்சிக்கு அனுப்பியுள்ளது. ரஷ்யா தனது பசிபிக் கடற் படையின் பணிக்குழுவை அனுப்பியது. அதில் 'நகிமோவ்' ஏவுகணை கப்பல் வர்யாக் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான அட்மிரல் ட்ரிபட்ஸ் ஆகியவை அடங்கும். இந்தப் பயிற்சிகள் மத்தியதரைக்கடல் மற்றும் ஓகோட்ஸ்க் கடல்களில் நடத்தப்படுகின்றன.

---

**10.** **ICC'இன் 'சிறந்த கிரிக்கெட் வீராங்கனை' விருதை வென்ற இரண்டாவது வீராங்கனை யார்?**



அ) மிதாலி ராஜ்

**ஆ) ஸ்மிருதி மந்தனா ☑**

இ) ஹர்மன்ப்ரீத் கவுர்

ஈ) ஷபாலி வர்மா

- ✓ **இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 2021ஆம் ஆண்டிற்கான ICCஇன் 'சிறந்த கிரிக்கெட் வீராங்கனை'யாக தேர்வு செய்யப்பட்டார். அவர் 'ரேச்சல் ஹெய்ஹோ பிளின்ட் கோப்பைக்கான' இறுதிப்பட்டியலிலும் இடம்பெற்றுள்ளார்.**
- ✓ **2007ஆம் ஆண்டு ICC'இன் சிறந்த வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த வேகப்பந்து வீச்சாளர் ஜூலன் கோஸ்வாமியைத் தொடர்ந்து ஐசிசி விருதைப்பெறும் 2ஆவது இந்திய வீராங்கனையாக ஸ்மிருதி மந்தனா உள்ளார். இங்கிலாந்து கேப்டன் ரூட், கடந்த 2021ஆம் ஆண்டிற்கான ICCஇன் சிறந்த டெஸ்ட்கிரிக்கெட் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் 2021ஆம் ஆண்டிற்கான ICC 'ODI கிரிக்கெட்டராக' தேர்வு செய்யப்பட்டார்.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஒரே தவணையாக செலுத்தக்கூடியா 'ஸ்புட்னிக் லைட்' தடுப்பூசிக்கு மத்திய அரசு அவசரகால அனுமதி**

கரோனா வைரஸுக்கு எதிரான ஒரே டோஸில் செலுத்திக் கொள்ளும் வகையிலான ஸ்புட்னிக் லைட் தடுப்பூசிக்கு மத்திய அரசு அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதியை வழங்கியுள்ளது. இது நாட்டில் பயன்பாட்டுக்கு வரும் 9ஆவது தடுப்பூசியாகும்.

ரஷ்ய நாட்டுத் தயாரிப்பான ஸ்புட்னிக் லைட் தடுப்பூசியை இந்தியாவில் பெற்று விநியோகிக்கிறது ஹைதராபாத்தின் Dr ரெட்டிஸ் லேப் ரஷ்ய நிறுவனம் ஸ்புட்னிக் V என்ற தடுப்பூசியையும் இந்தியாவுக்கு விநியோகித்துள்ளது. அதுவும் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் அது இரண்டு டோஸ்கள் கொண்டது. ஸ்புட்னிக் லைட் சிங்கிள் டோஸ் தடுப்பூசி. இந்தத் தடுப்பூசியை மற்ற தடுப்பூசிகளை செலுத்தியவர்களுக்கு இரண்டாவது டோஸாகப் பயன்படுத்துவது பற்றியும் ரெட்டிஸ் லேப் கிளினிக்கல் பரிசோதனைகளை முடித்து டிசிஜிஐயில் அறிக்கையை தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ஊசியில்லா தடுப்பூசியான ஜைக்கோவ் டி தடுப்பூசியும் பயன்பாட்டுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. சைகோவ்–டி தடுப்பூசி அவசரகால பயன்பாட்டிற்கு

உபயோகிக்க கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்திய மருந்து கட்டுப்பாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்தது.

இந்த தடுப்பூசி உலகின் முதல் பிளாஸ்மிட் டி என் ஏ வகை தடுப்பூசி ஆகும். இந்தத் தடுப்பூசியை முத்தவணைகளாக செலுத்தவேண்டும். ஊசிக்கு அச்சம் கொண்டவர்களுக்கு இந்த வகை தடுப்பூசி ஒரு நல்லதீர்வு எனக் கூறப்படுகிறது. ஸ்ப்ரிங் உதவியுடன் தோலில் இவ்வூசி செலுத்தப்படுகிறது.

---

**2. டாடா ஓபன்: போபண்ணா–ராம்குமார் சாம்பியன்**

TATA ஓபன் ATP டென்னிஸ் போட்டி இரட்டையர்பிரிவில் இந்தியாவின் ரோகன் போபண்ணா–ராம்குமார் இராமநாதன் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

மகாராட்டிர மாநிலம் புனேயில் TATA ஓபன் ATP போட்டிக–ள் நடந்து வருகின்றன. இதன் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டம் ஞாயிறன்று நடைபெற்றது. முதல்நிலை இணையான ஆஸ்திரேலியாவின் லூக் சவிலே–ஜான் பேட்ரிக்கை எதிர்கொண்டது இந்திய இணை.

முதல் செட்டை கடும் போராட்டத்துக்கு இடையே 6–7 என இழந்தனர் போபண்ணா–ராம்குமார். 2ஆவது செட்டை 6–3 என எளிதாக கைப்பற்றிய நிலையில், மூன்றாவது செட்டில் இரு இணைகளும் கடுமையாக மோதின. இறுதியில் அந்த செட்டை 10–6 என கைப்பற்றி சாம்பியன் பட்டத்தையும் வென்றது இந்திய இணை.

இது போபண்ணாவுக்கு 21ஆவது ஏடிபி இரட்டையர் பட்டமாகும். ஏற்கெனவே 2019'இல் திவிஜ் சரணுடன்–போபண்ணா இப்பட்டத்தை கைப்பற்றினார்.

---

**3. விவேகானந்தர் நாடு திரும்பிய 125ஆவது ஆண்டு தினம்:**

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய சுவாமி விவேகானந்தர், பின்னர் இந்தியா திரும்பிய 125ஆவது ஆண்டு விழா நேற்று (06–02–2022) கொண்டாடப்பட்டது.

---

**4. ஆசியாவின் மிகப்பெரிய அனிமேஷன் சிறப்பு மையம் பெங்களூருவில் திறப்பு**

ஆசியாவின் மிகப்பெரிய அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கேமிங், காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றுக்கான சிறப்பு மையம் பெங்களூருவில் திறக்கப்பட்டது.

கர்நாடக அரசு சார்பில் பெங்களூருவில் உள்ள ஒயிட் பீல்டில் அனிமேஷன், விஷுவல் எஃபெக்ட்ஸ், கேமிங் மற்றும் காமிக்ஸ் (AVGC) ஆகியவற்றுக்கான மிகப்பெரிய சிறப்பு மையத்தை தகவல் தொழில்நுட்ப, உயிரி தொழில் நுட்ப அமைச்சர் அஸ்வத் நாராயண் திறந்துவைத்தார்.

தற்போது திறக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்பு மையமானது டிஜிட்டலில் ஆக்கப்பூர்வமான தொழில்கள் தொடங்க வாய்ப்பை ஏற்படுத்தி தரும். இந்த மையத்தில் விர்ச்சுவல் (மெய்நிகர்) ரியாலிட்டி, டிஜிட்டல் கம்ப்ரஷன், போட்டோகிராமெட்ரி, கல்வியின் கேமிஃபிகேஷன், நிகழ் நேர மெய்நிகர் உற்பத்தி, பிற வளர்ந்துவரும் தொழில் நுட்பங்கள் குறித்து தனித்துவமான படிப்புகளை வழங்கும் பள்ளியும் இடம்பெற்றுள்ளது.

---

**1.** **டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் 'சிறந்த திரைப் படத்திற்கான' விருதை வென்ற இந்திய திரைப்படம் எது?**

**அ) கூழாங்கல் ☑**



ஆ) ஜெய் பீம்

இ) நிமிர்

ஈ) அண்ணாத்த

- ✓ 20ஆவது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் ஆசிய திரைப்படப் போட்டிப் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த 'கூழாங்கல்' என்ற படம் 'சிறந்த திரைப்படத்திற்கான' விருதை வென்றது. தமிழ்நாட்டைச்சார்ந்த PS வினோத் ராஜ் இந்தப்படத்தை இயக்கியிருந்தார்.
- ✓ 'சிறந்த நடிகருக்கான' விருதை ரஞ்சித் சங்கர் இயக்கிய சன்னி படத்திற்காக ஜெயசூர்யா பெற்றார். சிறந்த உரை எழுத்தாளர் விருதை இந்திய–வங்காளதேசம் படமான மயர் ஜோஞ்சலுக்காக இந்திரனில் ராய்சௌத்ரி மற்றும் சுகதா சின்ஹா ஆகியோர் பெற்றனர்.
- ✓ ஜமி பருவா இயக்கிய செம்கோர் திரைப்படத்திற்கு சிறப்பு பார்வையாளர் விருது வழங்கப்பட்டது. 17 விருதுகளில் 4 விருதுகளை இந்தியா வென்றுள்ளது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'UNCITRAL' என்ற ஐநா நிறுவனத்துடன் தொடர்புடைய துறை எது?**

அ) குழந்தைகள் நலன்

ஆ) பருவநிலை மாற்றம்

**இ) திவால் நிலை ☑**

ஈ) பாரம்பரியம்

- ✓ சர்வதேச வாணிபச் சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஆணையத்தின் (UNCITRAL) எல்லைதாண்டிய திவால் நிலைக்கான மாதிரிச் சட்டம் (1997) என்பது எல்லை தாண்டிய திவால்நிலை குறித்த மிகவும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சட்டக்கட்டமைப்பாகும்.
- ✓ பொருளாதார ஆய்வானது சிலமாற்றங்களுடன் UNCITRAL சட்டத்தை ஏற்றுக்கொள்ள பரிந்துரைக்கிறது. சிங்கப்பூர், UK, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா மற்றும் கொரியா போன்ற 49 நாடுகள் இதை ஏற்றுக்கொண்டுள்ளன. திவால்நிலை சட்டக்குழுவும் UNCITRAL'ஐ ஏற்றுக்கொள்ள பரிந்துரைத்துள்ளது.

---

**3.** **'Services e–Health Assistance and Teleconsultation (SeHAT)' என்ற முன்னெடுப்பைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?**




**அ) பாதுகாப்பு அமைச்சகம் ☑**

ஆ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

- ✓ நடுவண் பாதுகாப்பு அமைச்சகமானது 'Services e–Health Assistance and Teleconsultation (SeHAT)' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது படைவீரர்கள் மற்றும் ராணுவ வீரர்களுக்கு மருந்துகளை வீட்டுக்கே சென்று தருவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இத்திட்டம் முதன்முதலில் தில்லியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது முப்படைகளின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இணையவழி மருத்துவ ஆலோசனை சேவையையும் வழங்குகிறது.

---

**4.** **"வயம் ரக்ஷமா" அல்லது "நாங்கள் பாதுகாக்கிறோம்" என்பது எந்த ஆயுதப்படையின் குறிக்கோளாகும்?**

**அ) இந்திய கடலோரக் காவல்படை ☑**



ஆ) இந்தோ–திபெத்திய காவல்படை

இ) அஸ்ஸாம் சென்டினல்ஸ்

ஈ) எல்லைப் பாதுகாப்புப் படை

- ✓ இந்திய கடலோரக் காவல்படை அதன் 46ஆவது உதய நாளை 2022 பிப்ரவரி.1 அன்று கொண்டாடியது. இது "வயம் ரக்ஷமா" அல்லது "நாங்கள் பாதுகாக்கிறோம்" என்ற குறிக்கோளுடன் உலகின் நான்காவது பெரிய கடலோர காவல்படையாக விளங்குகிறது.
- ✓ இந்திய கடலோரக்காவல்படையானது 7 இயங்குதளங்க –ளுடன் 1978'இல் தொடங்கப்பட்டது. இது, 2025ஆம் ஆண்டிற்குள் 80 வானூர்திகள் & 200 இயங்குதளங்கள் என்ற இலக்கை அடைய எண்ணம் கொண்டுள்ளது.

---

**5.** **US FDA'இடமிருந்து முழு அனுமதி பெற்ற 'Spikevax', எந்த மருந்து நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது?**

அ) பைசர்



**ஆ) மாடர்னா ☑**

இ) ஜான்சன் & ஜான்சன்

ஈ) அஸ்ட்ராசெனெகா

- ✓ மாடர்னாவின் COVID 19 தடுப்பூசியான 'ஸ்பைக்வாக்ஸ்'ஐ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்குப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் முழு அனுமதியைத்தந்துள்ளது.
- ✓ ஆகஸ்டில் அங்கீகரிக்கப்பட்ட பைசரின் COVID தடுப்பூசியா –ன 'Comirnaty'க்குப்பிறகு FDA'இடமிருந்து முழு ஒப்புத –லைப் பெற்ற இரண்டாவது COVID தடுப்பூசி இதுவாகும். அமெரிக்காவில் உரிமம் பெறும் மாடர்னாவின் முதல் தயாரிப்பு இதுவாகும்.

---

**6.** **'AK 203' என்ற ஒப்பந்தத்தில் எந்த நாட்டுடன் சேர்ந்து இந்தியா கையெழுத்திட்டது?**

அ) அமெரிக்கா



**ஆ) ரஷ்யா ☑**

இ) பிரான்ஸ்

ஈ) இஸ்ரேல்

- ✓ 'AK 203' இரக துப்பாக்கிகளை இந்தியாவில் தயாரிப்பதற் –காக AK–203 ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, 70,000 துப்பாக்கிகள்கொண்ட முதல் தொகுதியை ரஷ்யா வழங்கியுள்ளது. அமேதி தொழிற்சாலையில் தயாரிக்கப்ப –டும் AK 203 இரக துப்பாக்கிகள் இராணுவத்துக்கு வழங்கப்படும் அதே வேளையில், முதல் தொகுதி விமானப் படையால் பயன்படுத்தப்படவும் வாய்ப்புள்ளது.

✓ இந்தோ–ரஷ்ய ரைபிள்ஸ் பிரைவேட் லிட், அட்வான்ஸ்டு வெபன்ஸ் & எக்யூப்மென்ட் இந்தியா லிட் (முன்னர் OFB) & ரஷிய ரோசோபோரோனெக்ஸ்போர்ட் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு நிறுவனத்தால் இது உற்பத்தி செய்யப்படும்.

---

**7.** **'பத்ம பூஷன்' விருதை மறுத்த புத்ததேவ் பட்டாச்சார்ஜி, எந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தார்?**



அ) ஒடிஸா

**ஆ) மேற்கு வங்கம் ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) பீகார்

✓ இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி (77) 2022இல் அறிவிக்கப்பட்ட 'பத்ம பூஷன்' விருதை மறுத்துவிட்டார். அவர் 2000 முதல் 2011ஆம் ஆண்டுவரை மே வங்கத்தின் முதலமைச்சராக பணியாற்றினார். பழம்பெரும் பாடகி சந்தியா முகர்ஜியும் தபேலா கலைஞர் அனிந்தியா சட்டர்ஜியும் தங்களின் விருதுகளை பெற மறுத்துவிட்டனர்.

---

**8.** **பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியானது (PMC வங்கி) எந்த வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது?**




**அ) யூனிட்டி சிறு நிதி வங்கி ☑**

ஆ) ஜனா சிறு நிதி வங்கி

இ) ஈக்விடாஸ் சிறு நிதி வங்கி

ஈ) கேரளா வங்கி

✓ பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கியை (PMC வங்கி) யூனிட்டி சிறு நிதி வங்கியுடன் (USFBL) இணைக்–கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

✓ USFBL என்பது சென்ட்ரம் நிதியியல் சேவைகள் மற்றும் டிஜிட்டல் பேமெண்ட் தளமான BharatPe ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு நிறுவனமாகும். PMC வங்கியின் அனைத்து கிளைகளும் USFBL'இன் கிளைகளாக உடனடியாக செயல்படும்.

---

**9.** **2021 – ஊழல் புலனாய்வுக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**




அ) 64

ஆ) 75

**இ) 85 ☑**

ஈ) 101

✓ 2021ஆம் ஆண்டின் ஊழல் புலனாய்வுக் குறியீட்டில், 180 நாடுகளில் இந்தியா 85ஆவது இடத்தில் உள்ளது. இந்தக் குறியீட்டை 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' வெளியிடுகிறது. இது 180 நாடுகள் மற்றும் பிரதேசங்களை அவற்றின் பொதுத்துறை ஊழல் அளவுகளின் அடிப்படை–யில் தரவரிசைப்படுத்துகிறது.

✓ 0 முதல் 100 வரையிலான மதிப்பெண்ணில், '0' என்பது அதிக ஊழல் மிகுந்திருப்பதையும் '100' என்பது ஊழல் மிகவும் குறைவாக இருப்பதையும் கூறுகிறது.

✓ இதில் இந்தியாவின் மதிப்பெண் 40 ஆகும். இவ்வறிக்கை இந்தியாவின் ஜனநாயக நிலை குறித்த கவலையையும் எழுப்பியுள்ளது.

---

**10.** **"மன்யம் மற்றும் அல்லூரி சீதாராம ராஜு" ஆகியவை எந்த மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பழங்குடியின மாவட்டங்களாகும்?**



அ) கர்நாடகா

**ஆ) ஆந்திர பிரதேசம் ☑**

இ) தெலுங்கானா

ஈ) மத்திய பிரதேசம்

✓ ஆந்திர பிரதேசம் 'AP மாவட்டங்கள் உருவாக்கும் சட்டம், பிரிவு 3(5)'இன்கீழ் 13 புதிய மாவட்டங்களைப் பெறுகிறது என ஆந்திர பிரதேசம் அறிவித்துள்ளது.

✓ ஆந்திர பிரதேசத்தில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை இதன்மூலம் 26ஆக உயர்ந்துள்ளது. 'மன்யம்' மற்றும் 'அல்லூரி சீதாராம ராஜு' என்னும் பழம் பெரும் தெலுங்கு விடுதலைப் போராட்ட வீரரின் பெயரால் இந்த இரண்டு புதிய பழங்குடி மாவட்டங்களுக்கும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 07-02-2022 – தேவநேயப்பாவாணரின் 120ஆவது பிறந்தநாள்.**

---

**2. ஜேஎன்யு முதல் பெண் துணைவேந்தராக முன்னாள் மாணவர் சாந்திஸ்ரீ பண்டிட் நியமனம்!**

தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் சாந்திஸ்ரீ பண்டிட் முதல் பெண் துணைவேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிரத்தில் உள்ள சாவித்ரிபாய் பூலே பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்து வரும் சாந்திஸ்ரீ பண்டிட் (59) தற்போது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (ஜேஎன்யு) துணைவேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**2. சேதி தெரியுமா?**

**ஜன.29:** 2019–20ஆம் நிதியாண்டில் தேசியக் கட்சிகளின் சொத்துக் கணக்கு அடிப்படையில் பாஜக ரூ. 4,874 கோடி சொத்துகளுடன் முதலிடத்தில் உள்ளது.

**ஜன.30:** சீனாவில் 'நியோகோவ்' என்கிற புதிய கரோனா வைரஸ் வகை வௌவால்களிடம் மட்டும் கண்டறியப்பட்டுள்ளது.

**ஜன.30:** ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயினின் ரபேல் நடால் வென்றார். இதன்மூலம் 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று நடால் சாதனை புரிந்தார்.

**ஜன.31:** சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி முனீஷ்வர் நாத் பண்டாரியை தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்தது.

**பிப்ரவரி.1:** மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் 2022–23ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

**பிப்ரவரி.2:** 'நட்சத்திரவாசிகள்' நாவலுக்காக 2021–ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி யுவ புரஸ்கார் விருது கார்த்திக் பாலசுப்ரமணியனுக்கு அறிவிக்கப்பட்டது.

**பிப்ரவரி.3:** நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரும் தமிழக அரசின் சட்ட மசோதாவை ஆளுநர் RN ரவி, சபாநாயகருக்குத் திருப்பி அனுப்பினார்.

**பிப்ரவரி.4:** பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) தலைவராக ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் எம்.ஜெகதேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பிப்ரவரி.4:** தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட 74,416 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

**பிப்ரவரி.5:** நீட் தேர்வு விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுக்க சட்டப்பேரவை அனைத்துக் கட்சி கூட்டத்தைத் தமிழக அரசு கூட்டியது.

**1. இந்தியாவின் முதல் பெண் ரபேல் போர் விமானி யார்?**

**அ) ஷிவாங்கி சிங் ☑**



ஆ) பாவனா காந்த்

இ) மோகனா சிங்

ஈ) அவனி சதுர்வேதி


✓ நாட்டின் முதல் பெண் ரபேல் போர்விமானி ஷிவாங்கி சிங் குடியரசு தின அணிவகுப்பில் இந்திய விமானப்படையின் அலங்கார ஊர்தியில் பங்கேற்றார்.

✓ கடந்த ஆண்டு பிளைட் லெப்டினன்ட் பாவனா காந்த், IAF அலங்கார ஊர்தியின் ஒருபகுதியாக இருக்கும் முதல் பெண் போர் ஜெட் விமானி ஆனார். ஷிவாங்கி சிங், IAF அலங்கார ஊர்தியில் ஓர் அங்கமாக விளங்கும் 2ஆவது பெண் போர் ஜெட் விமானி ஆனார்.

---

**2. இந்தியாவின் முதல் 'கிராபீன் புத்தாக்க மையத்தை' அமைப்பதற்கான எந்த மாநில அரசின் திட்டத்திற்கு MeiTY ஒப்புதல் அளித்துள்ளது?**

அ) தமிழ்நாடு



**ஆ) கேரளா ☑**

இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், இந்தியாவின் முதலாவது 'கிராபீன் புத்தாக்க மையத்தை' அமைப்பதற்கு கேரள மாநில அரசுக்கு ஒப்புதலளித்துள்ளது.

✓ கேரள மாநில அரசு நடத்தும் கேரள டிஜிட்டல் பல்கலை, CMET–திருச்சூர் உடன் இணைந்து, 'கிராபீன் இந்தியா புத்தாக்க மையம்', R&D அடைவு மையத்தை அமைக்க உள்ளது. கேரள அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் இதற்கு, TATA ஸ்டீல் லிட் தொழிற்துறை பங்குதாரராக இருக்கும். கிராபீன் என்பது உலகின் மிகமெல்லிய மற்றும் வலிமையான பொருளாகும்.

---

**3. உலகின் மிகப்பெரிய கடல் மடையான இஜ்முய்தீன் கடல் மடையை திறந்த நாடு எது?**

அ) அமெரிக்கா



**ஆ) நெதர்லாந்து ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) இந்தியா

✓ டச்சு மன்னர் வில்லெம்–அலெக்சாண்டர் அதிகாரப்பூர்வ –மாக இஜ்முய்தீன் கடல் மடையைத் திறந்து வைத்தார். இது உலகின் மிகப்பெரிய கடல் மடை என்று கூறப்படுகிறது. வடகடல் கால்வாயை ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்துடன் இணைக்கும் துறைமுக நகரமான இஜ்முய்தீனில் 500–மீட்டர் நீளமும் 70–மீட்டர் அகலமும் கொண்ட இந்த மடை அமைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த மடை ஆழமாக இருப்பதால் கப்பல்கள் கால்வாயில் நுழைவதற்கு சாதகமான நீர்மட்டத்திற்காக காத்திருக்க வேண்டியதில்லை.

---

**4. 'மூலதனப்பொருட்கள் துறையின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கான திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) எஃகு அமைச்சகம்

ஆ) கனரக தொழில்துறை அமைச்சகம்

இ) ஜவுளி அமைச்சகம்

**ஈ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑**

✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் மூலதனப் பொருட்கள் துறையில் போட்டித்தன்மையை மேம்படுத்து –வதற்கான திட்டத்தின் 2ஆம் கட்டத்தை அறிவித்தது. இத் திட்டம் ₹1,207 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிவிக்கப்பட்டது.

✓ இதில் ₹975 கோடியை அரசாங்கத்தின் பட்ஜெட் மூலமும் மீதமுள்ள ₹232 கோடி தொழில்துறை பங்களிப்பு மூலமும் பெறப்படும்.

---

**5. 'உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஜனவரி 25

**ஆ) ஜனவரி 30 ☑**

இ) பிப்ரவரி 1

ஈ) பிப்ரவரி 3

✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, ஒவ்வோர் ஆண்டும் ஜன.30 அன்று 'உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள்' அனுசரிக்கப்படுகிறது. "Achieving health equity to end the neglect of poverty–related diseases" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

✓ சிக்குன்குனியா, டெங்கு, தொழுநோய் மற்றும் ரேபிஸ் போன்றவை புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்க –ளுக்கான சில எடுத்துக்காட்டுகள். இவ்வகை நோய்கள் உலகளவில் 1 பில்லியன் மக்களைப் பாதிக்கின்றன.

---

**6. 'ஆல்பர்ட் ஏரி', எந்த இருநாடுகளுக்கு இடையேயான எல்லையாக அமைந்துள்ளது?**

**அ) உகாண்டா–காங்கோ மக்களாட்சிக் குடியரசு ☑**

ஆ) அல்ஜீரியா–லிபியா



இ) தென்னாப்பிரிக்கா – தான்சானியா

ஈ) உகாண்டா – எத்தியோப்பியா

✓ 2 மிகப்பெரும் எண்ணெய் நிறுவனங்களான பிரான்சின் டோட்டல் எனர்ஜிஸ் மற்றும் சீனா நேஷனல் ஆஃப்ஷோர் ஆயில் கார்ப்பரேஷன் ஆகியன உகாண்டாவின் எரிசக்தி வளங்களை மேம்படுத்துவதற்கும் பிராந்திய எண்ணெய் குழாய் அமைப்பதற்கும் 10 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ உகாண்டாவிற்கும் காங்கோ மக்களாட்சிக் குடியரசிற்கும் இடையே 160 கிமீட்டர் இயற்கை எல்லையான ஆல்பர்ட் ஏரியிலுள்ள கச்சா எண்ணெய் இருப்புக்களை எடுப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**7.** **பாஸ்சிம் லெகர் என்பது எந்த நாடு நடத்திய கூட்டு பாதுகாப்புப் பயிற்சியாகும்?**



அ) நேபாளம்

**ஆ) இந்தியா ☑**

இ) பங்களாதேஷ்

ஈ) மியான்மர்

- ✓ 'பாஸ்சிம் லெகர்' என்ற பெயரில் கடற்படையின் மேற்கு மண்டலக்கட்டுப்பாட்டு மையம் மேற்கொண்ட கூட்டுக் கடல்சார்பயிற்சி 2022 ஜன.25 அன்று நிறைவடைந்தது.
- ✓ இந்திய கடற்படை, வான்படை, இராணுவம் & கடலோரப் பாதுகாப்புப்படைகள் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்ப –தற்காகவும், தனது செயல்பாட்டுத் திட்டங்களை மதிப்பிடு –வதற்காக இந்திய கடற்படையின் மேற்கு மண்டலக் கட்டுப்பாட்டு மையம் இக்கூட்டுப்பயிற்சியை 20 நாட்கள் நடத்தியது.

---

**8.** **'டிரோன் சான்றளிப்புத் திட்டத்தை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**



அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑**

இ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

- ✓ மத்திய உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகமானது குறைந்தபட்ச பாதுகாப்பு மற்றும் தரத்தேவைகளை உறுதி செய்வதற்கும் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற் –குமாக 'டிரோன் சான்றளிப்புத் திட்டத்தை' அறிவித்தது.
- ✓ தாராளமயமாக்கப்பட்ட டிரோன் விதிகள், 2021'இன்கீழ் வெளியிடப்பட்ட இதன் நோக்கம், டிரோன்களுக்கான பாதுகாப்புத் தேவைகளுக்கான குறைந்தபட்சத் தேவைக –ளை வழங்குவதும், சான்றிதழுக்கான மதிப்பீட்டை செயல்படுத்துவதும் ஆகும்.
- ✓ தாராளமயமாக்கப்பட்ட டிரோன் விதிகள், 2021, ஆகஸ்ட் 2021'இல் MoCA'ஆல் வெளியிடப்பட்டது.

---

**9.** **UNESCO பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்ட 'கிளிங்கர் படகுகள்' சார்ந்த பகுதி எது?**



**அ) நோர்டிக் நாடுகள் ☑**

ஆ) பால்டிக் நாடுகள்

இ) பால்கன் பகுதிகள்

ஈ) கீழை ஆப்பிரிக்க நாடுகள்

- ✓ மனிதகுலத்தின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரி –யத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாரம்பரியங்களின் பட்டியலில் UNESCO 'கிளிங்கர் படகுகளை' சேர்த்துள்ளது.
- ✓ டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் கூட்டாக UNESCO'இடம் இதற்காக நாடின. இது ஒரு நோர்டிக் பாரம்பரியம் ஆகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பாய்மரப்படகுகள் வட ஐரோப்பாவின் வர்த்தகத்திற்கு உதவியுள்ளன.

---

**10.** **முதல் இந்திய–மத்திய ஆசிய உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?**



**அ) இந்தியா ☑**

ஆ) கஜகஸ்தான்

இ) தஜிகிஸ்தான்

ஈ) உஸ்பெகிஸ்தான்

- ✓ **இந்திய–மத்திய ஆசிய உச்சிமாநாட்டை இந்தியா மெய்நிகர் வடிவத்தில் நடத்தியது. இந்தியாவுக்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முப்பது ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், இந்தியாவும் மத்திய ஆசிய நாடுகளும் ஒரு இலட்சிய பார்வையை வரையறுக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் மோடி வலியுறுத்தினார்.**
- ✓ **கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஐந்து நாடுகளின் அதிபர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வங்கிக் கணக்கில் மோசடி; வாடிக்கையாளர் பணத்தை மீட்க '155260' ஹெல்ப் லைன் அறிமுகம்: சைபர் கிரைம் போலீஸார் நடவடிக்கை**

வங்கிக்கணக்கிலிருந்து வாடிக்கையாளர்களின் பணத்தை நூதனமுறையில் கொள்ளையடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதைத் தடுக்க சைபர் கிரைம் போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, '155260' என்ற உதவி எண் சைபர் கிரைம் சார்பில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

---

**2. ஆசிய பணக்காரர் பட்டியலில் கவுதம் அதானி முதலிடம்: பின்தங்கினார் ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி**

ஆசிய பணக்காரர்கள் வரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார் தொழிலதிபர் கவுதம் அதானி. தொடர்ந்து முதலிடத்தில் இருந்துவந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி இரண்டாமிடத்துக்கு தள்ளப்பட்டார்.

59 வயதாகும் கவுதம் அதானின் சொத்து மதிப்பு 8,850 கோடி டாலராக உயர்ந்துள்ளது. முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 8,790 கோடி டாலராக உள்ளது.

கவுதம் அதானியின் சொத்து மதிப்பு 1,200 கோடி டாலர் அதிகரித்ததில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்த ஆண்டில் உலகிலேயே அதிகபட்ச வருமானத்தை ஈட்டிய தொழிலதிபர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

நிலக்கரி சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட அதானி நிறுவனம் ஆஸ்திரேலியாவில் நிலக்கரி சுரங்கத்துக்கு பெற்ற அனுமதி பெரும் சர்ச்சைக்குள்ளானது.

பருவநிலை மாறுபாடு விழிப்புணர்வு ஆதரவாளர்கள் பலரும் நிலக்கரி சுரங்கத் தொழில் குறித்து கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனால் மரபுசாரா எரிசக்தித் தொழிலில் அதிக கவனம் செலுத்தி வருகிறது அதானி

குழுமம். இது தவிர விமான நிலைய பராமரிப்பு, ராணுவ தளவாட ஒப்பந்த பணி உள்ளிட்ட தொழில்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. கடந்த 2 ஆண்டில் அதானி குழுமபங்குகள் விலை 600% அளவுக்கு அதிகரித்துள்ளன.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி அடுத்த 3 ஆண்டுகளில் பசுமை சார்ந்த எரிசக்திக்கென 1,000 கோடி டாலர் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளார். அதானி அடுத்த 8 ஆண்டுகளில் 7,000 கோடி டாலர் முதலீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

**1. இந்தியாவின் முதல் குடிமக்களால் உருவாக்கப்பட்ட மாநில அளவிலான பறவைகள் விவரப்படத்தை வெளியீடு செய்துள்ள மாநிலம் / UT எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) கேரளா ☑**

இ) கர்நாடகா

ஈ) மேற்கு வங்கம்

✓ அண்மையில் வெளியிடப்பட்ட கேரள பறவைகள் அட்லஸ் ஆனது 'ஆசியாவின் மிகப்பெரிய பறவை அட்லஸ்' என்று கூறப்படுகிறது. இந்தியாவிலேயே இதன்வகையில் முதலாவதாக தயார்செய்யப்பட்டுள்ள இந்த மாநில அளவிலான பறவைகள் விவரப்படம், 1000க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களின் பங்கேற்புடன் உருவாக்கப்பட்டது.

---

**2. புதிய இராம்சர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்/UT எது?**

அ) ஹரியானா



ஆ) பீகார்

**இ) குஜராத் ☑**

ஈ) உத்தரகாண்ட்

✓ உலக சதுப்பு நில நாளை முன்னிட்டு இரு புதிய இராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குஜராத்தில் கிஜாடியா வனவுயிரி சரணாலயம், உ பியில் பகீரா வனவுயிரி சரணாலயம் ஆகிய இரண்டு சரணாலயங்கள் ராம்சரில் சேர்கப்பட்டுள்ளன.

✓ இந்தியா 10,93,636 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 49 தளங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது. இது தெற்காசியாவிலேயே மிக அதிகமாகும். மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் ஜஜ்ஜாரில் உள்ள சுல்தான்பூர் தேசியப் பூங்கா மற்றும் பிந்தாவாஸ் வனவுயிரி சரணாலயத்தை ஹரியானாவில் உள்ள இராம்சார் தளங்களாக முன்னர் அறிவித்தது.

---

**3. சத்தீஸ்கரின் ஒருங்கிணைப்புடன், 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டைத்'திட்டம் எத்தனை மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தப்படுகிறது?**

அ) 15




ஆ) 20

இ) 28

**ஈ) 35 ☑**

✓ சத்தீஸ்கர் மாநிலம் சமீபத்தில் 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை'த்திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இதன்கீழ் அந்த மாநில மக்கள் தங்கள் உணவு தானிய ஒதுக்கீட்டை நாடு முழுவதும் உள்ள எந்தவொரு நியாயவிலைக்கடைகளில் இருந்தும் வாங்கிக்கொள்ளலாம்.

✓ சத்தீஸ்கரின் ஒருங்கிணைப்புடன், நாட்டில் உள்ள சுமார் 77 கோடி NFSA பயனாளிகளில் கிட்டத்தட்ட 96.8 சதவீதத்தை உள்ளடக்கிய 35 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டம் இப்போது செயல்பாட்டில் உள்ளது. இதனை உணவு மற்றும் பொது விநியோகத் துறை தெரிவித்துள்ளது.

---

**4. தலையில்லா குதிரைக்கருகே புதைக்கப்பட்ட மனிதனி –ன் எலும்புக்கூடு, எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?**

அ) ரஷ்யா



ஆ) கிரீஸ்

**இ) ஜெர்மனி ☑**

ஈ) சீனா

✓ தலையில்லா குதிரைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த மனிதனின் எலும்புக்கூடுகளை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். தெற்கு ஜெர்மனியில் உள்ள நிட்லிங்கனில் இந்த எலும்புக்கூட்டிடின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1400 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதி மெரோவிங்கியன் வம்சத்தால் ஆளப்பட்டபோது இம்மனிதனும் குதிரையும் புதைக்கப்பட்டிருக்கவேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

---

**5. அண்மையில் IT துறைக்காக பிரத்யேக 'தொழில்நுட்ப பூங்கா'வைத் திறந்த வடகிழக்கு மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்



**ஆ) மேகாலயா ☑**

இ) மணிப்பூர்

ஈ) மிசோரம்

✓ மேகாலயா முதலமைச்சர் கான்ராட் கே சங்மா, 'ஷில்லாங் தொழில்நுட்ப பூங்கா'வைச் சமீபத்தில் திறந்துவைத்தார். இதில் பல நிறுவனங்கள் தங்கள் கிளைகளைத் திறக்க ஒப்புதல் அளித்துள்ளன. தற்போது, மேகாலயாவில் 35 வயதுக்குட்பட்டோர் 70 சதவீதம் உள்ளனர். தொழில்நுட்ப பூங்காவின் முதல்கட்டம் நேரடியாக 1,500 பேருக்கு பணி வாய்ப்பை உருவாக்கும். மேலும் மறைமுகமாகவும் இது அதிக வேலைகளை உருவாக்கும்.

---

**6. 2021இல் இந்தியாவின் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) சீனா

இ) நெதர்லாந்து

ஈ) ஜெர்மனி

✓ இந்தியாவின் மின்னணுப்பொருட்களின் ஏற்றுமதி 2021 டிசம்பரில் 1.67 பில்லியன் அமெரிக்க டாலரைத் எட்டியது. இது கடந்த 2020 டிசம்பரில் காணப்பட்ட 1.25 பில்லியன் அமெரிக்க டாலர்களைவிட 33.99% அதிகமாகும்.

✓ கடந்த நிதியாண்டில் மின்னணுப்பொருட்களின் ஒட்டுமொத்த ஏற்றுமதி $11.11 பில்லியன்டாலர்களாக இருந்தது. 2021 ஏப்ரல்–நவம்பரில் இந்திய மின்னணுப் பொருட்களின் முதல் 5 ஏற்றுமதி இடங்கள்: அமெரிக்கா (18%), UAE (16.6%), சீனா (7.6%), நெதர்லாந்து (4.5%) & ஜெர்மனி (4.2%). இந்தியாவின் மின்னணுப் பொருட்கள்

துறை ஏற்றுமதியில் மொபைல் போன்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

---

**7. கடந்த பத்தாண்டுகளில் 0.93% என்ற மிகக்குறைந்த வளர்ச்சியைக்கண்ட இந்திய அண்டை நாடு எது?**



அ) இலங்கை

**ஆ) நேபாளம் ☑**

இ) பங்களாதேஷ்

ஈ) மியான்மர்

✓ நேபாளத்தின் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021 இன் ஆரம்பக்கட்ட முடிவுகளின்படி, அந்நாட்டின் மக்கள் தொகை 29,192,480'ஐ எட்டியுள்ளது. இது வெறும் 0.93% வளர்ச்சியாகும். இது கடந்த எண்பதாண்டுங்களில் மிகக் குறைந்த வளர்ச்சியாகும். நேபாளத்தின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் உலக மக்கள்தொகையின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிடவும் குறைவாக உள்ளது.

✓ நேபாளிகள் வேலைக்காகவும் படிப்புக்காகவும் வெளியில் குடியேறுவதே இதற்குக் காரணமாகும். கடந்த 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பில் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.35 சதவீதமாக இருந்தது.

---

**8. "A Little Book of India: Celebrating 75 years of Independence" என்ற நூலின் ஆசிரியர் யார்?**



**அ) ரஸ்கின் பாண்ட் ☑**

ஆ) அருந்ததி ராய்

இ) சுதா மூர்த்தி

ஈ) விக்ரம் சேத்

✓ மூத்த எழுத்தாளர் ரஸ்கின் பாண்ட், "A Little Book of India: Celebrating 75 years of Independence" என்ற தலைப்பில் தனது சமீபத்திய நூலை வெளியிட்டார்.

✓ பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்த 87 வயதான இந்திய எழுத்தாளர், இந்தியாவின் ஆன்மீக சித்தாந்த பண்புகளை இதில் சித்தரித்துள்ளார். ரஸ்கின் பாண்ட் சாகித்ய அகாடமி விருது, சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார், பத்மஸ்ரீ மற்றும் பத்ம பூஷன் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

---

**9. சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாவட்டம் எது?**



**அ) ஈரோடு ☑**

ஆ) கோயம்புத்தூர்

இ) திண்டுக்கல்

ஈ) சேலம்

✓ தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள சத்திய மங்கலம் புலிகள் காப்பகம் புலிகளை இரட்டிப்பாக்கியதற்-கான 'TX2' விருதைப் பெற்றுள்ளது. இந்தப் புலிகள் காப்பகம் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியும் புலிகளின் காப்பகமுமாகும்.

✓ இந்தக் காப்புக்காடு நீலகிரி உயிர்க்கோள நிலப்பரப்பின் ஒருபகுதியாகும். இது உலகின் மிகப்பெரிய புலிகள் வாழிடமாகும். IUCN, UNDP, உலக இயற்கை நிதியம் உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகள் இணைந்து இந்த விருதை வழங்குகின்றன.

---

**10. தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் (HRIDAY) திட்ட காலம் என்ன?**




அ) 2014–2018

**ஆ) 2015–2019 ☑**

இ) 2016–2020

ஈ) 2017–2021

✓ **நடுவணரசின் தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சித்திட்டமானது (HRIDAY) கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 12 நகரங்களில் செயல்படுத்தப்பட்டது.**

✓ **₹453.90 கோடி மதிப்பீட்டில் 77'க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ₹18.34 கோடி மதிப்பிலான இரண்டு திட்டங்கள் – பாதாமி (கர்நாடகா) திட்டம் மற்றும் வாரங்கல் (தெலுங்கானா) திட்டம் செயல்ப-டுத்தப்பட்டு வருகின்றன. இதன் திட்ட காலம் கடந்த 2019ஆம் ஆண்டில் நிறைவடைந்தது.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 87 சதவீதம் பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி: சுகாதாரத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தகவல்**

தமிழகத்தில் 87 சதவீதம் பேருக்குநோய் எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளது என்று சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழகத்தில் 2 தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத கரோனா நோயாளிகளில் 70% பேர் உயிரிழக்கின்றனர்.

**10 கோடி தடுப்பூசி இலக்கு**

இதுவரை 4 லட்சத்து 99,408 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அதேபோல 15 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 26 லட்சத்து 92,917 பேருக்கு முதல் தவணை தடுப்பூசியும், 7 லட்சத்து 40,383 சிறுவர்களுக்கு 2ஆவது தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை மொத்தமாக 9 கோடியே 71 லட்சத்து 61,368 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. விரைவில் 10 கோடி தடுப்பூசி என்ற இலக்கை அடைவோம்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குருதிசார் ஆய்வின் (சீரோ சர்வே) 4ஆம்கட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பரில் வெளியான முதல்கட்ட ஆய்வில் 32 சதவீதம் பேருக்கும், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியான 2ஆம் கட்ட ஆய்வில் 29% பேருக்கும், 2021ஆம் ஆண்டு ஆகஸ்டில் வெளியான 3ஆம்கட்ட ஆய்வில் 70% பேருக்கும் தமிழகத்தில் நோயெதிர்ப்பு சக்தி கண்டறியப்பட்டது.

அதேபோல், தமிழகத்தில் நேற்றுமுன்தினம் வெளியான 4ஆம் கட்டஆய்வில் 10 வயதுக்கு மேற்பட்ட 87 சதவீதம் பேருக்கு நோயெதிர்ப்புசக்தி இருப்பது கண்டறியப்பட்டு

உள்ளது. இந்த ஆய்வு 30 குழுக்களைக் கொண்ட 1,706 பேர், 32,245 கிராமமற்றும் நகர்ப்புற மக்களின் இரத்த மாதிரிகளை சேகரித்து மாநில பொது சுகாதாரத்துறை ஆய்வகங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வெளியான முடிவுகளாகும்.

**திருவாரூர் மாவட்டம் முதலிடம்**

இதில் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி 90 சதவீதமாகவும், தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி 69 சதவீதமாகவும் உள்ளது தெரிய வந்துள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகபட்சமாக திருவாரூரில் 93 சதவீதம் பேருக்கும், தென்காசியில் 92 சதவீதம் பேருக்கும், பெரம்பலூர், மதுரை, சிவகங்கை, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் 91 சதவீதம் பேருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் 90 சதவீதம் பேருக்கும், நெல்லை, நாமக்கல், சென்னை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 88 சதவீதம் பேருக்கும், நீலகிரி, அரியலூர், தூத்துக்குடி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 87 சதவீதம் பேருக்கும், தேனி, திருச்சி, திருப்பூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, கரூர், வேலூர், புதுக் கோட்டை, கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 86 சதவீதம் பேருக்கும்,

திருவண்ணாமலை, இராமநாதபுரம், மயிலாடுதுறை, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் 85% பேருக்கும், தருமபுரி, காஞ்சிபுரம், திருப்பத்தூர் மாவட்டங்களில் முறையே 84, 83, 82% பேருக்கு நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

**2. சூரிய புயலில் சிக்கிய 40 செயற்கைக்கோள்கள் வளிமண்டலத்தில் நுழைந்து எரிந்தன**

அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு அனுப்பியிருந்த 40 செயற்கைக்கோள்கள் சூரிய புயல் தாக்குதலால் புவிவட்டப்பாதையிலிருந்து விலகி வளி மண்டலத்துக்குள் நுழைந்து எரிந்தன.

இதுதொடர்பாக ஸ்பேக்ஸ்X நிறுவனம் தெரிவித்ததாவது:

சமீபத்தில் ஏற்பட்ட சூரிய புயல், வளிமண்டலத்தை அடர்த்தியாக்கியது. இதனால் கடந்த வாரம் விண்வெளியில் செலுத்தப்பட்டிருந்த 49 சிறிய செயற்கைக் கோள்களில் (ஒரு செயற்கைக்கோளின் எடை 260 கிகி) 40 செயற்கைக்கோள்கள் புவி வட்டப்பாதையிலிருந்து விலகி மீண்டும் வளிமண்டலத்துக்குள் நுழைந்து எரிந்தன. சில செயற்கைக்கோள்கள் புவிவட்டப்பாதையில் இருந்து விலகும் தறுவாயில் உள்ளன. இந்த விபத்தைத் தவிர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தன. இந்தச் சம்பவத்தால் புவி வட்டப்பாதையிலோ, பூமியிலோ எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.

பூமியின் சுற்றுவட்டப்பாதையில் ஸ்பேஸ்X நிறுவனத்தின் சுமார் 2,000 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்கள் சுற்றி வருகின்றன. அவற்றின்மூலம் உலகின் தொலைதூர இடங்களுக்கு இணையவழி சேவை கிடைத்து வருகிறது. இச்செயற்கைக்கோள்கள் பூமியை 340 மைல்களுக்கும் அதிகமான உயரத்தில் சுற்றிவருகின்றன என்று தெரிவித்துள்ளது.

**3. சென்னை – விளாடிவோஸ்க் நகரங்களுக்கான கடல்வழி வர்த்தக போக்குவரத்து திட்டம்: விரைவில் செயல்படுத்தப்படும் என ரஷ்ய துணைத் தூதர் தகவல்**

சென்னை – விளாடிவோஸ்க் (ரஷ்யா) நகரங்களுக்கான கடல்வழி வர்த்தக போக்குவரத்து திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது என்று ரஷ்ய துணைத்தூதர் ஒலெக் என் அவ்தீவ் கூறினார்.

இந்தியா, ரஷ்யா இடையிலான உறவை வலுப்படுத்த கலாச்சாரம், வர்த்தகம், அறிவியல் உட்பட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. அதன்தொடர்ச்சியாக இந்திய – ரஷ்ய தொழில் வர்த்தக சபை மற்றும் ரஷ்ய பிரிமோர்ஸ்கி மண்டல தொழில் வர்த்தக கூட்டமைப்பு சார்பில் இரு நாடுகளுக்கு இடையே புதிய தொழில் வாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இணையவழியில் நேற்று கையெழுத்தாகின.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய – ரஷ்ய தொழில் வர்த்தக சபை நிறுவனர் V M லட்சுமி நாராயணன், பிரிமோர்ஸ்கி மண்டல தொழில் வர்த்தக கூட்டமைப்பு தலைவர் போரிஸ் ஸ்டுப்நட்ஸ்கி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

---

**1. அண்மைச் செய்திகளில் காணப்பட்ட புனௌரா தாம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) பீகார் ☑**

ஆ) உத்தர பிரதேசம்

இ) மத்திய பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ பீகாரில் அமைந்துள்ள புனௌரா தாம், 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்தின் இராமாயண சுற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. இது சமீபத்தில் சுற்றுலா அமைச்சகத்தின் பிரசாத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. பீகாரில் வைஷாலியில் தீர்த்தங்கர் சுற்று – அர்ரா – மசாத் – பாட்னா – இராஜ்கிர் – பவாபுரி – சம்பாபுரி, ஆன்மீக சுற்றுலா சுல்தாங்கஞ்ச் – தர்மஷாலா – தியோகர் மற்றும் புத்த கயாவில் உள்ள பௌத்த சுற்றுலா உட்பட பல சுற்றுலாத் தலங்கள் இத்திட்டத்தில் உள்ளன.

**2. "The $10 Trillion Dream" என்ற நூலின் ஆசிரியர் யார்?**



அ) ரகுராம் ராஜன்

**ஆ) சுபாஷ் சந்திர கார்க் ☑**

இ) உர்ஜித் படேல்

ஈ) அரவிந்த் சுப்ரமணியன்

✓ முன்னாள் நிதிச்செயலர் சுபாஷ் சந்திர கார்க், "The $10 Trillion Dream" என்ற நூலை எழுதியுள்ளார். இது இன்று இந்தியா எதிர்கொள்ளும் கொள்கைச் சிக்கல்களை ஆய்ந்து, 2030'களின் இடைப்பகுதியில் 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான சீர்திருத்தங்களை இது பரிந்துரைக்கிறது.

✓ ஓர் இந்திய குடிமைப்பணி அதிகாரியான S C கார்க், கடந்த 2019இல் நிதிச்செயலராக நியமிக்கப்பட்டார்.

**3. 'லாக்பிட் 2.0' குழு, எந்த நாட்டின் நீதி அமைச்சகத்தின் மீது சைபர் தாக்குதலை நடத்தியது?**




அ) அமெரிக்கா

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) ரஷ்யா

ஈ) சீனா

✓ 'லாக்பிட் 2.0' எனப்படும் குழுவின் சைபர் தாக்குதலால் பிரான்சின் நீதி அமைச்சகம் பாதிக்கப்பட்டுள்ளது. அக்குழு அவ்வமைச்சகத்தின் கோப்புகளைப்பூட்டி, அதனை மீட்க வேண்டுமெனில் பிரான்ஸ் அரசாங்கம் பிணைத்தொகை தரவேண்டும் என வேண்டியது. இத்தாக்குதல்குறித்து அந்நாடு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

**4. 'தேசிய மருந்தாக்கத்தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER)' என்பது எந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள ஓர் ஆராய்ச்சி நிறுவனமாகும்?**

அ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

**ஆ) ரசாயனங்கள் & உரங்கள் அமைச்சகம் ☑**

இ) கல்வி அமைச்சகம்

ஈ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

✓ தேசிய மருந்தாக்கத் தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) என்பது இந்தியாவின் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு பொதுத் துறை மருந்து ஆராய்ச்சி நிறுவனமாகும்.

✓ மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சர் மான்சுக் மாண்டவியா, அனைத்து ஏழு NIPER'கள் மற்றும் அவற்றின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்காக NIPER ஆராய்ச்சி வலைதளத்தைத் தொடங்கினார்.

**5. கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனைத் தொடர்ந்து இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?**



அ) உர்ஜித் படேல்

ஆ) ஜீன் டிரேஸ்

இ) கௌசிக் பாசு

**ஈ) V ஆனந்த நாகேஸ்வரன் ☑**

✓ இந்திய அரசாங்கம் அதன் தலைமைப் பொருளாதார ஆலோசகராக V ஆனந்த நாகேஸ்வரனை நியமனம் செய்துள்ளது. அவர் IFMR வணிகப்பள்ளியின் தலைவராக பணியிலிருந்தார். 2019-2021 வரை பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழுவின் பகுதிநேர உறுப்பினராகவும் இருந்தார். வரவிருக்கும் கருத்துக்கணிப்பு முதன்மைப் பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் தலைமையிலான குழுவால் தயாரிக்கப்பட்டதாகும்.

**6. சியோமாரா காஸ்ட்ரோ, பின்வரும் எந்த நாட்டின் முதல் பெண் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ) பகாமாஸ்

**ஆ) கோண்டுராஸ் ☑**

இ) மொராக்கோ

ஈ) துனிசியா

✓ நடுவமெரிக்க நாடான கோண்டுராஸ், ஆளுங்கட்சியின் தோல்வியை ஒப்புக்கொண்டதையடுத்து, அதன் முதல் பெண் அதிபரான சியோமாரா காஸ்ட்ரோவை தேர்வு செய்யவுள்ளது. இடதுசாரி லிப்ரே கட்சியின் வேட்பாளரான திருமதி காஸ்ட்ரோ, எதிர்க்கட்சி வேட்பாளரைவிட 20% புள்ளிகள் முன்னிலை பெற்றார். வலதுசாரி தேசியக்கட்சி அதன் 12 ஆண்டுகால ஆட்சி முறைகேடுகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டது.

**7. ஆண்டுதோறும் 'உலக சமய நல்லிணக்க வாரம்' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?**

அ) ஜனவரி

**ஆ) பிப்ரவரி ☑**

இ) டிசம்பர்

ஈ) நவம்பர்

✓ 2010ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபை அறிவித்ததிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாத முதல் வாரத்தின்போது 'உலக சமய நல்லிணக்க வாரம்' அனுசரிக்கப்பட்டு

வருகிறது. அனைத்து நாட்டு மக்களிடையே அவர்களின் நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான ஒருவழியாக உலக சமய–சர்வமத நல்லிணக்க வாரத்தை பொதுச்சபை, நிறுவியது.

✓ இந்த ஆண்டு, "Interfaith Pandemic Recovery" என்னும் முழக்கத்தின்கீழ் இந்த வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

---

**8.** 'ஸ்வச்சதா சாரதி பெல்லோஷிப்–2022'ஐ அறிவித்த நிறுவனம்/அலுவலகம் எது?



அ) NITI ஆயோக்

**ஆ) முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் ☑**

இ) IIT – மெட்ராஸ்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ 'ஸ்வச்சதா சாரதி பெல்லோஷிப் – 2022' ஆனது இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகத்தால் அதன் 'வேஸ்ட் டு வெல்த்' திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டது.

✓ 'ஸ்வச்சதா சாரதிகள்' என்ற பாத்திரத்தில், கழிவு மேலாண்மை சமூகப்பணிகளில் ஈடுபட்டுள்ள இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக இது அறிவிக்கப்பட்டுள்ளது. 'வேஸ்ட் டு வெல்த்' பணி என்பது பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக் குழுவின் 9 தேசிய பணிகளில் ஒன்றாகும்.

---

**9.** "ராஷ்ட்ரிய யுவ சசக்திகரன் காரியக்ரம்" என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?

**அ) இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டமைச்சகம் ☑**



ஆ) கல்வி அமைச்சகம்

இ) திறன் மேம்பாட்டமைச்சகம்

ஈ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ "ராஷ்ட்ரிய யுவ சசக்திகரன் காரியக்ரம்" 15ஆவது நிதி ஆணைய சுழற்சியில் (2021–22 முதல் 2025–26 வரை) ₹2,710.65 கோடி செலவில் நீட்டிக்கப்பட்டுள்ளது. RYSK திட்டம் என்பது இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகத்தின் முதன்மையான திட்டமாகும்.

✓ இந்தத் திட்டத்தின் பயனாளிகள் 15–29 வயதுக்குட்பட்ட இளையோராவர். அந்தந்த துறைகளில் சிறந்து விளங்க இளைஞர்களை ஊக்குவிப்பதும், அவர்களின் ஆற்றலை தேசியககட்டமைப்பிற்கு பயன்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

---

**10.** 2022'இல் நேரு டிராபி படகுப்போட்டி நடைபெறும் இடம் எது?

**அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**



ஆ) இலங்கை

இ) மாலத்தீவுகள்

ஈ) மொரிஷியஸ்

✓ **கேரளத்தின் ஆலப்புழையில் நடைபெறும் புகழ்பெற்ற நேரு டிராபி படகுப்போட்டி, இந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தின் ராஸ் அல் கைமாவில் நடைபெறவுள்ளது.**

✓ **ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அல் மர்ஜான் தீவில் பன்னாட்டு கடல்சார் விளையாட்டுக்கள் சங்கம் ராஸ் அல் கைமாவுடன் இணைந்து மார்ச்சில் இந்தப் பந்தயத்தை நடத்தவுள்ளது. ஜவகர்லால் நேரு, கடந்த 1952இல் கேரள படகுப்போட்டிக்கு வருகை தந்ததை அடுத்து இந்தப் பந்தயத்தின் பெயர் இவ்வாறு அமைக்கப்பட்டது.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கரோனா எதிரொலி: பொருளாதார வளர்ச்சிக்கான மதிப்பீடு 7.8%ஆக குறைப்பு**

கரோனா இடர்ப்பாடுகளின் காரணமாக வரும் நிதி ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீடு 7.8%ஆக குறைக்கப்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்தது.

பணவியல் கொள்கைக்குழுவின் முடிவுகளை வெளியிட்ட ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

**வட்டி விகிதங்களில் மாற்றமில்லை:** 6 உறுப்பினர்களைக் கொண்ட பணவியல் கொள்கை குழுவில் வங்கிக் கடனுக்கான வட்டி விகிதங்களில் பழைய நிலையே தொடர ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 4%ஆக தொடரும். அதேபோன்று இதர வணிக வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடனுக்கான ரிவர்ஸ் ரெப்போ வட்டி விகிதமும் மாற்றமின்றி 3.35 சதவீதமாகவே நீடிக்கும்.

**பொருளாதார வளர்ச்சி:** COVID பேரிடர், பொருளாதாரத்தில் நிச்சயமற்ற சூழலை உருவாக்கியுள்ளது. மேலும், சர்வதேச அளவில் பொருள்களின் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது. இதுபோன்ற சாதகமற்ற அம்சங்களை கருத்தில் கொள்ளும்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8%ஆகவே இருக்கும் எனக்கணிக்கப்பட்டு உள்ளது. கடந்த 2021–22ஆம் நிதியாண்டில் எதிர்பார்க்க –ப்பட்ட 9.2% சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது குறைவான விகிதமாகும்.

**பணவீக்கம்:** நடப்பு நிதியாண்டில் நாட்டின் சில்லறைப் பணவீக்கமானது 5.3%ஆக இருக்கும் எனத்தெரிவிக்கப்ப –ட்டுள்ள நிலையில், வரும் மார்ச்சில் தொடங்கவுள்ள 2022–23ஆம் நிதியாண்டில் இது 4.5%ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சாதகமான பருவநிலை, புதிய பயிர்களின் வரத்து ஆகியவை பணவீக்கம் குறைவதற்கு முக்கிய காரணிகளாக விளங்கும்.

**எண்ம பற்றுச்சீட்டு:** ஈ–ரூபி எனப்படும் எண்ம (டிஜிட்டல்) பற்றுச்சீட்டுக்கான (வௌச்சர்) உச்சவரம்பு தற்போதைய ₹10,000இலிருந்து ₹1 இலட்சமாக அதிகரிக்கப்படுவதுடன், பன்முறை பயன்பாட்டுக்கும் அனுமதியளிக்கப்படுகிறது.

**கிரிப்டோகரன்சி அச்சுறுத்தல்:** நாட்டின் பொருளாதாரம் & நிதி ஸ்திரத்தன்மைக்கு தனியார்களின் கிரிப்டோகரன்சி மிகப்பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்த 2 முனைகளிலிருந்துவரும் சவால்களை எதிர்கொள்வதற் –கான திறனை கிரிப்டோகரன்சி குறைப்பதாக உள்ளது.

எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாத நீர்க்குமிழியாக இருக்கும் கிரிப்டோகரன்சி போன்ற சொத்து முதலீடுகளில் முதலீட்டாளர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

ரிசர்வ் வங்கியின் அடுத்த பணவியல் கொள்கைக் குழுக் கூட்டம் ஏப்.6 முதல் 8ஆம் தேதி வரையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக முனீஸ்வர் நாத் பண்டாரி நியமனம்**

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த சஞ்சீவ் பானர்ஜி கடந்த நவம்பர் மாதம் மேகாலயா மாநிலத்திற்கு இடமாற்றம் செய்யபப்ட்டார். இதனை தொடர்ந்து சென்னை ஐகோர்ட்டின் பொறுப்பு தலைமை நீதிபதியாக முனீஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார்.

அலகாபாத் கோர்ட்டில் மூத்த நீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி, சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பதவி ஏற்றார். அவரை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக நியமிக்க சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் குழு (கொலீஜியம்) முடிவு செய்துள்ளது. இதற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்தார்.

---

**3. நிகழாண்டின் முதல் செயற்கைக்கோள்: பிப்.14-இல் செலுத்துகிறது இஸ்ரோ**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிகழாண்டின் முதல் செயற்கைக்கோளை வரும் 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தவுள்ளது.

'EOS-04' என்ற இந்த ரிசாட்-1ஏ புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்தின் முதல் ஏவுதளத்திலிருந்து PSLV-C52 ஏவுகலம் மூலமாக பிப்.14 அன்று விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

PSLV-C52 ராக்கெட் EOS-04 செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதற்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்படும் 1710கிகி எடைகொண்ட ஏவுகலமாகும்.

இத்திட்டத்தில் EOS-04 செயற்கைக்கோளுடன் மேலும் இரண்டு சிறிய செயற்கைக்கோள்களும் விண்ணுக்கு அனுப்பப்பட உள்ளன.

அதில் ஒன்று 'INSPIRE SAT-1' என்ற மாணவர் செயற்கைக்கோளாகும். இது இந்திய விண்வெளி அறிவியல் & தொழில்நுட்ப நிறுவனமும், அமெரிக்காவின் கொலரடோ பல்கலைக்கழகத்தில் உள்ள வளிமண்டலம் மற்றும் விண்வெளி இயற்பியல் ஆய்வகமும் இணைந்து உருவாக்கியதாகும்.

மற்றொன்று நிலம் & நீர்நிலைகளின் தட்பவெப்பநிலை ஆய்வுக்காக இஸ்ரோ சார்பில் உருவாக்கப்பட்ட INS-2டிடி செயற்கைக்கோளாகும்.

**EOS-04 பயன் என்ன?** நாட்டில் எல்லைப்பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக EOS-04 புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் அனுப்பப்படுகிறது.

'ரேடார் உதவியுடன் அனைத்து தட்பவெப்ப நிலைகளிலும் உயர்தர நிழற்படங்களை எடுத்து அனுப்பும் வகையிலான தொழில்நுட்பம் இந்தச் செயற்கைக்கோளில் இடம்பெற்று உள்ளது. வேளாண், வனம், பயிரிடுதல், மண் ஈரப்பதம், நீர்வளம், வெள்ளபாதிப்பை படமாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான தரவுகளையும் செயற்கைக்கோள் மூலம் பெறமுடியும்' என ISRO தெரிவித்துள்ளது.

---

**4. கீழடி 8ஆம் கட்ட அகழாய்வினை முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்**

தொல்பொருள் ஆராய்ச்சியில் தமிழர்களின் பெருமையை பறைசாற்றும் கீழடியின் 8ஆம் கட்ட அகழாய்வுப்பணியை முதல்வர் ஸ்டாலின் இன்று காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்

சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அருகேயுள்ள கீழடியில், மத்திய அரசின் தொல்லியல் துறை சார்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு 3 கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்றது.

2018ஆம் ஆண்டு நடந்த 4ஆம் கட்ட அகழாய்விலிருந்து இதுவரை 18,000க்கும் அதிகமான பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழர்கள் வரலாறு மிகவும் தொன்மையானது எனக்கண்டறிப்பட்டுள்ளது. இதனால் கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப்பணி நடத்தத் தொல்லியல் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.


இந்த நிலையில் கீழடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 8ஆம்கட்ட அகழாய்வு பணிகளை தமிழக தொல்லியல் துறையினர் இன்று தொடங்கவுள்ளனர்.

இந்தப்பணியினை முதல்வர் ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கிவைக்கவுள்ளார்.

---

**1. ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாடு – 2022 நடைபெறும் நாடு எது?**

அ) ஜிம்பாப்வே



ஆ) மாலி

**இ) எத்தியோப்பியா ☑**

ஈ) தென்னாப்பிரிக்கா

- ✓ 2022ஆம் ஆண்டின் ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாடு அண்மையில் எத்தியோப்பியாவில் அமைந்துள்ள AU தலைமையகத்தில் அடிஸ் அபாபாவில் தொடங்கியது.
- ✓ பல்வேறு இராணுவ சதிப்புரட்சிகள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு மத்தியில் இந்த உச்சிமாநாடு நடைபெற்றது. இரு நாள் நடைபெற்ற இவ்வுச்சிமாநாடு கடந்த 18 மாதங்களில் நிகழ்ந்த 6 ஆட்சிக்கவிழ்ப்பு அல்லது சதித்திட்ட முயற்சிகள் மற்றும் குறைந்த தடுப்பூசி விகிதங்கள்பற்றி விவாதித்தது.

---

**2. 'வடிவமைப்புக் கூடங்களின் மேம்பாடு' என்பது எந்த திட்டத்தின்கீழ் ஒரு புதிய துணைத் திட்டமாக உள்ளது?**

**அ) இந்திய காலணி & தோல் மேம்பாட்டு திட்டம் ☑**

ஆ) வடிவமைப்புடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம்



இ) PM YUVA திட்டம்

ஈ) PM KUSUM திட்டம்

- ✓ இந்திய காலணி & தோல் மேம்பாட்டுத் திட்டத்தை (IFLDP) 2021–22 முதல் ₹1,700 கோடி செலவில் தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக நடுவண் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது. 'வடிவமைப்புக் கூடங்களின் மேம்பாடு' (உத்தேச செலவு ₹100 கோடி) என்பது இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள ஒரு புதிய துணைத்திட்டமாகும்.
- ✓ தோல் தொழிற்துறைக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் சிக்கல்களை நிவர்த்தி செய்தல், முதலீடுகளை எளிதாக்குதல், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதை IFLDP தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. 'இராட்சச மாகெல்லன் தொலைநோக்கி'த் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) பிரான்ஸ்

இ) ரஷ்யா

ஈ) சீனா

- ✓ பிரம்மாண்ட மாகெல்லன் தொலைநோக்கியை உள்ளடக்கிய US பிரம்மாண்ட தொலைநோக்கி திட்டம் ஆனது ஆஸ்பி, பிரேஸில் மற்றும் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்காவால் வழிநடத்தப்படுகிறது.
- ✓ சிலி இத்திட்டத்தை நடத்துகிறது. $1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய இத்திட்டம், 'வானியல் மற்றும் வான் இயற்பியல்பற்றிய 2020 தசாப்த ஆய்வினால்' 'மிஷன் கிரிட்டிகல்' எனத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

---

**4. சரிஸ்கா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) குஜராத்



**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) பஞ்சாப்

ஈ) உத்தர பிரதேசம்

- ✓ சரிஸ்கா புலிகள் காப்பகம் இராஜஸ்தான் மாநிலத்தின் அல்வார் மாவட்டத்தில் உள்ளது. புலிகளின் வாழ்விட மேலாண்மைக்கான பல்வேறு நடவடிக்கைகள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அக்காப்பகத்தில் தொடங்கப்பட்டன. இதன் விளைவாக, அக்காப்பாகத்தில் புலிகளின் எண்ணிக்கை 25ஆக உயர்ந்துள்ளது.

---

**5. கீழ்காணும் எந்நாட்டின் அதிபராக 2ஆவது முறையாக செர்ஜியோ மேட்டரெல்லா தெரிவு செய்யப்பட்டுள்ளார்?**

அ) பிரேசில்



**ஆ) இத்தாலி ☑**

இ) பிரான்ஸ்

ஈ) உக்ரைன்

- ✓ இத்தாலியின் அதிபர் செர்ஜியோ மேட்டரெல்லா சமீபத்தில் நடந்த தேர்தலில் இரண்டாவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமியற்றுபவர்கள் & பிராந்திய பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில், மெட்டரெல்லா அறுதிப்பெரும்பான்மையுடன் மீண்டும் அதிபரானார். 80 வயதான மெட்டரெல்லா 2015$_{ஆம்}$ ஆண்டு முதல் இத்தாலியின் அதிபராக பணியாற்றி வருகிறார்.

---

**6. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'HERMES' திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) ரஷ்யா

இ) சீனா


ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ 'HERMES' என்பது Heliophysics Environmental & Radiation Measurement Experiment Suite என்பதைக் குறிக்கிறது. இது நாசாவின் ஆர்டெமிஸ் திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். HERMES என்பது நாசாவின் நிலவுச்சுற்றுப் பாதயின் நுழைவாயிலுக்கு வெளியே நிறுவப்படும் ஒரு நான்கு–கருவி தொகுப்பாகும்.
- ✓ HERMES விண்வெளி வானிலை மற்றும் சூரியனால் விண்வெளியில் ஏற்படும் ஏற்றஇறக்கமான நிலைகளை கண்காணிக்கும்.

---

**7. "United for Dignity" என்ற பிரச்சாரம், எந்த நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணியத்தை மதிக்கின்றது?**

அ) COVID




**ஆ) தொழுநோய் ☑**

இ) புற்றுநோய்

ஈ) காசநோய்

- ✓ உலக தொழுநோய் நாளானது ஜனவரி கடைசி ஞாயிறு அன்று அனுசரிக்கப்படுகிறது. நடப்பு 2022ஆம் ஆண்டில், உலக தொழுநோய் நாள் ஜனவரி.30 அன்று அனுசரிக்கப்பட்டது. "United for Dignity" பிரச்சாரம் தொழுநோயை அனுபவித்த மக்களின் கண்ணியத்தை மதிப்பதற்காக அழைப்புவிடுக்கிறது.
- ✓ தொழுநோய் ஒழிப்புக்கான WHO'இன் நல்லெண்ணத் தூதர் "Don't forget leprosy" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கினார். இந்தியாவில், மகாத்மா காந்தியின் நினைவு நாளான ஜனவரி.30 அன்று தொழுநோய் ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**8. எரிசக்தி அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட பவர்தான் – 2022 என்ற ஹேக்கத்தானின் மைய முகமை எது?**

அ) PFC

**ஆ) REC ☑**

இ) NITI ஆயோக்

ஈ) ONGC



- ✓ மத்திய எரிசக்தி அமைச்சர் R K சிங், தரமான எரிசக்தி வழங்குவதற்கான தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் தீர்வுகளைக் கண்டறிவதற்காக 'பவர்தான்–2022' என்ற ஹேக்கத்தானைத் தொடங்கினார். REC லிட், IIT பாம்பே இன் Society for Innovation and Entrepreneurship (SINE) உடன் இணைந்து மைய முகமையாக செயல்படுகிறது.
- ✓ RDSS'இன் (Revamped Distribution Sector Scheme) கீழ் இது தொடங்கப்பட்டது. புதிய எண்ணங்கள் மற்றும் கருத்துகளுக்கு உரிமத்துடன் வெகுமதி அளிக்கப்படும்.

---

**9. 'மத்திய ஊடக அங்கீகார வழிகாட்டுதல்கள்–2022'ஐ வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

**அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

ஆ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

இ) தகவல்தொடர்பு அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

Ministry of Information and Broadcasting Government of India

- ✓ மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமானது 'மத்திய ஊடக அங்கீகார வழிகாட்டுதல்கள்–2022'ஐ வெளியிட்டது.
- ✓ இந்தியாவின் இறையாண்மை & ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் பத்திரிகையாளர் ஒருவர் செயல்பட்டால், அவரது அங்கீகாரம் இடைநிறுத்தப்படும் அல்லது ரத்து செய்யப்படும் என்ற கடுமையான விதியை இது உள்ளடக்கியுள்ளது.

---

**10. 'கஞ்சோத் திருவிழா' கொண்டாடப்படுகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) பீகார்

**ஆ) ஜம்மு–காஷ்மீர் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) அஸ்ஸாம்



- ✓ **'கஞ்சோத் விழா' என்பது நாக கலாச்சாரத்தைப்பின்பற்றும் மக்களின் ஒரு மதஞ்சார் நிகழ்வு ஆகும். இது சமீபத்தில் ஜம்மு–காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது. இந்தத்திருவிழாவின்போது பார்வதிதேவியுடனான சிவபெருமானின் திருமணத்தை மக்கள் கொண்டாடுகிறார்கள். இது கௌரி–திருதியை என்றுமழைக்கப்படுகிறது.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கீழடி உள்பட நான்கு இடங்களில் தொடர் அகழாய்வுப் பணிகள்: 3 இடங்களில் புதிதாக ஆய்வு**

கீழடி உள்பட நான்கு இடங்களில் தொடர் அகழாய்வுப் பணிகளை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கிவைத்தார். வெம்பக்கோட்டை, துலுக்கர்பட்டி உள்பட 3 இடங்களில் முதல் கட்ட ஆய்வுப்பணிகளையும் அவர் தொடக்கினார்.

**நான்கு இடங்கள்:** தமிழகத்தில் 4 இடங்களில் வெவ்வேறு கட்டங்களாக ஏற்கெனவே அகழாய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. சிவகங்கை மாவட்டம் கீழடியில் ஏழு கட்டங்களும், தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் 2 கட்டங்களும், அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் முதல் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், கீழடியில் எட்டாம் கட்டமாகவும், சிவகளையில் மூன்றாம் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரத்தில் 2ஆம் கட்ட ஆய்வுப்பணிகளும் தொடக்கப்படவுள்ளன. வெம்பக் கோட்டை, துலுக்கர்பட்டி, பெரும்பாலை ஆகிய இடங்களில் ஆய்வுப்பணிகள் முதல் கட்டமாகத் தொடங்கப்படவுள்ளன.

**புதிதாக ஆய்வு:** விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையில் 25 ஏக்கர் பரப்பிலான தொல்லியல் மேட்டில் நுண்கற்காலம் முதல் இடைக்காலம் வரையிலான வாழ்வுக்குரிய அடையாளங்கள் வெளிப்படுகின்றன. இப்போது மேற்கொள்ளப்படவுள்ள அகழாய்வின் நோக்கமானது காலவாரியாக தொடர்ச்சியாக நிலவிய நிலவியல் உருவாக்கத்தின் பின்னணியில் அதிக எண்ணிக்கையிலான நுண்கற்கருவிகளைச் சேகரிப்பதாகும்.

**துலுக்கர்பட்டி–பெரும்பாலை:** திருநெல்வேலி மாவட்டம் நம்பியாற்றின் இடக்கரையில் துலுக்கர்பட்டி அமைந்துள்ளது. இந்த ஊரிலிருந்து கண்ணநல்லூர் செல்லும் சாலையில் 2.5 கிமீட்டர் தொலைவில் வாழ்வியல் மேடு காணப்படுகிறது. இங்கு மேற்கொள்ளப்பட உள்ள அகழ்வு ஆய்வின் குறிக்கோள், செறிவுமிக்க தொல்லியல் தளத்தின் உருவாக்கம், குடியேற்ற முறை, தொல்பொருள்களின் தன்மை ஆகியவற்றைக் கண்டறிவதாகும். நம்பியாற்றின் கரையில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதும் அகழாய்வின் நோக்கம்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்து 25 கிமீட்டர் தொலைவில் பாலாற்றின் இடதுகரையில் பெரும்பாலை அமைந்துள்ளது. இங்குள்ள வாழ்விட மேடானது இப்போதைய நிலவியல் அமைப்பில் இருந்து 3 முதல் 4 மீ உயரத்தில் அமைந்துள்ளது. பாலாற்றின் ஆற்றங் கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது அகழாய்வின் நோக்கமாகும்.

பதினைந்து லட்சம் ஆண்டுகள் கொண்ட நிலப்பகுதியின் தொன்மை வரலாற்றைத் தொகுத்து எழுதுவதற்கு அதிகளவிலான சான்றுகள் தேவை. இதனைப் பூர்த்தி செய்ய அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்படும்.

---

**2. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜஸ் விமானம்: சிங்கப்பூர் விமான கண்காட்சியில் பங்கேற்கிறது**

சிங்கப்பூரில் விமான கண்காட்சி – 2022இல் இலகு இஇரக தேஜஸ் போர்விமானம் பங்கேற்கிறது.

வான்படையை மேலும் பலப்படுத்தும் வகையில் நவீன தேஜஸ் மார்க் 1 இஇரக போர் விமானம் கடந்த ஆண்டு விமானப்படையில் இணைக்கப்பட்டது. தேஜஸ் இரக விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை. கூடுதல் சிறப்பு அம்சங்கள், தாக்குதல், கண்காணிப்பு திறன் கொண்டவை.

இந்த இலகு இரக விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது. இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிட் நிறுவனத்திடம் இருந்து இந்த விமானங்கள் இந்திய விமானப்படைக்கு வாங்கப்படுகிறது. இந்தநிலையில் சிங்கப்பூரில் விமான கண்காட்சி – 2022இல் இலகு இரக தேஜஸ் போர் விமானம் பங்கேற்கிறது.

சிங்கப்பூரில் நடைபெறும் விமான கண்காட்சி – 2022இல் பங்கேற்க 44 பேரைக்கொண்ட இந்திய விமானப் படையினர் சிங்கப்பூரில் உள்ள சாங்கி சர்வதேச விமான நிலையம் சென்றடைந்தனர். இந்த விமான கண்காட்சி வரும் 15 முதல் 18 வரை நடைபெறவுள்ளது. சர்வதேச விமான தொழில்துறை இரண்டாண்டுக்கு ஒருமுறை தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்த சிங்கப்பூர் விமானக் கண்காட்சி வழிவகுத்துள்ளது.

பல்வேறு நாடுகள் பங்கேற்கும் இந்தக் கண்காட்சியில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகு இரக தேஜஸ் எம்கே–I போர் விமானத்தை இந்திய விமானப்படை காட்சிப்படுத்தவுள்ளது.

---

**1.** **'விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆய்வுக்கூடமானது எந்நிறுவனத்தின்கீழ் செயல்படுகிறது?**

அ) டிஆர்டிஓ

**ஆ) இஸ்ரோ ☑**

இ) சி.எஸ்.ஐ.ஆர்

ஈ) பார்க்

✓ அகமதாபாத்தைச் சார்ந்த விண்வெளி பயன்பாட்டு மையம் & இயற்பியல் ஆய்வுக்கூடமானது இந்திய விண்வெளி ஆய்வுமையத்தின்கீழ் (இஸ்ரோ) செயல்படுகிறது.

✓ சமீபத்தில், இந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'குவாண்டம் சிக்கலை' வெற்றிகரமாக நிரூபித்துள்ளனர். நிகழ்நேர குவாண்டம் கீ விநியோகத்தைப்பயன்படுத்தி, 300 மீ இடைவெளி உடைய இரண்டு கட்டிடங்களுக்கு இடையே ஹேக்–புரூப் தொடர்பை மேற்கொண்டனர்.

---

**2.** **இந்தியா சமீபத்தில் எக்கூட்டமைப்புடன் இணைந்து 'புதுப்பிக்கத்தக்க ஆற்றல்குறித்த உயர்நிலை மாநாட்டை' நடத்தியது?**

அ) சார்க்

**ஆ) ஆசியான் ☑**

இ) பிரிக்ஸ்

ஈ) ஜி–20

✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமும் வெளியுறவு அமைச்சகமும் இந்தோனேசியாவின் ASEAN எரிசக்தி மையமும் இணைந்து 'ASEAN–India High level Conference on Renewable Energy (RE)'ஐ நடத்துகின்றன.

✓ இது தி எனர்ஜி அண்ட் ரிசோர்சஸ் இன்ஸ்டிடியூட் (TERI) உடன் இணைந்து நடத்தப்படுகிறது. "Experience and Innovations for Integrated Renewables Market" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

---

**3.** **'ஆண்டின் சிறந்த உலக விளையாட்டு தடகள வீரர்' விருதை வென்ற முதல் வீரர் யார்?**



அ) விராட் கோலி

ஆ) பங்கஜ் அத்வானி

**இ) PR ஸ்ரீஜேஷ் ☑**

ஈ) ஆரிப் கான்

✓ மூத்த இந்திய ஹாக்கி கோல்கீப்பர் PR ஸ்ரீஜேஷ், '2021ஆம் ஆண்டின் மதிப்புமிக்க சிறந்த உலக விளையாட்டு தடகள வீரர்' விருதை வென்றார். 2019ஆம் ஆண்டுக்கான பரிசை வென்ற இந்திய ஹாக்கி மகளிர் அணி கேப்டன் இராணிக்குப்பிறகு, இவ்விருதை வென்ற முதல் வீரரும் இரண்டாவது ஹாக்கி வீரருமானார் ஸ்ரீஜேஷ். டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற ஆடவர் அணியில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

---

**4.** **அன்டோனியோ கோஸ்டா, எந்த நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்?**



அ) இத்தாலி

**ஆ) போர்ச்சுகல் ☑**

இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்

✓ அன்டோனியோ கோஸ்டா, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் போர்ச்சுகலின் பிரதமராக பணியாற்றி வருகிறார். சோசலிச கட்சியின் தலைவரான அவர், சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

**5.** **'தேசிய நிலப்பணமாக்கல் கழகத்தில்' இந்திய அரசின் பங்கு சதவீதம் எவ்வளவு?**




அ) 25%

ஆ) 50%

இ) 75%

**ஈ) 100% ☑**

✓ பொருளாதார ஆய்வறிக்கையின்படி, நிலம் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் முக்கியத்துவமற்ற சொத்துக்கள் பணமாக்கலை விரைவாக கண்காணிப்பதற்காக தேசிய நிலப்பணமாக்கல் கழகத்தை அரசாங்கம் அமைத்துள்ளது. ₹5,000 கோடி ஆரம்பநிலை பங்கு மூலதனத்துடன் 100% இந்திய அரசுக்கு சொந்தமான நிறுவனமாக இந்தக் கழகம் இணைக்கப்படுகிறது.

---

**6.** **மத்திய பட்ஜெட்டானது விவசாயம் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான ஸ்டார்ட்அப்களுக்கு நிதியளிக்கும் நிதியை அறிவித்தது. அந்நிதியானது எந்நிறுவனம்மூலம் விநியோகிக்கப்படவுள்ளது?**

அ) பாரத ஸ்டேட் வங்கி

**ஆ) நபார்டு ☑**

இ) NABFID

ஈ) REC

✓ கூட்டு முதலீட்டு மாதிரியின்கீழ் திரட்டப்பட்ட கலப்புமுறை மூலதனத்துடன்கூடிய நிதி, நபார்டுமூலம் வழங்கப்படும் என மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இது விவசாயம் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கான ஸ்டார்ட்–அப் நிறுவனங்களுக்கு நிதியளிக்க பயன்படும். பயிர் மதிப்பீடு, நிலப்பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பூச்சிக் கொல்லிகள் தெளித்தல் ஆகியவற்றுக்கு 'கிசான் டிரோன்' பயன்பாட்டை அரசாங்கம் ஊக்குவிக்கும்.

---

**7.** **சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 'பர்வத மாலா' திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ) சாகச விளையாட்டுகளை ஊக்குவித்தல்

**ஆ) மலைகளில் போக்குவரத்து ☑**



இ) புனித தலங்களை மேம்படுத்துதல்

ஈ) வனவுயிரிகளின் பாதுகாப்பு

- ✓ மத்திய பட்ஜெட்டில் 'பர்வத மாலா' (அ) தேசிய கயிற்றுப் பாதைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், J & K மற்றும் வடகிழக்கு போன்ற பகுதிகளுக்கு நவீன போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது.

---

**8. நாட்டின் புதிய பாலூட்டி இனமான வெண்கன்ன குரங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாநிலம் எது?**



அ) உத்தரகாண்ட்

ஆ) அஸ்ஸாம்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) சிக்கிம்

- ✓ இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தின் விஞ்ஞானிகள், அருணாச்சல பிரதேச மாநிலத்தில், வெண்கன்னமுள்ள குரங்கை புதிய பாலூட்டி இனமாக கண்டுபிடித்துள்ளனர். இக்குரங்கு வகை முதன்முதலில் சீனாவில் 2015'இல் கண்டுபிடிக்கப்பட்டது. தென்கிழக்காசியாவில் கண்டுபிடிக்–கப்பட்ட கடைசி பாலூட்டி இனம் இதுவாகும்.

---

**9. கல்லூரிகளில் ஹிஜாப்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டதைக் கேள்விக்குட்படுத்தும் மனுக்களை விசாரிக்க, 3 நீதிபதிகள்கொண்ட அமர்வை அமைத்து உள்ள உயர்நீதிமன்றம் எது?**



அ) ஆந்திர பிரதேசம்

**ஆ) கர்நாடகா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) உத்தர பிரதேசம்

- ✓ கர்நாடகா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, மாநிலத்தில் உள்ள ஒரு சில கல்லூரிகளில் ஹிஜாப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டதைக் கேள்விக்குட்படுத்தும் மனுக்களை விசாரிக்க அவர் உட்பட மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வை அமைத்தார்.
- ✓ இந்த வழக்கில் மிகப்பெரிய அரசியலமைப்புச் சிக்கல்கள் உள்ளதாகக்கண்டறிந்ததால், மனுக்களை வேறொரு பெரிய அமர்விற்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக கர்நாடகா முழுவதும் இரண்டு நாட்களாக நடந்த பதற்றம் மற்றும் போராட்டங்களுக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**10. ஏழு இராணுவ வீரர்கள் பனிச்சரிவில் இறந்த கமெங் செக்டார் அமைந்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ) சிக்கிம்

ஆ) லடாக்

**இ) அருணாச்சல பிரதேசம் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

- ✓ **அருணாச்சல பிரதேசத்தின் கமெங் செக்டாரில் உள்ள ஓர் உயரமான பகுதியில் பனிச்சரிவில் சிக்கி, ரோந்துப் பணியிலிருந்த இந்திய இராணுவ வீரர்கள் ஏழுபேர் உயிரிழந்தனர். 14,500 அடி உயரத்தில் அமைந்துள்ள இப்பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டில் சியாச்சின் பனிச்சரிவுகளில் சிக்கி இராணுவம் ஆறு வீரர்களை இழந்தது.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இன்று விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–52!**

புவி கண்காணிப்புக்கான இஓஎஸ்–04 (ரிசாட்–1ஏ) செயற்கைக்கோளுடன் பிஎஸ்எல்வி சி–52 ராக்கெட் பிப்.14 அதிகாலை விண்ணில் பாய்கிறது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து அதிகாலை 5.59 மணிக்கு அந்த ராக்கெட் செலுத்தப்படவிருக்கிறது. முன்னதாக, அதற்கான 25 மணி நேர கவுண்ட் டவுன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

அதன் தொடர்ச்சியாக ராக்கெட்டின் நான்காம் நிலையில் எரிபொருள் நிரப்பும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு, குறித்த நேரத்துக்குள் அவை நிறைவடைந்தன.

இஸ்ரோ தலைவராக சோமநாத் பொறுப்பேற்ற பிறகு செலுத்தப்படும் முதல் ராக்கெட் திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. பிஎஸ்எல்வி சி–52 ராக்கெட் தாங்கிச் செல்லும் இஓஎஸ்–04 செயற்கைக்கோள் 1,710 கிலோ எடையுடையது. இதன் ஆயுள்காலம் 5 ஆண்டுகளாகும்.

பூமியில் இருந்து 529 கிமீட்டர் உயரத்தில் சூரிய வட்ட சுற்றுப்பாதையில் அது நிலைநிறுத்தப்பட உள்ளது. புவிக் கண்காணிப்பு, வேளாண், வனஞ்சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இது பயன்படுத்தப்படவுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை வழங்கும் திறன்கொண்டது. இதனுடன் ஆய்வுத்திட்டத்தின்கீழ் மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட இரண்டு சிறிய வகை செயற்கைக் கோள்களும் ஏவப்படவுள்ளன. இதைத்தொடர்ந்து நிகழ் ஆண்டில் 10'க்கும் மேற்பட்ட இராக்கெட் திட்டங்களை செயல்படுத்த இஸ்ரோ உத்தேசித்துள்ளது.

---

**2. நாடு முழுவதும் காவல் துறையை நவீனப்படுத்த ₹26,275 கோடி: மத்திய அரசு ஒப்புதல்**

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: அடுத்த ஐந்து ஆண்டுகளில் அதாவது 2025–26ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் காவல் துறையை நவீனப்படுத்த மத்திய அரசு ₹26,275 கோடியை செலவிடவுள்ளது. இதற்கான அனுமதியை மத்திய உள்துறை அமைச்சகம் தற்போது வழங்கியுள்ளது.

இத்தொகையானது ஜம்முகாஷ்மீர், வடகிழை மாநிலங்கள், மாவோயிஸ்ட்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள், புதிதாக பட்டாலியன்களை உருவாக்குதல், அதிநவீன ஃபாரன்சிக் (தடய அறிவியல்) ஆய்வகங்கள் உருவாக்குதல், இதர காவல்துறை கருவிகளை மேம்படுத்துதல் போன்றவற்று–க்கு செலவிடப்படும்.

காவல்துறையை நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் இத் தொகையை ஒதுக்கீடு செய்ய பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

ஜம்மு–காஷ்மீர், தீவிரவாதம் பாதித்துள்ள வடகிழக்கு மாநிலங்கள், மாவோயிஸ்ட்கள் அதிக பாதிப்புள்ள பகுதிகளில் காவல்துறையை மேம்படுத்த ₹18,839 கோடி செலவிடப்படும். மேலும் ₹4,846 கோடியானது மாநில காவல்துறையின் படைகளை மேம்படுத்த செலவு செய்யப்படும். பாரன்சிக் ஆய்வகங்களை மேம்படுத்துதல், யூனியன் பிரதேசங்களில் காவல் துறையை மேம்படுத்த ₹2,080.50 கோடி செலவிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

### 3. பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்ஸ்: ஆரிப் கானுக்கு 45–ஆவது இடம்

சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்று வரும் 24–ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஜயன்ட் ஸ்லாலம் விளையாட்டில் இந்தியாவின் ஆரிப் முகமது கான் 45–ஆவது இடம் பிடித்தார்.

போட்டியின் 10–ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஆல்பைன் ஸ்கீயிங் விளையாட்டில், ஆடவருக்கான ஜயன்ட் ஸ்லாலம் பிரிவில் களம் கண்டார் ஆரிப்.

இப்பிரிவில் இரு பனிச்சறுக்கு பந்தயங்கள் நடத்தப்பட்டு அவற்றில் இலக்கை அடைய போட்டியாளர்கள் எடுத்துக்கொள்ளும் நேரம் மொத்தமாக கணக்கிடப்பட்டு வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

அந்த வகையில் ஆரிப் முதல் பந்தயத்தில் 1 நிமிஷம் 22.35 விநாடிகளில் இலக்கை எட்டி 53–ஆவது இடம் பிடித்தார். இந்தப் பந்தயத்தை மொத்தம் 54 போ் நிறைவு செய்தனர். 2ஆவது பந்தயத்தில் ஆரிப், 1 நிமிஷம் 24.89 விநாடிகளில் இலக்கை அடைந்து 44–ஆவது இடம் பிடித்தார். இந்தப் பந்தயத்தை 45 வீரர்கள் நிறைவு செய்தனர்.

இருபந்தயங்களையும் சேர்ந்து மொத்தமாக 2 நிமிஷம் 47.24 விநாடிகள் எடுத்துக்கொண்ட ஆரிபுக்கு இறுதியில் 45ஆவது இடம் கிடைத்தது. சுவிட்ஸர்லாந்தின் மார்கோ ஆடர்மாட் (2 நிமிஷம் 9.35 விநாடிகள்) தங்கமும், ஸ்லோவேகியாவின் ஸான் கிராஞ்ஜெக் (2 நிமிஷம் 9.54 விநாடிகள்) வெள்ளியும், மேத்யூ பேவ்ரே (2 நிமிஷம் 10.69 விநாடிகள்) வெண்கலமும் வென்றனர்.

குளிர்கால ஒலிம்பிக்கில் ஜயன்ட் ஸ்லாலம் பிரிவில் இதுவே இந்தியாவின் அதிகபட்சமாகும். முன்னதாக கடந்த 1968 கிரெனோபல் குளிர்கால ஒலிம்பிக்கில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற ஜெரிமி புஜாகோவ்ஸ்கி இதே ஜயன்ட் ஸ்லாலமில் 65ஆவது இடம் பிடித்திருந்தார். போலந்தில் பிறந்த ஜெரிமி தான், குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கேற்ற முதல் இந்தியராவார்.

முன்னதாக ஆரிப், கடந்த டிசம்பரில் மான்டினீக்ரோவில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிச்சுற்று போட்டியில் இதே பிரிவில் பந்தய இலக்கை அடைய 1 நிமிஷம் 59.47 விநாடிகளே எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆரிப் அடுத்தபடியாக, வரும் புதன்கிழமை நடைபெற இருக்கும் ஸ்லாலம் பிரிவிலும் களம் காண இருக்கிறார். இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றிருக்கும் ஒரே இந்திய வீரர் அவர் என்பதும், அவருக்கு இது முதல் ஒலிம்பிக் போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**1.** 'Women in the Boardroom' **என்ற அறிக்கையின்பாடு 2021ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள வாரியங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ சதவீதம் என்ன?**



அ) 4.1

ஆ) 7.1

**இ) 17.1 ☑**

ஈ) 27.1

- ✓ 'Deloitte's Women in the Boardroom' அறிக்கையின்படி, இந்திய வாரியங்களில் உறுப்பினராக உள்ள மகளிரின் பிரதிநிதித்துவ சதவீதம், 2014இல் 9.4 சதவீதமாக இருந்து 2021இல் 17.1%ஆக அதிகரித்துள்ளது.
- ✓ ஆனால், மகளிரின் பிரதிநிதித்துவம் வாரிய தலைமைப் பதவிகளில் 3.6% மட்டுமே உள்ளது. இச்சதவீதம் 2018இல் இருந்து 0.9% குறைந்துள்ளது. உலக அளவில் 19.7 சதவீத வாரிய இடங்களை பெண்கள் கொண்டுள்ளனர். இது 2018ஆம் ஆண்டிலிருந்து 2.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

---

**2.** **"ஹோகே டௌன்" தேசியப்பூங்காவில் அமைந்துள்ள "ஹோகர் சோனென்ப்ளிக்" மலை உள்ள நாடு எது?**



அ) ரஷ்யா

ஆ) ஜெர்மனி

**இ) ஆஸ்திரியா ☑**

ஈ) நியூசிலாந்து

- ✓ ஆஸ்திரியாவில் அமைந்துள்ள "ஹோகே டௌன்" தேசிய பூங்காவில் உள்ள "ஹோகர் சோனென்ப்ளிக்" மலையின் உச்சியில் 3106 மீட்டர் உயரத்தில் ஒரு புதிய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி, அம்மலை உச்சியில் அளவிடப்பட்ட நானோபிளாஸ்டிக் துகள்களுள் சுமார் 30% நகரங்களிலிருந்து 200 கிமீ சுற்றளவில் உருவாகின்றன.

---

**3.** 'PM-DevINE' **என்ற புதிய திட்டத்தின் மைய முகமை எது?**

அ) நபார்டு

**ஆ) வடகிழக்குச்சபை ☑**

இ) NITI ஆயோக்

ஈ) IRDAI

- ✓ 2022-23ஆம் ஆண்டுக்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல்செய்யும்போது, புதிய திட்டமாக, வட கிழக்குக்கான பிரதமரின் வளர்ச்சி முன்முயற்சியை 'PM-DevINE' என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். 'PM-DevINE' வடகிழக்குக்கவுன்சில்மூலம் செயல்படுத்தப்படும்.
- ✓ முதற்கட்டமாக ₹1,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வடகிழக்கின் தேவைகளின் அடிப்படையில் உட்கட்ட -மைப்பு & சமூகவளர்ச்சித்திட்டங்களுக்கு நிதியளிக்கும்.

---

**4.** **காலநிலை மாற்றமானது தாவரங்களை முன்னதாக -வே பூக்கத்தூண்டுகிறது எனக் கண்டறிந்துள்ள நாடு எது?**



அ) இத்தாலி

**ஆ) UK ☑**

இ) ஜெர்மனி

ஈ) இஸ்ரேல்

- ✓ இங்கிலாந்து நாட்டு ஆராய்ச்சியாளர்களின் அண்மைய ஆய்வின்படி, காலநிலை மாற்றம் தாவரங்களை முன்பே பூக்கத்தூண்டுகிறது. UK தாவரங்களின் சராசரி பூக்கும் நாளானது 1986'க்கு முன் இருந்ததைவிட ஒரு மாதம் முன்னதாக உள்ளது.

---

**5.** **டாம்டாம் போக்குவரத்துக் குறியீட்டின்படி, எந்த இந்திய நகரம் அதிக போக்குவரத்து நெரிசலைக் கொண்டுள்ளது?**



அ) புது தில்லி

**ஆ) மும்பை ☑**

இ) பெங்களூரு

ஈ) சென்னை

- ✓ புவி-இருப்பிட தொழில்நுட்ப வல்லுநரான் டாம்டாம் அதன் வருடாந்திர டாம்டாம் போக்குவரத்துக்குறியீட்டின் 11ஆம் பதிப்பை வெளியிட்டுள்ளது. இது 2021ஆம் ஆண்டில் 58 நாடுகளில் உள்ள 404 நகரங்களில் காணப்பட்ட போக்கு வரத்து போக்குகளை பகுப்பாய்வுசெய்யும் அறிக்கையாகும். உலக சராசரியான 10 சதவீத நெரிசலைவிட இந்தியா சிறப்பாக செயல்பட்டது.
- ✓ ஆனால், இந்தியாவின் நான்கு நகரங்கள் இக்குறியீட்டின் முதல் 25 இடங்களுள் இடம்பெற்றுள்ளன. அவை மும்பை (5ஆவது), பெங்களூரு (10ஆவது), மற்றும் புது தில்லி (11ஆவது) மற்றும் புனே (21ஆவது).

---

**6.** **வருடாந்திர கல்விநிலை அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

**ஆ) பிரதம் அறக்கட்டளை ☑**

இ) கல்வி அமைச்சகம்

ஈ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டமைச்சகம்

- ✓ பிரதம் அறக்கட்டளை ஆண்டுதோறும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை ஆய்வுசெய்வதற்காக பள்ளிகளில் விரிவான ஆய்வை நடத்துகிறது. சமீபத்தில், அது ஆண்டு கல்விநிலை அறிக்கையை (ASER, மேவ) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, மேற்கு வங்க மாநிலத்தில் பள்ளி மாணவர்களின் அடிப்படை வாசிப்பு மற்றும் எண் திறன்கள் COVID காலத்தில் குறைந்துள்ளன.

---

**7.** கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு குறித்த தேசிய சிறப்பு மையம் (NCOE–CCU) நிறுவப்பட்டுள்ள நிறுவனம் எது?



அ) டிஆர்டிஓ

**ஆ) ஐஐடி – பம்பாய் ☑**

இ) IISc – பெங்களூரு

ஈ) இஸ்ரோ

✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது இந்திய தொழில்நுட்பக்கழகம் பம்பாயில் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடுகுறித்த (NCOE–CCU) தேசிய சிறப்பு மையத்தை நிறுவியுள்ளது. DSTமூலம் மத்திய அரசு நிதியுதவிபெறும் இந்தியாவின் முதல் மையம் இதுவாகும்.

✓ இந்தச் சிறப்பு மையம் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு குறித்த தொழில்நுட்பங்களின் திறனை ஆராய்கிறது. இது இந்தியாவின் காலநிலை மாற்ற இலக்குகளை அடைய உதவும் என எண்ணப்படுகிறது.

---

**8.** சமீபத்தில் எந்த நாட்டில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர் –களால் பண்டைய ரோமானிய குடியேற்றம் கண்டறியப் –பட்டது?



அ) கிரேக்கம்

**ஆ) UK ☑**

இ) அமெரிக்கா

ஈ) ரஷ்யா

✓ UKஇன் ஆராய்ச்சியாளர்கள், 'HS2' எனப்படும் அதிவேக இரயில்பாதைத் திட்டத்துக்காக அகழ்வாய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, பண்டைய ரோமானிய குடியேற்ற தளத்தைக்கண்டுபிடித்தனர்.

✓ சமீபத்திய அகழ்வாராய்ச்சியில், விஞ்ஞானிகள் 40 தலை துண்டிக்கப்பட்ட எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர், அவை தூக்கிலிடப்பட்ட குற்றவாளிகளுடையதாக இருக்க –லாம் எனக்கருதப்படுகிறது. துண்டிக்கப்பட்ட தலைகள் கால்களுக்கு இடையிலோ அல்லது காலடியிலோ வைக்க ப்பட்டிருந்தன. இக்குழு இதற்குமுன்பு 1,200 நாணயங்கள், மட்பாண்டங்கள், பகடை, மணிகள் மற்றும் ஈய எடை அளவைகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்திருந்தது.

---

**9.** இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தப்பட்ட 'கோஸ்ட் ஆர்மி'க்கு சமீபத்தில் அங்கீகாரம் வழங்கிய நாடு எது?

**அ) அமெரிக்கா ☑**



ஆ) சீனா

இ) ஜெர்மனி

ஈ) ரஷ்யா

✓ அமெரிக்க (USA) அதிபர் ஜோ பிடன், 'கோஸ்ட் படை'க்கு அங்கீகாரம் வழங்குவதற்காக "Ghost Army Congressional Gold Medal Act" என்ற சட்டத்தில் கையெழுத்திட்டார். இது இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்ட ஒரு உத்திசார் படைப்பிரிவாகும்.

✓ அமெரிக்கா முழுவதும் கோஸ்ட் படையின் 9 வீரர்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

---

**10.** COVID–19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதலை கட்டா –யமாக்கியுள்ள முதல் ஐரோப்பிய நாடு எது?




அ) ஜெர்மனி

ஆ) இத்தாலி

இ) சுவிட்சர்லாந்து

**ஈ) ஆஸ்திரியா ☑**

✓ COVID–19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதலை கட்டாயமா –க்கியுள்ள முதல் ஐரோப்பிய நாடு ஆஸ்திரியா ஆகும்.

✓ **கடந்த ஆண்டு நவம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் அண்மையில் அமலுக்கு வந்தது. அந்நாட்டு அதிபர் அலெக்சாண்டர் வான் டெர் பெல்லன், இதற்கு தனது ஒப்புதலை அளித்தார். இந்தச் சட்டத்தின்படி, 2022 மார்ச் 15'க்குள் நாட்டில் உள்ள அனைவரும் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும்.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் – 54 சீன செயலிகளுக்கு தடை: மத்திய அரசு நடவடிக்கை**

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள 54 சீன செயலிகளுக்குத் தடைவிதிக்கவேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அரசுக்கு பரிந்துரைசெய்துள்ளது. இத்தகவலை உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதன்படி, மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தச் செயலிகளுக்கு தடைவிதிப்பது தொடர்பான முறையான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

ஸ்வீட் செல்பி HD, பியூட்டி கேமிரா, மியூசிக் பிளேயர், மியூசிக் பிளஸ், வால்யூம் பூஸ்டர், வீடியோ பிளேயர்ஸ் மீடியா, விவா வீடியோ எடிட்டர், நைஸ் வீடியோ பைடு, ஆப்லாக், ஆன்மையோஜி செஸ், ஆன்மையோஜி அரேனா, எம்பி3 கட்டர், பார்கோடு ஸ்கேனர், நோட்ஸ், யுயு கேம் பூஸ்டர், கரீனா ப்ரீபயர், பேட்லேண்டர்ஸ், விங்க், ரியல் லைட் மற்றும் அஸ்ட்ராகிராப்ட் ஆகிய செயலிகளும் இதில் அடங்கும். சீன செயலிகளுக்கு எதிராக 2ஆம் முறையாக இதுபோன்ற தடை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 59 சீன செயலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதில் பிரபலமான டிக்டாக், UC பிரவுசர், வீசாட், பிகோ லைவ் உள்ளிட்டவை அடங்கும். இந்த செயலிகளின் செயல்பாடு நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி மத்திய அரசு தடை விதித்தது.

எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியில் லடாக் பிராந்தியத்தில் சீன இராணுவ ஊடுருவலைத் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கையை மத்திய அரசு எடுத்தது.

இரு நாடுகளிடையிலான எல்லைப் பிரச்சினை ஏப்ரல் 2020இலிருந்து நீடித்து வருகிறது. லடாக் முதல் அருணாசல பிரதேசம் வரையிலான 3,400 கிமீ நீண்ட தொலைவுப்பகுதி உள்ளது. இப்பகுதியில் சீன ராணுவம் ஊடுருவியதில் பிரச்சினை ஏற்பட்டது.

---

**2. ஏர் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குனராக இல்கர் ஐசி நியமனம்.**

டாடா நிறுவனத்தின் ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக இல்கர் ஐசி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏர் இந்தியா நிறுவனம் டாடா நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. கடந்த 1953ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தை மத்திய அரசு நாட்டுடைமை ஆக்கியது. கடந்த பல ஆண்டுகளாக கடும் நஷ்டத்தில் சிக்கி தவித்து வந்தது. அதனை வாங்க ஆளில்லாமல் இருந்தது.

அதனைத்தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே அந்த நிறுவனத்தை விற்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வந்தது. எனினும் கடன் சிக்கலால் அந்நிறுவனத்தை வாங்க யாரும் முன்வரவில்லை. COVID–19 தொற்று சூழலுக்கு பின்பு ஏர் இந்தியாவை விற்பனை செய்யும் முயற்சியை மத்திய அரசு தீவிரப்படுத்தியது.

ஏர் இந்தியா விமான நிறுவனத்தை வாங்க டாடா சன்ஸ் நிறுவனம் விருப்பம் தெரிவித்தது. அதன் பிறகு ஏலத்தில் அதிக தொகை கேட்டதால் டாடா சன்ஸ் துணை நிறுவனமான தலேஸ் பிரைவேட் லிமிடெட் ஏர் இந்தியா நிறுவனத்திடம் விற்பனை செய்வதாக மத்திய அரசு அறிவித்தது. ஏர் இந்தியாவை வாங்க தலாஸ் நிறுவனம் குறிப்பிட்ட மதிப்பு ₹18,000 கோடி ஆகும். இதில் ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்கான பாகமாகும், மீதம் உள்ளவை மத்திய அரசுக்கு செலுத்தப்படுகிறது.

ஏர் இந்தியா நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களை டாடா குழுமத்திடம் கடந்த மாதம் மத்திய அரசு முறைப்படி ஒப்படைத்தது. இதன் தொடர்ச்சியாக ஏர் இந்தியா நிறுவனத்தில் பல்வேறு மாற்றங்களை செய்ய டாடா குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தநிலையில் ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரி, நிர்வாக இயக்குநராக இல்கர் ஐசி நியமனம் செய்யப்பட்டிருப்பதாக டாடா தெரிவித்திருக்கிறது. துருக்கி ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவராக பணியாற்றியவர் இல்கர் ஐசி.

**1.** **2022 குடியரசு நாளில் பங்கேற்ற எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் அலங்கார ஊர்தி 'பிரபலமான தேர்வு'ப் பிரிவில் 'சிறந்ததென' தேர்ந்தெடுக்கப்பட்டது?**



**அ) மகாராஷ்டிரா ☑**

ஆ) அஸ்ஸாம்

இ) மேகாலயா

ஈ) உத்தர பிரதேசம்

✓ 'பிரபலமான தேர்வு'ப்பிரிவில் மகாராஷ்டிர மாநிலத்தின் அலங்கார ஊர்தி சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன் அலங்கார ஊர்தியானது 'மகாராஷ்டிராவின் பல்–உயிர் மற்றும் மாநிலத்தின் உயிரிச்சின்னங்கள்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

✓ உத்தர பிரதேச மாநிலத்தின் அலங்கார ஊர்தி, 'ODOP மற்றும் காசி விஸ்வநாத் தாம்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக்கொண்டு, பன்னிரு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம், கடற்படையின் அணிவகுப்பு குழு மற்றும் CISF ஆகியவை அந்தந்தப் பிரிவுகளில் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டன.

---

**2.** **ஆயிரம் ஒருநாள் போட்டிகளில் விளையாடிய முதல் கிரிக்கெட் அணி எது?**

அ) ஆஸ்திரேலியா

**ஆ) இந்தியா ☑**

இ) மேற்கிந்தியத் தீவுகள்

ஈ) இங்கிலாந்து

✓ மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தின்போது 1000ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய முதல் அணி என்ற சாதனையை இந்திய கிரிக்கெட் அணி படைத்தது. இதற்கு முன்னர், இந்தியா, 999 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 518 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. இந்திய அணியின் 1000ஆவது ஒருநாள் போட்டியில் ரோகித் சர்மா கேப்டனாக இருந்தார்.

✓ இந்தியாவின் 100ஆவது ஒருநாள் போட்டியில் கபில்தேவ் கேப்டனாக இருந்தார். அதே சமயம் சௌரவ் கங்குலி இந்திய அணியின் 500ஆவது ஒருநாள் போட்டியில் கேப்டனாக இருந்தார். ஆஸ்திரேலிய அணி 958 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளது. பாகிஸ்தான் அணி 936 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளது.

---

**3.** **JNU துணைவேந்தர் மமிதாலா ஜெகதேஷ் குமார், எந்த நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**



அ) என்சிஇஆர்டி

**ஆ) யுஜிசி ☑**

இ) யுபிஎஸ்சி

ஈ) எஸ்எஸ்சி

✓ ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) துணை வேந்தர் மமிதாலா ஜெகதேஷ் குமார் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யுஜிசி) தலைவராக நியமிக்கப்பட்டார்.

✓ ஐந்து வருட காலத்திற்கு அல்லது அவருக்கு 65 வயதாகும் வரையில் அவர் இந்தப் பதவியில் இருப்பார் எனக் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**4.** **மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்களுக்கு 1000 விரைவு மின்னேற்ற நிலையங்களை அமைக்க ஏதர் எனர்ஜி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

இ) கேரளா

**ஈ) கர்நாடகா ☑**

✓ கர்நாடகா மாநில அரசுக்கும் ஏதர் எனர்ஜிக்கும் இடையே மாநிலம் முழுவதும் மின்சார இருசக்கர வாகனங்களுக்கு 1000 விரைவு மின்னேற்ற நிலையங்களை அமைப்பதற்–கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ ஏதர் எனர்ஜி மற்றும் எலக்ட்ரிக் சப்ளை நிறுவனங்கள் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. மின்சார இரு சக்கர வாகனங்களுக்கு ஏதர் நிறுவனம் இலவச மின்னேற்ற சேவைகளை வழங்கும்.

---

**5.** **அண்மையில் எந்த உயிரினத்தை 'அருகிவிட்ட இனம் – Endangered' என ஆஸ்திரேலியா அறிவித்தது?**



அ) பாண்டா கரடி

**ஆ) கோலா கரடி ☑**

இ) கங்காரு

ஈ) சோம்பல் கரடி

✓ ஆஸ்திரேலியா அண்மையில் கோலாவை 'அருகிவிட்ட இனம்' என நியமித்துள்ளது. இது பத்து ஆண்டுகளுக்கு முன், 'அழிவாய்ப்பிலுள்ள இனம்' என வகைப்படுத்தப்பட்ட–து. நீடித்த வறட்சியின் தாக்கம், கோடைகால காட்டுத்தீ மற்றும் கடந்த 20 ஆண்டுகளில் நோய், நகரமயமாக்கல் மற்றும் வாழ்விட இழப்பு ஆகியவற்றின் ஒட்டுமொத்த தாக்கங்கள் இதற்கு காரணமாகியுள்ளன. இனிமேல், ஆஸ்திரேலியாவின் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின்கீழ் கோலா கரடிகளுக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்படும்.

---

**6.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற ஒன் உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?**




அ) அமெரிக்கா

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) ரஷ்யா

ஈ) சீனா

✓ 'ஒன் ஓஷன் உச்சிமாநாடு', ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் பிரான்ஸால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'தேசிய அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்–ட பல்லுயிர் பெருக்கத்தின் உயர் இலட்சியக்கூட்டணி' என்ற பிரெஞ்சு முன்னெடுப்பை இந்தியா ஆதரித்தது.

- ✓ இம்மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் மோடி, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழியை ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது என்றார்.

---

**7.** **பின்வரும் எக்கடலின் எல்லையில் பெலாரசு உள்ளது?**



அ) பால்டிக் கடல்

ஆ) வட கடல்

இ) கருங்கடல்

**ஈ) கடல் எல்லை இல்லை ☑**

- ✓ பெலாரஸ் என்பது கீழை ஐரோப்பிய பகுதியில் நிலத்தால் சூழப்பட்ட ஒருநாடாகும். இது கிழக்கு மற்றும் வடகிழக்கில் ரஷ்யா, தெற்கில் உக்ரைன், மேற்கில் போலந்து மற்றும் வடமேற்கில் லித்துவேனியா மற்றும் லத்துவியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ளது.
- ✓ உக்ரைனுடனான பெலாருஷிய எல்லைக்கு அருகே ரஷ்யாவும் பெலாரஸும் கூட்டு இராணுவப் பயிற்சியை தொடங்கியுள்ளன. ரஷ்யா, ஏற்கனவே உக்ரைனுடனான தனது சொந்த எல்லையிலும், இணைக்கப்பட்ட கிரிமியன் தீபகற்பத்திலும் படைகளைக் குவித்துள்ளது.

---

**8.** **2022–23ஆம் ஆண்டுக்கான அதிகாரபூர்வ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பணவாட்ட சதவீதம் என்ன?**



அ) 1.5–2%

**ஆ) 3–3.5% ☑**


இ) 4.5–5%

ஈ) 10%

- ✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறுகையில், 2022–23ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பணவாட்ட முன்கணிப்பானது 3–3.5% ஆகும். GDP பணவாட்டி என்பது பணவீக்கத்தின் அளவீடு மற்றும் பெயரளவு GDP மற்றும் உண்மையான GDP ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசமாகும். மத்திய பட்ஜெட் 2022–23'க்கு பெயரளவு GDP வளர்ச்சி விகிதத்தை 11.1 சதவீதமாக கருதுகிறது.

---

**9.** **சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற MUSE & HelioSwarm ஆகியவையுடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?**



அ) இஸ்ரோ

ஆ) ஜாக்ஸா

**இ) நாசா ☑**

ஈ) இஎஸ்ஏ

- ✓ Multi–slit Solar Explorer (MUSE) மற்றும் HelioSwarm ஆகிய 2 புதிய அறிவியல் திட்டங்களை நாசா அறிவித்துள்ளது. இந்த இரண்டு திட்டங்களும் சூரியனின் கரோனாவை ஆய்வதையும் சூரியக்காற்றின் காந்தப்புலத்தை அளவிடு –வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ✓ சூரியனை நோக்கிசெல்லும் பாதையில் பார்க்கர் சோலார் ஆய்வுசெய்த சமீபத்திய தகவல்களை நாசா முன்னதாக அறிவித்தது.

**10.** **உலகின் மிகப்பெரிய 'இக்லூ கபே' திறக்கப்பட்டுள்ள நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) இந்தியா ☑**

இ) சீனா

ஈ) ஜெர்மனி

- ✓ **ஜம்மு–காஷ்மீரில் உள்ள குல்மார்க்கில், உலகின் மிகப் பெரியதாகக் கூறப்படும் 'இக்லூ கபே' திறக்கப்பட்டுள்ளது. 37.5 அடி உயரமும் 44.5 அடி விட்டமும்கொண்ட இதுவே உலகின் மிகப்பெரிய கபே ஆகும். கின்னஸ் நூலின்படி, மிகப்பெரிய 'இக்லூ கபே' சுவிச்சர்லாந்து நாட்டில் உள்ளது. அதன் உயரம் 33.8 அடி மற்றும் விட்டம் 42.4 அடி ஆகும்.**

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நாட்டின் ஏற்றுமதி 3,450 கோடி டாலராக அதிகரிப்பு**

நவரத்தினங்கள், ஆபரணங்கள் உள்ளிட்ட துறைகளின் செயல்பாடு சிறப்பாக இருந்ததையடுத்து நடப்பாண்டு ஜனவரியில் நாட்டின் ஏற்றுமதி 3,450 கோடி டாலராக அதிகரித்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகம் மேலும் கூறியதாவது:

கடந்த ஜனவரி மாதத்தில், பொறியியல், பெட்ரோலியம், நவ ரத்தினங்கள் – தங்க ஆபரணங்கள் துறைகளின் செயல்பாடு சிறப்பான வகையில் அமைந்திருந்தது. அதன் காரணமாக, அந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி ₹3,450 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, இந்திய மதிப்பில் சுமார் ₹2.59 லட்சம் கோடி ஆகும்.

இருப்பினும், வர்த்தக பற்றாக்குறையானது நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் ₹1,742 கோடி டாலராக மிகவும் உயர்ந்துள்ளது. இறக்குமதி 23.54 சதவீதம் உயர்ந்து 5,193 கோடி டாலரானது. ஏப்ரல் 2021–ஜனவரி 2022 வரையிலான இடைப்பட்ட காலத்தில் ஒட்டுமொத்த ஏற்றுமதி 22,892 கோடி டாலரிலிருந்து 46.73 சதவீதம் அதிகரித்து 33,588 கோடி டாலரைத் தொட்டது.

இதே காலகட்டத்தில் இறக்குமதி 62.65 சதவீதம் அதிகரித்து 49,575 கோடி டாலரானது. இந்தப் பத்துமாத காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறை ₹7,587 கோடி டாலரிலிருந்து 15,987 கோடி டாலராக உயர்ந்துள்ளது என வர்த்தக அமைச்சகம் புள்ளிவிவரத்தில் கூறியுள்ளது.

---

**2. சென்னை–விசாகப்பட்டினம் இடையே பெண் இராணுவ அதிகாரிகள் கடல்வழி சாகசப் பயணம்**

சென்னை–விசாகப்பட்டினம் இடையே பெண் இராணுவ அதிகாரிகள் மட்டும் பங்கேற்கும் கடல்வழி சாகசப் பயணத்தை தெலங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்திரராஜன் சென்னையில் தொடக்கிவைத்தார்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகத்தின் சென்னை அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

செகந்திராபாதில் உள்ள இராணுவக்கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் இயந்திரவியல் துறை, இஎம்இ கடல் பயண சங்கம், தெற்கு பிராந்திய இராணுவப்பிரிவு உள்ளிட்டவை இணைந்து முற்றிலுமாக பெண் ராணுவ அதிகாரிகள் மட்டுமே பங்கேற்கும் கடல்வழி சாகசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன.

சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வரை செல்லும் இந்த அணியினர் மீண்டும் கடல்வழியாகவே சென்னை திரும்புகின்றனர். இராணுவ பெண் அதிகாரிகள் மட்டும் கடல்வழி சாகசப் பயணத்தில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும்.

---

**3. ஜி–20 தலைமையை இந்தியா ஏற்பதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஜி–20 செயலகத்தை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

ஜி–20 அமைப்புக்கு செயலகம் உருவாக்குவதற்கு பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஜி–20 அமைப்பின் தலைமையை இந்தியா ஏற்கவுள்ள நிலையில் அதன் செயலகத்தை அமைப்பது மற்றும் ஒட்டுமொத்த கொள்கை முடிவுகளை செயலாக்கும் அமைப்புகளை ஏற்படுத்துவது ஆகியவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஜி–20 அமைப்பின் தலைமை பொறுப்பை 2022 டிசம்பர் 1 முதல் 2023 நவம்பர் 30 வரை இந்தியா ஏற்கவுள்ளது. இது 2023இல் நடைபெறவுள்ள ஜி–20 உச்சிமாநாட்டுடன் நிறைவடையும். உலகப் பொருளாதார நிர்வாகத்தில் முக்கிய பங்குவகிக்கும் சர்வதேச பொருளாதார ஒத்துழை–ப்புக்கான முக்கிய அமைப்பாக ஜி–20 விளங்குகிறது.

ஜி–20 தலைமைப் பொறுப்பை ஏற்கும் நாட்டில், செயலகம் அமைப்பது அதற்கான ஏற்பாடுகளை அந்நாடு மேற்கொள்–வது வழக்கமாகும். வெளியுறவு அமைச்சகம், நிதி அமைச்சகம் மற்றும் பொருத்தமான மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகளிலிருந்து இதுகுறித்த நிபுணத்துவம் பெற்ற பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2024 பிப்ரவரி வரை இந்தச் செயலகம் செயல்படும்.

பிரதமர் தலைமையிலான உயர்மட்டக்குழு செயலக செயல்பாட்டுக்கு வழிகாட்டும். இந்தக்குழுவில் இடம்பெறும் நிதியமைச்சர், உள்துறை அமைச்சர், வெளியுறவு அமைச்சர், ஜி–20 ஷெர்பா அமைப்பு (வர்த்தகம் மற்றும் தொழில், ஜவுளி, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர்) ஆகியோர் இந்தியாவின் ஜி–20 தலைமைப்பொறுப்புக்கு ஒட்டு மொத்த வழிகாட்டுதலை வழங்குவார்கள்.

மேலும் ஜி–20 தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்பார்வையிட ஒருங்கிணைப்பு குழு ஒன்றும் அமைக்கப்படும். இக்குழு உயர்மட்ட குழுவுக்கு ஏற்பாடுகள் குறித்து தகவல்களை அளிக்கும். பன்னோக்கு அமைப்பு–களில் உலக விஷயங்கள் குறித்த இந்தியாவின் தலைமைப்பொறுப்புக்கு ஜி–20 செயலகம் உதவிகரமாக இருக்கும்.

---

**1.** "Salesforce Global Digital Skills" குறியீட்டில், அதிக டிஜிட்டல் தயார்நிலை மதிப்பெண்ணைப்பெற்ற நாடு எது?

**அ) இந்தியா ☑**



ஆ) ஜெர்மனி

இ) ஆஸ்திரேலியா

ஈ) பின்லாந்து

✓ 'Salesforce Global Digital Skills' குறியீட்டின்படி, 19 நாடுகளில், இந்தியா 100க்கு 63 என்ற அதிகபட்ச டிஜிட்டல் தயார்நிலை மதிப்பெண்ணைப் பெற்றுள்ளது. 66% பேர் டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்வதற்கான மூலங்களுடன் இருப்பதாகக்கூறியுள்ளனர். 19 நாடுகளில் 23,500க்கும் அதிகமான தொழிலாளர்களிடம் மேற்கொள் –ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், சராசரி உலகளாவிய மதிப்பெண் 33 ஆகும்.

---

**2.** எந்த இந்திய மாநிலம் கல்வி நிறுவனங்களுக்கு 'சீர்–உடைகளை' கட்டாயமாக்க உத்தரவு பிறப்பித்துள்ளது?

அ) பீகார்



ஆ) உத்தர பிரதேசம்

**இ) கர்நாடகா ☑**

ஈ) கோவா

✓ கர்நாடக கல்விச்சட்டம்–1983இன் 133(2) இன்படி, கல்வித் துறை ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவு 'ஒரே மாதிரியான சீருடைகளை' மாணவர்கள் கட்டாயமாக அணிதல்வேண்டும் என்று கூறுகிறது. தனியார்பள்ளி நிர்வாகம் தங்களுக்கு விருப்பமான சீருடையைத் தேர்வு செய்துகொள்ளலாம். அந்த உத்தரவின்படி, நிர்வாகக்குழு சீருடையைத்தேர்ந்தெடுக்கவில்லை என்றால், சமத்துவம், ஒருமைப்பாடு மற்றும் பொதுச்சட்டம் மற்றும் ஒழுங்கைக் கெடுக்கும் ஆடைகளை மாணாக்கர் அணியக்கூடாது.

---

**3.** சமீபத்தில் காலமான பாடகி லதா மங்கேஷ்கருக்கு எந்த ஆண்டு 'இந்திய மாமணி' விருது வழங்கப்பட்டது?

**அ) 2001 ☑**



ஆ) 2002

இ) 2003

ஈ) 2004

✓ அண்மையில் காலஞ்சென்ற பழம்பெரும் பாடகி இலதா மங்கேஷ்கரின் உடல் முழு அரசு மரியாதையுடன் நல் அடக்கஞ்செய்யப்பட்டது. 36 மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார்.

✓ கடந்த 1999ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தின் மேலவைக்கு அவர் பரிந்துரைக்கப்பட்டார். கடந்த 2001ஆம் ஆண்டு இந்தியாவின் மிகவுயரிய குடிமக்கள் விருதான 'இந்திய மாமணி'யை அவர் பெற்றார்.

---

**4.** ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராக இருந்துவரும் எந்த நாடு, மிகப்பெரிய தடுப்பூசி–எதிர்ப்புப் போராட்டங்களைக்கண்டு வருகின்றது?

அ) இத்தாலி




**ஆ) கனடா ☑**

இ) சுவிச்சர்லாந்து

ஈ) பிரான்ஸ்

✓ ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராக இருந்து வரும் கனடாவில் தடுப்பூசிக்கெதிரான போராட்டங்கள் வலுத்துவருகின்றன. இப்போராட்டங்களுக்கு மத்தியில் தலைநகரமான ஒட்டாவாவில் அவசரநிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டது.

✓ அமெரிக்க–கனடிய எல்லையைக் கடக்கும்போது தடுப்பூசி கட்டாயம் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கோபமடைந்த சரக்குந்து ஓட்டுநர்கள், "Freedom Convoy" என்ற பெயரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்களை மே. கனடாவில் தொடங்கினர்.

---

**5.** 2022இல் ICC U19 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியின் கேப்டன் யார்?

**அ) யாஷ் துல் ☑**



ஆ) இராஜ் பாரா

இ) நிஷாந்த் சிந்து

ஈ) ஷேக் ரஷீத்

✓ நடப்பு 2022ஆம் ஆண்டு ICC U19 உலகக்கோப்பையை வென்ற இந்திய அணிக்கு யாஷ் துல் அணித் தலைவராக இருந்தார். ஆன்டிகுவாவில் நடந்த இறுதிப்போட்டியில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றிபெற்றது. இது இந்தியாவுக்கான ஐந்தாவது U19 பட்டமாகும். வெற்றிக்கு பங்களித்த மற்ற வீரர்கள் – நிஷாந்த் சிந்து, ஷேக் ரஷீத், ராஜ் பாரா மற்றும் ரவி குமார் உட்பட பலர். இங்கிலாந்து அணி 44.5 ஒவரில் 189 இரன்களுக்கு ஆட்டமிழந்தது.

---

**6.** 'மும்பை–அகமதாபாத் அதிவேக இரயில் திட்டத்திற்கு' 'அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவிக்'கடனை வழங்குகிற நாடு எது?

அ) அமெரிக்கா



**ஆ) ஜப்பான் ☑**

இ) ரஷ்யா

ஈ) ஜெர்மனி

✓ ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மும்பை–அகமதாபாத் அதிவேக இரயில் (MAHSR) திட்டத்திற்கான 'அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவிக்'கடனை வழங்குகிறது.

✓ இந்தத் திட்டத்திற்கான முதல் நிலையமாக சூரத் அமைக்கப்பட்டுள்ளது. MAHSR வழித்தடமானது மொத்தம் 12 நிலையங்களை உள்ளடக்கும். அவை சூரத், வதோதரா, ஆனந்த், அகமதாபாத், சபர்மதி, பிலிமோரா, பருச், மும்பை, தானே, விரார், போயிசர், வாபி ஆகும்.

---

**7.** 'JIVA' என்ற வேளாண் சூழலியல் அடிப்படையிலான திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

**ஆ) நபார்டு ☑**

இ) ஐசிஏஆர்

ஈ) சிஎஸ்ஐஆர்

✓ வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு) சமீபத்தில் வேளாண் சூழலியல்சார்ந்த 'JIVA' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 11 மாநிலங்களில் 5 வேளாண்–சுற்றுச்சூழல் மண்டலங்களை உள்ளடக்கிய நபார்டின் நீர்வடிகால் மற்றும் வறண்ட ஆற்றுப்படுகை திட்டங்களின்கீழ் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இயற்கை விவசாயத்தை நோக்கி விவசாய சமூகத்தை கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**8.** இந்தியாவில் பங்குச்சந்தைகளை ஒழுங்காற்றுகிற அமைப்பு எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ) இந்திய பங்கு & பரிவர்த்தனை வாரியம் ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம்

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) என்பது SEBI சட்டம், 1992இன்கீழ் நிறுவப்பட்ட ஓர் ஒழுங்குமுறை ஆணையமாகும். இது இந்தியாவிலுள்ள பங்குச்சந்தைகளுக்கான முதன்மைக் கட்டுப்பாட்டாளர் ஆகும். SEBI சமீபத்தில் தேசிய பங்குச்சந்தைக்கு (NSE) அதன் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரிகளான சித்ரா ராமகிருஷ்ணா மற்றும் ரவி நரேன் ஆகியோருக்கு அதன் தலைமை இயக்க அதிகாரி ஆனந்த் சுப்ரமணியனை பணியமர்த்துவதில் ஏற்பட்ட நிர்வாகக் குறைபாடுகளுக்காக அபராதம் விதித்தது.

---

**9.** இந்திய பாதுகாப்பு அச்சகம் & நாணயம் உற்பத்திக் கழகமானது எதன்கீழ் செயல்படுகிறது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஆ) நிதியமைச்சகம் ☑**

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) வர்த்தக அமைச்சகம்

✓ இந்திய பாதுகாப்பு அச்சகம் & நாணயம் உற்பத்திக் கழகம் (SPMCIL) என்பது ஓர் அரசு அச்சிடுதல் மற்றும் நாணய விநியோக நிறுவனமாகும். இது நிதியமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது. SPMCIL'இன் பதினேழாவது நிறுவன நாளையொட்டி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 'பஞ்சதந்திரம்' குறித்த முதல் வண்ணமயமான நினைவு நாணயத்தை வெளியிட்டார்.

---

**10.** NCRB'இன்படி,'பலிவேட்டை'யின் ஒருபகுதியாக அதிக எண்ணிக்கையிலான கொலைகள் நடைபெறும் இந்திய மாநிலம் எது?

**அ) ஜார்கண்ட் ☑**



ஆ) ஒடிஸா

இ) குஜராத்

ஈ) உத்தர பிரதேசம்

✓ தேசிய குற்ற ஆவணக்காப்பகத்தின் கூற்றுப்படி (NCRB), 'பலிவேட்டை'யின் ஒருபகுதியாக அதிக எண்ணிக்கை –யிலான கொலைகள் நடைபெறும் மாநிலங்களுள் ஜார்கண்டிற்கு அடுத்தபடியாக ஒடிஸா உள்ளது.

✓ ஒடிஸா மாநில பெண்கள் ஆணையம் சமீபத்தில் ஒடிஸா பலிவேட்டைத்தடுப்புச்சட்டம், 2013இல் கடும் விதிகளைக் கோரியுள்ளது. மேலும் இதனை கொடூரமான குற்றமாகக் கருதி மாநிலத்தில் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இரு சக்கர மோட்டார் வாகனத்தில் நான்கு வயதுக்கும் கீழ் உள்ள குழந்தைகள் பயணித்தல் அல்லது அமர்ந்து செல்லும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது**

இருசக்கர மோட்டார் வாகனத்தில் நான்கு வயதுக்கும்கீழ் உள்ள குழந்தைகள் பயணித்தல் அல்லது அமர்ந்து செல்லும்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 1989ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதி 138 பிப்ரவரி 15, 2022 அன்று திருத்தப்பட்டதன் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் இந்த அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டம் பிரிவு 129இன் கீழ் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்பு சேணம் (அ) தலைக்கவசம் பயன்படுத்தப்பட வேண்டும். இத்தகைய மோட்டார் வாகனங்களின் வேகம் மணிக்கு 40 கிலோமீட்டராக மட்டுமே இருக்க வேண்டுமென்றும் இந்த அறிவிக்கை கட்டுப்பாடு விதித்துள்ளது.

மத்திய மோட்டார் வாகனங்கள் (இரண்டாவது திருத்த) விதிகள், 2022 வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்குப்பின் இந்த விதிகள் அமலுக்கு வரும்.

---

**2. ஒலிம்பிக்ஸ்: ஆரிப் முகமது கான் ஏமாற்றம்**

பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் ஆடவருக்கான ஸ்லாலம் பிரிவில் இந்திய வீரர் ஆரிப் முகமது கான் பந்தயத்தை நிறைவு செய்யாமல் ஏமாற்றமளித்தார். இத்துடன் பெய்ஜிங் ஒலிம்பிக்கில் இந்தியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

சீனாவின் பெய்ஜிங் நகரில் 24ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன. இதில் புதன்கிழமை நடைபெற்ற ஆல்பைன் ஸ்கீயிங் விளையாட்டில் ஆடவருக்கான ஸ்லாலம் பிரிவில் களம் கண்டார் ஆரிப்.

இருபந்தயங்கள் நடத்தப்பட்டு, அவற்றில் போட்டியாளர்கள் இலக்கை அடைய எடுத்துக்கொண்ட நேரத்தின் மொத்த கணக்கீட்டின் அடிப்படையில் வெற்றியாளர்கள் இந்த விளையாட்டில் அறிவிக்கப்படுகின்றனர்.

எனினும் இதில் முதல் பந்தயத்தையே ஆரிப் நிறைவு செய்யாமல் தவறவிட்டார். இதனால் அவர் தொடர்ந்து களம் காணும் தகுதியை இழந்தார். இப்பிரிவில் பிரான்ஸ் வீரர் கிளமென்ட் நோயல் மொத்தமாக 1 நிமிஷம் 44.09 விநாடிகளில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார்.

ஆஸ்திரியாவின் ஜோகன்னஸ் ஸ்ட்ரோல்ஸ் அவரைவிட 0.61 விநாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்டு வெள்ளியும், நார்வே வீரர் செபாஸ்டியன் போஸ் சோல்வாக் 0.70 விநாடிகள் அதிகமாக எடுத்து வெண்கலமும் பெற்றனர். தங்கம்வென்ற கிளமென்ட் நோயல் கடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இதே பிரிவில் 0.04 விநாடிகள் வித்தியாசத்தில் வெண்கலத்தை இழந்து 4ஆம் இடம் பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பதக்கப்பட்டியல்:** போட்டியின் 13ஆம் நாளான புதன் கிழமை நிறைவில், நார்வே 28 பதக்கங்களுடன் (13 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலம்) முதலிடத்திலும், ஜெர்மனி 20 பதக்கங்களுடன் (10 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலம்) 2ஆவது இடத்திலும், அமெரிக்கா 19 பதக்கங்களுடன் (8 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலம்) 3ஆவது இடத்திலும் உள்ளன.

**1.** நடப்பு 2022ஆம் ஆண்டில் உலக தொழுநோய் நாள் கடைபிடிக்கப்பட்ட தேதி எது?




**அ) ஜனவரி 30 ☑**

ஆ) ஜனவரி 31

இ) பிப்ரவரி 01


ஈ) பிப்ரவரி 02

✓ உலக தொழுநோய் நாளானது ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் (2022) ஜன.30 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது. இந்தக் கொடிய நோயைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதைத் தடுக்கவும், சிகிச்சையளிக்கவும், குணப்படுத்தவும் முடியும் என்பதில் கவனஞ்செலுத்துதற்–காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ "United for Dignity" என்பது நடப்பாண்டு (2022) வரும் உலக தொழுநோய் நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**2.**எந்தத்தேசியத்தலைவரின் நினைவுநாள், இந்தியாவில், ஜன.30 அன்று தியாகிகள் நாளாக அனுசரிக்கப்படுகிறது?




அ) ஜவஹர்லால் நேரு

**ஆ) மகாத்மா காந்தி ☑**

இ) பகத் சிங்

ஈ) சர்தார் வல்லபாய் படேல்

✓ 1948 ஜன.30 அன்று 'மகாத்மா' காந்தியடிகள், நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்பட்டார். இந்த நாளில், மகாத்மா காந்தி மற்றும் தேசத்தின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த அனைத்து தியாகிகளுக்கும் மரியாதை செலுத்துவதற்காக, இந்தியா, தியாகிகள் நாள் அல்லது ஷாஹித் திவாஸை அனுசரிக்கிறது.

---

**3.** உலக மனித சகோதரத்துவ நாள் கடைப்பிடிக்கபடுகிற தேதி எது?




அ) பிப்ரவரி 02

ஆ) பிப்ரவரி 03

**இ) பிப்ரவரி 04 ☑**

ஈ) பிப்ரவரி 05

✓ ஆண்டுதோறும் பிப்.4 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் உலக மனித சகோதரத்துவ நாள் அனுசரிக்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டு இதே நாளில், "உலக அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வதற்கான மனித சகோதரத்துவம்" என்ற தலைப்பிலான ஆவணம் கையெழுத்தானது.

---

**4.** நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் 'உலக ஈரநிலங்கள் நாளுக்கான'க் கருப்பொருள் என்ன?




அ) Wetlands for Us

**ஆ) Wetlands Action for People and Nature ☑**

இ) Wetlands and COVID–19

ஈ) Save Wetlands

✓ ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் புவியில் அதன் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் பிப்.2 அன்று உலக ஈரநிலங்கள் நாள் அனுசரிக்கப்படுகிற–து. "Wetlands Action for People and Nature" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில்வரும் இந்த நாளுக்கான கருப் பொருளாகும்.

---

**5.** உலக பருப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?



அ) பிப்ரவரி 8

ஆ) பிப்ரவரி 9

**இ) பிப்ரவரி 10 ☑**

ஈ) பிப்ரவரி 11

✓ கடந்த 2019ஆம் ஆண்டில், ஐநா பொது அவை, பிப்.10ஆம் தேதியை உலக பருப்புநாளாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து, உணவு & உழவு அமைப்பின் தலைமையில், உலகெங்கிலும் உள்ள பருப்பு வகைகளின் சர்வதேச ஆண்டாக, கடந்த 2016ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

✓ பருப்பு வகைகளின் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் பருப்பு வகைகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்கும் வழிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப்படுகிறது. "Pulses to empower youth in achieving sustainable agrifood systems" என்பது நடப்பு 2022இல் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும்.

---

**6.** 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




அ) பிப்ரவரி 10

**ஆ) பிப்ரவரி 11 ☑**

இ) பிப்ரவரி 12

ஈ) பிப்ரவரி 13

✓ 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' ஆனது ஆண்டுதோறும் பிப்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது.

✓ நடப்பாண்டு (2022) 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாளின்' ஏழாமாண்டு நாளாகும். ஐநா அவை இந்நாளை கடைப்பிடிக்கின்கிறது. "Equity, Diversity, and Inclusion: Water Unites Us" என்பது 2022'இல் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**7.** இந்தியாவில் ஆண்டுதோறும் பிப்.10 மற்றும் ஆக.10 ஆகிய தேதிகளில் அனுசரிக்கப்படுகிற நாள் எது?



**அ) தேசிய குடற்புழுநீக்க நாள் ☑**

ஆ) தேசிய குருதிச்சோகை நாள்

இ) தேசிய நீரழிவு நாள்

ஈ) தேசிய புற்றுநோய் நாள்

✓ இந்தியாவில், ஆண்டுதோறும் பிப்ரவரி.10 மற்றும் ஆக.10 ஆகிய தேதிகளில் தேசிய குடற்புழுநீக்க நாள் கடைப்பிடிக்–கப்படுகின்றது. 1–19 வயதிற்குள் இருப்போருக்கு குடற் புழுக்களை ஒழிப்பதை இந்நாள் நோக்கமாகக்கொண்டு உள்ளது. அவை மண்வழியாக பரவும் புழுக்களாகும்.

✓ WHOஇன் கூற்றுப்படி, இந்தியாவில், 1–14 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 241 மில்லியன் சிறார்கள், ஒட்டுண்ணி குடற்புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

**8. அண்மையில் காலமான லூக் மாண்டாக்னியர் அவரது எந்தக் கண்டுபிடிப்புக்காக மருத்துவத்துக்கான நோபல் பரிசை வென்றார்?**

**அ) மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ் (HIV) ☑**



ஆ) எபோலா

இ) சிக்குன்குனியா

ஈ) ரோட்டா வைரஸ்

✓ நோபல் பரிசு வென்ற மூத்த தீநுண்மவியலாளர் லூக் மாண்டாக்னியர் சமீபத்தில் பாரிஸில் காலமானார். AIDS நோயை உண்டாக்கும் HIV வைரஸைக் கண்டறிந்ததற்–காக 2008ஆம் ஆண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசை அவர் தனது சக ஊழியரான பிராங்கோயிஸ் பார்–சினூசியுடன் இணைந்து பெற்றார்.

---

**9. பால்–ஹென்றி சண்டோகோ டமிபா, சமீபத்தில் எந்த நாட்டின் அதிபராக அறிவிக்கப்பட்டார்?**

**அ) புர்கினா பாசோ ☑**



ஆ) நமீபியா

இ) ஜிம்பாப்வே

ஈ) மாலி

✓ ஆப்பிரிக்க நாடான புர்கினா பாசோவின் அதிபராக தேசிய ஆயுதப்படையின் லெப்டினன்ட் கர்னலான பால் ஹென்றி சண்டாகோ டமிபா அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் நடந்த ஆட்சிக்கவிழ்ப்புக்குப்பிறகு அந்நாட்டின் உயர்மட்ட அரசியலமைப்பு அமைப்பு இந்த முடிவை அறிவித்துள்ளது.

---

**10.** 2021 ஜனநாயகக்குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 32

**ஆ) 46 ☑**




இ) 52

ஈ) 85

✓ சமீபத்தில் வெளியிடப்பட்ட EIUஇன் ஜனநாயகக்குறியீட்டு அறிக்கையில் இந்தியா 46ஆவது இடத்தில் உள்ளது.

✓ உலகளாவிய குறியீட்டில் இந்தியா 6.91 புள்ளிகளைப் பெற்றுள்ளது. நார்வே மற்றும் நியூசிலாந்து ஆகியவை முறையே முதல் இரண்டு இடங்களையும், வட கொரியா, மியான்மர், ஆப்கானிஸ்தான் ஆகியவை கடைசி இடத்திலும் உள்ளன. அரசியல் கலாச்சாரத்தில் குறைந்த மதிப்பெண்ணான 5–உம் தேர்தல் செயல்முறை மற்றும் பன்மைத்துவம் ஆகியவற்றில் அதிகபட்ச மதிப்பெண்ணா–ன 8.67–உம் இந்தியா பெற்றுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கீழடியில் பாசிமணிகள், யானை தந்த பகடை கண்டெடுப்பு**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் தொடங்கப்பட்டுள்ள 8ஆம்கட்ட அகழாய்வில், முதல்முறை –யாக பாசிமணிகள், யானை தந்தத்தினாலான செவ்வக வடிவ பகடை ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள அகரம், மணலூர், கொந்தகை ஆகிய இடங்களில் ஏற்கெனவே நடைபெற்ற 7ஆம் கட்ட அகழாய்வுகளில், 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பண்டையகால தமிழர்கள் பயன்படுத்திய தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கீழடியில் 8ஆம்கட்ட அகழாய்வுக்காக குழிகள் தோண்டப்பட்டன. இவற்றில் ஒரு குழியில் 2 பச்சை நிற பாசிமணிகளும், 2 ஊதா நிற பாசிமணிகளும் மற்றும் யானை தந்தத்தினாலான செவ்வக வடிவ பகடையும் கண்டெடுக்கப்பட்டன.

---

**2. 18.02.2022 – 'சிந்தனைச் சிற்பி' ம. சிங்காரவேலர் 163ஆவது பிறந்தநாள்.**

---

**1. கஞ்சா சாகுபடியை ஒழிக்க 'ஆபரேஷன் பரிவர்தன்' என்றவொன்றைத் தொடங்கிய மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா

**இ) ஆந்திர பிரதேசம் ☑**

ஈ) கோவா

✓ கஞ்சா சாகுபடியை ஒழித்தற்காக ஆந்திர பிரதேச மாநிலக் காவல்துறை 'ஆபரேஷன் பரிவர்தன்' என்றவொரு சிறப்பு நடவடிக்கையைத்தொடங்கியுள்ளது. விசாகப்பட்டினத்தில் உள்ள சிறப்பு அமலாக்கப் பணியகத்துடன் இணைந்து ஆந்திர பிரதேச காவல்துறையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அண்மையில், சுமார் 2 லட்சம் கிகி பதப்படுத்தப்பட்ட கஞ்சா அம்மாநிலத்தில் கைப்பற்றப்பட்டது.

---

**2. எந்த நாட்டுக்கு கோதுமை விநியோகம் செய்வதற்காக ஐநா உலக உணவு திட்டத்துடன் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது?**

அ) மாலத்தீவுகள்



**ஆ) ஆப்கானிஸ்தான் ☑**

இ) சிரியா

ஈ) இலங்கை

✓ 50,000 மெட்ரிக் டன் கோதுமையை விநியோகம் செய்வ–தற்காக ஐநா உலக உணவுத் திட்டத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. மனிதாபிமான உதவியின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தானுக்கு உதவ இந்தியா உறுதி அளித்துள்ளது. சாலை வழியாக பாகிஸ்தானூடே சரக்கு உந்துகளில் அவை கொண்டு செல்லப்படவுள்ளன.

---

**3. ஆளுநரால் மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்ட NEET எதிர்ப்பு மசோதாவை மீண்டும் நிறைவேற்றிய மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கர்நாடகா

இ) பஞ்சாப்

ஈ) மேற்கு வங்காளம்

✓ தமிழ்நாட்டின் ஆளுநர் RN இரவியால் மறுபரிசீலனைக்கு அனுப்பப்பட்ட NEET எதிர்ப்பு மசோதா, தமிழ்நாடு சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தொடரில் மீண்டும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவை மீண்டும் நிறைவேற்றி, அதை மீண்டும் ஆளுநருக்கு அனுப்புவதன் மூலம், அவர் அதை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ மருத்துவ மாணவர் சேர்க்கையில் NEET தாக்கம்குறித்து ஆராய நீதிபதி AK ராஜன் கமிட்டியை அரசு அமைத்தது.

---

**4. சமீப செய்திகளில் இடம்பெற்ற குனோ பால்பூர் தேசியப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) பீகார் ஆ) உத்தரகாண்ட்

இ) அஸ்ஸாம் **ஈ) மத்திய பிரதேசம் ☑**

✓ சுமார் 8–12 சிறுத்தைகள், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் போட்ஸ்வானாவிலிருந்து மத்தியபிரதேச மாநிலம் குனோ பால்பூர் தேசியப்பூங்காவிற்கு கொண்டு வரப்பட உள்ளன. 1950களுக்குப் பிறகு விடுதலை இந்தியாவில் இவ்வினம் முற்றாக அழிந்தது.

✓ இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் கால நிலைமாற்றம் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'இந்தியாவில் சிறுத்தையை அறிமுகப்படுத்துவதற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டுள்ளார்.

---

**5. 'ஒற்றை டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை'ச் செயல்ப–டுத்துவதற்காக பின்வரும் எந்த நாட்டிற்கு மானியம் வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?**

அ) நேபாளம்



**ஆ) இலங்கை ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) பங்களாதேஷ்

✓ 'ஒற்றை டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை' நடைமுறை–ப்படுத்துதற்கு இலங்கைக்கு மானியம் வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது இந்தியாவின் ஆதார் அட்டையைப்போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இக்கட்டமைப்பை தேசிய அளவிலான வேலைத்திட்டமாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிப்பதாக இலங்கையின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

---

**6. 'மேடாரம் ஜாதரா' கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ) மத்திய பிரதேசம்



**ஆ) தெலுங்கானா ☑**

இ) குஜராத்

ஈ) பீகார்

✓ தெலுங்கானாவின் கோயா பழங்குடியினர் சமூகத்தால் நான்கு நாட்கள் கொண்டாடப்படும், 'மேடாரம் ஜாதரா' கும்பமேளாவிற்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய திருவிழாவாகும். பழங்குடியினர் விவகார அமைச்சகம், நடப்பு 2022ஆம் ஆண்டு 'மேடாரம் ஜாதரா' தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ₹2.26 கோடி நிதியை வழங்கியுள்ளது.

---

**7. முன்னாள் துருக்கிய ஏர்லைன்சு தலைவரான இல்கர் ஐசி, எந்த இந்தியன் ஏர்லைன்ஸின் MD மற்றும் CEOஆக நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ) ஸ்பைஸ் ஜெட்



ஆ) இண்டிகோ

**இ) ஏர் இந்தியா ☑**

ஈ) விஸ்தாரா

✓ TATA குழுமம், துருக்கிய ஏர்லைன்சு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் இல்கர் ஐசியை ஏர் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயலதிகாரியாக நியமித்துள்ளது. அண்மையில் இந்திய அரசாங்கத்திடம் இருந்து கையகப்படுத்தப்பட்ட ஏர் இந்தியா நிறுவனத்தை

நடத்துவதற்கு ஒரு வெளிநாட்டு தலைவரை நியமிக்கும் TATA குழுமத்தின் திட்டங்களுக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**8.** அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக, 'புதிய எல்லைகள்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

**அ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) நிலக்கரி அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ அமுதப்பெருவிழாக் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த 'புதிய எல்லைகள்' என்ற நிகழ்ச்சியை நடத்துகிறது. 2070ஆம் ஆண்டிற்குள் நிகர–சுழிய அளவிலான கார்பன் உமிழ்வை அடைவதற்கான வழிமுறைகள் குறித்த சிந்தனைக்கூட்டம் நடத்தப்பட்டது.

---

**9.** தேசிய ஆறுகள் இணைப்புக் கொள்கையின்கீழ் அமைக்கப்பட்ட முதல் நிறுவனம் எது?

**அ) கென்–பெட்வா இணைப்புத் திட்ட ஆணையம் ☑**

ஆ) காவிரி–கோதாவரி இணைப்புத் திட்ட ஆணையம்

இ) கோதாவரி–கிருஷ்ணா இணைப்புத் திட்ட ஆணையம்

ஈ) நர்மதை–தபதி இணைப்புத் திட்ட ஆணையம்

✓ தேசிய ஆறுகள் இணைப்புக் கொள்கையின் கீழ் முதல் முன்னெடுப்பைச்செயல்படுத்துதற்காக நடுவணரசு கென்–பெட்வா இணைப்புத் திட்ட ஆணையத்தை அமைத்து உள்ளது. இக்கொள்கை உத்தர பிரதேச மாநிலம் மற்றும் மத்திய பிரதேச மாநிலம் இடையே உள்ள புந்தேல்கண்ட் பகுதியில் கிட்டத்தட்ட 11 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை பாசனத்தின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது.

---

**10.** 2022 ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் எது?

அ) India Untouched

**ஆ) Writing with Fire ☑**




இ) Period. End of Sentence

ஈ) Jai Bhim

✓ திரைப்பட தயாரிப்பாளர்களான ரிந்து தாமஸ் மற்றும் சுஷ்மித் கோஷ் இயக்கிய 'ரைட்டிங் வித் பையர்' என்ற இந்திய ஆவணப்படம் 94ஆவது அகாதமி விருதுகளில் 'சிறந்த ஆவணப்படம்' பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்–கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் இதுவாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செயல்பாட்டுக்கு வந்தது தேசிய அணை பாதுகாப்பு ஆணையம்**

நாட்டில் உள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையம் வெள்ளிக்கிழமை முதல் செயல்பாட்டுக்கு வந்தது.

தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தை அமைக்க வழி வகுப்பதற்கான மசோதாவுக்கு நாடாளுமன்றம் கடந்த டிச.8ஆம் தேதி ஒப்புதலளித்தது. இந்நிலையில், ஜல் சக்தி அமைச்சகம் வெளியிட்ட அரசாணையில், "தேசிய அணை பாதுகாப்பு ஆணையத்தை மத்திய அரசு நிறுவுகிறது.

தேசிய அணை பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை அந்த ஆணையம் இனி நிறைவேற்றும். அந்த ஆணையத்துக்கு ஒரு தலைவரும், 5 உறுப்பினர்க–ளும் நியமிக்கப்படவுள்ளனர். ஐந்து உறுப்பினர்களும் கொள்கை–ஆராய்ச்சி, தொழில்நுட்பம், ஒழுங்குமுறை, பேரிடர், நிர்வாகம்–நிதி ஆகிய பிரிவுகளை நிர்வகிக்க உள்ளனர்.

ஆணையத்தின் தலைமையகம் தில்லியில் இடம்பெறும். 4 இடங்களில் ஆணையத்தின் பிராந்திய அலுவலகங்கள் அமைக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநில அணை பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையே ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பணிகளை தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் மேற்கொள்ளும். அணைசார்ந்த பேரிடர்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் ஆணையம் மேற்கொள்ளும்.

தேசிய அணை பாதுகாப்பு குழுவையும் மத்திய அரசு அமைத்துள்ளது. 22 உறுப்பினர்களைக்கொண்ட அந்தக் குழுவின் தலைவராக மத்திய நீர் ஆணையத்தலைவர் செயல்படுவார். நாட்டில் 5,264 பெரிய அணைகள் உள்ளதாக தேசிய அணைகள் பதிவேடு குறிப்பிடுகிறது. மேலும் 437 அணைகள் கட்டப்பட்டு வருகின்றன.

---

**2. நுகர்வோர் குறியீட்டு எண்: தமிழகம் முதலிடம்**

வேளாண் மற்றும் ஊரகத்தொழிலாளர்கள் சார்ந்த அகில இந்திய குறியீட்டு எண் தரவரிசையில், தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்துக்கான வேளாண் மற்றும் ஊரகத் தொழிலாளர்கள் சார்ந்த அகில இந்திய நுகர்வோர் குறியீட்டு எண் முறையே 2 மற்றும் 1 புள்ளிகள் குறைந்து, வேளாண் தொழிலாளர்களுக்கு 1095–ஆகவும், ஊரகத் தொழிலாளர்களுக்கு 1105 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் வேளாண் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண் வரிசையில் 1,292 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. 869 புள்ளிகளுடன் இமாசலபிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது. ஊரகத் தொழிலாளர்களுக்கான குறியீட்டு எண்ணின் பட்டியலில் 1,278 புள்ளிகளுடன் தமிழகம் முதலிடத்திலும், 917 புள்ளிகளுடன் இமாசல பிரதேசம் கடைசி இடத்திலும் உள்ளன.

விவசாயம் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்களில் அதிகபட்ச சரிவு உத்தர பிரதேசத்தில் (தலா 9 புள்ளிகள்) ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கோதுமை, தானியங்கள், காய்கறிகள் & பழங்க –ள் உள்ளிட்டவற்றின் விலைவீழ்ச்சி இதற்கு காரணமாகும்.

அரிசி, சோளம், காய்கறிகள் மற்றும் பழங்கள், இறைச்சி உள்ளிட்டவற்றின் விலை உயர்வு காரணமாக, விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்களில் அதிகபட்சமான உயர்வை இமாசல பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியன சந்தித்துள்ளன.

---

### 3. விவசாய ட்ரோன் திட்டம்: பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்

நாடு முழுவதும் 100 இடங்களில் விளைநிலங்களில் பூச்சிக்கொல்லி மருந்து உள்ளிட்ட பொருள்களைத் தெளிப்பதற்கான விவசாய ட்ரோன் திட்டத்தை பிரதமர் மோடி காணொலி வாயிலாக தொடக்கிவைத்தார்.

அடுத்த 2 ஆண்டுகளில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ், கருடா ஏர்ஸ்பேஸ் நிறுவனம் ஒரு லட்சம் ட்ரோன்களை தயாரிக்க இலக்கு நிர்ணயித்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஏற்கனவே, 'ஸ்வாமிதா' திட்டத்தின்கீழ் ட்ரோன்கள்மூலம் கிராமங்களின் நிலம் மற்றும் வீடுகளின் வரைபடம் தயாரிக்கப்படுகிறது. ட்ரோன்கள் மூலம் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. தொலைவில் உள்ள பகுதிகளுக்கு தடுப்பூசிகள் சென்று சேருகின்றன. வயல்களில் பூச்சிமருந்து தெளிக்கவும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

---

### 4. இந்திய–ஐக்கிய அரபு அமீரக வர்த்தக ஒப்பந்தம்: ஆபரணத் துறையின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும்

இந்திய–ஐக்கிய அரபு அமீரக தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்நாட்டில் ஆபரண துறையின் ஏற்றுமதியை பெரிதும் ஊக்குவிக்கும் என மத்திய வர்த்தக செயலர் பி.வி.ஆர். சுப்ரமணியம் சனிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது:

தங்கம் இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 800 டன் தங்கத்தை நம்நாடு இறக்குமதி செய்து கொள்கிறது.

இந்தச் சூழ்நிலையில், இந்திய–ஐக்கிய அரபு அமீரக வா்த்தக ஒப்பந்தம் நாட்டின் ஆபரண துறையை ஊக்குவிப்பதில் பெரும் பங்கு வகிக்கும். ஏனெனில், இந்த ஒப்பந்தத்தில் யுஏஇ சந்தையை இந்திய ஆபரண துறை வரி விதிப்பின்றி அணுகுவதற்கு வழிகோலப்பட்டுள்ளது.

அதேபோன்று, கடந்த 2020–21–ஆம் ஆண்டில் இந்தியா யுஏஇ–விலிருந்து 70 டன் தங்கத்தை இறக்குமதி செய்துள்ளது. இந்த நிலையில், 200 டன் தங்கம் வரையிலான இறக்குமதிக்கு வரிச் சலுகை அளிக்க இந்த ஒப்பந்தத்தில் இந்தியா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு ஆபரண தயாரிப்பாளர்கள் ஐக்கிய அரபு அமீரக சந்தையை வரி விதிப்பின்றி பயன்படுத்திக் கொள்வது இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆதாயத்தை அளிக்கும்.

தற்போது இந்திய ஆபரணங்களுக்கு ஐக்கிய அரபு அமீரக சந்தையில் 5 சதவீத வரி விதிக்கப்படும் நிலையில் இந்த புதிய ஒப்பந்தத்தில் அது பூஜ்யமாக மாற்றப்பட்டுள்ளது என்றார் அவர்.

---

### 5. சேதி தெரியுமா?

**பிப்.4:** சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் 24–வது குளிர்க்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின. ஒலிம்பிக் போட்டிகளில் 91 நாடுகளைச் சேர்ந்த 2,871 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

**பிப்.5:** வைணவ மத ஆச்சார்யர்களில் ஒருவரும் இந்துமத சீர்த்திருத்தவாதியுமான ராமானுஜரின் ஆயிரமாவது பிறந்த நாளையொட்டி தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் 216 அடி உயரத்தில் பஞ்சலோக சிலையைப் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

**பிப்.6:** இந்தியாவின் 'நைட்டிங்கேல்' என்றழைக்கப்பட்ட பழம் பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் (92) கரோனா தொற்றுப் பாதிப்பால் காலமானார். இவர் பத்ம பூஷண், பத்ம விபூஷண், பாரத ரத்னா, தாதா சாகேப் பால்கே எனப் பல விருதுகளை பெற்றவர்.

**பிப்.6:** பிரிட்டனின் இராணி 2ஆம் எலிசபெத், இராணியாக முடிசூடிய எழுபதாம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இவருடைய தந்தை ஆறாம் ஜார்ஜ் மறைவுக்குப் பிறகு 1952 பிப்.6 அன்று இராணியானார் எலிசபெத்.

**பிப்.8:** நீட் தேர்விலிருந்து விலக்குக்கோரும் சட்ட மசோதாவை சிறப்புச் சட்டப் பேரவைக் கூட்டத்தைக் கூட்டித் தமிழக அரசு மீண்டும் இயற்றியது. அது ஆளுநர் ஆர்.என். இரவிக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டது. முன்னதாக இயற்றப்பட்ட தீர்மானத்தை ஆளுநர், தமிழக அரசுக்குத் திருப்பி அனுப்பினார்.

**பிப்.9:** ஹிஜாப் விவகாரத்தில் பள்ளிகளில் சீருடை மட்டுமே அணிய வேண்டும் என்கிற கர்நாடக அரசின் உத்தரவுக்குத் தடை விதிக்க கர்நாடக உயர்நீதிமன்றம் மறுத்தது.

**பிப்.10:** சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக முனீஷ்வர் நாத் பண்டாரியை நியமித்துக் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டார்.

---

**1.** **ஓய்வூதியம் வழங்குவதற்கான முழு செயல்முறையை –யும் டிஜிட்டல் மயமாக்கியுள்ள மாநிலம்/UT எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) புது தில்லி ☑**

இ) புதுச்சேரி

ஈ) கோவா




✓ தில்லி அரசு ஓய்வூதியம் வழங்கும் முழு செயல்முறையை –யும் டிஜிட்டல் மயமாக்கியுள்ளது. விண்ணப்பப்படிவத்தை நிரப்புவது முதல் ஓய்வூதியம் வழங்குவது வரை முழு செயல்முறையும் இனி இணையவழியிலேயே இருக்கும். தில்லியின் சமூக நலத்துறை இந்தச் செயல்முறையை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. மேலும், ஓய்வூதியம் வழங்குவதில் எந்தவித இடையூறும், தாமதமும் ஏற்படாது என்றும் அது அறிவித்துள்ளது.

---

**2.** **தங்கப்பத்திரத்திட்டத்தின் முதிர்வுக்காலம் என்ன?**

**அ) 8 ஆண்டுகள் ☑**

ஆ) 10 ஆண்டுகள்

இ) 5 ஆண்டுகள்

ஈ) 4 ஆண்டுகள்

✓ 'சவரன் தங்கப்பத்திரங்கள்' என்பது இந்திய அரசாங்கத்தி –ன் சார்பாக ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும் கிராம் தங்கத்தில் குறிப்பிடப்படும் அரசுப்பத்திரங்களாகும். சவரன் தங்கப்பத்திரத்தின் முதிர்வுக்காலம் 8 ஆண்டுகள்.

✓ அத்தகைய தங்கப்பத்திரங்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது ஆண்டுக்குப் பிறகு முன்கூட்டியே திரும்பப் பெறுதல் அனுமதிக்கப்படுகிறது.

---

**3.** **சமீப நாடாளுமன்றக்குழு அறிக்கையின்படி, MGNREGA இல் உத்தேச 'உத்தரவாத வேலைநாட்கள்' எத்தனை?**

அ) 90

ஆ) 120

**இ) 150 ☑**

ஈ) 350



✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டத்தில் (MGNREGA) 'உத்தரவாதமுள்ள வேலைநாட்களை 100இல் இருந்து 150ஆக அதிகரிக்க நாடாளுமன்றக்குழு பரிந்து –ரைத்துள்ளது. மேலும் இந்தத் திட்டம் கிராமப் புறங்களில் உள்ள பலருக்கு கடைசி விருப்பமாக உள்ளது என்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

✓ சிவசேனை உறுப்பினர் பிரதாப்ராவ் ஜாதவ் தலைமையி –லான ஊரக வளர்ச்சி & பஞ்சாயத்து இராஜ் தொடர்பான நிலைக்குழு தனது அறிக்கையை அண்மையில் மக்களவையில் தாக்கல்செய்தது.

---

**4.** **USAID உடன் இணைந்து SAMRIDH முன்னெடுப்பின் கீழ் புதிய கூட்டாண்மையை அறிவித்த நிறுவனம் எது?**

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) சுகாதாரம் & குடும்பநல அமைச்சகம்

இ) ஐநா பெண்கள் அமைப்பு

ஈ) பெண்களின் உலகளாவிய அதிகாரமளிக்கும் நிதியம்

✓ அடல் புத்தாக்க இயக்கம் (AIM), NITI ஆயோக் மற்றும் US பன்னாட்டு வளர்ச்சிக்கான முகமை (USAID) ஆகியவை Sustainable Access to Markets and Resources for Innovative Delivery of Healthcare (SAMRIDH)இன்கீழ் ஒரு புதிய கூட்டாண்மையை அறிவித்தன.

✓ AIM, NITI ஆயோக் உடனான கூட்டு, சுகாதாரத்துறையில் செலவினங்களின் தரத்தை மேம்படுத்துதற்கு நீடித்த சுகாதார மாதிரிகள் மற்றும் புதுமையான நிதியளிப்பு வழிமுறைகளை அடைவதற்கான SAMRIDH திட்டத்தின் முயற்சிகளை ஊக்குவிக்கும்.

---

**5.** **'வேளாண்மை மற்றும் நீர்வளத்துறையில்' மிகவும் மேம்பட்ட முன்னேற விழையும் மாவட்டங்களில் முதல் இடத்தில் உள்ள மல்கங்கிரி உள்ள மாநிலம் எது?**

அ) மேற்கு வங்கம்

**ஆ) ஒடிஸா ☑**

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்




✓ 2021 டிசம்பரில் வேளாண் மற்றும் நீர்வளத்துறையில் மிகவும் மேம்பட்ட ஐந்து மாவட்டங்களை NITI ஆயோக் அறிவித்துள்ளது. அப்பட்டியலில் ஒடிஸாவின் மல்கங்கிரி மாவட்டம் முதலிடத்திலுள்ளது. அதைத்தொடர்ந்து மத்திய பிரதேச மாநிலத்தின் சத்தர்பூரும், ஜம்மு–காஷ்மீரின் பாரமுல்லாவும் உள்ளன. இது, NITI ஆயோக் வெளியிட்டுள்ள டெல்டா தரவரிசையின்படி உள்ளது.

---

**6.** **'உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டை' நடத்துகிற நிறுவனம் எது?**

அ) UNFCCC

ஆ) NITI ஆயோக்

**இ) எரிசக்தி மற்றும் வள நிறுவனம் ☑**

ஈ) பாபா அணு ஆராய்ச்சி மையம்

✓ எரிசக்தி மற்றும் வளநிறுவனமானது (TERI) உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டின் சமீபத்திய பதிப்பை நடத்தியது. 'Towards a Resilient Planet: Ensuring a Sustainable and Equitable Future' என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற்ற இந்த உச்சிமாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

✓ கயானா குடியரசுத்தலைவர் டாக்டர் இர்பான் அலி மற்றும் ஐநாஇன் துணைப்பொதுச்செயலாளர் ஆகியோர் முக்கிய உரைகளை ஆற்றினர்.

---

**7.** **2022–23 மத்திய பட்ஜெட்டில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனாவுக்கான (PMAY) செலவினம் எவ்வளவு?**

அ) ₹96,000 கோடி

ஆ) ₹75,000 கோடி

**இ) ₹48,000 கோடி ☑**

ஈ) ₹36,000 கோடி

- ✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், 2022-23ஆம் ஆண்டில் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தின்கீழ் 80 இலட்சம் வீடுகளை கட்டிமுடிக்க ₹48,000 கோடி ஒதுக்கீடுசெய்தார்.
- ✓ சமீபத்தில், ஆந்திரபிரதேசம், சத்தீஸ்கர், இமாச்சலபிரதேசம், கர்நாடகா மற்றும் இராஜஸ்தான் ஆகிய 5 மாநிலங்களில் 60,000க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டுவதற்கான திட்ட முன்மொழிவுகளுக்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

---

**8.** **டார்க்-நெட் சந்தைகளை ஒழிப்பதற்கான தீர்வுகளைக் கண்டறிய 'டார்க்கத்தான்-2022' முன்னெடுப்பை ஏற்பாடு செய்துள்ள நிறுவனம் எது?**

அ) மத்திய புலனாய்வுப் பணியகம்

**ஆ) போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் ☑**



இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) தேசிய புலனாய்வு நிறுவனம்

- ✓ போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகமானது டார்க்-நெட் சந்தைகளை ஒழிப்பதற்கான தீர்வுகளைக்கண்டறிய 'டார்க்கத்தான்-2022' முயற்சியை ஏற்பாடு செய்துள்ளது.
- ✓ 'டார்க்நெட்' மூலம் போதைப்பொருள் கடத்தலைத்தடுக்க பயனுள்ள தீர்வுகளைக் கண்டறிவதற்கு மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை ஈடுபடுத்துவதை இந்த முயற்சி நோக்கங்கொண்டுள்ளது. NCB என்பது உள்துறை அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு சட்ட அமலாக்க மற்றும் புலனாய்வு நிறுவனமாகும்.

---

**9.** **எந்த நாட்டுடனான புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**

அ) இஸ்ரேல்



**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) அமெரிக்கா

ஈ) நியூசிலாந்து

- ✓ இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளன. இது மலிவு விலை சூரிய மற்றும் தூய ஐட்ரஜனின் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கம் எனக்கொண்டுள்ளது. 4ஆவது இந்தியா-ஆஸ்திரேலியா எரிசக்தி பேச்சுவார்த்தையின்போது இது கையெழுத்தான -து. இந்தக்கூட்டத்திற்கு இந்திய தரப்பிலிருந்து மத்திய மின்சாரம், புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் RK சிங் மற்றும் ஆஸ்திரேலிய தரப்பிலிருந்து அந்நாட்டின் எரிசக்தி மற்றும் உமிழ்வு குறைப்பு அமைச்சர் ஆங்கஸ் டைலர் ஆகியோர் தலைமை வகித்தனர்.

---

**10.** **PM கதி சக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

அ) திறன் மேம்பாடு



**ஆ) உட்கட்டமைப்பு மேம்பாடு ☑**

இ) சுகாதார மேம்பாடு

ஈ) ஏற்றுமதி வளர்ச்சி

- ✓ 16 அமைச்சகங்களை ஒன்றிணைத்து, ஒருங்கிணைந்த திட்டமிடல் & உட்கட்டமைப்பு இணைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும் 'கதிசக்தி' என்பது ஒரு டிஜிட்டல் தளமாகும்.
- ✓ சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகத்தின் படி, பிரதமர் கதிசக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தின்கீழ் 22 பசுமையான விரைவுச்சாலைகள், பிற நெடுஞ்சாலைகள் உட்பட 23 முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் 35 பன்மாதிரி போக்குவரவுப் பூங்காக்கள் ஆகியவற்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வளர்ச்சிக்கான என்ஜினாக வடகிழக்கு இந்தியா: பிரதமர் மோடி**

21ஆம் நூற்றாண்டில் நாட்டின் வளர்ச்சிக்கான என்ஜினாக வடகிழக்கு இந்தியா இருக்கும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த 1987ஆம் ஆண்டு பிப்.20ஆம் தேதி யூனியன் பிரதேசமாக இருந்த அருணாசல பிரதேசம் மாநில அந்தஸ்து பெற்றது. அத்துடன் அந்த மாநிலத்துக்கு அருணாசல பிரதேசம் என்று பெயர்சூட்டப்பட்டு 50 ஆண்டுகளாகியுள்ளது.

**தமிழகத்தைச் சேர்ந்த முதல் ஆளுநருக்கு விருது:**

அருணாசல பிரதேசத்தின் முதல் துணைநிலை ஆளுநராக பதவி வகித்தவர் காலஞ்சென்ற கே.ஏ.ஏ.ராஜா. தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அருணாசல பிரதேசம் யூனியன் பிரதேசமாக இருந்தபோது, அதன் சமூக-பொருளாதார மற்றும் நிர்வாக வளர்ச்சிக்காக கே.ஏ.ஏ.ராஜா அளப்பரிய பங்களிப்பை வழங்கினார். அவருக்கு அருணாசல பிரதேசத்தின் உயரிய விருதான 'அருணாசல் ரத்னா' வழங்க முடிவு செய்யப்பட்டது. அந்த விருதை மாநிலத்தின் தற்போதைய ஆளுநர் பி.டி.மிஸ்ரா கே.ஏ.ஏ.ராஜாவின் மூத்தமகள் விஜயலட்சுமியிடம் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

---

**2. மெட்ரோ இரயில் திட்டங்களை அமல்படுத்த தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களிடமிருந்து 16 திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன: மத்திய அமைச்சர் தகவல்**

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதில் அளித்த மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறியதாவது:

நகர்ப்புற மேம்பாட்டில், நகர்ப்புற போக்குவரத்து ஒருங்கிணைந்த பகுதி. இது மாநிலம் சம்பந்தப்பட்ட விஷயம். இதனால், மெட்ரோ இரயில் திட்டங்கள் உட்பட நகர்ப்புற போக்குவரத்து கட்மைப்பை உருவாக்குவது.

அதற்கான நிதியை திரட்டுவது மாநில அரசுகளின் பொறுப்பு. மெட்ரோ இரயில் கொள்கை 2017இன்படி, நகரங்களில் இது போன்ற திட்டங்களுக்கான நிதி

உதவியை, திட்டங்களின் சாத்தியம், நிதி ஆதாரம், மாநிலங்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய அரசு வழங்கிவருகிறது. மத்திய அரசின் நிதி உதவிக்காக குஜராத் அரசு எந்த புதிய மெட்ரோ இரயில் திட்டத்தையும் சமர்பிக்கவில்லை.

தமிழ்நாடு, தில்லி, மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஹரியானா, உத்தரகாண்ட், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருந்து மெட்ரோ இரயில் திட்டங்களை அமல்படுத்த 16 திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.

---

### 3. குடிதண்ணீர் தரத்தை பரிசோதிப்பதற்காக தமிழ்நாட்டில் உள்ள ஆய்வகங்கள் குறித்த விவரங்கள்

நாடாளுமன்றத்தின் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய ஜல் சக்தி இணை அமைச்சர் திரு. ப்ரகலாத் சிங் படேல், கீழ்காணும் தகவல்களை வெளியிட்டார்.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் அளித்துள்ள தகவல்களின் படி, மாநிலம், மாவட்டம், துணைப்பிரிவு மற்றும்/அல்லது வட்ட அளவில் 2021 குடிநீர் தர சோதனை ஆய்வகங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழாய் நீர் இணைப்புக்கள் குறித்த தகவல்கள் மாநிலம்/யூனியன் பிரதேசங்கள், மாவட்டம் மற்றும் கிராமம் வாரியாக ஜல் ஜீவன் இயக்கத்தின் தகவல் பலகை இணைப்பான https://ejalshakti.gov.in/jjmreport/JJMIndia.aspx எனும் முகவரியில் கிடைக்கிறது:

தமிழ்நாட்டில் மாநில அளவில் 1 ஆய்வகமும், மாவட்ட அளவில் 31 ஆய்வகங்களும், துணைப்பிரிவு மற்றும்/அல்லது வட்ட அளவில் 81 ஆய்வகங்களும் என மாநிலம் முழுவதும் 113 ஆய்வகங்கள் உள்ளன.

2019 ஆகஸ்ட் 15 அன்று தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் 126.89 லட்சம் வீடுகளும், அவற்றில் 21.76 லட்சம் வீடுகளில் குடிநீர் குழாய் இணைப்புக்களும் இருந்த நிலையில், 29.21 லட்சம் வீடுகளில் தற்போது குடிநீர் குழாய் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

### 4. ஸ்வாமித்வா திட்டத்தின் நிலை: தமிழ்நாடு குறித்த விவரங்கள்

நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த பஞ்சாயத்து ராஜ் இணை அமைச்சர் கபில் மோரேஷ்வர் பாடீல் கீழ்காணும் தகவல்களை வழங்கினார்.

கிராமப்புற பகுதிகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஆய்வு செய்து வரைபடமிடுதலுக்கான மத்திய திட்டமான ஸ்வாமித்வா, 2020–21–ம் நிதியாண்டில் தொடங்கப்பட்டது. கிராமங்களில் உள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு சொத்து அட்டைகள்/ஆவணங்கள் வழங்குவதன் மூலம் சொத்துக்கான உரிமையை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

பஞ்சாயத்துராஜ் அமைச்சகம், இந்திய ஆய்வு அமைப்பு, மாநில வருவாய் துறை, மாநில பஞ்சாயத்துராஜ் துறை, மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன. இத்திட்டத்திற்காக இதுவரை 29 மாநிலங்கள் சர்வே ஆஃப் இந்தியா எனப்படும் இந்திய ஆய்வு அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

நாடு முழுவதும் 103,644 கிராமங்களில் ட்ரோன் விமானங்கள் இயக்கப்பட்டு, 28,072 கிராமங்களில் 36,56,173 எண்ணிக்கையிலான சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 2 கிராமங்களிலும், புதுச்சேரியில் 19 கிராமங்களிலும் இத்திட்டத்தின் கீழ் ட்ரோன் விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன.

---

### 5. தமிழ்நாடு மற்றும் அதன் சாத்தியமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை ஆராய்தல்: இந்தியா–ஜப்பான் இடையே இணைய கருத்தரங்கு

சுதந்திர இந்தியாவின் 75ஆம் ஆண்டு தின கொண்டாட்டம் மற்றும் இந்தியா–ஜப்பான் தூதரக உறவின் 70ஆவது ஆண்டை முன்னிட்டு சென்னையில் உள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி வாரிய (APEDA) அலுவலகம், தமிழ்நாடு மற்றும் அதன் சாத்தியமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை ஆராய்தல் குறித்த இந்தியா – ஜப்பான் இணைய கருத்தரங்கை இன்று நடத்தியது.

இந்த இணைய கருத்தரங்கு, முருங்கை, செவ்வாழை, தினைகள், மூலிகைகள், மா மற்றும் அவற்றின் மதிப்பு கூட்டு தயாரிப்புகள், கொய்யா, மாதுளை, நெல்லி மற்றும் எலுமிச்சைபோன்ற தமிழ்நாட்டின் ஏற்றுமதிக்கு சாத்திய –மான வேளாண் பொருட்கள்மீது கவனம் செலுத்தியது.

---

**1. எந்த நாட்டைச்சேர்ந்த அறிவியலாளர்கள் 59 MJ நீடித்த ஆற்றலை உருவாக்கி அணுக்கரு இணைவு ஆற்றலில் மைல்கல் சாதனையை எட்டியுள்ளனர்?**



அ) அமெரிக்கா

ஆ) சீனா

இ) இந்தியா


**ஈ) UK ☑**

✓ UK'இல் உள்ள அறிவியலாளர்கள் அணுக்கரு இணைவு ஆற்றலை உற்பத்தி செய்வதில் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளனர். சூரியனில் ஆற்றல் உற்பத்தி செய்யப்படும் முறையை இது பின்பற்றுகிறது.

✓ மத்திய இங்கிலாந்தில் உள்ள Joint European Torus (JET) வசதியிலுள்ள ஒரு குழு ஒரு பரிசோதனையின் போது 59 மெகா ஜூல்கள் நீடித்த ஆற்றலை உருவாக்கியது. ஒரு கிலோ இணைவு எரிபொருளில் ஒரு கிலோ நிலக்கரி, எண்ணெய் அல்லது எரிவாயுவால் உண்டாக்கப்படும் ஆற்றலைவிட 10 மில்லியன் மடங்கு ஆற்றல் உள்ளது.

---

**2. கல்விநிலைகுறித்த ஆண்டறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?**




அ) NITI ஆயோக்

**ஆ) பிரதம் அறக்கட்டளை ☑**

இ) கல்வி அமைச்சகம்

ஈ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ பிரதம் அறக்கட்டளை ஆண்டுதோறும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை ஆய்வுசெய்வதற்காக பள்ளிகளில் விரிவான ஆய்வை நடத்துகிறது. சமீபத்தில், அது கல்வி நிலைகுறித்த ஆண்டறிக்கையை (ASER, மேற்கு வங்கம்) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, மேற்கு வங்கத்தில் பள்ளி மாணவர்களின் அடிப்படை வாசிப்பு மற்றும் எண் திறன்கள் COVID-19 காலத்தில் குறைந்துள்ளன.

---

**3. எந்த வளரும் நாடு, டிரோன்களை இறக்குமதி செய்ய தடைவிதித்துள்ளது?**



**அ) இந்தியா ☑**

ஆ) இந்தோனேசியா

இ) அர்ஜென்டினா

ஈ) பிரேசில்

✓ இந்திய வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் ஆளில்லா வானூர்திகளை (டிரோன்) இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, ராணுவ மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதற்கு இதில் விலக்களிக்கப்பட்டுள்ளது.

✓ இந்த நடவடிக்கையானது உலகின் தலைசிறந்த டிரோன் தயாரிப்பாளரான சீனாவின் SZ DJI'இன் சந்தையைத் தடுக்கிறது மற்றும் உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவின் உள்ளூர் தொழிற்துறையை ஊக்குவிக்கிறது.

---

**4. 2022 பிப்ரவரி நிதிக்கொள்கைக்குழுக்கூட்டத்திற்குப் பிறகு, புதிய கொள்கை ரெப்போ விகிதம் என்ன?**

அ) 3.75%



**ஆ) 4.00% ☑**

இ) 4.25%

ஈ) 4.50%

✓ ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக்குழு பாலிசி ரெப்போ விகிதத்தை 4 சதவீதமாக மாற்றாமல் இருக்க ஒருமனதாக வாக்களித்துள்ளது. ரிவர்ஸ் ரெப்போ விகிதமும் மாறாமல் 3.35 சதவீதமாக உள்ளது. ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸின் கருத்துப்படி, 'இணக்க' நிலைப்பாடு தேவைப்படும் காலம் வரை தொடரும்.

---

**5. 'நம்ம ஷாலே நன்னா கொடுகே' செயலியானது எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் முன்னெடுப்பாகும்?**

அ) மேற்கு வங்கம்



**ஆ) கர்நாடகா ☑**

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்

✓ கர்நாடக மாநிலத்தின் தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வித்துறை, 'நம்ம ஷாலே நன்னா கொடுகே' என்ற செயலியை உருவாக்கியுள்ளது. இது அரசுப்பள்ளிகளின் உட்கட்டமைப்புத் தேவைகள், ஆசிரியர் பற்றாக்குறை, கற்றல் கருவிகளின் சிறந்த பயன்பாடு மற்றும் பெரு நிறுவன சமூகப்பொறுப்பு நிதியைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. NASA'இன் கூற்றுப்படி, 2022 வரை சுற்றுப்பாதையில் கண்காணிக்கப்பட்ட மொத்த பொருட்களின் எண்ணிக்–கை என்ன?**

அ) 1000

25 000

ஆ) 10000

**இ) 25000 ☑**

ஈ) 50000

✓ NASA'இன் அண்மைய அறிவிப்பின்படி, சுற்றுப்பாதையில் தற்போதுவரை மொத்தம் 25,000 பொருட்கள் கண்காணி–க்கப்பட்டுள்ளன. ஸ்பேஸ்X'இன் Gen2 விரிவாக்கம் 30 ஆயிரம் செயற்கைக்கோள்களை ஏவுவதை உள்ளடக்கி உள்ளது. அது சுற்றுப்பாதையில் கண்காணிக்கப்படும் பொருட்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கும்.

---

**7. ஒரு சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவின் எந்தத்தேசிய பூங்கா, தான் உறிஞ்சும் அளவைவிடவும் அதிக கரியமில வளியை ($CO_2$) வெளியிடுகிறது?**



அ) பக்கே புலிகள் காப்பகம்

**ஆ) காசிரங்கா தேசிய பூங்கா ☑**

இ) நம்தாபா தேசிய பூங்கா

ஈ) குனோ தேசிய பூங்கா

- ✓ ஒரு சமீபத்திய ஆய்வின்படி, அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள காசிரங்கா தேசிய பூங்கா, தான் உறிஞ்சுவதைவிட அதிக கரியமில வாயுவை ($CO_2$) வெளியிடுகிறது. இத்தேசிய பூங்காவில் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் உள்ளது.
- ✓ வழக்கமாக, காடுகள் அவை வெளியிடுவதைவிட அதிக $CO_2$'ஐ உறிஞ்சுகின்றன. இதனால் அவ்விடத்தில் $CO_2$' இன் அளவுஅதிகரித்துவிடும். அப்பகுதியில் மழைப்பொழிவு குறைந்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

---

**8. 'உலக பருப்பு நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) பிப்ரவரி 8

**ஆ) பிப்ரவரி 10 ☑**

இ) பிப்ரவரி 12

ஈ) பிப்ரவரி 15

- ✓ 'உலக பருப்பு நாளானது' ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி.10 அன்று கொண்டாடப்படுகிறது. 2019ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபை, உலகளவில் பருப்பு வகைகளுக்கான விழிப்புணர்வு மற்றும் அணுகலை அதிகரிப்பதற்காக இந் நாளை உருவாக்கியது. "Pulses to empower youth in achieving sustainable agri-food systems" என்பது நடப்பு 2022'இல் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

**9. 'இந்திய அருங்காட்சியகங்களின் மறு–உருவாக்கம்' என்ற உச்சிமாநாட்டை ஏற்பாடுசெய்த மத்திய அமைச்சகம் / நிறுவனம் எது?**

**அ) கலாச்சார அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுலா அமைச்சகம்

இ) NITI ஆயோக்

ஈ) UNESCO

- ✓ "இந்தியாவின் அருங்காட்சியகங்களை மறு–உருவாக்கம்" செய்வதுகுறித்து முதன்முறையாக உலகளாவிய இரு நாள் உச்சிமாநாட்டிற்கு மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. 75ஆவது அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ கட்டடக்கலை மற்றும் செயல்பாட்டுத் தேவைகள், நிர்வாகம், சேகரிப்பு (பராமரிப்பு, பாதுகாப்பு நடைமுறைகள் உட்பட), கல்வி மற்றும் பார்வையாளர் ஈடுபாடு ஆகிய 4 கருப்பொருட்களைக் கொண்டதாக இம்மாநாடு இருக்கும்.

---

**10. 2022ஆம் ஆண்டில் G20'இன் தலைமைப்பொறுப்பை வகிக்கும் நாடு எது?**

அ) இந்தியா

**ஆ) இந்தோனேசியா ☑**

இ) சீனா

ஈ) ஜப்பான்

- ✓ 2022ஆம் ஆண்டில் இந்தோனேசியா G20இன் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது. G20இன் 2ஆவது நிதி மற்றும் மத்திய வங்கிப் பிரதிநிதிகள் கூட்டமானது எதிர்கால தொற்றுநோய்களைச் சமாளிக்க நீண்டகால பொருளாதார மீட்பு உத்தியைக்கொண்ட ஒரு தகவல்தொடர்பு வரைவை உருவாக்கியது.
- ✓ முதலாவது நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் இந்த அறிக்கை வரைவு மேலும் விவாதிக்கப்படும். இந்த ஆண்டு G20இன் கருப்பொருள் "Recover Together, Recover Stronge" என்பதாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அகரமுதலி இயக்ககத்தில் தாய்மொழி நாள் விழா**

தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்பட்டு வரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில், "எப்பொழுதும் முப்பொழுதும் எந்தமிழே!" என்னும் பொருண்மையில் உலகத்தாய்மொழி நாள் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

---

**2. 12 – 18 வயதினருக்கு தடுப்பூசி செலுத்த அனுமதி: மத்திய அரசு**

நாட்டில் 12 – 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கும் கரோனா தடுப்பூசி செலுத்த இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது. 'கோர்பேவாக்ஸ்' என்ற தடுப்பூசியை 12 – 18 வயதுக்குள்பட்ட சிறார்களுக்கு செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் உள்நாட்டு தயாரிப்பான 'கோர்பெவேக்ஸ்' தடுப்பூசிக்கு, அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதியை இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு வழங்கியிருப்பதாக பயாலஜிகல் இ லிட் தெரிவித்துள்ளது. ஏற்கனவே, 16 – 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு 'கோவேக்ஸின்' இரு தவணை தடுப்பூசி செலுத்த அனுமதி வழங்கப்பட்டு, அந்தத்திட்டம் செயல்படுத் –தப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

---

**3. நீலப்பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா – பிரான்ஸ் ஒப்பந்தம்**

நீலப்பொருளாதாரம், கடல்சார் நிர்வாகம் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வழிவகுக்கும் ஒப்பந்தத்தில் இந்தியாவும் பிரான்ஸும் கையொப்பமிட்டுள்ளன.

தென்சீனக்கடல், கிழக்கு சீனக்கடல், இந்தோ–பசிபிக் பிராந்தியம் உள்ளிட்ட பகுதிகளில் சீனா தனது ஆதிக்கத்தை அதிகரித்து வரும் நிலையில், இந்த ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

ஐரோப்பிய நாடான பிரான்ஸுக்கு வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள் –ளார். அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜீன் ஈவ் லெடிரையனை அவர் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

அப்போது, கடல்சார்ந்த நீலப்பொருளாதாரத்தில் இரு நாடுகளுக்கிடையே நிலவும் நல்லுறவை வலுப்படுத்த வழிகாட்டும் ஒப்பந்தம் கையொப்பமானது.

---

### 3. டி20 தரவரிசையில் இந்தியா முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC), டி20 கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்றுமுன் தினம் நடைபெற்ற கடைசி டி20 ஆட்டத்தில் 17 இரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 3 ஆட்டங்கள்கொண்ட தொடரை முழுமையாக 3–0 என கைப்பற்றி கோப்பை –யைவென்ற இந்திய அணி முதலிடத்துக்கு முன்னேறி உள்ளது.

இங்கிலாந்து, இந்தியா அணிகள் மதிப்பீடு புள்ளிகளை (269) ஒரே மாதிரியாக பெற்ற போதிலும் ஒட்டுமொத்த புள்ளிகள் கணக்கில் இந்திய அணி 10,484 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. இங்கிலாந்து 10,474 புள்ளிகளை பெற்று 2ஆம் இடத்தில் உள்ளது.

---

**1. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற கிரிம்சன் ரோஸ் சார்ந்த இனம் எது?**



அ) பூ

**ஆ) பட்டாம்பூச்சி ☑**

இ) பாண்டா

ஈ) பாம்பு

- ✓ கிரிம்சன் ரோஸ் என்பது ஒரு பெரிய பட்டாம்பூச்சியாகும்; அதன் இறக்கைகள் மற்றும் உடலில் கருப்பு, வெள்ளை மற்றும் கருஞ்சிவப்பு நிறங்கள் கலந்திருக்கும். இது ஸ்வாலோடெயில்ஸ் (Papilionidae) குடும்பத்தைச்சேர்ந்தது ஆகும். அவை உள்நாட்டில் அடிக்கடி இடம்பெயர்கின்றன.
- ✓ சமீபத்தில், ஆயிரக்கணக்கான கிரிம்சன் ரோஸ் பட்டாம் பூச்சிகள் இராமேஸ்வரத்தின் தனுஷ்கோடியிலிருந்து தெற்கு முனையில் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலங்கையை நோக்கி பறந்து கொண்டுள்ளன.

---

**2. 'DefExpo–2022' பாதுகாப்பு கண்காட்சி நடைபெறும் இடம் எது?**

அ) கோவா

ஆ) சென்னை

**இ) காந்தி நகர் ☑**

ஈ) வாரணாசி

- ✓ ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் 'DefExpo' என்ற பாதுகாப்பு கண்காட்சியின் நடப்பு 2022ஆம் ஆண்டின் பதிப்பு குஜராத்தின் காந்திநகரில் மார்ச் மாதம் நடைபெற உள்ளது. 900'க்கும் மேற்பட்ட பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் 55 நாடுகள் இதுவரை இந்தக் கண்காட்சியில் தங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்தியுள்ளன.
- ✓ இது ஆசியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு கண்காட்சி எனக் கூறப்படுகிறது. இந்தக் கண்காட்சியின் 2020ஆம் ஆண்டு பதிப்பு லக்னோவில் நடைபெற்றது

---

**3. எச்.ஐ.வி நோயிலிருந்து குணமடைந்த உலகின் முதல் பெண், எச்செயல்முறையின்மூலம் குணமாக்கப்பட்டார்?**

**அ) ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை ☑**



ஆ) ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சை

இ) காசநோய் சிகிச்சை

ஈ) குருதிமாற்றம்

- ✓ உலகில் HIV நோயால் குணமடைந்த மூன்றாவது நபர் என்ற பெருமையை அமெரிக்க பெண்மணி ஒருவர் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. HIVஇலிருந்து குணமான முதல் பெண்ணும் இவர்தான்.
- ✓ தீவிர குருதிப்புற்று நோயாளியான அப்பெண் எய்ட்ஸை உண்டாக்கும் வைரஸுக்கு இயற்கையான எதிர்ப்பைக் கொண்ட ஒருவரிடமிருந்து ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சையைப் பெற்றார். அவரது புற்றுநோய் சிகிச்சையின் ஒருபகுதியாக, இந்தக் குருதிமாற்று அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது.

---

**4. 'PM KUSUM' திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**



ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) விவசாய அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

- ✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது சோலார் பம்புகள் மற்றும் கிரிட் இணைக்கப்பட்ட சோலார் & பிற புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்காக விவசாயிகளுக்காக பிரதமர் கிஸான் உர்ஜா சுரக்ஷா ஈவ் உத்தன் மகாபியன் (PM KUSUM) திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- ✓ சமீபத்தில், மத்திய அரசு 2024ஆம் ஆண்டுக்குள் வேளாண் துறையில் டீசலுக்குப்பதிலாக புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

**5. 'கல்வி நிர்வாகத்தில் புதுமைகள் & நல்ல நடைமுறைக –ளுக்கான தேசிய விருது' யாருக்கு வழங்கப்படுகிறது?**

அ) ஆசிரியர்கள்

**ஆ) கல்வி அதிகாரிகள் ☑**

இ) மாணவ தன்னார்வலர்கள்


ஈ) பள்ளிக்கல்வியில் உள்ள NGO

- ✓ தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவனம் (NIEPA) 'கல்வி நிர்வாகத்தில் புதுமைகள் மற்றும் நல்ல நடைமுறைகளுக்கான தேசிய விருதை' நிறுவியுள்ளது.
- ✓ நாட்டின் 29 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட மற்றும் தொகுதி அளவிலான கல்வி அதிகாரிகளுக்கு ஐந்தாவது தேசிய விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு, நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த விருது அல்லது பாராட்டுச்சான்றிதழைப் பெற்றனர்.

---

**6. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற 'பிராக்ஸிமா டி' என்றால் என்ன?**

அ) புதிய தடுப்பூசி



**ஆ) புதிய புறக்கோள் ☑**

இ) புதிய விண்மீன்

ஈ) புதிய கனிமம்

- ✓ சூரியனுக்கு மிகவருகிலுள்ள நட்சத்திரமான 'பிராக்ஸிமா சென்டாரி'யைச் சுற்றி வரும் ஒரு புதிய புறக்கோளை வானியலாளர்கள் குழு கண்டுபிடித்துள்ளது. 'பிராக்ஸிமா டி' என்று பெயரிடப்பட்ட இந்தப்புறக்கோள், இவ்வமைப்பில் கண்டறியப்பட்ட மூன்றாவது புறக்கோளாகும்.
- ✓ இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புறக்கோள்களில் இது மிகவும் இலகுவானதாக உள்ளது. சிலியில் அமைந்துள்ள ஐரோப்பிய தெற்கு ஆய்வகத்தின் மிகப்பெரிய தொலை நோக்கியை பயன்படுத்தி வானியலாளர்கள் இந்தப் புறக் கோளை கண்டறிந்துள்ளனர்.

---

**7.** நிலையான வெளிகளுக்கான உலகளாவிய USGBC – 2021 பட்டியலில், இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 1ஆவது

**ஆ) 3ஆவது ☑**

இ) 5ஆவது

ஈ) 7ஆவது

✓ நிலையான வெளிகளுக்கான (Sustainable Spaces) அமெரிக்க பசுமைக் கட்டடக் குழுவின் (USGBC) 2021 பட்டியலில் இந்தியா உலக அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இது, கடந்த 2021ஆம் ஆண்டில் ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவத்திற்கான அமெரிக்காவிற்கு வெளியே உள்ள முதல் 10 நாடுகள் மற்றும் பகுதிகளின் தரவரிசையாகும். இந்தியாவில் 1,649 LEED சான்றளிக்கப்பட்ட கட்டிடங்கள் உள்ளன.

---

**8.** NSE அகாதமியுடன் இணைந்து நிதிக்கல்வியறிவை அவசியமான வாழ்க்கைத்திறனாக ஊக்குவிக்கிற இந்திய வங்கி எது?

அ) பஞ்சாப் தேசிய வங்கி

**ஆ) பாரத ஸ்டேட் வங்கி ☑**

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) ஆக்சிஸ் வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கியின் உத்திசார் பயிற்சிப் பிரிவு, NSE அகாதமியுடன் இணைந்து, நிதியியல் கல்வியறிவை அவசியமான வாழ்க்கைத் திறனாக ஊக்குவிக்கிறது.

✓ SBI'இன் முதல் 5 பெரிய ஆன்லைன் ஓப்பன் கோர்ஸ்கள் NSE அறிவு மைய தளத்தில் உள்ளன. வங்கி மற்றும் நிதிச் சேவைகளின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவைச் சேகரிக்க இவை உதவுகின்றன.

---

**9.** ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பின் தலைமையகம் எங்குள்ளது?

**அ) ஜெனீவா ☑**

ஆ) வாஷிங்டன்

இ) பாரிஸ்

ஈ) பிரஸ்ஸல்ஸ்

✓ ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பு என்பது ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இது, கடந்த 1964'இல் சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவில் நிறுவப்பட்டது. வளரும் நாடுகளிடையே வர்த்தகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இது உள்ளது.

✓ சமீபத்தில், உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 2022ஆம் ஆண்டில் 0.6%ஆகக் குறைந்துள்ளது. இது தொற்றுக்கு முந்தைய நிலைகளில் 0.7%ஆக இருந்தது.

---

**10.** சமீபத்தில் போலியோ நோய்த்தாக்குதலுக்கு ஆளான ஆப்பிரிக்க நாடு எது?

**அ) மலாவி ☑**



ஆ) தென்னாப்பிரிக்கா

இ) நைஜீரியா

ஈ) காங்கோ மக்களாட்சிக் குடியரசு

✓ நிலத்தால் சூழப்பட்ட ஆப்பிரிக்க நாடான மலாவி சமீபத்தில் போலியோ தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவித்தது. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, இந்தப் பாதிப்பு ஆப்பிரிக்க கண்டத்தில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் முதல் பாதிப்பாகும். இது, WPV1 (வகை 1 வைல்ட் போலியோ வைரஸ்) வகையைச் சார்ந்ததாகும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வேலைவாய்ப்பில்லா வளர்ச்சி! | இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் கணிப்பு பற்றிய தலையங்கம்**

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சென்டர் ஃபார் மானிடரிங் இண்டியன் எகானமி) என்கிற ஆய்வு நிறுவன கணிப்பின்படி, கடந்த டிசம்பர் மாதம் 7.9%–ஆக இருந்த வேலையின்மை விகிதம், ஜனவரி மாதத்தில் 8%–ஆக அதிகரித்திருக்கிறது. நவம்பர் மாதம் 8.2%–ஆக இருந்த நகர்ப்புற வேலையின்மை, டிசம்பரில் 9.3%–ஆகவும், கிராமப்புற வேலையின்மை 6.4%–ஆக இருந்தது 7.3%–ஆகவும் அதிகரித்திருக்கிறது.

மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, 2020–இல் வேலைவாய்ப்பின்மையால் உயிரை மாய்த்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை 3,548 என்று அரசு தெரிவித்திருக்கிறது. 2018–இல் 2,741 இளைஞர்களும், 2019–இல் 2,851 இளைஞர்களும் வேலைவாய்ப்பு இன்மையால் தற்கொலை செய்துகொண்டனர் என்கிற புள்ளிவிவரமும் அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளிவிவரப்படி, மிக அதிகமான வேலைவாய்ப்பின்மைத் தற்கொலைகள் கர்நாடகம் (720), மகாராஷ்டிரம் (625), தமிழ்நாடு (336) ஆகிய மூன்று மாநிலங்களில்தான் காணப்படுகின்றன. மத்திய – மாநில அரசுகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க, போதுமான முனைப்பு காட்டுவதில்லை. அறிக்கைகள் வெளிவருகின்றனவே தவிர, புதிய வேலைவாய்ப்புகள் உருவானதாகத் தெரியவில்லை.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் ஆய்வின்படி, 2021 டிசம்பரில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 5.3 கோடி. மேலும் 1.7 கோடி பேர் வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். உலக வங்கியின் புள்ளிவிவரப்படி, இந்தியாவில், வேலை செய்ய உகந்த வயதினரில் 43% பேர் மட்டுமே அதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதுவே பாகிஸ்தானில் 48%, வங்க தேசத்தில் 58%. வேலை செய்யும் வயதிலான மக்கள்தொகையினர் 2021–31–இல் ஆண்டொன்றுக்கு 97 லட்சம் என்கிற அளவிலும், 2031–41–இல் 42 லட்சம் என்கிற அளவிலும் மேலும் அதிகரிப்பார்கள் என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தியா மிகப்பெரிய வேலைவாய்ப்பு பிரச்னையை எதிர்கொள்கிறது. இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் படித்த 60% மாணவர்களுக்குத்தான் உடனடியாக வேலை கிடைக்கிறது. 2000 முதல் 2008 வரை தொடங்கப்பட்ட பொறியியல், நிர்வாக மேலாண்மை கல்லூரிகள் பரவலாக மூடப்படுகின்றன.

வேலைவாய்ப்புகள் இல்லை என்பது மட்டுமல்ல, கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புகள் கிடைப்பதில்லை என்பதும் மிகப் பெரிய பிரச்னை. சமீபத்தில் உத்தர பிரதேசத்திலும், பிகாரிலும் ரயில்வே வேலைக்கான தேர்வுக்கு வந்த இளைஞர்கள் நடத்திய வன்முறைப் போராட்டம் அதன் வெளிப்பாடே.

2018-19-இல் 2,83,747 காலிப் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பை ரயில்வே வெளியிட்டது. அதற்கு நான்கு கோடிக்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்தன. 1.32 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

தொழில்நுட்பம் சாராத சாதாரண 35,000 வேலைகளுக்கான பணியிடங்களுக்கு 1.25 கோடி பேர் விண்ணப்பித்திருந்தனர். இரண்டு ஆண்டுக்கு முன்பு அதற்கான தேர்வு நடத்தப்பட்டு கடந்த டிசம்பர் – ஜனவரி மாதங்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அந்த முடிவுகள் முதல் சுற்று தேர்வுக்கானவை என்றும், விரைவிலேயே அடுத்தச் சுற்று தேர்வு நடைபெறும் என்றும் ரயில்வே அறிவித்ததுதான் வன்முறைப் போராட்டம் வெடிக்கக் காரணமானது.

விண்ணப்பித்தவர்களில் பலரும், குறைந்த ஊதியமுள்ள கடைநிலை ஊழியர் பணிக்காக விண்ணப்பித்திருப்பவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் ஏழ்மையான பின்னணியில் இருந்து வருபவர்கள். விண்ணப்பத்துக்கு ரூ.500 முதல் ரூ.2,500 வரை கட்டணம் நிர்ணயம் செய்து பல்லாயிரம் கோடி ரூபாய் வசூலித்திருக்கிறது ரயில்வே நிர்வாகம்.

இதன் பின்னணியில் பல கேள்விகளுக்கு விடை அளிக்க இந்திய ரயில்வேத் துறை கடமைப்பட்டிருக்கிறது. பணியிடங்களை நிரப்புவதற்கு மூன்று ஆண்டு இடைவெளி தேவைதானா? சாதாரண அடிமட்டப் பணிகளுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தேர்வுகள் எதற்கு? ரயில்வே நிர்வாகம் ஆண்டுதோறும் பணியிடங்களை நிரப்பாமல் மொத்தமாக தேர்வுகள் நடத்தி நிரப்புவது ஏன்? இதுபோன்ற பல கேள்விகளை எழுப்புகிறது அந்த வன்முறை நிகழ்வு.

காவல்துறையில் காவலர் பணியிடங்களுக்கும், ஏனைய அரசுத்துறைகளில் கடைநிலை ஊழியர் பணியிடங்களுக்கும் ஆயிரக்கணக்கான பொறியியல், நிர்வாகவியல், முதுநிலை பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிப்பது, பரவலாக இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் காணப்படுகிறது. அரசுத்துறை தவிர்த்த தனியார் துறை வேலைவாய்ப்பு என்பதும்கூட, கொள்ளை நோய்த்தொற்றுக்குப் பிறகு குறைந்துவிட்டது.

'கிக்' எனப்படும் ஓலா, உபேர் ஓட்டுநர்கள், ஸ்விக்கி, ஜொமேட்டோ உணவு வினியோக ஊழியர்கள் போன்றோர் "கிக்' தொழிலாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அதாவது தின ஊதியமோ, வார ஊதியமோ, மாத ஊதியமோ இல்லாமல் ஒவ்வொரு பணிக்கும் ஊதியம் பெறுபவர்கள் இவர்கள். இதற்கான வேலைவாய்ப்பு அதிகரித்திருப்பதால் வேலையின்மை அகன்றுவிட்டதாகக் கருத முடியாது.

பொருளாதார வளர்ச்சி என்பது இந்தியா போன்ற மக்கள்தொகை அதிகமுள்ள நாடுகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதாக இல்லாமல் போனால், வளர்ச்சி என்பது கானல் நீராகத்தான் இருக்குமே தவிர, நிஜமான வளர்ச்சியாக இருக்காது. இந்தியா எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால் வேலைவாய்ப்பின்மை என்பதை உணர்ந்து மத்திய – மாநில ஆட்சியாளர்கள் செயல்படாமல் போனால், விளைவு விபரீதமாக இருக்கும்.

---

**2. 'எங்கும் அறிவியல்': டிஆர்டிஓ கண்காட்சியில் "2047-க்கான திட்டம்"**

சுதந்திரத்தின் நூற்றாண்டில் (2047) தொழில்நுட்பங்கள் குறித்த கண்காட்சியை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சென்னை உள்ளிட்ட 16 நகரங்களில் அமைத்துள்ளது. வருகின்ற பிப்ரவரி 28 – ஆம் தேதி வரை இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையில், கொண்டாடப்படும் சுதந்திரத்தின் அம்ருத் மகோத்சவ் விழாவையொட்டி நாடு முழுவதும் "எங்கும் அறிவியல்" நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. அறிவியல், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை பறைசாற்றும் அறிவியல் நிகழ்ச்சி, நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பிப்ரவரி 22 முதல் 28-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பும் பங்கேற்கிறது.

இதில் டிஆர்டிஓ "2047-க்கான திட்டம்" என்னும் கருப்பொருளில் சென்னை, தில்லி, ஆக்ரா, பெங்களூரு, உள்ளிட்ட 16 நகரங்களில் தனது எதிர்கால திட்டங்களுக்கான கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. மேலும், டிஆர்டிஓ மேற்கொண்டுள்ள பணிகளை வெளிப்படுத்தும் வாய்ப்பாக இந்தக் கண்காட்சிகள் அமைந்துள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

**1. 6ஆவது ஆப்பிரிக்க ஒன்றியம் – ஐரோப்பிய ஒன்றியம் உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?**



**அ) பிரஸ்ஸல்ஸ் ☑**

ஆ) கெய்ரோ

இ) ரோம்

ஈ) ஜோகன்னஸ்பர்க்

✓ 6ஆவது ஆப்பிரிக்க ஒன்றிய – ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு 2022 பிப்.17–18 ஆகிய தேதிகளில் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்றது. இதில் ஆப்பிரிக்க ஒன்றிய & ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

✓ கூட்டத்திற்கு ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர், செனகல் அதிபர் மற்றும் AU'இன் தலைவர் ஆகியோர் தலைமை தாங்கினர். இவ்வுச்சிமாநாட்டின்போது, மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மைக்கான கூட்டுப்பார்வைக்கு தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

---

**2. 2022இல் பாகிஸ்தானின் 2ஆவது உயரிய குடிமக்கள் விருதான 'ஹிலால்–இ–பாகிஸ்தான்' விருது கீழ்காணும் யாருக்கு வழங்கப்பட்டது?**



**அ) பில் கேட்ஸ் ☑**

ஆ) மலாலா யூசுப்சாய்

இ) எலோன் மஸ்க்

ஈ) சி ஜின்பிங்

✓ கொடையாளியும் மைக்ரோசாப்டின் நிறுவனருமான பில் கேட்ஸுக்கு பாகிஸ்தானின் 2ஆவது உயரிய குடிமக்கள் விருதான 'ஹிலால்–இ–பாகிஸ்தான்' வழங்கப்பட்டுள்ளது. பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் இணைத் தலைவராக அவர் இந்த விருதைப்பெறுகிறார்.

✓ இளம்பிள்ளைவாதத்தை ஒழிப்பதற்கும் பாகிஸ்தானில் வறுமையைக்குறைப்பதற்குமான அவ்வறக்கட்டளையின் தொடர்ச்சியான முயற்சிகளுக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**3. பிளாஸ்டிக் பேக்கேஜிங்கைப் பொறுத்து, 'EPR' என்பது எதைக் குறிக்கிறது?**



**அ) Extended Producer Responsibility ☑**

ஆ) Environment Protection Responsibility

இ) Ecological Protection Role

ஈ) Epoxy Poly Rehydroxy–sulphate

✓ நெகிழிக்கழிவு நிர்வாக விதிகள் 2016'இன்கீழ் பிளாஸ்டிக் பேக்கேஜிங்கில் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறு–ப்பு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்ற அமைச்சகம் அறிவித்துள்ளது.

✓ குறைந்தபட்ச பயன்பாட்டையும், அதிகபட்ச மாசினையும் கொண்ட 1 முறை பயன்படுத்தும் நெகிழிப்பொருட்களை 2022 ஜூலை 1 முதல் தடைசெய்வதுடன் இணைந்ததாக இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன.

---

**4. 'எரிசக்தி புள்ளிவிவரங்கள் இந்தியா – 2022' என்ற தலைப்பில் வெளியீட்டை வெளியிட்ட அமைச்சகம் எது?**

**அ) புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகம் ☑**

ஆ) எரிசக்தி அமைச்சகம்

இ) நிலக்கரி அமைச்சகம்

ஈ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

✓ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம், 'எரிசக்தி புள்ளிவிவரங்கள் இந்தியா–2022' வெளியீட்டின் 28வது பதிப்பை வெளியிட்டது. இது எரிசக்தி வளங்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் களஞ்சியமாக உள்ளது.

✓ நீடித்த ஆற்றலமைப்புகளில் இந்தியாவின் அர்ப்பணிப்பு மற்றும் முன்னேற்றத்தை இது எடுத்துக் காட்டுகிறது. இவ் வெளியீடு உற்பத்தி, நுகர்வு, வர்த்தகம், ஆற்றல் சமநிலை போன்றவற்றை முன்வைக்கிறது. நிலக்கரி அமைச்சகம், பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம், எரிசக்தி அமைச்சகம், புதிய &புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஆகியவற்றிலிருந்து தரவு சேகரிக்கப்பட்டது.

---

**5. நடுவண் அரசு பட்ஜெட் 2022–23'இன்படி, கூட்டுறவு சங்கங்களுக்கான புதிய மாற்று குறைந்தபட்ச வரிவிகிதம் எவ்வளவு?**




அ) 10%

ஆ) 12.5%

**இ) 15% ☑**

ஈ) 17.5%

✓ மத்திய அரசு பட்ஜெட் 2022–23இல் கூட்டுறவு சங்கங்கள் செலுத்தவேண்டிய மாற்று குறைந்தபட்ச வரி 15%ஆக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, கூட்டுறவு சங்கங்கள் இதனை 18.5 சதவீதமாக செலுத்தி வருகின்றன. அதே நேரத்தில் நிறுவனங்கள் 15%ஆக செலுத்தி வருகின்றன.

✓ ₹1 கோடி முதல் ₹10 கோடி வரை மொத்த வருமானம் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு கூடுதல் கட்டணத்தை 12 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைக்க இந்தப் பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டுள்ளது.

---

**6. புதிதாக அறிவிக்கப்பட்ட 'துடிவினை சிற்றூர்கள் திட்டத்தின்' பயனாளிகள், எவ்வகையான சிற்றூர்களைச் சார்ந்தோராக இருப்பர்?**



அ) கடலோர சிற்றூர்கள்

**ஆ) எல்லைப்புறச் சிற்றூர்கள் ☑**

இ) மலைப்பாங்கான சிற்றூர்கள்

ஈ) ODF சிற்றூர்கள்

✓ இந்திய எல்லையில் குறிப்பாக சீன எல்லையில் அமைந்து உள்ள சிற்றூர்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தலை நோக்கமாகக்கொண்ட 'Vibrant Villages' என்னும் புதிய திட்டத்தை மத்திய பட்ஜெட் அறிவித்துள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ், கூடுதல் நிதி அளிக்கப்படுவதோடு, ஏற்கனவேயுள்ள திட்டங்கள் ஒன்றிணைக்கப்படும். வீடுகள், சுற்றுலா மையங்கள், சாலை இணைப்பு, பரவலாக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குதல்,

தூர்தர்ஷன் மற்றும் கல்வித்தொலைக்காட்சிகளுக்கான DTH அணுகல் மற்றும் வாழ்வாதார உதவி இதிலடங்கும்.

---

**7. உலக வானொலி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




**அ) பிப்ரவரி 13 ☑**

ஆ) பிப்ரவரி 14

இ) பிப்ரவரி 15

ஈ) பிப்ரவரி 16

✓ 'உலக வானொலி நாளானது ஆண்டுதோறும் பிப்ரவரி.13 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது முதன்முதலில் கடந்த 2011இல் யுனெஸ்கோவின் உறுப்பு நாடுகளால் அறிவிக்கப்பட்டது. 2012இல் ஐநா பொதுச்சபை இம்முன்மொழிவை ஏற்றுக்கொண்டது. 2022இல் வரும் உலக வானொலி நாளுக்கானக்கருப்பொருள் 'வானொலி மற்றும் நம்பிக்கை (Radio and Trust)" என்பதாகும்.

---

**8. 2022 பிப்ரவரியில் இந்தியா எந்த நாட்டுடன் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



**அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஆ) சீனா

இ) பிரேஸில்

ஈ) ரஷ்யா

✓ இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் (UAE) சமீபத்தில் ஒரு விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் (CEPA) கையெழுத்திட்டன. இருநாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி & இறக்குமதி ஆகிய இரண்டிலும் கிட்டத்தட்ட 90 சதவீத வர்த்தகத்திற்கு இது பயனளிக்கும்.

✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தங்கத்திற்கு இந்தியா வரிச்சலுகைகளை வழங்கியுள்ளது. அதேவேளையில் இந்திய ஏற்றுமதியாளர்களும் தங்களது நகைகளுக்கு 0% வரி செலுத்துவார்கள்.

---

**9. இந்தியா, எந்த நாட்டிடமிருந்து 100,000 டன் சோயா எண்ணெயை இறக்குமதி செய்து சாதனை படைத்தது?**



அ) ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ) அமெரிக்கா ☑**

இ) மலேசியா

ஈ) ஆஸ்திரேலியா

✓ வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னமெரிக்காவில் இருந்து வரத்து குறைவாக இருப்பதால், இந்திய வர்த்தகர்கள் அமெரிக்காவிலிருந்து நூறாயிரம் (100,000) டன் சோயா எண்ணெயை இறக்குமதி செய்து சாதனை படைத்து உள்ளனர். பனையெண்ணெயின் விலையேற்றத்துக்கு இடையே இந்த இறக்குமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

**10. உலக வங்கியின் 'REWARD' திட்டத்தின் நோக்கம் என்ன?**

அ) பள்ளிக்கல்வியை மேம்படுத்துதல்

**ஆ) நீர்ப்பிடிப்பு மேலாண்மை ☑**

இ) திடக்கழிவு மேலாண்மை

ஈ) உட்கட்டமைப்பு மேம்பாடு

✓ இந்திய அரசு, கர்நாடகா மற்றும் ஒடிஸா மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி ஆகியவை 115 மில்லியன் அமெரிக்க டாலர் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன. இத்திட்டத்தின் பெயர் 'REWARD' (Rejuvenating Watersheds for Agricultural Resilience through Innovative Development Programme). தேசிய மற்றும் மாநில நிறுவனங்கள் நவீன நீர்ப்பிடிப்பு மேலாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதற்கு இது உதவும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. அனைத்து வகை கரோனாவுக்கும் ஒரே தடுப்பூசி**

கரோனா தீநுண்மிகள் எத்தகைய உருமாற்றம் அடைந்தாலும் அதிலிருந்து தற்காக்கும் வகையிலான ஒரே தடுப்பூசியைக் கண்டறியும் ஆராய்ச்சிகள் முதல்கட்ட நிலையில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி டாக்டர் சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார்.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் அதனை பயன்பாட்டுக்கு கொண்டுவர முயன்று வருவதாகவும் அவர் கூறினார்.

கரோனா தொற்றைக் கட்டுப்படுத்த தற்போது உலகம் முழுவதும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் கோவேக்ஸின், கோவிஷீல்ட், ஸ்புட்னிக் உள்ளிட்ட தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன.

இரு தவணைகளாக அவற்றை செலுத்திக் கொண்டாலும், உருமாற்றமடைந்த புதிய வகை COVID பாதிப்பு வராமல் அதனால் தடுக்க இயலாது. அதேவேளையில், நோய்த் தொற்று தீவிரமடையாமல் தடுப்பூசிகள் உதவுகின்றன.

இந்நிலையில், அனைத்து வகை கரோனா பாதிப்பையும் தடுக்கவல்ல சிறப்பு கரோனா தடுப்பூசியை உருவாக்கும் பணிகளை உலக சுகாதார அமைப்பு முன்னெடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைமை விஞ்ஞானி Dr சௌமியா சுவாமிநாதன் பகிர்ந்துகொண்ட தகவல்:

COVID தொற்றை வேரறுப்பது என்பது இயலாத காரியம். அதேவேளையில் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்கலாம். புதிய உருமாற்றங்கள் ஆகாமல் ஓரளவு தடுக்கலாம். ஒருவேளை உருமாற்றங்கள் நிகழ்ந்தால் அவை மிகசாதாரணமான பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும் என்பதையும் நாம் திட்டவட்டமாகக் கூற இயலாது. தற்போது பயன்பாட்டில் உள்ள கரோனா தடுப்பூசிகள் புதிய பாதிப்பு வராமல் தடுக்காவிட்டாலும், அதனால் தீவிர நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும் என்பது உறுதி.

இதற்கு ஒரே தீர்வு அனைத்து வகையான கரோனா பாதிப்புகளுக்கும் ஒரே தடுப்பூசியை உருவாக்குவது மட்டும்தான். அதற்கான ஆராய்ச்சிகளும், பணிகளும் ஆரம்பநிலையில் உள்ளன. அதன் பொருட்டு சர்வதேச தரவுகள், ஆய்வுகள் மற்றும் மருத்துவ நுட்பங்களைத் திரட்டி வருகிறோம்.

அடுத்த 4லிருந்து 5 ஆண்டுகளுக்குள் கரோனாவுக்கான ஒரே தடுப்பூசி பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

கரோனா தொற்று அனைவருக்கும் வந்து போனால் அதற்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றல் உருவாகிவிடும் என்ற பொதுக்கருத்து நிலவுகிறது. அது முற்றிலும் தவறு. தடுப்பூசிகளைக்கொண்டு மட்டுமே எதிர்ப்பாற்றலை வளர்ப்பது சாத்தியம். ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் போதிய அளவில் கரோனா தடுப்பூசிகள் கிடைப்பதில்லை. இதனால், அங்கிருந்து தீநுண்மி உருமாறி மீண்டும் உலகம் முழுவதும் பரவியது. தடுப்பூசி விநியோகத்தில் நீடிக்கும் சமநிலையற்ற தன்மையைப் போக்க உலக சுகாதார அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நிகழாண்டுக்குள் உலகின் 70 சதவீத நாடுகளில் இரு தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது எங்களது இலக்கு. அதனைக் கருத்தில்கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

கரோனா பெருந்தொற்று உணர்த்திய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகள் இனி வரும் காலத்தில் மருத்துவத் துறையில் அதிக முதலீடுகளை மேற்கொள்வது அவசியம். மருத்துவக் கட்டமைப்பு, ஆராய்ச்சி, பயிற்சி உட்பட அனைத்து விஷயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார் டாக்டர் சௌமியா சுவாமிநாதன்.

---

**2. தமிழகத்தில் 188 புதிய அவசரகால வாகன சேவை: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்**

தமிழகத்தில் 188 புதிய அவசரகால வாகன சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், ஐம்பது இலட்சமாவது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தையும் அவர் அளித்தார்.

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டமானது கடந்த ஆகஸ்டில் தொடக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டமானது 50 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு இன்று அனைத்து இடங்களிலும் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், கள அளவில் 10,969 பெண் சுகாதாரத் தன்னார்வலர்களும், 385 இயன்முறை மருத்துவர்களும், 385 நோய் ஆதரவுச் செவிலியர்களும், 4 ஆயிரத்து 848 இடைநிலை சுகாதாரச் சேவையாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டத்தின்படி இதுவரை 50 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். ஐம்பது இலட்சமாவது பயனாளிக்கு மருந்துப் பெட்டகத்தை முதல்வர் அளித்தார்.

**இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48** திட்டத்தின் கீழ் இதுவரை 21,762 பேர் பயன் பெற்றுள்ளனர்.

**அவசரகால ஊர்திகள்:** பொதுமக்களின் உயிரைக்காக்கும் வகையில் 108 அவசரகால ஊர்திசேவைத்திட்டம் 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், 1,303 அவசர கால ஊர்திகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில், மேலும் புதிதாக 188 அவசரகால ஊர்திகளின் சேவையை முதல்வர் தொடக்கி வைத்தார்.

---

**3. கடற்பசு பாதுகாப்பகம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கி அரசாணை வெளியீடு**

தமிழகத்தில் மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா கடல் பகுதியில் காணப்படும் கடற்பசுக்களுக்கான பாதுகாப்பகம் அமைக்க ₹5 கோடி நிதி ஒதுக்கி வனத்துறை அரசாணை வெளியிட்டுள்ளது.

கடல் மாசு மற்றும் கடற்புல் படுகைகள் அழிக்கப்படுவதால் கடற்பசு இனம் சமீப காலங்களில் அழிந்து வருகின்றன. இதைப் பாதுகாக்கும் பொருட்டு இந்தியாவின் முதல் கடல் பசு பாதுகாப்பகம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடா கடற்பகுதியில் அமைக்கப்படும் என்று கடந்த சட்டப்பேரவைக்கூட்டத்தொடரில் வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

கடற்பசு இனத்தைக்காக்கும் நோக்கில் அமைக்கப்படும் இந்தப் பாதுகாப்பகம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடாவில் காணப்படும் பல வகையான மீன்கள், ஆமைகள், கடல் தாவரங்கள் ஆகிய கடல் உயிர்ப்பன்மை –யத்தை பாதுகாக்க உதவும் என இயற்கை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

---

**4. 24-02-2022 – தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் 'புரட்சித்தலைவி' செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 74ஆவது பிறந்தநாள்.**

---

**5. சதுரங்க சாதனை! | பிரக்ஞானந்தாவின் வெற்றி குறித்த தலையங்கம்**

ஒட்டுமொத்த உலகத்தையும் தமிழகத்தை நோக்கித் திரும்பி பார்க்க வைத்திருக்கிறார் பிரக்ஞானந்தா என்கிற 16 வயதுச் சிறுவன். ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் ஆன்லைன் ரேபிட் செஸ் போட்டியில் நார்வேயை சேர்ந்த உலக சாம்பியன் மேக்னஸ் கார்ல்செனை அவர் தோற்கடித்திருப்பது சாதனை வெற்றி.

16 வீரர்கள் பங்குபெறும் ரேபிட் பார்மெட் இணையவழி செஸ் போட்டியில் பிரக்ஞானந்தா இந்த சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்.

கடந்த ஆண்டு செஸ் கிளாஸிக் பந்தயத்தில் இதே மேக்னஸ் கார்ல்செனுடனான போட்டி வெற்றி – தோல்வி இல்லாமல் முடிந்தது. தன்னுடன் போட்டிபோடும் தகுதி இருப்பதாக அந்தச் சிறுவனிடம் காணப்பட்ட தன்னம்பிக்கையை, கார்ல்சென் வியந்து பாராட்டினார். இப்போது தன்னைத் தோற்கடித்திருக்கும் பிரக்ஞானந்தாவை வாழ்த்தி ஆசீர்வதித்திருக்கிறார்.

மேக்னஸ் கார்ல்சென் சாதாரணமான விளையாட்டு வீரர் அல்ல. இதற்கு முன்னால் அவரை வென்ற இந்திய வீரர்கள் முன்னாள் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்தும், கிராண்ட் மாஸ்டர் பெந்தல ஹரிகிருஷ்ணாவும் என்பதிலிருந்தே பிரக்ஞானந்தாவின் வெற்றி எத்தகையது என்பதை உணர முடியும்.

தனது போட்டியாளர்களை அசர அடிக்கும் கார்ல்செனை, பதற்றமே இல்லாத அமைதியான அணுகுமுறையால் பிரக்ஞானந்தா கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாக்கியதை உலகமே கண்டு வியந்தது.

இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த அந்த 16 வயது சிறுவன், காய்களை எங்கேயும் நகர்த்த முடியாத தர்மசங்கடத்துக்கு மேக்னஸ் கார்ல்செனை உள்ளாக்கினார். 39–ஆவது நகர்வில் கார்ல்சென் கைகளை விரித்துத் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். தனது கதாநாயகனைத் தோற்கடித்த பெருமிதமும், தன்னையே நம்ப முடியாத ஆச்சரியமும் பிரக்ஞானந்தாவை திக்குமுக்காடச்செய்தன.

2016இல் தனது 10ஆவது வயதில், உலகின் மிகக் குறைந்த வயதில் செஸ் பந்தயத்தில் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்றவர் பிரக்ஞானந்தா. தொடக்கம் முதலே அவர் சர்வதேச விளையாட்டுக்காரருக்கான தகுதி பெற்று இருந்ததை செஸ் வல்லுனர்கள் அடையாளம் கண்டனர்.

இரண்டாண்டு கொள்ளை நோய்த்தொற்று காலத்தில் பிரக்ஞானந்தாவின் தன்னம்பிக்கை கடுமையாகக் குறைந்திருந்தது. செஸ் போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருந்ததும், சர்வதேச பந்தயங்களில் பங்குபெறாமல் போனதும் அந்தச் சிறுவனுக்குத் தளர்வை ஏற்படுத்தியதாக பயிற்சியாளர் குறிப்பிட்டிருந்தார். சரியான நேரத்தில் ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் கார்ல்செனை வென்றிருப்பது பிரக்ஞானந்தாவுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய ஊக்கம்.

சதுரங்க ஆட்டம் என்பது இந்தியாவுக்குப் புதிதொன்றுமல்ல. நமது புராண இதிகாச காலத்திலிருந்து அரண்மனைகளிலும் தெருவோரங்களிலும் விளையாடப்படுவதுதான் அது. பிற்காலத்தில் மேல்நாட்டு பாணி சதுரங்கமான செஸ் விளையாட்டு அறிமுகமானபோது இந்தியர்களுக்கு அதில் தேர்ச்சி பெறுவது சிரமமாக இருக்கவில்லை.

சர்வதேச அளவிலான போட்டிகளில் இந்தியா கடந்த 60 ஆண்டுகளாகத்தான் முத்திரை பதித்து வருகிறது. 1961–இல் இந்தியாவின் முதல் சர்வதேச மாஸ்டராக மேனுவல் ஆரான் தடம் பதித்தார். அதற்கு பிறகு 26 ஆண்டுகள் கழித்து 1987–இல் 18 வயதுகூட நிரம்பியிராத விஸ்வநாதன் ஆனந்த் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டராக சாதனை நிகழ்த்தினார். 2000–இல் இந்தியாவின் முதல் உலக சாம்பியனாக உயர்ந்ததும் விஸ்வநாதன் ஆனந்தே. இதுவரை 5 முறை உலக சாம்பியனாகவும், ஒருமுறை ரஷியாவுடன் இணைந்து செஸ் ஒலிம்பிக் சாம்பியனாகவும் தேர்ந்தவர் ஆனந்த்.

ஆனந்தை தொடர்ந்து இப்போது ஏராளமான சிறுவர்களும், இளைஞர்களும் செஸ் விளையாட்டில் சாதனை புரிந்து வருகின்றனர். பிரக்ஞானந்தா மட்டுமல்லாமல் திவ்யா தேஷ்முக், நிகல் ஷரின், வைஷாலி, பெந்தல ஹரிகிருஷ்ணா, விதீத் குஜராத்தி, கோனேரு ஹம்பி, ஹரிகா என்று வரிசையாகப் பலர் சர்வதேச அளவில் இந்தியக் கொடியை செஸ் பந்தயங்களில் உயர்த்திப் பிடிக்கிறார்கள். இதற்கெல்லாம் முன்னோடியும், இந்த இளைஞர்களுக்கு வழிகாட்டியும் விஸ்வநாதன் ஆனந்த் என்பதை பதிவு செய்யாமல் இருக்க முடியவில்லை.

1987–இல் விஸ்வநாதன் ஆனந்த முதலாவது கிராண்ட் மாஸ்டர் ஆனதைத் தொடர்ந்து, இப்போது இந்திய கிராண்ட் மாஸ்டர்களின் எண்ணிக்கை 73. பிரக்ஞானந்தா இந்திய விளையாட்டு வீரர்களில் 16–ஆவது இடத்திலும், உலகத் தர வரிசையில் 193–ஆவது இடத்திலும் இருக்கிறார். இன்றைய பதின்ம வயது இந்திய செஸ் விளையாட்டு வீரர்களில் அதீத திறமைசாலி என்று கருதப்படும் பிரக்ஞானந்தா இப்போது விஸ்வநாதன் ஆனந்தின் வழிகாட்டுதலில் இருக்கிறார் எனும்போது அவரது வருங்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்து பங்குபெறுவதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்த், அனடோலி கார்போவ், கேரி கேஸ்பரோவ், மேக்னஸ் கார்ல்சென் வரிசையில் பிரக்ஞானந்தா இடம்பெறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

பிரக்ஞானந்தாவின் வளர்ச்சியும் வெற்றியும் நமக்கு சில செய்திகளைத் தருகின்றன. தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகளில் மாணவர்களை செஸ் விளையாட்டில் ஊக்கப்படுத்துவதுபோல, அரசுப் பள்ளிகளில் வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. தொடக்கப்பள்ளி நிலையிலேயே செஸ் விளையாட்டுப் பயிற்சி வழங்குவதன் மூலம் வருங்கால விஸ்வநாதன் ஆனந்த்களையும், பிரக்ஞானந்தாக்களையும் அடையாளம் காண முடியும். அவர்களுக்குத் தகுந்த ஊக்கமும், அரசு ஆதரவும் ஆரம்பத்திலிருந்தே வழங்கப்பட்டால் தமிழகம், கிராண்ட் மாஸ்டர்களின் கேந்திரமாக உயரக்கூடும்!

**1. 'இன்டர்–ஆபரேபிள் கிரிமினல் ஜஸ்டிஸ் சிஸ்டம் (ICJS)' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ) சட்டம் & நீதித்துறை அமைச்சகம்

**ஆ) உள்துறை அமைச்சகம் ☑**

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம்

ஈ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

✓ 2022–23 முதல் 2025–26 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் ₹3,375 கோடி செலவில், 'இன்டர்–ஆபரேபிள் கிரிமினல் ஜஸ்டிஸ் சிஸ்டம்' (ICJS) திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த நடுவணரசு ஒப்புதலளித்துள்ளது. உள்துறை அமைச்சகத்தின் ICJS திட்டத்தின் இக்கட்டம், மத்திய துறை திட்டமாக செயல்படுத்தப்படும்.

✓ ICJS என்பது நாட்டில் குற்றவியல் நீதி வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய தகவல் தொழில்நுட்ப அமைப்பின் ஒருங்கிணைப்பை செயல்படுத்துவதற்கான ஒரு தேசிய தளமாகும்.

---

**2. 'கஜுராஹோ நடன விழா' நடைபெறும் மாநிலம் எது?**



அ) குஜராத்

ஆ) பீகார்

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) மகாராஷ்டிரா

✓ 48ஆவது 'கஜுராஹோ நடன விழா' மத்திய பிரதேசத்தில் இருந்து தொடங்கியது. 1 வாரகாலம் நடக்கும் இவ்விழா 2022 பிப்ரவரி.26 வரை நடைபெறும். உலகப்புகழ்பெற்ற 'கஜுராஹோ நடன விழா' மத்திய பிரதேசத்தின் சத்தர்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கஜுராஹோவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற கருப்பொருளில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

**3. இமயமலை சுற்றுச்சூழலில், 'மகரந்தச் சேர்க்கையில்' முக்கிய பங்கு வகிக்கிற உயிரினம் எது?**

**அ) அந்துப்பூச்சிகள் ☑**



ஆ) தேனீக்கள்

இ) பட்டாம்பூச்சிகள்

ஈ) வௌவால்கள்

✓ சமீபத்திய ஆய்வின்படி, வடகிழக்கு இந்தியாவின் இமய மலை சுற்றுச்சூழல் அமைப்பில் மகரந்தச் சேர்க்கைக்கு அந்துப்பூச்சிகள் இன்றியமையாதவை. சிக்கிம் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 21 தாவரக்குடும்பங்களின் மகரந்தச் சேர்க்கையாளர்களாக 91 வகையான அந்துப்பூச்சிகளை இந்த ஆய்வு குறிப்பிட்டுக் கூறுகிறது.

---

**4. 'பிரம்மாண்ட மீட்டர் வேவ் ரேடியோ தொலைநோக்கி' அமைந்துள்ள இந்திய மாநிலம் எது?**

அ) குஜராத் ஆ) சிக்கிம்

**இ) மகாராஷ்டிரா ☑** ஈ) உத்தரகாண்ட்



✓ 'Giant Metrewave Radio Telescope (GMRT)' என்பது 30° வரை முழுமையாகத் திசைதிருப்பக்கூடிய பரவளைய ரேடியோ தொலைநோக்கியாகும். இது மகாராஷ்டிராவில் புனே அருகே 'கோதாத்' என்ற இடத்தில் அமைந்துள்ளது.

✓ புனேவில் உள்ள தேசிய வானொலி வானியற்பியல் மையம், கலிபோர்னிய பல்கலைக்கழகம், சாண்டா குரூஸ் ஆகியவற்றின் வானியலாளர்கள், Fast Radio Burst (FRB) பேரடையிலிருந்து அணு ஹைட்ரஜன் வாயுவின் வழங்க –லை வரைபடமாக்க GMRT'ஐப் பயன்படுத்தியுள்ளனர்.

---

**5. 2023 – பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் அமர்வின் தொகுப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரம் எது?**

அ) புது தில்லி

**ஆ) மும்பை ☑**

இ) சென்னை

ஈ) ஹைதராபாத்

✓ 2023 – பன்னாட்டு ஒலிம்பிக் குழுவின் (IOC) அமர்வை இந்தியா மும்பையில் நடத்தவுள்ளது. 86ஆவது அமர்வு 1983ஆம் ஆண்டில் புதுதில்லியில் நடைபெற்றது. அதற்குப் பிறகு முதன்முறையாக இந்தியா இந்த மதிப்புமிக்க IOC கூட்டத்தை நடத்தவுள்ளது. அடுத்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்தில் நடைபெறும் அமர்வில், 2030 குளிர்கால ஒலிம்பிக்கிற்கான போட்டி நடத்தும் நாட்டிற்கான தேர்தல் நடைபெறும்.

---

**6. மாறிவரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு 'மூத்தகுடிகட்கான வரைவுக்கொள்கையை' வகுத்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) தெலுங்கானா

✓ மாறிவரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு அரசு மூத்த குடிமக்களுக்கான வரைவுக் கொள்கையை உருவாக்கியுள்ளது. மூத்த குடிமக்களின் நலனுக்கான இயக்குநரகத்தை உருவாக்கவும் இந்தக் கொள்கை முன்மொழிகிறது.

✓ வரைவு ஆவணம் அரசியலமைப்பின் 41ஆவது பிரிவை அடிப்படையாகக் கொண்டது. இது வேலை, கல்வி மற்றும் வேலையின்மை, முதுமை, நோய் மற்றும் இயலாமை போன்ற நிலைகளில் பொது உதவிக்கான உரிமையைப் பாதுகாக்க மாநிலத்திற்குப் பயன்படுகிறது.

---

**7. உழவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ₹20,000 கருணைத் தொகை வழங்க ஒப்புதலளித்துள்ள மாநிலம்/UT எது?**

அ) மேற்கு வங்கம்



**ஆ) தில்லி ☑**

இ) பஞ்சாப்

ஈ) உத்தர பிரதேசம்

- கடந்தாண்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20,000 ரூபாய் கருணை நிவாரணம் வழங்க தில்லி அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. செப்டம்பர்–அக்டோபர் – 2021'இல், கனமழை மற்றும் வயல்களில் தண்ணீர் தேங்கியதால் பல ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்தன. சேதம் 70% அல்லது அதற்கும் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டால், இழப்பீடு தொகையில் 70% வழங்கப்படும். இழப்பு சதவீதம் 70%க்கு மேல் இருந்தால், ஏக்கருக்கு ₹20,000 வழங்கப்படும்.

---

**8. மூன்று தென்னாப்பிரிக்க நாடுகளில் கரையைக்கடந்த வெப்பமண்டல புயலின் பெயர் என்ன?**



அ) ரீனா

**ஆ) ஆனா ☑**

இ) பாஸ்

ஈ) சூ

- வெப்பமண்டல புயல் 'ஆனா' மூன்று தென்னாப்பிரிக்க நாடுகளைத் தாக்கியது. இதன் காரணமாக 70 பேர் இறந்தனர். இந்தப் புயல் மொசாம்பிக் மற்றும் மலாவிக்குள் நுழைவதற்கு முன்பு மடகாஸ்கரில் கரையைக்கடந்தது. மடகாஸ்கரில் 41 பேரும், மொசாம்பிக்கில் 18 பேரும் மலாவியில் 11 பேரும் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. சமீப செய்திகளில் இடம்பெற்ற மசாடா கோட்டை உள்ள நாடு எது?**



அ) இந்தியா

ஆ) இலங்கை

**இ) இஸ்ரேல் ☑**

ஈ) ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

- இஸ்ரேலில் அமைந்துள்ள 'மசாடா கோட்டை' என்பது யூத வீரத்தின் சின்னமாகும். இந்தியாவுக்கான இசுரேல் தூதர் நவர் கிலோன், இஸ்ரேலில் உள்ள 'மசாடா கோட்டை' விளக்குகளால் ஒளிர்வதைக் காட்டும் காணொளியைப் பகிர்ந்துள்ளார். இருநாடுகளும் தூதரக உறவுகளின் 30 ஆண்டுகளைக்கொண்டாடும் நிலையில், இது இந்தியா–இஸ்ரேல் உறவுகளை நினைவுகூருவதாக உள்ளது.

---

**10. இருபத்தொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் டென்னிஸ் வீரர் யார்?**



அ) ரோஜர் பெடரர்

**ஆ) ரபேல் நடால் ☑**

இ) நோவக் ஜோகோவிச்

ஈ) ஆண்ட்ரே அகாசி

- ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி, 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று வரலாற்று சாதனை படைத்தார் ரபேல் நடால்.
- இருபத்தொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் டென்னிஸ் வீரர் என்ற பெருமையை அவர்பெற்றார். சுவிச்சர்லாந்தின் ரோஜர்பெடரரும் செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் தலா 20 பட்டங்களைப்பெற்று சம நிலை –யில் உள்ளனர். ஓய்வுபெற்ற ஆஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனை மார்கரெட் கோர்ட், 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முதன் முறையாக மகா சிவராத்திரி விழா, கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு: அமைச்சர் சேகர்பாபு தகவல்**

இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முதன் முறையாக மகா சிவராத்திரி விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்து உள்ளார். சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, இராமகிருஷ்ணா மடம் சாலையில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

---

**2. ரஷ்யா மீது ஜி7 நாடுகள் பொருளாதார தடை: உக்ரைன் விவகாரத்தில் இந்தியா நடுநிலை**

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி7 கூட்டமைப்பு சார்பில் ரஷ்யா மீது ஏற்கெனவே பல்வேறு பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டின் மீது ஜி7 சார்பில் மேலும் பல்வேறு கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று ஜெர்மனி அறிவித்துள்ளது.

உக்ரைன் விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நேற்று முன்தினம் விவாதம் நடந்தது. இதில் உக்ரைன் போர் பதற்றம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த இந்தியா, அனைத்து தரப்பும் அமைதி காக்க வேண்டுகோள் விடுத்தது. எனினும் ரஷ்யா மீது இந்தியா எவ்வித விமர்சனத்தையும் முன்வைக்கவில்லை. இறுதியில் நடந்த வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்கவில்லை. உக்ரைன் விவகாரத்தில் ஆரம்பம் முதலே இந்தியா நடுநிலை வகித்து வருகிறது.

---

**3. நாசாவின் செயற்கைக்கோளுக்கு சிக்காத சூரிய புரோட்டான் நிகழ்வுகளை சந்திரயான்–2 விண்கலம் கண்டறிந்தது: இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தகவல்**

நாசாவின் செயற்கைக்கோளுக்கு சிக்காத சூரிய புரோட்டான் நிகழ்வுகளைச் சந்திரயான்–2 விண்கலம் கண்டறிந்துள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), சந்திரயான்–2 விண்கலத்தை 2019 ஜூலை 22–ல் ஹரிகோட்டாவில் இருந்து அனுப்பியது.

பல்வேறு கட்டத்துக்குப் பிறகு, சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்.7–ம் தேதி சந்திரயான் விண்கலத்தின் லேண்டர் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீர் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் வேகமாகச் சென்று நிலவின் தரையில் மோதியதாகக் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், விண்கலத்தின்மற்றொரு பகுதியான ஆர்பிட்டர், நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அதன்பிறகு, நிலவைச் சுற்றிவரும் ஆர்பிட்டர் பல்வேறு தகவல்களைப் பூமிக்கு அனுப்பி வருவதாக இஸ்ரோ தெரிவித்தது. இந்நிலையில், சூரிய புரோட்டான் நிகழ்வுகளை சந்திரயான் விண்கலம் கண்டறிந்துள்ளது.

இதுதொடர்பாக 'இஸ்ரோ' கூறியதாவது: சந்திரயான் 2–ன் ஆர்பிட்டர் கருவியானது சூரியனின் வெப்ப பிழம்புகளின் வெளியேற்றங்கள், அயனியாக்கம் செய்யப்பட்ட துகள் மற்றும் காந்தப்புலங்களின் சக்திவாய்ந்த ஓடை ஆகியவற்றைக் கடந்த ஜன.18–ம் தேதி பதிவு செய்துள்ளது. இந்த வெப்ப வெளியேற்றங்கள்தான் புவி காந்தப் புயல்களுக்கும், வானத்தில் துருவ ஒளியை ஒளிரவும் வழிவகுக்கிறது. இத்தகைய சூரிய புரோட்டான் நிகழ்வுகளின் தாக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதால், வெவ்வேறு கிரக அமைப்புகளில் இது எவ்வாறுசெயல்படுகிறது என்பது புரிந்துகொள்ள உதவும்.

சூரியன் மிக உக்கிரமாக இருக்கும்போது, சூரிய எரிப்பு எனப்படும் கண்கவர் வெடிப்புகள் ஏற்படுகின்றன. அப்போது சூரியனின் பிழம்புகள் விண்வெளியில் வெடித்துச் சிதறும். அவை சில நேரங்களில் ஆற்றல்மிக்க துகள்களைப் பூமி போன்ற கிரகங்களுக்குள் நுழைகிறது. இவற்றில் பெரும்பாலானவை அதிக ஆற்றல் கொண்ட புரோட்டான்களே ஆகும்.

இந்த ஆற்றலின் சக்திக்கு ஏற்ப, அவை விண்வெளியைக் கடுமையாகப் பாதிக்கிறது. இதில் ஏற்படும் கதிர்வீச்சு விண்வெளி நிலையங்களில் இயங்கும் மனிதர்களைப் பாதிக்கிறது.

மேலும், பூமியின் நடுத்தர வளிமண்டலத்தில் பெரிய அளவில் அயனியாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவைன சூரியவெடிப்பில் ஏற்படும் பிழம்புகளின்வலிமைக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுகின்றன.

ஏ – மிகச்சிறியவை. அதைத் தொடர்ந்து பி, சி, எம் மற்றும் எக்ஸ் உள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் 1–9 வரையிலான நுணுக்கமான அளவுகளும் உள்ளன. உதாரணமாக எம்2 என்பது எம்1–ஐ விட 2 மடங்கு வலிமை கொண்டது.

அதன்படி, சமீபத்தில், இரண்டு எம் வகுப்பு அளவுள்ள வெடிப்புகள் நடந்துள்ளன. அவற்றில், ஒன்று எம் 1.5 அளவில் வெப்ப பிழம்புகளின் வெளியேற்றங்களுடனும், மற்றொன்று எம் 5.5 அளவுக்கு ஆற்றல்மிக்க துகள்களையும் கிரகங்களுக்குள் செலுத்தியுள்ளது.

இந்த சூரிய புரோட்டான் நிகழ்வைப் பூமியைச் சுற்றி வரும் நாசாவின் புவிசார் செயல்பாட்டுச் சுற்றுச்சூழல் செயற்கைக்கோள் (GOES) கண்டறியவில்லை. ஆனால், நிலவைச் சுற்றி வரும் நமது சந்திரயான் –2 தனது மென்மையான எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோமீட்டர் மூலம் இந்த நிகழ்வைக் கண்டறிந்துள்ளது. இவ்வாறு இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சந்திரயான்–2 விண்கலம் வெற்றிகரமாக நிலவை அடையாமல்போனதும், இஸ்ரோ விஞ்ஞானிகள் கடுமையாக சோர்வடைத்திருந்தனர். ஆனால், தற்போது நாசாவுக்கு சிக்காத அறிய தகவல்கள் சந்திரயான்–2வின் ஆர்ப்பிட்டரில் சிக்கிஉள்ளது விஞ்ஞானிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சூரியனின் பிழம்புகள் விண்வெளியில் வெடித்துச் சிதறும். அவை சில நேரங்களில் ஆற்றல்மிக்க துகள்களைப் பூமி போன்ற கிரகங்களுக்குள் நுழைகிறது. இவற்றில் பெரும்பாலானவை அதிக ஆற்றல் கொண்ட புரோட்டான்களேயாகும்.

**1.** **'தேசிய அறிவியல் நாள்' முன் கடைப்பிடிக்கப்படும் ஒரு வார கால நினைவேந்தலின் பெயர் என்ன?**




அ) Atmanirbhar Vigyan

**ஆ) Vigyan Sarvatra Pujyate ☑**

இ) Celebration of Science in Past

ஈ) 'Science in Culture' Celebrations

- ✓ 'விக்யான் சர்வத்ர பூஜ்யதே' என்ற தலைப்பில் ஒரு வார கால நினைவேந்தலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் மற்றும் மத்திய கலாச்சார அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி ஆகியோர் தொடங்கினர்.
- ✓ அமுதப்பெருவிழாவின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்ட –து. தேசிய அறிவியல் நாளான பிப்.28ஆம் தேதி வரை நாடு முழுவதும் 75 இடங்களில் ஒரே நேரத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

---

**2.** **'நீலப்பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகைக் –கான செயல்திட்டத்தை' கீழ்காணும் எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா ஒப்புக்கொண்டது?**



அ) அமெரிக்கா

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

**இ) பிரான்ஸ் ☑**

ஈ) ஜப்பான்

- ✓ இந்தியாவும் பிரான்ஸும் "நீலப்பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகைக்கான செயல்திட்டத்தில்" உடன்ப –ட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் அறிவியல் அறிவு மற்றும் கடல் சார் பாதுகாப்புக்கு பங்களிப்பதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. மேலும், கடல் என்பது உலகளாவிய சொத்தாக இருப்பதை உறுதிசெய்கிறது.
- ✓ வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாள் பயணமாக பிரான்ஸ் நாட்டுக்கு சென்றிருந்தபோது இது மேற்கொள்ளப்பட்டது.
- ✓ கடல்சார் வர்த்தகம், கடல் சூழல் சுற்றுலா, உள்நாட்டு நீர்வழிகள், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை ஆகியவை இதில் அடங்கும்.

---

**3.** **COVID தடுப்பூசியை உருவாக்க, 'CEPI', எந்த இந்திய மருந்து நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?**

**அ) பனசீ பயோடெக் ☑**

ஆ) கேடிலா ஹெல்த்கேர்

இ) சிப்லா

ஈ) சன் பார்மா

- ✓ Coalition for Epidemic Preparedness Innovations (CEPI) ஆனது, COVID தடுப்பூசியை உருவாக்க, Translational Health Science and Technology Institute (THSTI) மற்றும் Panacea Biotec ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டமைப்புடன் இணையும்.
- ✓ THSTI என்பது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித் தொழில்நுட்பவியல் துறையின் தன்னாட்சி நிறுவனமாகும். CEPI, இப்புதிய திட்டத்திற்கு $12 மில்லியன் டாலர் வரை நிதியளிக்கும்.

**4.** **2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?**

அ) சீனா

ஆ) அமெரிக்கா

**இ) நார்வே ☑**

ஈ) ஜெர்மனி

- ✓ 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் பதினாறு தங்கப் பதக்கங்களுடன் நார்வே முதலிடம் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஜெர்மனி பன்னிரு தங்கமும் சீனா 9 தங்கமும் பெற்று முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தில் உள்ளது. விளையாட்டுப் போட்டிகள் சமீபத்தில் 'பேர்ட்ஸ் நெஸ்ட்' மைதானத்தில் முடிவடைந்தன.
- ✓ சீனாவும் அதன் அதிபர் ஜி ஜின்பிங்கும் 2026இல் இந்தப் போட்டிகளை நடத்தும் மிலானோ–கார்டினாவிடம் இதன் பொறுப்புக்களை ஒப்படைத்தனர்.

---

**5.** **யூனிஸ், பிராங்க்ளின் & டட்லி ஆகிய மூன்று புயல்கள் உள்ளிட்ட புயல் தொகுதியால் பாதிக்கப்பட்ட பகுதி எது?**



அ) வட அமெரிக்கா

**ஆ) ஐரோப்பா ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஆப்பிரிக்கா

- ✓ யூனிஸ் புயல், இலண்டனுக்கு முதல் சிவப்பு வானிலை எச்சரிக்கையை வழங்கியது. 1987இல் பிரிட்டன் மற்றும் வடக்கு பிரான்சில் பெரும் புயல் தாக்கியதற்குப்பின் இது ஐரோப்பாவில் வீசும் சக்திவாய்ந்த புயல்களுள் ஒன்றாகும்.
- ✓ பிரிட்டன், அயர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ஜெர்மனி மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் மரங்கள் முறிந்து விழுந்தது பலத்த காற்று வீசியது ஆகியவற்றால் 15 பேர் இறந்தனர். அதைத்தொடர்ந்த 2 நாட்களில் பிராங்க்ளின் மற்றும் டட்லி புயல்கள் அங்கு தாக்கின.

---

**6.** **தொற்றுநோய்க்கு பிறகு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எந்த இனத்திற்கு, 'ஹம்பர்டியம் கோவிடம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது?**



அ) பாம்பு

**ஆ) தட்டைப்புழு ☑**

இ) வீட்டு எலி

ஈ) வீட்டு ஈ

- ✓ ஒரு சிறிய இராஜநாகம்போல தோற்றமளிக்கும் தட்டைப் புழு இனத்தை அறிவியலார்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் இந்த உயிரினங்கள் நத்தைகளை வேட்டையாடுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். COVID தொற்றுநோயின் பெயரால் இந்தத் தட்டைப்புழுவுக்கு 'ஹம்பர்டியம் கோவிடம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

**7.** **புதிய இராம்சர் தளமாக அறிவிக்கப்பட்டுள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?**



அ) ஹரியானா

ஆ) பீகார்

**இ) குஜராத் ☑**

ஈ) உத்தரகாண்ட்

✓ உலக சதுப்பு நில நாளை முன்னிட்டு 2 புதிய இராம்சர் தளங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை: குஜராத்தில் உள்ள கிஜாடியா வனவுயிரி சரணாலயம் மற்றும் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள பகீரா வனவுயரி சரணாலயம். இந்தியா 10,93,636 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 49 தளங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது.

✓ இந்த எண்ணிக்கை தெற்காசியாவிலேயே மிகவுயர்ந்தது ஆகும். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஜஜாரில் உள்ள சுல்தான்பூர் தேசிய பூங்கா மற்றும் பிந்தாவாஸ் வனவுயிரி சரணாலயத்தை ஹரியானாவில் உள்ள இராம்சர் தளங்களாக முன்னதாக அறிவித்தது.

---

**8.** **99 மில்லியன் ஆண்டுகள் பழமையான மலர்கள், எந்த நாட்டில் பாதுகாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன?**



அ) இந்தியா

**ஆ) மியான்மர் ☑**

இ) இலங்கை

ஈ) அமெரிக்கா

✓ மியான்மரில் '*Eophylica priscastellata*' மற்றும் '*Phylica piloburmensis*' ஆகிய இரண்டு புதிய வகை புதைபடிவ பூக்களைப் பழங்கால ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அவை குறைந்தது 99 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய வட மியான்மரில் உள்ள கம்தி மற்றும் தனைங் சுரங்கங்களில் இருந்த கிரெட்டேசியஸ் அம்பரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

**9.** **சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, '2010 TK7 மற்றும் 2020 XL5' என்பது என்ன?**



அ) புறக்கோள்கள்

**ஆ) பூமி டிரோஜன்கள் ☑**

இ) விண்கற்கள்

ஈ) தொலைநோக்கிகள்

✓ 'பூமி டிரோஜன்' என்பது ஒரு சிறுகோளாகும். இது நமது புவியின் அதே சுற்றுப்பாதையைப் பகிர்ந்துகொள்வதோடு சூரியனையும் சுற்றிவருகிறது. 2ஆவது 'பூமி டிரோஜன்' 2020இல் கண்டறியப்பட்டது; அகற்கு '2020 XL5' என்று பெயரிடப்பட்டது. இது பூமிக்கு அருகிலுள்ள சிறுகோளாகும்.

✓ இது விலகிச்செல்லும் முன் அடுத்த 4,000 ஆண்டுகளுக்கு இச்சுற்றுப்பாதையிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சிறுகோள் 'Pan-STARRS S1' தொலைநோக்கிமூலம் கண்டுபிடிக்கப்பட்டது. முதலில் அறியப்பட்ட பூமி டிரோஜன் சிறுகோள் '2010 TK7' ஆகும். சுமார் 0.3 கிமீ அகலம் உடைய இது, 2010இல் கண்டுபிடிக்கப்பட்டது.

**10.** **கொங்குர்ஸ்-M ஏவுகணைகளைத் தயாரிப்பதற்காக, இந்திய இராணுவம், பின்வரும் எந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது?**

அ) டிஆர்டிஓ

**ஆ) பாரத் டைனமிக்ஸ் லிட் ☑**

இ) ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட்

ஈ) பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்

✓ பாரத் டைனமிக்ஸ் லிட்டும் (BDL) இந்திய இராணுவமும் ₹3,131.82 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் 'Konkurs-M' ஏவுகணைகளை வாங்குவதற்காக ஈடுபட்டுள்ளன. 75-4000 மீ வீச்சுத்திறன்கொண்ட இந்த ஏவுகணை BMP-II இலிருந்தோ அல்லது தரை ஏவியிலிருந்தோ ஏவப்படலாம். கொங்குர்ஸ்-M இரஷ்ய மூலக்கருவி உற்பத்தியாளரின் (OEM) உரிம ஒப்பந்தத்தின்கீழ் இது தயாரிக்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. எல்ஐசி பொதுப் பங்கு: 20% அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி**

ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் (LIC) பொதுப் பங்குகளை வாங்குவதில் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது: LIC'ல் மத்திய அரசின் பங்குகளை பொதுப்பங்கு வெளியீடு மூலம் விற்பனை செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பொதுப்பங்குகளை வாங்கு -தற்கு விரும்பலாம். ஆனால், தற்போதைய விதிகளின்படி, எல்ஜசியில் அந்நிய நேரடி முதலீடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தற்போதைய அந்நிய நேரடி முதலீட்டு விதிகளின்படி, பொதுத்துறை வங்கிகளில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு 20 சதவீதம் வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி எல்ஜசி நிறுவனத்தில் 20 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

எல்ஜசியில் மத்திய அரசின் பங்கில் 5 சதவீதமான 31.63 கோடி பங்குகளை பொதுப்பங்கு வெளியீடுமூலம் விற்க இந்திய பங்கு, பரிவர்த்தனை வாரியத்திடம் (செபி) கடந்த 13-ஆம் தேதி வரைவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த விற்பனைமூலம் ₹63,000 கோடி திரட்ட திட்டமிடப்ப -ட்டுள்ளது.

**இணையவழி ஏல முறையில் நிலக்கரி விற்பனைக்கு ஒப்புதல்:** கோல் இந்தியா லிட் உள்ளிட்ட அரசு நிலக்கரி நிறுவனங்கள், துறைசார்ந்த ஏல விற்பனைக்குப் பதிலாக, இணையவழி பொது ஏல முறையில் நிலக்கரியை விற்பனை செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுதொடர்பாக முடிவெடுக்கப்பட்டது.

இதுகுறித்து நிலக்கரித்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய அரசின் இந்த முடிவால் சந்தையில் விலைகுறித்த தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்; அனைத்து நுகர்வோருக்கும் ஒரே விலை தெரிவிக்கப்படும். மேலும், இணையவழி ஏல நடைமுறை, மின்னுற்பத்தி துறை உள்பட அனைத்து துறைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் (எண்ம) மிஷன் திட்டத்துக்கு ஒப்புதல்:** நாடு முழுவதும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் எனப்படும் எண்ம சுகாதார அடையாள அட்டைத் திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் ₹1,600 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ் குடிமக்களுக்கு எண்ம சுகாதார அடையாள அட்டை வழங்கப்படும். அவர்களின் சுகாதாரம் பற்றிய தகவல்கள் எண்ம வடிவில் ஆவணங்களாக சேமித்து, அதனுடன் அடையாள எண் இணைக்கப்படும். தகவல் தொழில்நுட்ப உதவியுடன் மக்களுக்கு தரமான மருத்துவச் சேவையை வழங்குவதற்கு இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்கும்.

மத்திய அரசின் இந்தத் திட்டத்தை தேசிய சுகாதார ஆணையம் செயல்படுத்தும் என்று மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**2. மத்திய அரசு சார்பில் 'உடல் ஆரோக்கிய சவால் போட்டி' – அமைச்சர் மா. சுப்பிரமணியன் முதலிடம்: சென்னை மாநகரில் அதிக போட்டியாளர்கள் பங்கேற்பு**

மத்திய அரசு நடத்திய 'உடல் ஆரோக்கிய சவால்' போட்டியில், தமிழ்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் முதலிடம் பிடித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

75ஆம் ஆண்டு இந்திய விடுதலை விழாவை முன்னிட்டு, உடல் ஆரோக்கியஞ்சார் போட்டிகளில் இந்திய அளவில் 75 நகரங்களைச் சார்ந்த தலைவர்கள், பல்வேறு நிறுவனங்களின் முதன்மைசெயல் அலுவலர்கள், ஆணையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

இதில் இணையதளம் வாயிலாக பதிவுசெய்த நபர்களின் நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் போன்ற நிகழ்வுகள் இணையம் வழியே கண்காணிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**75 நகரங்கள் பங்கேற்பு**

நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் போன்ற நிகழ்வுகளில் 75 நகரங்களில் உள்ள முக்கிய தலைவர்களில் 297 பேரும், பல்வேறு நிறுவனங்களின் முதன்மை செயல் அலுவலர்கள் மற்றும் அரசு ஆணையாளர்கள் 56 பேரும் பதிவு செய்தனர்.

நடைபயிற்சி, ஓடுதல் மற்றும் மிதிவண்டி ஓட்டுதல் ஆகிய சவால் போட்டிகளில் சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிவு செய்திருந்தார். இதில் அதிக எண்ணிக்கையிலான செயல்பாடுகளில் 390 கிமீ தூரம் ஓடி முதலிடத்தைப்பிடித்துள்ளார்.

நடைபயிற்சி சவால் போட்டியில் அதிக எண்ணிக்கையி–லான செயல்பாடுகளில் மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி 5ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

**சென்னை மாநகரம் முதலிடம்**

சென்னை மாநகரில் மிதிவண்டி ஓட்டுதல் சவாலில் 1,059 பேர் பதிவு செய்து மொத்தம் 72,458 கிமீ தூரத்தை கடந்துள்ளனர். இதன்மூலம் போட்டியில் கலந்துகொண்ட நகரங்களிலேயே அதிகம் பதிவுசெய்தவர்கள், கடந்த தூரம் அடிப்படையில் சென்னை மாநகரம் முதலிடத்தை பெற்றுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

**1. 'பிரதம அமைச்சர் கிராம சதக் யோஜனா' திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம்

**ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

✓ மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகமானது தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமையுடன் இணைந்து 'பிரதம அமைச்சர் கிராம சதக் யோஜனா' திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சமீபத்தில், மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங், பொது வெளியில் கிராமப்புற இணைப்புக்கான GIS தரவை வெளியிட்டார்.

✓ பிரதமரின் கிராமப்புற சாலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக 800,000+ கிராமப்புற வசதிகள் தொடர்பான புவியியல் தகவல் அமைப்பு பற்றிய தரவுகளும், ஒரு மில்லியன்+ வசிப்பிடங்கள் மற்றும் 25,00,000+ கிலோமீட்டர் தூர சாலைகள் பற்றிய தரவுகளும் சேகரிக்கப்பட்டு ஜிஐஎஸ் அமைப்பை பயன்படுத்தி டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

---

**2. இந்தியாவில் அனைத்து முன்கட்டண கருவிகளையும் அங்கீகரிக்கும் நிறுவனம் எது?**

அ) NPCI

**ஆ) RBI ☑**

இ) நிதி அமைச்சகம்

ஈ) அமலாக்க இயக்குநரகம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி இந்தியாவில் உள்ள அனைத்து ப்ரீ-பெய்டு கருவிகளையும் (PPI) அங்கீகரிக்கிறது. பணஞ் செலுத்துதல் மற்றும் செட்டில்மென்ட் சிஸ்டம்ஸ் சட்டம், 2007 (PSS சட்டம்) கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் அது அங்கீகரிக்கிறது. PSS சட்டம், 2007'இன்கீழ், மத்திய வங்கியின் அங்கீகாரம் இல்லாமல், வாடகை கார் சேவை வழங்கும் செயலியான 'sRide' குறித்து RBI அண்மையில் நாட்டு மக்களை எச்சரித்தது.

---

**3. எந்த இந்திய கணிதவியலாளருக்கு 2021-க்கான 'இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசு' வழங்கப்பட்டுள்ளது?**

**அ) நீனா குப்தா ☑**

ஆ) R பிரக்ஞானந்தா



இ) Dr B உமா சங்கர்

ஈ) Dr குந்தல் கோஷ்

✓ கொல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் கழகத்தின் கணிதவியலாளரான பேராசிரியர் நீனா குப்தாவுக்கு 'இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசு' வழங்கப்பட்டது. அஃபைன் இயற்கணித வடிவியல் மற்றும் பரிமாற்ற இயற்கணிதம் ஆகியவற்றில் அவர் செய்த குறிப்பிடத்தக்க பணிக்காக கடந்த 2021ஆம் ஆண்டிற்கான விருதை அவர் பெற்றார்.

✓ சர்வதேச கோட்பாட்டு இயற்பியல் மையம் (ICTP) மற்றும் சர்வதேச கணித ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை நிதியுதவியுடன் ஒரு வளரும் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளருக்கு ஆண்டுதோறும் இப்பரிசு வழங்கப்படுகிறது.

---

**4. நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் கவுன்சிலின் தலைவர் யார்?**

அ) RBI ஆளுநர்



**ஆ) மத்திய நிதி அமைச்சர் ☑**

இ) பிரதமர்

ஈ) NITI ஆயோக் CEO

✓ நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் கவுன்சிலின் 25ஆவது கூட்டம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடந்தது. நிதித்துறையின் வளர்ச்சிக்கும், பொருளாதார நிலைப்புத்தன்மையுடன் உள்ளடங்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. நாணய மேலாண்மை தொடர்பான பல்வேறு செயல்பாட்டு சிக்கல்களையும் அக்கவுன்சில் விவாதித்தது.

---

**5. National Means-cum-Merit Scholarship (NMMSS) திட்டமானது எந்த ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது?**

அ) 2023-24

**ஆ) 2025-26 ☑**

இ) 2029-30

ஈ) 2031-32

✓ 2025-26 வரை தேசிய மீன்ஸ்-கம்-மெரிட் ஸ்காலர்ஷிப் திட்டத்தை (NMMSS) தொடர கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. வருமான உச்சவரம்பை ஆண்டுக்கு ₹1.5 இலட்சத்திலிருந்து ₹3.5 இலட்சமாக அதிகரிப்பதுபோன்ற தகுதி அளவுகோல்களில் சில மாற்றங்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்பில் தேர்ச்சியடைந்த மாணவர்ளின் இடைநிற்றலை தடுத்தலும், 2ஆம் நிலைக் கட்டத்தில் கல்வியைத் தொடர ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6. 'சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிலைமாற்ற அறிக்கை'யை வழங்கிய விண்வெளி நிறுவனம் எது?**

அ) ஸ்பேஸ்X



**ஆ) NASA ☑**

இ) ESA

ஈ) CNSA

✓ NASA, 'சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிலைமாற்ற அறிக்கை'யின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது. வணிகச் சேவைகளுக்கு சுமூகமான மாற்றத்திற்கு வழி வகுக்கும் அடுத்த பத்தாண்டிற்கான நிலைய செயற்பாடுக-ளுக்கான இலக்குகள் இதில் அடங்கும்.

✓ தாழ்புவி சுற்றுவழி குறித்த வணிகப் பொருளாதாரத்தின் அளிப்பு மற்றும் தேவைப் பக்கம் ஆகிய இரண்டையும்

மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் மாற்றத்திற்குத் தேவையான தொழில்நுட்ப நிலைகள் மற்றும் பட்ஜெட் ஆகியவையும் இதில் அடங்கும்.

**7.** 'COVID-19 தொற்றுச்சூழலில் சுகாதாரக் கழிவுகளின் உலகளாவிய பகுப்பாய்வு' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

**ஆ) WHO ☑**

இ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம்

ஈ) FDA

✓ உலக சுகாதார நிறுவனம், 'COVID-19 சூழலில் சுகாதாரக் கழிவுகளின் உலகளாவிய பகுப்பாய்வு' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, உலகளவில் செலுத்தப்பட்ட 8 பில்லியன் தடுப்பூசிகள் கண்ணாடி குப்பிகள், மருந்தூசிகள் மற்றும் முதலுதவிப் பெட்டிகள் வடிவில் கூடுதலாக 144,000 டன் கழிவுகளை உற்பத்தி செய்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**8.** 'விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆய்வுக்கூடம்' எந்த நிறுவனத்தின்கீழ் செயல்படுகிறது?

அ) DRDO

**ஆ) ISRO ☑**

இ) CSIR

ஈ) BARC

✓ அகமதாபாத்தைச் சார்ந்த விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகமானது இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின்கீழ் செயல்படுகிறது. சமீபத்தில், இந்த நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 'குவாண்டம் சிக்கலை' வெற்றிகரமாக நிரூபித்துள்ளனர்.

✓ நிகழ்நேர குவாண்டம் கீ விநியோக உத்தியை (QKD) பயன்படுத்தி, 300 மீ இடைவெளியில் அமைந்த இரண்டு கட்டடங்களுக்கு இடையே ஹேக்-புரூப் தகவல் தொடர்பு முறையை அவர்கள் மேற்கொண்டனர்.

**9.** 2021-2022இல் தனது முதல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையை வென்ற அணி எது?



**அ) செனகல் ☑**

ஆ) மலாவி

இ) கினியா

ஈ) நமீபியா

✓ பெனால்டி ஷூட் ஔட்டில் எகிப்தை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 2022ஆம் ஆண்டில் செனகல் தனது முதல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையை வென்றது. செனகலின் சாடியோ மானே வெற்றிக்கான கோலை அடித்தார். செனகல், 2019 – ஆப்பிரிக்கக் கோப்பையின் இறுதிப்போட்டியில் அல்ஜீரியாவிடம் 0-1 என்ற கோல் கணக்கில் வீழ்ந்து இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

✓ செனகல் ஆப்பிரிக்க நாடுகளின் கோப்பையின் பதினாறு பதிப்புகளில் விளையாடியுள்ளது. இறுதியாக 2021'இல் இவ்வணி தனது முதல் AFCON பட்டத்தை வென்றது.

**10.** 2022 ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் எது?




அ) India Untouched

**ஆ) Writing with Fire ☑**

இ) Period. End Of Sentence

ஈ) Jai Bhim

✓ திரைப்பட தயாரிப்பாளர்களான ரிந்து தாமஸ் மற்றும் சுஷ்மித் கோஷ் இயக்கிய 'ரைட்டிங் வித் பையர்' என்ற இந்திய ஆவணப்படம் 94ஆவது அகாதமி விருதுகளில் 'சிறந்த ஆவணப்பட'ப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட ஒரே இந்திய ஆவணப்படம் இதுவாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முதல்வரின் சுயசரிதை: இன்று வெளியிடுகிறார் ராகுல்**

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தன் வரலாற்று நூலான 'உங்களில் ஒருவன்' நூலின் முதல் பாகத்தை அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பிப்.28 அன்று வெளியிடுகிறார்.

நூலை இராகுல் காந்தி வெளியிட, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் பெற்றுக்கொள்கிறார்.

**2. பல்கேரியாவில் நடைபெறும் 73ஆவது ஸ்ட்ரேண்ட்ஜா நினைவு பாக்சிங் தொடரில், இந்திய வீராங்கனைகள் நிக்கத் ஜரீன் (52 கிகி), நீட்டு (48 கிகி) தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தனர்.**

**3. மெக்சிகோ ஓபன்; 4ஆவது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற நடால்**

மெக்சிகோ நாட்டின் அகாபல்கோ நகரில் மெக்சிகோ ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில், ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியனான நடால் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த கேமரூன் நார்ரி ஆகியோர் விளையாடினர்.

இந்தப் போட்டியில், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் கேமரூனை வீழ்த்தி ரபேல் நடால் பட்டம் வென்றுள்ளார். அகாபல்கோவில் நடாலுக்கு இது 4ஆவது சாம்பியன்பட்டம் ஆகும். நடப்பு 2022ஆம் ஆண்டில் நடாலின் மூன்றாவது சாம்பியன் பட்டம் இதுவாகும்.

**4. பொதுத்துறை வங்கிகளுக்கு ₹15,000 கோடி மூலதன நிதி**

பொதுத்துறை வங்கிகளுக்கு ₹15,000 கோடி மூலதன நிதியை வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அதில்

பெரும் பங்கானது நிதிப் பிரச்னையைச் சந்தித்து வரும் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் & சிந்து வங்கி உள்ளிட்டவற்றுக்கு வழங்கப்படவுள்ளது.

வங்கிகள் கடன் வழங்குவதில் பிரச்னை ஏற்படக்கூடாது என்பதற்காக மூலதன நிதியை மத்திய அரசு வழங்கி வருகிறது. நடப்பு 2021-22ஆம் நிதியாண்டில் பொதுத் துறை வங்கிகளுக்கு ₹20,000 கோடி மூலதன நிதி வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.

அதில் ₹15,000 கோடி நிதியைப் பொதுத்துறை வங்கிகளுக்கு மத்திய அரசு விரைவில் வழங்கும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் & சிந்து வங்கி உள்ளிட்ட வங்கிகளுக்கு அதிக நிதி வழங்கப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறப்பு நிதிப்பத்திரங்கள் வாயிலாக இந்த மூலதன நிதி வழங்கப்படவுள்ளது. அப்பத்திரங்களுக்கு வட்டி எதுவும் விதிக்கப்படாது. அதே வேளையில், நிதிப்பத்திரங்களின் அசல் விலையில் குறிப்பிட்ட தள்ளுபடியுடன் அவை விநியோகிக்கப்படவுள்ளன.

எந்தெந்த வங்கிகளுக்கு எவ்வளவு நிதி வழங்குவது என்பது தொடர்பாக மார்ச்சில் முடிவெடுக்கப்படவுள்ளதாக -வும், அதையடுத்து மூலதன நிதியானது பகிர்ந்து வழங்கப்படும் என்றும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பஞ்சாப் & சிந்து வங்கிக்குக் கடந்த 2020-21ஆம் நிதி ஆண்டின் 3ஆவது காலாண்டின்போது மூலதன நிதி வழங்கப்பட்டது. அதையடுத்து பேங்க் ஆப் இந்தியா (₹3,000 கோடி), இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (₹4,100 கோடி), சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா (₹4,800 கோடி), யுசிஓ வங்கி (₹2,600 கோடி) ஆகியவற்றுக்குக் கடந்த ஆண்டு மார்ச்சில் ₹14,500 கோடி மூலதன நிதி வழங்கப்பட்டிருந்தது. அடுத்த 2022-23ஆம் நிதியாண்டில் வங்கிகளுக்கான மூலதன நிதி இலக்கு ₹15,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

---

## 5. 30 'பிரிடேட்டர் ட்ரோன்'கள் வாங்கும் ஒப்பந்தம்: இறுதிக்கட்டத்தில் இந்திய-அமெரிக்க பேச்சுவார்த்தை

அமெரிக்காவிடமிருந்து $3 பில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ₹22,500 கோடி) மதிப்பில் பன்முகத் தாக்குதலுக்கு பயன்படக்கூடிய 30-எம்கியூ9பி பிரிடேட்டர் ட்ரோன்களை (ஆளில்லா விமானங்கள்) இந்தியா வாங்குவதற்கான ஒப்பந்த பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்பு ஒத்துழைப்பு (நேட்டோ) கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத ஒரு நாட்டுக்கு இந்த ட்ரோன்களை வழங்க அமெரிக்கா ஒப்பந்தம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த மிகப்பெரிய பாதுகாப்புத்துறைசார் ஒப்பந்தத்துக்கான முன்மொழிவு, கடந்த 2017-ஆம்ஆண்டு முந்தைய அதிபர் டிரம்ப் ஆட்சி காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது அறிவிக்கப்பட்டதாகும்.

அதன் பிறகு, இரு நாடுகளிடையே நடத்தப்பட்ட தீவிர பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியாவின் ராணுவம், விமானப் படை மற்றும் கடற்படை என முப்படைகளுக்கும் தலா 10 ட்ரோன்கள் வீதம் 30 பிரிடேட்டர் ட்ரோன்களை இந்தியாவுக்கு விற்க முதல்கட்ட அளவில் உடன்பாடு எட்டப்பட்டது. இந்த உடன்பாடு தொடர்பான பேச்சுவார்த்தை தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் மற்றும் சீனா என இரு எல்லை தொடர்பான போர் வந்தாலும், அதனை சமாளிக்கும் வகையில் எல்லையில் ராணுவ மற்றும் உள் கட்டமைப்புகளை இந்தியா பலப்படுத்தி வருகிறது. இந்தச் சூழலில், பிரிடேட்டர் ட்ரோன்களுக்கான உடன்பாடு இறுதி கட்டத்தை எட்டியிருப்பது இந்தியாவுக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

**பயன் என்ன?** அமெரிக்க பாதுகாப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் இந்த பிரிடேட்டர் ட்ரோன்கள் மணிக்கு 482 கி.மீ. வேகத்தில் தொடர்ந்து 27 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டது. மேலும், வானில் 50,000 அடி உயரம் வரை பறக்கக் கூடியது.

அதோடு, 215 கிலோ எடையை தாங்கிச் செல்லும் திறன் கொண்டது. கண்காணிப்பு, உளவு பார்த்தல், உளவுத் தகவல் சேகரிப்பு மற்றும் எதிரி இலக்குகளை அழித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இந்த ட்ரோன்களைப் பயன்படுத்த முடியும்.

---

## 6. சாலை விபத்தில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கான இழப்பீடு 8 மடங்காக உயர்கிறது

சாலை விபத்துகளில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை 8 மடங்காக உயர்த்தப்பட்டு ₹2 லட்சமாக வழங்கப்படவுள்ள -து. இது, வரும் ஏப்.1 முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதுதொடர்பான அறிவிக்கையை மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகம் பிப்.25ஆம் தேதி வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

சாலை விபத்துகளில் பலத்த காயமடைந்தவர்களுக்கு நிவாரணமாக தற்சமயம் வழங்கப்படும் தொகை ₹12,500-இல் இருந்து ₹50,000-ஆக உயர்த்தப்படுகிறது. விபத்தில் உயிரிழப்பவர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்படும் தொகை ₹25,000-இல் இருந்து ₹2 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

கடந்த 1989ஆம் ஆண்டின் நிவாரண உதவித் திட்டத்துக்கு மாற்றாக, 2022ஆம் ஆண்டின் மோட்டார் வாகன விபத்துகளால் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டம், வரும் ஏப்.1 முதல் அமலுக்கு வரவுள்ளது.

இழப்பீடு கேட்டு பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதை குறித்த காலத்துக்குள் முடிக்க வேண்டும் என்று அந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சமீபத்திய தகவல்படி, கடந்த 2020இல் நாடு முழுவதும் 3,66,138 சாலை விபத்துகள் நிகழ்ந்தன.

அவற்றின் காரணமாக 1,31,714 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. உக்ரைன் போரின் பின்னணி**

ஓட்டோமான் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ரஷ்யப் பேரரசு கிரீமியா தீபகற்பத்தைத் தன்னோடு இணைத்துக்கொண்டது. ரஷ்யப் பேரரசில் உக்ரைன் இணைந்ததன் 300–ம் ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில், 1954–ல் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் அதிபர் நிகிதா குருஷேவ் கிரீமியாவை உக்ரைனுக்குப் பரிசாக வழங்கினார். 40 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியம் தகர்ந்துவிடும் என்று அவர் அன்று நினைத்திருக்க வாய்ப்பில்லை.

சோவியத் ஒன்றியம் 1991–ல் உடைந்தபோது, சோவியத்தின் அணு ஆயுதக் கிடங்குகளில் மூன்றில் ஒரு பகுதி உக்ரைனில் இருந்தது. அன்றைய காலகட்டத்தில் அது உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் கிடங்கு என்று கூறலாம். இதிலிருந்தே முன்பு நிலவிய உக்ரைன்–ரஷ்ய பரஸ்பர உறவைப் புரிந்துகொள்ள முடியும். பின்பு, இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பின் கண்காணிப்பில் இருந்தன. உக்ரைன் 1994–ல் ஆயுதப் பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்ட பின்பு, தன்னிடம் இருக்கிற அனைத்து அணு ஆயுதங்களையும் 1996–ல் ரஷ்யாவிடம் ஒப்படைத்தது.

1991–ல் சோவியத் ஒன்றியம் சிதறுண்டதோடு பனிப்போர் முடிவுக்கு வந்தது. ஆனால், தன்னுடன் எல்லையைப் பகிர்ந்துகொண்டுள்ள முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் ரஷ்யாவுக்குப் புதிய பாதுகாப்பு சவால்களைத் தோற்றுவித்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மேற்கத்திய நாடுகளால் தூண்டப்படுகின்றன. குறிப்பாக, ஐரோப்பியக் கூட்டமைப்பு, அமெரிக்கா ஆகியவற்றின் வழிகாட்டுதலில் உள்ள வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் (நேட்டோ) உக்ரைன் சேர்வதற்கான முயற்சிகளைத் தனது பாதுகாப்புக்கான பெரும் அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. உக்ரைன் மக்களில் ஒருசாராரிடம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் ஆர்வம் இருக்கிறது. சோவியத் ஆட்சிமுறையில் கட்டுப்பாடுகளை அனுபவித்த அம்மக்கள், ஐரோப்பிய சுதந்திர ஜனநாயகத்தைப் பெரிதும் விரும்புகின்றனர். இதனால், உக்ரைன் அதிபர் தேர்தல்களில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்வதற்கு முன்மொழியும் தலைவருக்கே கூடுதல் ஆதரவு கிடைத்தது. அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான சாத்தியங்கள் இன்னும் அங்கு உருவாகவில்லை. குறிப்பாக, அதன் வளர்ச்சி பெறாத பொருளாதாரம், வலுப்பெறாத ஜனநாயக அமைப்பு, அரசுக்கு எதிராக நடக்கும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மாஸ்கோவின் சுற்றுப்பாதையிலிருந்து கீவ் விலகி மேற்கத்திய சித்தாந்தத்தை நோக்கிய மாற்று வழியில் பயணிக்கத் தடைக்கல்லாக உக்ரைன் முன்னாள் அதிபர் விக்டர் யெனுகோவேய்க் இருந்தார். அவர் ஒரு ரஷ்ய ஆதரவாளர். 2010–ல் அவருடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பெண் வேட்பாளர் டைமோஷென்ஸ்கோ இருமுறை பிரதமராகப் பதவி வகித்தவர். இவர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைன் அங்கம் வகிக்க வேண்டும், அவ்வாறு இணைந்தால் உக்ரைன் செழிப்படையும் என்று வெளிப்படையாக ஆதரவு திரட்டியவர். உக்ரைனின் பாதுகாப்புக்கு நேட்டோவுடன் இணைவது முக்கியம் என்ற கருத்தைக் கொண்டவர். அதிபர் தேர்தலில் தோல்வியடைந்த அவர், அரசியல் கைதியாகச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் தன் மருத்துவச் சிகிச்சைகளுக்காக ஜெர்மனி செல்லவும், உக்ரைனில் அரசியல் பதற்றம் தணியவும் உக்ரைன் நாடாளுமன்றத்தில் நவம்பர் 2013–ல் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து பேரலையைப் போல அங்கு போராட்டங்கள் வெடித்தன.

அதிபர் விக்டர் யெனுகோவேய்க் தலைமையிலான அரசு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான அனைத்துப் பேச்சுவார்த்தைகளையும் முடித்துக்கொண்டு, ரஷ்யாவுடன் கைகோக்கத் தயாரானது. இதன் காரணமாக, ஏற்கெனவே நடந்துகொண்டிருந்த போராட்டங்கள் மேலும் வலுப்பெற்றன. இந்தப் போராட்டங்களில் 18 காவல் துறை அதிகாரிகள் உட்பட மொத்தம் 130 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, எதிர்க் கட்சியினருக்கும் அதிபர் விக்டர் யெனுகோவேய்க்குக்கும் இடையே ஒருங்கிணைந்த ஒரு அரசை நிறுவுவதற்கும் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கும் ஒரு இடைக்கால ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், யாரும் எதிர்பாராத நிலையில் விக்டர் யெனுகோவேய்க் அதிபர் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாக நாடாளுமன்றம் பிரகடனப்படுத்தியது. அதற்கு முன்பே அவர் ரஷ்யாவின் உதவியை நாடி, அங்கு தப்பி ஓடினார். இதன் தொடர்ச்சியாக ரஷ்ய ஆதரவாளர்களுக்கும் ஐரோப்பிய ஆதரவாளர்களுக்கும் இடையே பெரும் மோதல்கள், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களில் தோன்றின. பூர்விக ரஷ்யர்கள் பெருமளவில் வாழும் கிரீமியாவில் கீவுக்கு எதிராகவும் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும் போராட்டங்கள் வெடித்தன. ரஷ்ய ஆதரவாளர்கள் கிரீமியாவில் உள்ள அரசாங்கக் கட்டிடங்களையும் விமான நிலையங்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக உக்ரைன் முன்வைத்த குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்தது. மேலும், உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ராணுவத்தை அனுப்பவும் மார்ச், 2014–ல் ரஷ்ய அதிபர் புதின் உத்தரவிட்டார். கிரீமியாவில் சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பு ஒன்றும் நடந்தது. பெரும்பான்மையினர் ரஷ்யாவுடன் இணைய வாக்களித்தனர். இதை எதிர்பார்த்துக் காத்திருந்த ரஷ்யாவும் கிரீமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து, ரஷ்யாவின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்தது. பனிப்போர் காலகட்டத்துக்குப் பிறகு ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உறவு கடுமையான பாதிப்புக்குள்ளாகியது. உக்ரைனுடனான

ரஷ்யாவின் உறவும் தீர்க்கவியலாத சிக்கலுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியில், உக்ரைன் சிக்குண்டு தன்னுடைய நிலப்பரப்பை ரஷ்யாவிடம் இழந்தது, சர்வதேசச் சட்டங்களுக்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டது. உக்ரைனின் எல்லையோரப் பிராந்தியமான டான்பாஸில் ரஷ்ய ஆதரவுப் படையினருக்கும் உக்ரைன் ராணுவத்துக்கும் இடையே கடந்த 2021–லிருந்தே மோதல்கள் தொடங்கிவிட்டன. அமெரிக்காவின் அதிபர் ஜோ பைடன், 'நேட்டோ' வுடன் உக்ரைன் சேர்வதற்கு ஊக்கமளித்தார். ஜோ பைடனுடனான காணோளிப் பேச்சுவார்த்தையின்போது, இந்த முயற்சிகள் தங்களது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்று புதின் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்தார். அதற்கு பைடனின் பதில், ரஷ்யாவின் மீது கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்பதாகவே இருந்தது.

இதற்கிடையில், உக்ரைன் எல்லையில் படை குவிப்புக்கு புதின் உத்தரவிட்டார். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் உக்ரைன் எல்லையை நோக்கி விரைந்தனர். கூடுதலாகத் தனது நேசநாடான பெலாரஸில் அணு ஆயுதப் போர்ப் பயிற்சியிலும் ரஷ்ய ராணுவம் ஈடுபட்டுவந்தது. உக்ரைன் மீது முப்படைகளின் மூலமும் முழுத் தாக்குதலுக்கு உத்தரவிட்டுள்ளார் புதின். தாக்குதல் தொடங்கிய முதல் நாளிலேயே செர்னோபில் அணுமின் உலை இயங்கிய பகுதியை ரஷ்யா கைப்பற்றிவிட்டது. இந்நடவடிக்கை உக்ரைன் அரசை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஐரோப்பிய எல்லையில் இரு நாடுகள் மோதிக்கொள்வது இதுவே முதல்முறை.

---

8.